# நெய்தல்
# Neithal

இழைத்தல், இணைத்தல், ஆக்கம் ஜனவரி - ஜூன் 2018 தொகுதி: 9 எண்: 1

கலை கலாசார பீடம் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
Faculty of Arts & Culture,
EASTERN UNIVERSITY, SRILANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெய்தல்

இழைத்தல், இணைத்தல், ஆக்கம்

தொகுதி : 09 எண் : 01

வெளியீடு

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

வந்தாறுமூலை, செங்கலடி

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Neithal*

A bi – annual peer reviewed journal of the Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka Vol: 09 No: 01



Editorial Board

| | | |
|---|---|---|
| Chief Editor | : | Dr.K.Rajendram |
| Associate Editor | : | Mr.P.Sachithananantham |
| Editorial Board Members: | | Dr.P.M.Hamthoon |
| | | Rev.Fr.A.A.Naveretnam |
| | | Mr.A.Yogarajah |
| | | Mr.G.Vigneswaran |



| | | |
|---|---|---|
| Copy Right© | : | Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka, Chenkalady |
| Publishing Year | : | January - June 2018 |
| Printers | : | Jesliya Printers, Main Street, Arayampathy. |
| Price | : | Rs. 540 |
| Address | : | Editor. Neithal, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka, Chenkalady |
| ISSN | : | 20126513 |

நெய்தல்

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தினால் நெய்தல் என்னும் பெயரில் வருடம் இரண்டு தடவைகள் வெளியிடப்படும் ஆய்வு இதழ் - தொகுதி 09,எண் 01




| | | |
|---|---|---|
| பிரதம ஆசிரியர் | : | கலாநிதி க. இராஜேந்திரம் |
| இணை ஆசிரியர் | : | திரு பே. சச்சிதானந்தம் |
| ஆசிரியர் குழு | : | கலாநிதி பி. எம். ஹம்தூன்<br>வண.பிதா. ஏ.ஏ. நவரெத்தினம்<br>திரு ஜி. விக்னேஸ்வரன் |



| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, செங்கலடி |
| பதிப்பு ஆண்டு | : | ஜனவரி - ஜூன் 2018 |
| பதிப்பகம் | : | ஜெஸ்லியா அச்சகம், பிரதான வீதி, ஆரையம்பதி |
| விலை | : | ரூபா 540 |
| நிர்வாக முகவரி | : | ஆசிரியர், நெய்தல், கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, செங்கலடி |



நெய்தல் தொகுதி 09, எண் 01 இல் வெளிவந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள், யாவும் ஆசிரியர்களுக்குரியதாகும். இவைகளுக்கு கலை கலாசார பீடமோ, கட்டுரை ஆசிரியர்களின் துறையோ, ஆசிரியர்குழுவோ எவ்வகையிலும் பொறுப்பல்ல.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

only subject knowledge

# ஆசிரியர் குறிப்பு

பல்கலைக்கழக பன்முக செயற்பாடுகளில் ஆய்வுகள், கண்டுபிடிப்புக்களை சமூகத்திற்குப் பயன்படும் வகையில் கொண்டுசெல்வது முக்கிய பணியாக உள்ளது. பொதுவாக பல்கலைக்கழகங்கள் புதியகருத்துக்கள், கருத்தாழம் மிக்க சிந்தனைகள், புதிய கண்டுபிடிப்புக்கள் ஆகியவற்றின் நிலைக்களமாக விளங்குகின்றன. பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் அதன் வெளியீடுகள் என்பன அப்பல்கலைக்கழகத்தின் பன்முகப் புலமைத்துவத்தினையும், அதன் தரத்தினையும் வெளிக்காட்டுவதாக அமைந்திருக்கின்றன.

கிழக்குப்பல்கலைக்கழகத்தில் கலை கலாசாரபீடம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து **"நெய்தல்"** என்ற ஆய்வுச்சஞ்சிகை வெளிவந்துகொண்டிருக்கின்றது. வருடத்திற்கு இரண்டு இதழ்கள் என்ற அடிப்படையில் எட்டு தொகுதிகள் இதுவரையில் வெளியாகிவிட்டன. இதழ்-9 இன் முதற்தொகுதியினை வெளியிடும் பொறுப்பினை கலைகலாசார பீடஅவை இவ் ஆசிரியர் குழுவிடம் ஒப்படைத்திருந்தது. இதன்படி இதழ்-9 இன் முதற்தொகுதி ஒன்பது ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவருகின்றது. இக்கட்டுரைகள் பெருமளவுக்கு கிழக்குப்பல்கலைக்கழகமல்லாத பிறபல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், துறை சார் நிபுணர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்கள் வழங்கிய ஆலோசனைகளினடிப்படையில் செம்மைப்படுத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவற்றின் தரத்தைப்பேணவும், உறுதிப்படுத்தவும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதழ்-9 இல் வெளிவந்துள்ள கட்டுரைகள் கலைகள், இலக்கியங்கள், மெய்யியல் சிந்தனைகள் பெண்ணியம், பெண்கலைஞர்கள், சடங்குகள், நல்லாட்சி, வியாபாரப்போட்டிகள், இஸ்லாமிய சமய, சமூக சீர்திருத்த இயக்கங்கள், சுற்றுலாத்துறை அபிவிருத்தி என பரந்து செல்வதனை அவதானிக்கமுடியும்.

நெய்தல் வெளியீட்டுக்குழு தொடர்ச்சியாக எதிர்கொள்கின்ற சவால்களில் ஒன்று காலதாமதமாகும். இவ்விதழிலும் அத்தகைய நிலை ஏற்பட்டிருப்பதை அவதானிக்கலாம். ஆசிரியர்களிடமிருந்து கட்டுரைகளைப்பெறுவது, அவற்றை துறைசார் விற்பன்னர்களுக்கு அனுப்பி மதிப்பீடு செய்வது, பிரசுரிப்பது என்பது இன்றும் சவால் நிறைந்ததொன்றாகவே இருந்து வருகின்றது. மீளாய்வு இதழுக்கான நியமங்களைக் கடைப்பிடித்து ஆய்விதழின் தரத்தினைப் பேணுதலுக்கு முன்னுரிமை அளிக்கும்போது இது தவிர்க்கமுடியாத யதார்த்தமாகிவிடுகின்றது. ஆயினும், எதிர்வரும் இதழ்களை காலம் தாழ்த்தாது வெளியிடுவதற்காக இக்குழு பணியிலிருக்கும்போதே, இதழ்-9 தொகுதி இரண்டிற்கும், இதழ்-10இன் முதற்தொகுதியினை வெளியிடுவதற்குமான செயற்குழுவினை பீடம் நியமித்தமை எதிர்காலத்தில் இந் நிலமையை மாற்றியமைக்குமென நம்புகின்றேன்.

இவ்இதழ் சிறப்பாக வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய கட்டுரை ஆசிரியர்கள், மீள்பார்வை செய்த பேராசிரியர்கள், துறைசார் நிபுணர்கள், துணைவேந்தர், கலைப்பீடாதிபதி, பீடநிதிக்கிளை, ஆசிரியர் குழுவினர் மற்றும் பல வழிகளிலும் பூரண ஒத்துழைப்பு வழங்கிய ஜெஸ்லியா அச்சகத்தினர் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடாதிபதியின் செய்தி

பல்கலைக்கழகமொன்றின் பன்மைத்துவ செயற்பாடுகளில் ஆராய்ச்சி என்பது முக்கிய பங்கினை வகிக்கின்றது என்பதுடன் குறித்த ஆராய்ச்சி முடிவுகள் சமூகத்திற்கு பயன்படக்கூடிய வகையில் வெளிப்படுத்தப்படுவதும் கடமைப்பாட்டிற்குரியது.

அந்த வகையில் கலை கலாசார பீடம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு சமூகத்துடன் இடையூடாட்டத்திற்குரிய வழியாக "நெய்தல்" என்று ஆய்வு சஞ்சிகையினை அடையாளப்படுத்தியுள்ளது. இச் சஞ்சிகையின் வழியாக சமூகத்திற்கு தேவையான பல்வேறு தகவல்களை வழங்கியுள்ளதுடன் அத்தகவல்களினால் சமூகம் பெரிதும் பயனடைந்துள்ளது என்பதனை இறுக்கமாக கூறலாம்.

இம்முறை "நெய்தல்" சஞ்சிகையில் வெளிவருகின்ற ஆராய்ச்சி கட்டுரைகள் சமகால விடயங்களை கொண்டதாக அமைவதுடன் அக்கட்டுரைகள் அனைத்தும் துறைசார் நிபுணர்களின் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டவையாக அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

இவ்விதழை வெளிக்கொணர்வதற்கு அயராது உழைத்த வெளியீட்டு குழுவிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும் பீடத்தின் சகல முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும் தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

**திரு. மு.ரவி**
**பீடாதிபதி/கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. பெண்ணிய அழகியல் சிந்தனைகள் - ஒரு பின்நவீனத்துவ நோக்கு<br>கலாநிதி இரத்தினசபாபதி பிரேம்குமார்<br>சிரேஷ்ட விரிவுரையாளர்(தரம் II),தத்துவவியல், விழுமியக் கற்கைகள் துறை, கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம் | 1 |
| 02. தமிழர் மரபில் மெய்யியல் சிந்தனைகள் - ஒரு நோக்கு<br>திரு. சோ. ஜெகநாதன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II),தத்துவவியல், விழுமியக் கற்கைகள் துறை,<br>கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம் | 12 |
| 03. சடங்கில் பயன்படுத்தப்படும் குறியீடுகளும் மீள் உறுதிப்படுத்தப்படும் நம்பிக்கைகளும்<br>கலாநிதி வடிவேல் இன்பமோகன்,<br>சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II),நுண்கலைத்துறை,<br>கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம் | 24 |
| 04. நல்லாட்சிக் கோட்பாடும் இலங்கையில் அதன் பிரயோகமும்: 2015இல் இருந்து 2018 வரை<br>திரு.அ.கண்ணேராஜ்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II), சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம் | 32 |
| 05. வியாபாரப் போட்டிக்கான வரையறைகளும் ஒழுங்குகளும் ஓர் இஸ்லாமியப் பார்வை<br>திரு.ஏ.எல்.எம். முஜாகிட்<br>சிரேஷ்ட விரிவுரையாளர்(தரம் II),இஸ்லாமிய கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்<br>திரு எம்.எஸ். குஸாம் , உதவி விரிவுரையாளர்,<br>அரபு மொழி கற்கைகள் துறை,<br>தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 40 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. இலங்கை முஸ்லிம்களிடையே ஜமாஅதே இஸ்லாமி ஆற்றி வரும் சமய, சமூக சீர்திருத்தப் பணிகள்-ஒரு நோக்கு** 50

திரு.ஏ.எல்.ஏ.ஜ.'.பர்ஹுஸைன்
சிரேஷ்ட விரிவுரையாளர்(தரம் I), இஸ்லாமிய கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்

**07. மட்டக்களப்பு மாவட்டத்தில் விருத்தியடைந்து வரும் சுற்றுலாக் கைத்தொழில் : பாசிக்குடா சுற்றுலா மையம் ஒரு சிறப்பு நோக்கு** 60

கலாநிதி ம.வர்ணகுலசிங்கம்,
சிரேஷ்ட விரிவுரையாளர்(தரம் I), புவியியல் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்

**08. ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் சூழல்சார் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்கள்** 72

திருமதி.ச.தவப்பிரபா,
சிரேஷ்ட விரிவுரையாளர்(தரம்-II), புவியியல் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்

**09. மட்டக்களப்பு நிகழ்த்துகைப் பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள் 1980களின் பின்னர்: ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவை மையமாகக் கொண்ட ஆய்வு** 83

திரு.கு.ரவிச்சந்திரன்
சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II), நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிய அழகியல் சிந்தனைகள் - ஒரு பின்நவீனத்துவ நோக்கு

இரத்தினசபாபதி பிரேம்குமார்

**ஆய்வுச் சுருக்கம்**

*பாரம்பரியம் மற்றும் வடிவ அழகியல் கோட்பாடுகளை கேள்விக்குட்படுத்தும் துறையாக பெண்ணிய அழகியல் காணப்படுகின்றது. தற்போது வழக்கிலுள்ள அழகியல் கோட்பாடுகள், சிந்தனைகள் என்பன ஆண்மைய வாதத்தினை அடிப்படையாகக் கொண்டவை என்று வாதிடும் பெண்ணிய அழகியலாளர்கள் பெண்ணிய அழகியல் சிந்தனைகளும் நோக்குகளும் அழகியல் வரலாற்றில் சரியாக வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன் தவறாக சித்திரிக்கப்பட்டுள்ளது என்றும் ஒடுக்கப்பட்டுள்ளது என்றும் வாதிடுகின்றனர். கலை என்பது பால்நிலைத் தன்மை கொண்டது என்றும் கலைகளில் இத்தகைய பால்நிலைத் தன்மை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது என்றும் கலை இலக்கியப் படைப்புக்கள் ஆணினால் உருவாக்கப்பட்ட கருத்து நிலைகளை மையமாகக் கொண்டே உருவாக்கப்படுகின்றன என்று கருதும் பெண்ணிய அழகியலாளர்கள் கலை இலக்கியங்களைப் படைப்பதிலும் அவற்றை அனுபவிப்பதிலும் ஒரு நடுநிலைத் தன்மையோ அல்லது புறவயத் தன்மையோ கிடையாது என வாதிடுகின்றனர். தற்போது வழக்கிலுள்ள அழகியல் கோட்பாடுகளும் சிந்தனைகளும் ஆண்பார்வையினை மையமாகக் கொண்டதாவும் பெண்ணை செயற்படுபொருளாகவும் உணர்வற்ற பொருளாகவும் சித்திரிக்கும் நோக்கினை கொண்டவையாகக் காணப்படுகின்றன என்று இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மேற்குறிப்பிட்ட வாதங்களையும் குற்றச் சாட்டுக்களையும் விமர்சன ரீதியாக பின்நவீனத்துவ நோக்கில் இந்த ஆய்வுக் கட்டுரை ஆராய முயல்வதுடன் பெண்ணிய சிந்தனைகளின் பலம் மற்றும் பலவீனம் என்பவற்றை வெளிக்கொணர முயல்கின்றது.*

*முதன்மைச் சொற்கள்: பெண்ணிய அழகியல், ஆண்பார்வை, பால்நிலைத் தன்மை, புறவயத் தன்மை, பின் நவீனத்துவம்*

## 1.0 அறிமுகம்(Introduction)

பெண்ணிய அழகியல் என்பது அழகியற் கோட்பாடு மற்றும் அதன் நோக்கு என்பவற்றின் அடிப்படை எடுகோள்களை பரிசீலனை செய்வதாக உள்ளது. பொதுவாக பெண்ணிய அழகியல் சிந்தனைகள் என்பது 1990களில் தோற்றம் பெற்றதாக கருதப் படுகின்றது. அடிப்படை நூல்கள் இல்லாது வளர்ந்து வரும் ஒரு துறையாக பெண்ணிய அழகியல் சிந்தனைகள் காணப்படுவதாக பல அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பெண்ணிய அழகியல் என்பது பல்வேறு அறிவுத் துறைகளில் தங்கியுள்ள ஒரு துறையாக காணப்படுகின்றது. நாம் வாழும் சமூகத்தில் பெண்கள் ஆண்களுக்கு சமமான வேலைகளை செய்தாலும் கூட அவர்களது பணிகள் ஆண்களின் பணிகளுக்கு சமமானதாகக் கருதப்படுவதில்லை எனப் பெண்ணிய வாதிகள் வாதிடுகின்றனர். பெண்ணின் கலைத்துவ வெளிப்பாடானது இயற்கையோடு இணைந்த ஒன்றாகவும் பிரத்தியேக தன்மை கொண்டதாகவும் இல்லறத்துடன் சம்பந்தப்பட்டதாகவும் கருதப்படுகின்றது. பண்பாடு மற்றும் பொது வாழ்க்கையின் பண்புகள் என்பவற்றுடன் ஒப்பிடும் போது பெண்ணின் கலைத்துவ வெளிப்பாடுகள் தரம் குறைந்தனவாகவே கருதப்படுகின்றன. எவ்வாறு கைவினைப்பொருட்களுக்கும் கலைப்பொருட்களுக்கும் வேறுபாடு கற்பிக்கப்படுகின்றதோ, எவ்வாறு உயர்ந்த கலைக்கும் தாழ்ந்த கலைக்கும் வேறுபாடு கற்பிக்கப்படுகின்றதோ, இந்த அடிப்படையில் பெண்ணின் சில கலைத்துவ வெளிப்பாடுகளான: உடைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கள் போன்ற அலங்காரம் செய்தல், மெத்தை விரிப்பு அலங்காரங்கள் மற்றும் பின்னல் வேலைப் பாடுகள் போன்றவை கலையாக்கங்களாக கருதப்படுவதில்லை என பெண்ணிய வாதிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பெண்கள் பற்றிய சமூக பார்வை அவர்கள் ஈடுபடும் எல்லா துறைகளிலும் தனது செல்வாக்கினை செலுத்தி வருகின்றது எனக்கருதும் பெண்ணிலை சிந்தனையாளர்கள், பெண்கள் எவ்வகையில் கலைவடிவங்களில் வெளிப்படுத் தப்படுகின்றனர் என்பதும், பெண் கலைஞர்கள் எத்தகைய பண்புகளை கொண்டிருப்பர் என்பதும் சம்பந்தமாக ஆண்மைய சமூகத்தி னால் உருவாக்கப்பட்ட மதிப்பீடுகள் தீர்மா னிக்கின்றன என சுட்டிக்காட்டுகின்றனர். ஆண் கலைஞர்களும் பெண் கலைஞர்களும் கலைத்துறையில் ஈடுபட்ட போதும், இந்த இருவகை கலைஞர்கள் பற்றியும் அவர்களது படைப்புக்கள் பற்றியும் ஒரு ஒருங்கிணைவான தராதரங்கள் கலை மதிப்பீட்டாளர்கள் மத்தியிலும் இரசிகர்கள் மத்தியிலும் காணப் படவில்லை என பெண்ணிய அழகியலா ளர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இந்த நூற்றாண்டு வரையில் ஓவியக்கூடங்களில் பெண்கள் நிர்வாண ஓவியங்களை வரைவ தற்கு தகுதியற்றவர்களாகவே கருதப்பட்டனர் என்பதை சுட்டிக்காட்டும் பெண்ணிய வாதிகள் இவ்வாறான ஓவியங்களை வரைவதற்கு பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்படுவ தில்லை என்ற விடயத்தையும் எடுத்துக் காட்டுகின்றனர். ஒரு ஆணையோ அல்லது பெண்ணையோ ஓவியங்களில் வெளிப்ப டுத்துவதற்கு ஒர் ஆண் ஓவியர் தகுதியுடை யவராக கருதப்படும் அதேவேளை ஒரு பெண்ணினால் ஒரு ஆணையோ அல்லது பெண்ணையோ முழுமையாகவும் சிறப்பா கவும் ஓவியங்களில் வெளிப்படுத்த முடியாது என்ற கருத்து அண்மைக்காலம் வரை மேலைத்தேய ஓவிய மரபுகளில் காணப்பட்ட விடயத்தினை பெண்ணிய அழகியல் சிந்தனை யாளர்கள் சுட்டிக்காட்ட தவறவில்லை.

கலை என்பது பால்நிலை தன்மை கொண்டது என்றும், கலைகளில் இத்தகைய பால் நிலைத்தன்மை வெளிப்படுத்தப்படுகின்றன என்றும் கருதும் பெண்ணிலை சிந்தனை யாளர்கள் ஆணினால் உருவாக்கப்பட்ட கருத்து நிலைகளின் அடிப்படையில் தான் ஒரு பெண் கலை இலக்கிய படைப்புக்களில் வெளிப்படுத்தப்படுகின்றாள் என வாதிடு கின்றனர். அழகு மற்றும் கலை பற்றிய வரைவிலக்கணங்கள் ஆண்களினால் உருவா க்கப்படுகின்றது. இதே போல் கலை இலக்கிய படைப்புக்களில் வெளிப்படுத் தப்படும் பெண் என்ற கருத்தும் ஆண்க ளினால் உரு வாக்கப்படும் சிந்திக்கப்படும் பொருளாகக் காணப்படுகின்றது. ஒரு ஆணின் கலைப்படை ப்பு கட்டாயமாக ஒரு பெண்ணின் கலைப் படைப்பில் இருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்றோ ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஒரு கலைப்படைப்பு தொடர்பில் கட்டாயமாக வேறுபட்ட அனுபவம் காணப்படும் என்றோ பெண்ணிய அழகியல் நம்பவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் ஒரு பெண்ணின் கலை பற்றிய நோக்கிற்கும் ஒரு ஆணின் கலை பற்றிய நோக்கிற்கும் இடையில் தெளிவான வேறுபாட்டினை கற்பி க்க முடியாது என்பதுடன் எல்லா பெண்களும் கலை பற்றிய ஒருமித்த நோக்கினை கொண்டுள்ளனர் என்று கருதுவது தவறானது என பெண்ணிய அழகியலாளர்கள் வாதிடுகின்றனர். பெண் ணிய அழகியலைப் பொறுத் தவரையில் ஆண்களும் பெண்களும் வேறு பட்ட கலைப்படைப்புக்களை உரு வாக்கு கின்றனர் என்பதைக் காட்டிலும் நடைமு றையிலுள்ள கலைப் படைப்புக்கள் தொடர்பாக ஆண்களும் பெண்களும் ஒரே வகையான அனுபவம், நோக்கு மற்றும் மதிப்பீடு என்பவற்றை கொண்டிருக் கவில்லை என்ற கருத்து பெண்ணிய அழகியலா ளர்களைப் பொறுத்தவரையில் முக்கியமா னதாக கருதப்படுகின்றது. ஆண்மைய சமூகத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் பால்நிலைக் கட்டமைப்பே (Gender) இத்தகைய உடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடின்மைக்கு காரணம் என பெண்ணிய அறிஞர்கள் கருதுகின்றனர். பெண்ணிய அழகியலாளர்களின் முக்கிய வாதம் என்னவெனில் கலையின் உருவாக்கம், அதனை அனுபவிக்கும் முறை மற்றும் மதிப்பிடும் முறை என்பன பால்நிலை கட்டமைப்பு சார்ந்ததாக உள்ளது. (சாராவேத்., 2001: 439).

ஆண்களும் பெண்களும் வேறுபட்ட கலை வடிவங்களை உருவாக்குகின்றனர் என்பதை காட்டிலும் அவர்கள் கலை தொடர்பாக வேறுபட்ட அனுபவங்களைக் கொண்டுள்ளனர் என்ற கருத்து பெண்ணிய வாதிகள் மத்தியில் அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. பால் நிலைத்தன்மை பற்றிய சமூக நோக்கு இத்தகைய வேறுபட்ட கலை அனுபவத்திற்கு காரணமாக அமைகின்றது. வேறுபட்ட அனுபவங்களை ஒரு கலை படைப்பு உருவாக்கமுடியும் என்ற கருத்தினை பெண்ணிய அழகியல் மறுக்கவில்லை. ஆனால் அதே வேளை இந்த வேறுபாடானது கட்டாயமானது என்று பெண்ணிய அழகியல் வற்புறுத்தி கூறாவிட்டாலும் பால்நிலை தன்மை பற்றிய கருத்து இத்தகைய வேறுபட்ட அனுப வத்தினை பெரும்பாண்மையான ஆண்களும் பெண்களும் பெற காரணமாக அமைகின்றது என்பதை பெண்ணிய அழகியல் ஏற்றுக்கொள்கின்றது.

கலை இலக்கியத்துறையில் ஒரு நடுவு நிலைமையான பொதுவான கலை இலக்கி யங்களை அனுபவிப்பவர் என்று எவ ரும் இல்லை என்ற கருத்தினை பெண்ணிய அழகியலாளர்கள் வற்புறுத்துகின்றனர். இதேபோல் கலை இலக்கிய படைப்புக்களின் உள்ளடக்கம், என்னென்ன விடயங்கள் அவற்றுள் அனுபவிக்கப்படுகின்றன, எப்படி அனுபவிக்கப்படுகின்றன என்பவை ஒரு தலை பட்சமான அல்லது பாரபட்சமான பண்பினை (ஆண்மையவாத) கொண்டிருப்பதாக பெண் ணிய அழகியல்வாதிகள் வாதிடுகின் றனர். ஒரு பொதுவான நடுவு நிலைமையான அனுபவிப்பாளர் என்ற ஒருநிலை இல்லை என்ற கருத்து பாரம்பரிய அழகியல் அடிப்படை எடுகோள்களில் ஒன்றை கேள்விக்குறியா க்குவதாக இருக்கின்றது. இது பின்நவீனத் துவத்தின் முக்கிய பண்புகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. (டேவிட்நொவிஸ். ,2001:157) அழகியல் அனுபவம் என்பது ஆளுக்கு ஆள் வேறுபடும் என்ற உண்மையினை உரக்க சொல்பவர்களாக பெண்ணிலை அழகியலா ளர்கள் காணப்படு கின்றனர். கலை அனுபவம் தொடர்பாக ஒரே ஒரு கட்டளைக்கல் தான் உள்ளது என்ற பாரம்பரிய மற்றும் கட்டமைப்பு வாத எடுகோள்களை கேள்விக்குறியா க்குவதாக பெண்ணிலை அழகியல் நோக்கு காணப்படுகி ன்றது. (சாராவேத்.,2001:439).

பெண்ணிய அழகியலாளர்கள் அழகியல் என்பது பால்நிலை பாரபட்சமற்றது மற்றும் நடுவு நிலைமையானது என்ற கருத்தினை நிராகரிப்பதுடன் எவ்வாறு பால்நிலைத் தன்மையினால் கலைஞர்கள் பாதிக்கப்பட் டுள்ளனர் என்பதை எடுத்துக்காட்ட முயல்கி ன்றனர். பாரம்பரிய அழகியல் கோட்பாடானது வெள்ளையின ஆண் நோக்கினை கொண்ட, பால் நிலை நடுவு நிலைமை சார்ந்த, அந்நியமான, முழுமையான பார்வையாளராக பெண்ணை சித்திரிப்பதன் மூலம் அவளை ஒடுக்க முயல்கின்றது என பெண்ணிய அழகியல் வாதிடுகின்றது.(மேலது) கலையினை உருவாக்குவதிலும் அதனை அனுபவிப் பதிலும் பால்நிலைத்தன்மை செயல்படு கின்றது என்பதை பெண்ணிய அழகியலாள ர்கள் எடுத்துக்காட்ட முயல்கி ன்றனர்.

## 2.0 ஆய்வின் மூலங்களும் முறைகளும் (Materials & Methods)

மெய்யியல் ரீதியான ஆய்வுகள் நேரடியாக களத்தில் இறங்கி ஆய்வினை மேற்கொள் ளாமல் மனிதர்களின் அனுபவங்கள் பதியப் பட்ட புத்தகங்களையும் ஆய்வுக் கட்டுரை களையும் ஏனைய முதல்தர தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வுநடத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையாக இருக்கின்றது. ஆய்வுமூலங்கள் என்ற வகையில் பெண்ணிய அழகியல், அழகியல் மற்றும் பின்நவீனத்துவம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டுள் ளன.

ஆய்வு முறை என்றவகையில் மெய்யிய லுக்கேயுரிய ஆய்வுமுறையான நம்பிக்கைகள் பற்றிய விமர்சன ரீதியான மதிப்பீட்டு முறை மற்றும் எண்ணக்கருக்களின் தெளிவுப டுத்துகை முறை என்பனவும் பகுப்பாய்வு முறை, தொகுப்பு முறை, ஒப்பீட்டு முறை, விமர்சன மற்றும் முழுமை முறை என்பன பயன்படுத் தப்பட்டுள்ளன.

## 3.0 வாதங்களும் பகுப்பாய்வும் (Results & Discussion)

### 3.1 வடிவ வாதமும் பெண்ணிய அழகியலும் (Formalism & Feminist Aesthetics)

வடிவவாத (Formalism) அழகியல் பண்பு களுக்கு எதிரான கருத்துக்களை பெண்ணிய அழகியல் முன்வைக்கின்றது. கலை என்பது வடிவ வாதத்தின்படி சமூக கலாசார சூழலில் இருந்து பிரித்தெடுக் கப்பட்டு நோக்கப்ப டுகின்றது. மேலும் கைவினைப்பொருள் மற்றும் ஏனைய பயனுடைய பணிகள் என்பவற்றில் இருந்து வேறுபடுத்தி பார்க் கப்படுகின்றது. கட்ட மைப்பு சார்ந்த பண்புகளுக்கு மதிப்பு கொடுப்பதாக வடிவ வாதம் காணப்படு கின்றது.

இதில் கோடுகள், உருவங்கள், நிறங்கள், குறிப்பிட்ட கட்டமைப்புக்கள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகைய பண்புகளை கொண்ட வடிவ வாதத்திற்கு எதிரான கருத்துக்களை பெண்ணிய அழகியல் முன்வைக்கின்றது. கலைப்படைப்பினை தனியாக அதன் சமூக கலாசார சூழ்நிலை களில் இருந்து பிரித்துப்பார்க்காமல் அதனுடைய பின்புலங்களையும் சேர்த்து கலையினை நோக்கவேண்டும் என பெண் ணிய அழகியல் வற்புறுத்துகின்றது. எடுத்துக் காட்டாக, அருங்காட்சியகத்தில் ஒரு கலைப்பொருளை நாம் பார்வையிடும் போது அந்த கலைப் பொருள் உருவாக்கப்பட்ட பிற்புலம், அந்த கலைப் பொருளினை உருவாக்கிய மனித அனுபவம், நோக்கு, குறியீடு என பல விடயங்கள் மறைக்கப்ப டுகின்றன. அந்த கலைப் பொருளின் வரையறுக்கப்பட்ட பண்புகள் மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் இந்த கலைப் பொருள் பற்றிய கணிசமான புரிந்து கொள்ளல் அசாத்தியமாகின்றது. இத்தகைய விமர்சனத்தினை பின்நவீனத்துவ சிந்தனையா ளர்களும் பெண்ணிலை அழகியலாளர்களும் முன்வைக்கின்றனர். ஒரு கலைப் படைப்பி னை அதன் பிற்புலங்களுடன் அறிந்து கொள்ளும் போதுதான் அந்த கலைப்படைப்பு பற்றிய புரிந்து கொள்ளல் சிறப்பானதாக அமையும் என பெண்ணிய அழகியலாளர்கள் வாதிடுகின்றனர். கலைத்துறையில் பார்வை யாளர்களும் ஆற்றுகையாளர்களும் ஒன்றி ணைந்து நிகழ்த்தும் ஆற்றுகைகளுக்கு பெண்ணிய அழகியல் முக்கியத்துவம் வழங்குகின்றது. ஆனால் பாரம்பரிய ஆற்று கைகள் பார்வையாளர்களின் இடைவி னைகளை அங்கீகரிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (மேலது.பக்:440) கலைப் படைப்புக்கள் அவற்றின் சூழ்நிலைகளுடன் தொடர்புபட்ட வகையில் வெளிப்ப டுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையினை பெண்ணிய அழகியலாளர்கள் வற்புறுத்து கின்றனர். கலை வெளிப்பாட்டில் வேறுபடும் தன்மையினையும் பல்லினத்தன்மையினை யும் வற்புறுத்தும் பெண்ணிய அழகியலா ளர்கள் ஒரு கலைப் படைப்பிற்கும் அதன் பிற்புலத் துக்கும் இடையில் உள்ள உறவுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றனர். பெண் ணிய அழகியல் ஒரு கலைப்படைப்பினை வெறும் குறுகிய வரைய றைக்குள் நோக்காமல் ஒரு கலைப்படைப்பு உருவாக்கப்படும் சூழ்நிலை, அதன் பாரம்ப ரியம் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதன் மூலம் ஒரு கலைப்படைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய புரிந்துகொள்ளல் எல்லைகளையும் பண்புகளையும் விரிவடையச் செய்கின்றது.

### 3.2 புறவயத்தன்மையும் பெண்ணிய அழகியலும் (Disinterestedness & Feminist Aesthetics)

கலை அனுபவத்தினை பெற்றுக் கொள்வதில் அல்லது ஒரு கலைப் படைப்பினை மதிப்பிடுவதில் முக்கியத் துவம் பெறும் எண்ணக்கருவான புறவயத்தன்மை பற்றிய விமர்சனங்களை முன்வைப்பவர்களாக பெண்ணிய அழகியலாளர்கள் காணப்படுகின்றனர். ஒரு கலையினை ரசிப்பவர் அல்லது ஒரு கலையினை மதிப்பீடு செய்பவர்க்கும் ஒரு கலை படைப்பிற்கும் இடையில் காணப்படும் இடைவெளியினை இது குறிக்கின்றது. இது ஒரு வகையில் கலையினை ரசிப்பவர் அல்லது கலையினை மதிப்பீடு செய்பவர் கொண்டிருக்க வேண்டிய மனநிலை யினைக் குறிக்கின்றது. இத்தகைய புறநிலைத் தன்மையானது முற்சாய்வற்ற தன்மையினை குறிக்கின்றது. இத்தகைய ஒரு மனநிலை பாரம்பரிய அழகியலில் கலையினை ரசிப்பதற்கும் கலையினை மதிப்பிடுவதற்கும் தேவையான முக்கிய தகுதியாக கருதப்படுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய மனநிலை பின்வரும் உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத் தப்படலாம். ஒரு ரசிகன் அல்லது கலை மதிப்பீட்டாளன் சிறு வயதில் இருந்தே ஒரு ஓவியம் வீட்டில் உள்ளது என்பதற்காக அதனை ரசிக்கவோ மதிப்பீடு செய்யவோ முயலக் கூடாது. அதேபோல் ஒரு உயர்ந்த ரசிகன் தனது காதலியின் படத்தினை வரையவோ அல்லது அதனை காதலின் அடிப்படையில் மதிப்பீடு செய்யவோ முயலக்கூடாது. இத்தகைய முற்சாய்வுகள் அற்ற மனநிலையே புறவயத்தன்மை என கருதப்படுகின்றது. ஒரு கலைப்பொருளை மதிப்பிடுவதில் ஒரு வித புறவயத்தன்மை அல்லது பற்றற்ற உணர்வுக்கு முக்கி யத்துவம் கொடுக்காத நிலையினை பெண்ணிய அழகியலாளர்கள் வற்புறுத்துகின்றனர். ஒரு கலைப்படைப்பு பற்றிய அனுபவத்தில் அல்லது மதிப்பீட்டில் புறவயத்தன்மையின் முக்கி யத்துவத்தினை காண்ட் பேசியுள்ளார். ஒரு கலைப்ப டைப்பினை புரிந்து கொள்வதில் அல்லது மதிப்பிடுவதில் ஒரு நபரின் தனிப்பட்ட உணர்வுகள் மற்றும் உறவுகள் பாதிக்காத உணர்வு நிலையினை இது குறிக்கின்றது. நாம் வாழ்ந்து பழகிய சூழ்நிலைகளில் காணப்படும் கலைப்படை ப்புக்களின் மீது நாம் அளவுக்கதிகமான உணர்வு கலந்த பிணைப்பினை கொண்டிருக்கின்றோம். இத்தகைய உணர்வுகள் அத்தகைய கலைப்படைப்புக்களின் உண்மை மதிப்பீட்டினை அறிவதற்கான தடைகளாக உள்ளன என்ற கருத்து காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக ஆங்கிலேயர் ஒருவர் ஆங்கில இலக்கியங்களை மதிப்பிடும் போது அங்கு முற்சாய்வு (Prejudice) தவிர்க்க முடியாததாக காணப்படும் உண்மையான சரியான கலையினை மதிப்பிடுவதிலும் புரிந்து கொள்ளலிலும் பாரம்பரிய அழகியல் இத்தகைய புறவயத்தன்மையினை (முற் சாய்வு அற்ற) வற்புறுத்தி வந்துள்ளது. தமிழில் உள்ள "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்ற பழமொழி முற்சாய்வுத்தன்மையின் தவிர்க்கமுடியாத நிலையினை எடுத்துக்காட்டுகின்றது. ஆயினும் புறவயத்தன்மையினை பொருத்த மற்றதாக பெண்ணிய அழகியலாளர்கள் நிராகரிக்கின்றனர். இதனையதார்த்தத்திற்கு முரணானதாகவும் கலை அல்லது அழகினை புரிந்து கொள்வதில் புறவயத்தன் மையினை ஒரு தடைக்கல்லாக பெண்ணிய அழகியலா ளர்கள் கருதுகின்றனர்.

மேலும் புறவயத்தன்மைக்கு முக்கியத் துவம் கொடுப்பதன் காரணமாக ஒரு கலைப் படைப்பு அதன் பிற்புலங்களுடன் கொண்டுள்ள தொடர்பினை அறியமுடியாமல் போவதுடன் ஒரு கலைப்படைப்பு கொண்டுள்ள பயன்பாடு (நடைமுறை பயன்பாடு) புறக்கணிக்கப்படுகின்றது. பெண்களினால் உருவாக்கப்படுகின்ற பலவித கைவினைப் பொருள்களும் அலங்கா ரங்களும் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கின் அடிப்படையில் கலைக்குரிய பண்புகளைக் கொண்டதாக கருதப்படுவதில்லை என பெண்ணிய அழகியலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சில பெண்ணிய அழகியலாளர்கள் புறவயத்தன்மையினை முழுவதுமாக நிராகரிக்கவில்லை என்றும் புறவயத்தன் மையும் புறவயமற்ற தன்மை ஆகிய இரண்டும் இணைந்து ஒரு கலைப்படைப்பு தொடர்பான சிறப்பான புரிந்துணர்வினை உருவாக்குகின்றது என வாதிடுகின்றனர். புறவயத் தன்மையுடன் ஒரு கலைப் படைப்பினை ரசித்தலும் மதிப்பிடுதலும் புறவயமற்ற தன்மையுடன் ஒரு கலைப் படைப்பினை ரசித்தலும் மதிப்பிடலும் ஆகிய இரண்டு செயல்களும் அழகியல் செயல்பாட்டை முழுமைப்படுத்துவதாக சில பெண்ணியல் அழகியலாளர்கள் கருதுகின்றனர். (மேலது. பக்.442) பெரும்பாலான பெண்ணிய அழகியலாளர்கள் பாரம்பரியம் மற்றும் வடிவ வாத அழகியல் தராதரங்கள் ஒரு கலைப்பொருளை அல்லது அழகுப் பொருளை ரசிப்பதிலும் மதிப்பிடுவதிலும் அதிக குறைபாடுகளை கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவதில் தீவிரமாக உள்ளனர். ஒரு கலைப்படைப்பினை ரசிப்பதிலும் மதிப்பிடுவதிலும் பெண்ணிய அழகியல் ஒரு கலைப்பொருள் உருவாக் கப்படும் சூழ்நிலை, பிற்புலம் மற்றும் அது தொடர்பான படைப்பாளியின் அனுபவம் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது.

பெண்ணிய அழகியல் என்பது வெறுமனே பாரம்பரிய அழகியல் பண்புகளை விமர்சிப்பதுடன் நின்று விடாமல் ஒரு ஆக்கப்பூர்மான பங்களிப்பினை அழகிய லுக்கு ஆற்றுகின்றது என்று கூறுவதில் தவறு இருக்க முடியாது. வடிவ வாதத்தின் வரையறைக்குட்பட்ட கலையின் வரைவிலக் கணங்களை விமர்சிக்கும் பெண்ணிய அழகியலாளர்கள் கலை என்பதை வரைவிலக் கணப்படுத்துவதை காட்டிலும் அதன் பரந்துபட்ட பண்புகளை விபரிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். மேலும் கலை என்பது மாறுபடும் தன்மை கொண்டது என்ற கருத்தினை வற்புறுத்துபவர்களாக பெண்ணிய அழகியலாளர்கள் காணப்படுகின்றனர். பெண்ணிய அழகியல் கலைக்கும் வாழ்வுக்கும் இடையிலான தொடர்பினை முக்கியத்துவப் படுத்தும் அதேவேளை கலைப்படைப்பு எனும் போது கலைப் பொருட்கள் என்று மட்டுமல்லாமல் கலை சம்பந்தப்பட்ட ஆற்றுகைகள், வாழுகின்ற சூழல்நிலைகள் (தோட்டங்கள்) மற்றும் ஏனைய இடைவினை தன்மையுடைய நிகழ்ச்சிகள் என பரந்துபட்ட பண்புகளை உள்ளடக்குகின்றது.

உயர்ந்த கலை என்பது இயற்கையினையும் பண்பாட்டினையும் கடந்து நிற்பதுடன் சிறந்த கலை என்பது கலைஞர்களின் திறமையினாலும் புறவயத்தன்மையினாலும் உருவாக்கப்படுகின்றது என்கின்ற வடிவவாத கோட்பாட்டினை பெண்ணிய அழகியலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நல்ல கலை என்பது எப்போதும் சவால்களை எதிர் கொள்ளும் தன்மை கொண்டதாக இருப்பதுடன் மக்களின் வாழ்விற்கு ஒரு அர்த்தம் கொடுப்பதாக இருக்கும் என குறிப்பிடுகின்றனர். நல்ல கலை என்பது ஒரு குறிப்பிட்ட கலாசாரத்தினை கடந்து நிற்பதுடன் ஒரு புதிய இருப்பு நிலையினை முன்மொழி வதாகவும் உலகம் பற்றிய புதிய புரிந்துகொள்ளலை வழங்குவ தாகவும் இருக்கும் என பெண்ணிய சிந்தனையாளர்கள் குறிப்பிடுகின்றனர். அழகியலினை ஒழுக்க வியல் மற்றும் அறிவாராய்ச்சியல் போன்ற துறையில் இருந்து பிரித்துப் பார்க்கப்பட முடியாத ஒன்று எனக்கருதும் பெண்ணிய அழகியலாளர்கள் உண்மையில் அழகியல் என்பது அறிவாராய்ச்சியல் நோக்கு, ஒழுக்கவியல் நோக்கு என்பவற்றின் ஒருங்கிணைந்த உருவாக்கமே என வாதிடுகின்றனர். மேற்குறிப்பிட்ட மூன்று பகுதிகளையும் இணைத்து பார்ப்பதன் மூலம் தான் ஒரு கலைப்படைப்பு முழுமையான புரிந்து கொள்ளலையும் முழுமையான அனுப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தையும் பெறமுடியும் என பெண்ணிய அழகியலாளர்கள் நம்புகின்றனர்.

கலைக்கும் கலைஞனுக்கும் இடையே எத்தகைய உறவு காணப்படுகின்றது என்ற விடயத்திற்கு பெண்ணிய அழகியல் முக்கியத்துவம் வழங்குகின்றது. முழுமை யான வடிவம் சார்ந்த மதிப்பீட்டினையோ அல்லது முழுமையான புறவயத்தன்மை யினையோ பெண்ணிய அழகியலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

கலைஞர்களின் அனுபவம் அவர்கள் வாழும் சூழ்நிலை என்பவற்றுக்கிடையிலான இடைவினைகளை புரிந்து கொள்வதில் பெண்ணிய அழகியலாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். கலையின் பொதுமைத்தன் மையினை வெளிப்படுத்துவதோ அல்லது புரிந்து கொள்வதோ இவர்களது நோக்கமல்ல. இதற்கு மாறாக குறிப்பிட்ட சூழ்நிலையில் காணப்படும் விடயங்கள் மற்றும் கலைப்படைப்புக்கும் கலைஞருக்கும் இடையிலான உறவின் சிக்கலான தன்மை ஆகியவற்றை புரிந்து கொள்வதில் அதிக அக்கறை காட்டுகின்றனர். ஒரு கலைப் படைப்பு உருவாகும் சமூக சூழ்நிலை தான் பெண்ணிய அழகியலில் முக்கியத்து வப்படுத்தப்படும் விடயமாக இருக்கின்றது. ஒரு கலைப்படைப்பு உருவாக்கப்படும் குறிப்பிட்ட ஒரு சமூக பொருளாதார அரசியல் கலாசார சூழ்நிலை மற்றும் இந்த சூழ்நிலைக்கும் கலைஞனுக்கும் இடையிலான இடைவினைகள் என்பவை பெண்ணிய அழகியலில் முக்கியத்துவம் பெறும் விடயங்களாக இருக்கின்றன. பெண்ணியல் அழகியல் கோட்பாடுகலை அனுபவத்தினை அதிகரிப்பதுடன் கலையின் எல்லைகளை விரிவுபடுத்துகின்றது. புதிய கலை வடிவங்களை எமக்கு அறிமுகப்படுத்துகின்றது. புதிய கலை சமூகத்தினை அடையாளப் படுத்துகின்றது. ஒரு படைப்பில் அகவயத்தன்மையினை மறு மதிப்பீடு செய்வதுடன் அகவயத்தன்மையின் அளவினை பெண்களின் அனுபவங்களை சேர்ப்பதன் மூலம் அதிகரிக்கின்றது. மேலும் அரசியல்ரீதியான நடவடிக்கையின் மூலம் அழகியல் மதிப்பீட்டினை எடுத்துநோக்குவதுடன் பழைய பொருத்தமற்ற அழகியல் கட்டளைப் படிமங்களை எடுத்துக் காட்டுவதுடன் புதிய கட்டளைப்படிமங்களையும் முன் வைக்கின்றது.

### 3.3 ஆண்பார்வையும் பெண்ணிய அழகியலும் (Male gaze & Feminist Aesthetics)

பொதுவாக கலைப்படைப்புக்களில் பெண்கள் செயற்படுபொருள்களாகவும் (Objects) ஆண்கள் செயற்படுத்துபவர்களாகவும் காட்டப்படுவதாகவும் பெண்ணிய அழகியலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறிப்பாக கலைப்படைப்புக்களில் ஆண்கள் இரசிப்பவர்களாகவும் பெண்கள் இரசிக்கப்படும் பொருள்களாகவும் கருதுகின்றனர். இவ்வகையில் "ஆண்பார்வை" என்ற எண்ணக்கரு பெண்ணிய அழகியலில் முக்கியத்துவம் பெறுகின்றது. மேலைத்தேய ஓவிய பாரம்பரியம் பெண்களை ஒரு உணர்வற்ற பொருளாக கருதுவதாக பெண்ணிய வாதிகள் சுட்டிக்காட்டும் அதேவேளை பெண்களின் உடலை பல்வேறு விதங்களில் சித்தரிப்பதை அழகானது என கருதுவதுடன் ஓவியர்கள் பெண்களின் உடலை உணர்வற்ற பொருளாகவே காட்ட முற்பட்டனர் என இவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். தன்னியல்பில் செயற்றிறன் அற்ற ஆண்களால் பார்த்து சிந்திக்கப்படும் பொருளாகவும், ஆண்களுக்கு கவர்ச்சி யினை ஏற்படுத்தும் பொருளாகவும் கலைப்படைப்புக்கள் பெண்களை உருவாக்குகின்றன என பெண்ணிய அழகியலாளர்கள் கடுமையாக விமர்சிக்கின்றனர். பாரம்பரிய அழகியலின் இத்தகைய போக்கு இன்றளவும் தொடர்வதாக இவர்கள் குறிப்பிடுகின்றனர். இன்றைய எல்லா ஊடகங்களிலும் விளம்பரங்களிலும் பாரம்பரிய நோக்கே சித்தரிக்கப்பட்டு வருகின்றது என பெண்ணிய அழகியலாளர்கள் அதிருப்தியினை வெளியிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர். சமூக கட்டமைப்பில் காணப்படுகின்ற பால்நிலைத்தன்மையின் பாரபட்ச நிலை கலைப்படைப்புக்களிலும் அப்படியே வெளிப்படுத்தப்படுவதை பெண்ணிய அழகியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆண் பார்வை (Male Gaze) என்ற எண்ணக் கருவானது திரைப்பட கோட்பாட்டுடன் தொடர்புபட்ட வகையில் லோராமல்வே (Laura Mulvey) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. திரைப்படத்தின் தொழில்நுட்ப முறைகளும் புகைப்பட கருவியின் கோணங்களும் ஆண் மைய வாத நோக்கினை அடிப்படையாகக் கொண்டிருப்பதை சுட்டிக் காட்டும் மல்வே இந்த நோக்கு பெண்களை ஆண்களின் விருப்பத்திற்குரிய செயற்படு பொருள்களாக (objects) சித்திரிக்கும் நோக்கினை உள்ளடக்கி இருப்பதாக கருதுகின்றார். கலைப் பொருட்களுக்குரிய குணங்கள் என்று கூறப்படும் பண்புகளுக்கும் பாரம்பரியமாக பெண்களுக்குரிய குணங்கள் என்று கூறப்படும் பண்புகளுக்கும் இடையில் வேறுபாடுகளை காணமுடியவில்லை என மல்வே ஆதங்கப்படுகின்றார். அதாவது, பெண்கள் ஏனைய பாரம்பரிய கலை வடிவங்களில் காட்டப்படுவதைப் போலவே திரைப்படங்களிலும் செயற்படுத்தப்படும் பொருட்களாகவும் ஆண்களுக்கு கவர்ச்சியினை ஏற்படுத்தக்கூடிய பொருட்களாகவும் செயல்திறன் உள்ள ஆண்களினால் மதிப்பிடப்படும் பொருட்களாகவும் காட்டப்படுகின்றனர். மேற்குறிப்பிட்ட விடயங்களை சுட்டிக் காட்டுவதன் மூலம் திரைப்படத்தின் தொழில்நுட்ப முறைகளும் புகைப்பட கருவியின் கோணங்களும் ஆண்மைய வாத நோக்கினை பிரதிபலிப்பதாக உள்ளன என்பதே மல்வேயின் பிரதான வாதமாகும். (மேலது.பக்.445) நவீன கலை வடிவங்களாகிய திரைப்படங்கள் (பெரும்பாலானவை) ஆண் பார்வையினை மையமாகக் கொண்டே படைக்கப்படுகின்றன என குறிப்பிடும் இவர் இத்தகைய ஆண்பார்வையினை மையமாகக் கொண்ட திரைப்படங்களை ஆண்களைப் போலவே எல்லாப் பெண்களும் ஏற்றுக் கொள்கின்றனர் என்று ஆண்கள் நினைப்பது மிகவும் தவறானது என இவர் சுட்டிக் காட்டுகின்றார். இத்தகைய ஆண்பார்வை நோக்கே அழகியல் பார்வையாக நெடுங்காலமாக கலை மற்றும் அழகியல் வரலாற்றில் பயிற்றப்பட்டு வந்துள்ளது என பெண்ணிய அழகியலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

## 4.0 முடிவுரை (Conclusion)

பெண்ணிய அழகியல் என்பது ஏற்கனவே இருக்கக்கூடிய பாரம்பரிய அழகியல் மற்றும் வடிவவாத அழகியல் கோட்பாடுகள் என்பவற்றிற்கு எதிராக முன்வைக்கப்படும் ஒரு புரட்சிகரமான எதிர்வினையாக கருதப்படலாம். பின்நவீனத்துவ சிந்தனை முறைமைகளுள் ஒன்றாக பெண்ணிய அழகியல் சிந்தனைகள் கருதப்பட முடியும். ஏற்கனவே வழக்கில் உள்ள எல்லா அழகியல் கோட்பாடுகளும் ஆண்மைய வாதத்தினை அடிப்படையாகக் கொண்டவை என்பதுடன் பெண்களின் அழகியல் சிந்தனைகளும் நோக்குகளும் நாம் காணும் அழகியல் நடவடிக்கைகளிலும் கலைப்பொருட்களிலும் வெளிப்படுத்தப்படவில்லை என்பதே பெண்ணிய அழகியல் அறிஞர்களின் பிரதான குற்றச்சாட்டாக காணப்படுகின்றது.

பெண்ணிய அழகியல் ஒரு புரட்சிகரமான சிந்தனையாக காணப்பட்ட போதிலும் அதன் பண்புகளில் பலவிதமான முரண்பாடுகளையும் பலவீனங்களையும் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாக உள்ளது. பெண்ணிய அழகியலாளர்கள் மத்தியில் பாரம்பரிய அழகியலில் தராதரமான புறவயத்தன்மை பற்றிய தெளிவான கருத்து காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான பெண்ணிய அழகியலாளர்கள் புறவயத்தன்மையினை நிராகரிக்கும் அதேவேளை சில பெண்ணிய அறிஞர்கள் அதனை ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டும் என குறிப்பிடுகின்றனர். அதாவது புறவயத்தன்மை மற்றும் புறவயமற்ற தன்மை என்ற நிலைகளை ஒன்றிணைப்பதன் மூலம் உயர்ந்த கலை அனுபவத்தினை பெற முடியும் என சில பெண்ணிய அழகியலா ளர்கள் வாதிடுகின்ற னர். இத்தகைய நிலை பெண்ணிய அழகியலில் முன்னுக்குப் பின் முரண்பட்ட நிலையினை எடுத்துக் காட்டு கின்றது. (மேலது.பக்.442) பெண்ணிய அழகியல் அறிஞர்கள் ஒரு வகையில் அழகியலில் பொதுமைத் தன்மையினையும் (Universality) கருத்துநிலை சார்ந்த தன்மையினையும் (Abstractionism) புறக்கணித்த போதும் மறுபுறம் அவற்றை வேறு ஒரு வடிவத்தில் ஏற்றுக்கொள்வது போல் தெரிகின்றது. பெண்ணிய அழகியலின்படி "ஒரு நல்ல கலை என்பது குறிப்பிட்ட கலாசாரத்தினை கடந்து செல்கின்றது என்பதுடன் புதிய இருப்பு நிலைக்கும் உலகம் பற்றிய புதிய புரிதலுக்கும் எம்மை அழைத்துச் செல்வதாக இருக்கும்." (மேலது.பக்.443) ஆண்மைய வாதம் என்பது ஒரு கருத்து நிலையாகவும் ஒரு கட்டளைப் படிமமாகவும் கருதப்படும்பட் சத்தில் பெண்மையவாதம் என்பதும் ஒரு கருத்து நிலையாகவும் ஒரு கட்டளைப் படிமமாகவும் இருக்கும் என்பதை நாம் மறுக்க முடியாது.

பின் நவீனத்துவ சிந்தனைகள் பெண்ணிய சிந்தனைகளுடன் இணைந்து கலையின் புறவயத்தன்மையினை எதிர்க்கின்றன. (டேவிட்நொவிஸ்.2001:157) ஹியூம் ஒரு கலைப்பொருளை சரியாக புரிந்துகொள்ள ஒரு சில பண்புகளை ஒரு நல்ல கலை மதிப்பீட்டாளன் கொண்டிருக்க வேண்டும் என குறிப்பிடுகின்றார். இவை புறவயமான தன்மையினை ஒரு கலைஞன் அல்லது கலை மதிப்பீட்டாளனிடம் உருவாக்க முயல்கி ன்றன. இத்தகைய பண்புகளாவன: பிரித்தறி யக் கூடிய ஆற்றல், கலை நய உணர்வு, கலைநய உணர்வினை பெறுவதற் கான அனுபவம், ஒப்பீட்டு ரீதியான மதிப்பீடு, முற்சாய்வு எண்ணம் இல்லாமை, பக்குவமான மனநிலை, குறிப்பிட்ட நாட்டில் குறிப்பிட்ட காலத்தில் காணப்படுகின்ற கருத்துக்களும் பழக்கவழக்கங்களும். (பிரேம்குமார். 2013:45-47) இதேபோன்று காண்ட் ஒரு நல்ல அழகியல் தீர்ப்பு கொண்டிருக்க வேண்டிய பண்புகளைக் குறிப்பிடுகின்றார். இத்தகைய பண்புகளும் ஒரு அழகியல் அனுபவத்துடன் தொடர்புபட்ட புறவயத் தன்மையினை எடுத்து விளக்கு வனவாக உள்ளன. (புறவயமான தன்மை, பொதுமைத் தன்மை, இறுதிநோக்க வடிவம் மற்றும் கட்டாய திருப்திதரும் தன்மை (மேலது.பக்.53-57) பெண்ணிய அழகியல் தீவிரமாக எதிர்க்கின்ற புறவயத்தன்மையுடன் தொடர்புபட்ட தராதரங்களை உருவாக்குவதில் ஹியூமும் காண்ட்உம் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்ணிய அழகியல் கருதுவது போல் புறவயத்தன்மையினை ஒரு கலைப் படைப்பின் ஒரு குறைபாடாக கருத முடியாது. மாறாக ஒரு நிறைவாவும் கருத முடியும். எடுத்துக் காட்டாக ஹியூமின் ஒரு கலைப் படைப்பு தொடர்பாக பின்வரும் வாதங்களை குறிப்பிட முடியும். அழகு வெறுமனே அகக் கூறுகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை மாறாக புறக் கூறுகளும் அழகு பற்றிய தீர்ப்புகளுக்கு அடிப்படையாக உள்ளன என்பதை பல உதாரணங்கள் மூலம் ஹியூம் எமக்கு விளக்கிக் காட்டுகின்றார். " ரோமரின் படைப்புக்கள் கிரேக்கர்களையும் உரோமர்களையும் மாத்திரம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக மட்டும் மகிழ்ச்சியில் ஆழ்த்தவில்லை. அத்துடன் தற்பொழுது லண்டனிலும் பாரிசிலும் இருக்கும் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களை மகிழ்ச்சி வெள்ள த்தில் ஆழ்த்துகின்ற சக்தி கொண்ட படைப்புக்களாக அவை காணப்படுகின்றன. ஆகவே அவற்றில் ஏதோ சில அழகுணர்வை ஏற்படுத்தும் கூறுகள் பொதிந்திருப்பதை நாம் மறுக்க முடியாது என்கின்றார் ஹியூம்" (மேலது.பக்:45)

மேலும் ஆணின் கலைக்கும் பெண்ணின் கலைக்கும் இடையே வேறுபாடு இல்லை என்றும் வேறுபட்ட கலைகளை கட்டாயமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களும் பெண்களும் உருவாக்குவதில்லை என்றும் கலை தொடர்பாக ஆண்களும் பெண்களும் வேறுபட்ட அனுபவங்களை கட்டாயமாக அனுபவிப்பதில்லை என்றும் பெண்ணிய அழகியல் அறிஞர்கள் வாதிடுகின்றனர். மேலும் ஆணின் கலைக்கும், பெண்ணின் கலைக்கும் இடையில் தெளிவான வேறுபாடு காணமுடியாமல் இருக்கின்றது என்றும் கூறுகின்றனர். அதே வேளை பெண்களின் கலைகளில் ஒருமித்த தன்மையினை காணமுடியாமல் உள்ளது என்பதனையும் ஏற்றுக்கொள்கின்றனர். (சாரா வேத்.,2001:438-439) மேற்குறிப்பிட்ட பெண்ணிய அழகியலாளர்களின் கலை அனுபவம் பற்றிய கருத்துக்கள் பெண்ணிய அழகியல் கோட்பாடு கொண்டிருக்கும் பலவீனங்களை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. பின்நவீனத்துவத்தின்படி எல்லாத்தீர்ப்புகளும் சார்புநிலைத்தன்மை வாய்ந்தவை என்பதனால் ஒரு மனிதனின் அழகியல் தீர்ப்பு இன்னொரு மனிதனின் அழகியல் தீர்ப்பில் இருந்து வேறுபடலாம். இத்தகைய சூழ்நிலையில் அழகியல் அனுபவத்திலும் தீர்ப்பிலும் ஆண் பெண் என்ற வகை வேறுபாடு சரியானதா? என்ற கேள்வி எழுகின்றது. பின் நவீனத்துவத்தின் தந்தை என போற்றப்படும் லியோடார்ட் எந்த ஒரு நிகழ்வினையும் மற்றுமொரு நிகழ்வின் அடிப்படையில் நோக்கக்கூடாது. பொதுமையான வகையீட் டுக்குள் கொண்டு செல்லக்கூடாது எனக் குறிப்பிடுகிறார். இவ்வகையில் பெண்ணிய அழகியல் ஒரு வகை கருத்து நிலையினையும் பொதுவான வகையீட்டினையும் உருவாக்குவதாக தோன்றுகிறது. இவ்வகையில் பின்நவீ னத்துவ நோக்கில் பல விமர்சனங்களை எதிர் நோக்கும் நிலையில் பெண்ணிய அழகியல் இருப்பதை நாம் காணமுடிகிறது.

## உசாத்துணை நூல்கள் (References)


1. Eagleton Terry (1990) *The Ideology of the Aesthetic*, Oxford: Blackwell Publishers,
2. Felski, Rita. (1989) *Beyond Feminist Aesthetics: Feminist Literature and Social Change,* Cambridge: Harvard University Press.

3. Graham Gordon (1997) *Philosophy of Arts, An Introduction to Aesthetics*, London: Routledge,

4. Korsmeyer, Carolyn (2004). *Gender and Aesthetics: An Introduction*, London: Routledge,

5. Lechte,John (1994) *Fifty Key Contemporary Thinkers from Structuralism To Postmodernity*, London: Routledge,

6. Mulvey, Laura. (1989) *Visual and Other Pleasures*, London: Macmillan

7. Novitz, David (2001), *Post Modernism, Barthes and Derrida* in the Routledge Companion to Aesthetics edited by Berys Gaut and Dominic MclverLopes, London: Routledge.

8. Worth,Sarah (2001) *Feminist Aesthetics* in the Routledge Companion to Aesthetics edited by Berys Gaut and Dominic McIverLopes, London: Routledge.

9. பிரேம்குமார், இ., (2013), *மேலைநாட்டு அழகியல் (பிளேட்டோ முதல் நீட்சே வரை)*, கொழும்பு, சென்னை: குமரன் புத்தக இல்லம்,

10. ..........................., (2016), *பிளேட்டோவும் பின் நவீனத்துவ அழகியல் சிந்தனைகளும்- ஒரு மெய்யியல் நோக்கு, மொழிதல்*,தொகுதி :3, எண்:2, மட்டக்களப்பு, இலங்கை: சுதந்திர ஆய்வு வட்டம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் மரபில் மெய்யியல் சிந்தனைகள் - ஒரு நோக்கு

சோ. ஜெகநாதன்

***ஆய்வுச் சுருக்கம்***

*மெய்யியல் என்பது மிகவும் நீண்ட வரலாற்றினைக் கொண்ட துறையாக விளங்குகின்றது. இது தனக்கென தனியான ஆய்வு விடயத்தைக் கொண்ட துறையல்ல. மனிதனுடைய சிந்தனையில் தோன்றிய அனைத்து ஆய்வுத் துறைகளிலுமுள்ள உள்ளார்ந்த விடையங்களைப் பற்றியும் அவை தொடர்பான நியமம் கூறும் தன்மையான ஆய்வுகளை மேற்கொள்ளும் துறையாக மெய்யியல் விளங்குகின்றது. இதனால் மெய்யியலை இரண்டாம் நிலை ஆய்வாக அடையாளப்படுத்துகின்றனர். அந்த வகையில் ஒழுக்கத் துறையை ஆய்வுக்கு உட்படுத்தும் போது அது ஒழுக்க மெய்யியல் எனவும், உளவியலை ஆய்வுக்கு உட்படுத்தும் போது உளமெய்யியல் எனவும் விஞ்ஞானத்தை ஆய்வுக்கு உட்படுத்தும் போது விஞ்ஞான மெய்யியல் எனவும் மெய்யியலில் பல கிளைகள் பரிணாமம் பெறத்தொடங்கின. இதன் அடிப்படையில்தான் தமிழர்களது சிந்தனைகள் தொடர்பான கருத்துக்களை ஆய்வு செய்வதை தமிழர் மெய்யியல் (Tamilian Philosophy) என்கிறோம். இவற்றோடு மெய்யியலின் ஆய்வு விடயங்களாக கடவுள், உயிர், விடுதலை, கடமை, உள்ளம், மனித இருப்பு விருப்பு, வெறுப்பு, நன்மை, தீமை, உண்மை, பொய் முதலானவற்றையும் கொள்ளமுடியும். மெய்யியல் பல்வேறு விடயங்களை ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ள அதேநேரம் பிராந்திய அடிப்படையில் அது மேலைத்தேய மெய்யியல், கீழைத்தேய மெய்யியல் (இந்திய மெய்யியல்) என இரு பெரும் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. தற்போது இதற்கு அப்பால் நாடுகளை மையப்படுத்திய மெய்யியல் பாரம்பரியங்களை அடையாளம் காணும் ஆய்வுகள் உருவாகியுள்ளன. உதாரணமாக சீன மெய்யியல், ஜப்பானிய மெய்யியல், திபெத்திய மெய்யியல் என்றவாறு ஒவ்வொரு பிரதேசத்திற்குமான மெய்யியல் பாரம்பரியங்கள் தொடர்பான ஆய்வுகள் தற்போது வெளிவருவதை நாம் காணலாம். இந்த அடிப்படையில் தான் தமிழர்களுடைய மெய்யியல் பாரம்பரியங்களையும் நாம் அறிந்து கொள்வது அவசியமானது. எனினும் மேலைத்தேய மெய்யியல் பாரம்பரியத்தைப் போன்று தமிழர் மெய்யியல் பாரம்பரியங்கள் தொடர்பான ஆய்வுகள் அதிகம் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் பல்துறைசார் மெய்யியல் நோக்கு நிலைகள் எவ்வாறு தமிழர் பாரம்பரியத்தில் இருந்து வந்துள்ளன என்பது பற்றி சில தெளிவுகளை இக்கட்டுரை தருகிறது.*

***முதன்மைச் சொற்கள்*** *: தமிழர் சிந்தனை, இந்திய மெய்யியல், உளமெய்யியல், ஒழுக்க மெய்யியல், விஞ்ஞான மெய்யியல்*

## 1.0 அறிமுகம் (Introduction)

தற்காலத்தில் பிரபல்யமாகப் பேசப்படும் மெய்யியல் நீண்ட வரலாற்றினைக் கொண்ட துறையாக விளங்குகிறது. வாழ்க்கையின் ஒட்டு மொத்த விடயங்களையும் இது ஆய்வு செய்கிறது. எல்லாத் துறைகளையும் தன்னுள் உள்ளடக்கி அவற்றைப் பகுப்பாய்வு செய்து அவற்றிலுள்ள உண்மைத் தன்மையை வெளிக் கொண்டு வருவது தான் மெய்யியலாகும். மெய்யியல் என்ற சொல்லானது ஆங்கிலத்தில் "Philosophy" என அழைக்கப்படுகிறது. இது "Pholosophia" என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது. "Philosophia"என்பது Philo,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

sophia எனப் பிரிக்கப்பட்டு " Philo" என்பது விருப்பம் (love) எனவும் "sophia" என்பது ஞானம் அல்லது அறிவு (Wisdom) எனவும் பொருள் கொள்ளப்படுகிறது. (ஞானகுமாரன். நா, 2003 : 2) அதாவது மெய்யியல் என்பது அறிவுசார் மீதான வேட்கையைக் குறிப்பதாக விளங்குகிறது. இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால் விடயத்தை முழுமையாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தி அதிலுள்ள உண்மைத் தன் மையை வெளிக்கொண ருவதே மெய்யியலின் பணியாகும். அது எல்லாத்துறை களையும் தனது ஆளுமைக்கு உட்படுத்திக் கொண்ட தோடு, அத்துறைகளை தனது முன்னிணை ப்பாகவும் (prefixt) இணைத்துக் கொண்டது.

ஒழுக்கத் துறையை ஆய்வுக்கு உட்படுத்தும் போது அது ஒழுக்க மெய்யியல் எனவும், உளவியலை ஆய்வுக்கு உட்படுத்தும் போது உளவியல் மெய்யியல் எனவும் விஞ்ஞான த்தை ஆய்வுக்கு உட்படுத்தும் போது விஞ்ஞான மெய்யியல் எனவும் மெய்யியலின் பெயர்கள் பரிணாமம் பெறத் தொடங்கின (Sahakian, 1968: 13). இதன் அடிப்படை யில்தான் தமிழர்களது மெய்யியல் தொடர்பான கருத்துக்களை ஆய்வு செய்வதை தமிழர் மெய்யியல் (Tamilian Philosophy) என்கிறோம். இவற்றோடு மெய்யியலின் ஆய்வு விடயங்களாக கடவுள், உயிர், விடுதலை, கடமை, உள்ளம், மனித இருப்பு விருப்பு, வெறுப்பு, நன்மை, தீமை, உண்மை, பொய் ஆகியவற்றையும் கொள்ள முடியும்.

மெய்யியல் பல்வேறு விடயங்களை ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ள அதேநேரம் பிராந்திய அடிப்படையில் அது மேலைத் தேய மெய்யியல், கீழைத்தேய மெய்யியல் (இந்திய மெய்யியல்) என இரு பெரும் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. தற்போது இதற்கு அப்பால் நாடுகளை மையப்படுத்திய மெய்யியல் பாரம்பரியங்களை அடையாளம் காணும் ஆய்வுகள் உருவாகியுள்ளன.

உதாரணமாக சீன மெய்யியல், ஜப்பானிய மெய்யியல், திபெத்திய மெய்யியல் என்றவாறு ஒவ்வொரு பிரதேசத்திற்குமான மெய்யியல் பாரம்பரியங்கள் தொடர்பான ஆய்வுகள் தற்போது வெளிவருவதை நாம் காணலாம். (Nakamura, 1985:29) இந்த அடிப்படையில் தான் தமிழர்களுடைய மெய்யியல் பாரம்பரி யங்களையும் நாம் அறிந்து கொள்வது அவசியமானது. எனினும் மேலைத்தேய மெய்யியல் பாரம்பரியத்தைப் போன்று தமிழர் மெய்யியல் பாரம்பரியங்கள் தொடர்பான ஆய்வுகள் பெரிதாக மேற்கொள்ளப்பட வில்லை. இந்நிலையில் பல்துறைசார் மெய்யியல் நோக்கு நிலைகள் எவ்வாறு தமிழர் பாரம்பரியத்தில் இருந்து வந்துள்ளன என்பது பற்றி சில தெளிவுகளை இக்கட்டுரை தருகிறது.

## 2.0 ஆய்வு நோக்கம் (Objectives)

தமிழர் சிந்தனை மரபுகளை இனங்கா ணுதல். தமிழர் சிந்தனை மரபு இலக்கியங்களில் பயின்று வந்த முறையினை அடையா ளப்படு த்துதல்.

தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்த மெய்யியல் பற்றிய சிந்தனை போக்குகளை மேலைத்தேய மெய்யியல் பற்றிய சிந்தனை களுடன் ஒப்பாய்வு செய்தல். என்பன இந்த ஆய்வின் நோக்கங்களாகும்.

## 3.0 ஆய்வுப் பிரச்சினை (Research Problem)

தமிழர் மரபில் மெய்யியலின் பிரதான பிரிவுகளாக விளங்கும் அழகியல், ஒழுக்க வியல், அரசியல், அறிவாராய்ச்சியியல் முதலானவை தொடர்பாக முறைமைப்ப டுத்தப்பட்ட ஆய்வுகள் குறைவானதாகவும் முழுமையற்றதாகவும் உள்ளன. இந்த ஆய்வு இடைவெளியை நிரப்பும் முயற்சியில் எனது ஆய்வு அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.0 ஆய்வின் மூலங்களும் முறைகளும் (Materials & Method)

இவ்வாய்வு பகுப்பாய்வு, விமர்சன, ஒப்பீட்டு ஆய்வு ஆகிய முறையியல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினை சார்பாக எழுத்துருவிலுள்ள ஆக்கங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் முறையும், தமிழ் இலக்கியங்களில் மெய்யியல் பற்றி பயின்று வந்த கருத்துக் களையும் மேலைத்தேய மெய்யியல் பற்றிய கருத்துக்களையும் ஒப்பு நோக்குவதற்கு ஒப்பியல் ஆய்வு முறையி யலும், ஒப்பியல் முறையால் பெறப்படும் கருத்துகளை விமர்சனம் செய்வதற்கு விமர்சன ஆய்வு முறையியலும் இங்கு பின்பற் றப்படுகிறது.

குறித்த பிரச்சினை தொடர்பாக மூல நூல்களிலிருந்தும் (Primary Sources) வழிநூல்களிலிருந்தும் (Secondary Sources) மேலதிக வாசிப்பு நூல்களிலிருந்தும் (Peripheral Reading) தரவுகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றது.

## 5.0 தமிழர் சிந்தனையும் மெய்யியலும்

பொதுவாக மெய்யியலின் இயல்பும் பரப்பும் எதனை மையப்படுத்துகின்றதோ அதே அம்சங்க ளைத் தமிழர் மெய்யியலில் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது. மெய்யியலின் பரப்பினை வரையறுப்பது என்பது இலகுவான காரியமல்ல. காரணம் ஏனைய துறைகளை எடுத்துக்கொண்டால் அந்தந்த துறைசார்ந்த ஆய்வுப்பொருளும், ஆய்வுமுறையும் தெளிவாக வரையறுக்கப் பட்டிருக்கும். உதாரணமாகத் தாவரவியலை எடுத்துக்கொ ண்டால் தாவரங்கள் ஆய்வுப் பொருளாகவும் அவதானம், பரிசோதனை போன்றவை ஆய்வு முறையாகவும் உள்ளன. இதுபோன்று விலங்கியல், வானியல், உடற்கூற்றியல், புகற்பவியல் போன்றவற்றி னதும் ஆய்வுப் பொருளையும், ஆய்வு முறைகளையும் தெளிவாக வரையறுத்துக்காட்டுவது போல் மெய்யியலின் ஆய்வுப் பொருளையும் ஆய்வு முறையையும் இலகுவாக வரையறுக்க முடியாது. இதனால் தான் வில்லியம் லில்லி என்பவர் ஒட்டு மொத்தமாக இப்பிரபஞ்சத்திற்கு உட்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும், இப்பிரபஞ் சத்திற்கு அப்பாற்பட்ட பிரச்சினைக ளையும் மெய்யியல் ஆய்வு செய்கின்றது என்றார். வில்லியம்லில்லியின் இக்கருத்தை நாம் தமிழர் மெய்யியலிலும் கண்டு கொள்ளலாம்.

மெய்யியலின் இயல்புகளுள் பிரதானமான ஒன்றாக அமைவது பிரச்சினையை ஏற்படு த்துதல். சாதாரண மக்களது பிரச்சினையி லிருந்து மெய்யியல் பிரச்சினை என்பது வேறுபட்டது. இதனைத்தான் பேட்டன்ரசல் பிரச்சினைகளுக்கு மெய்யியல் தீர்வு தராவிட்டாலும் பிரச்சினையை எழுப்பக் கூடிய சக்தி வாய்ந்த துறையாக விளங்கு கின்றது என்றார். இத்தன்மையைத் தமிழர் சிந்தனை யில் பல இடங்களில் காணமுடி கின்றது. பௌத்தத்தில் மண்டிலச் சுழற்ச் சியின் அடிப்படையில் பன்னிரண்டு நிதானங்களும் இடம்பெறுகின்றன. இச்சுழற்ச் சிக்குக் காரணம் என்ன? என்ற வினா கேட்கப்பட்ட போது அங்கு பிரச்சினை தோன்றுகின்றது. இதேபோன்று அறிவைப் பெறும் வழிகளில் தரிசனங்க ளுக்கிடையே ஏன் வேறுபாடு உள்ளது? எனவே பிரச்சினை எழும்பும் தன்மையை தமிழர் மெய்யியலில் காணக் கூடியதாக உள்ளது.

இதேபோன்று மதிப்பீடுகளை மேற் கொள்ளுவதும் மெய்யியலின் பிறிதொரு இயல்பாகக் காணப்படுகின்றது. மதிப்பீடு எனும் போது பொருட்கள் சார்ந்த மதிப்பீடு களைக் குறிக்காது எண்ணக்க ருக்கள் சார்ந்த மதிப்பீட்டையே குறிக்கின்றது. அழகு உண்மை, நன்மை, ஒழுக்கம், நீதி போன்ற எண்ணக்கருக்களை மதிப்பிட்டு ஓர் அளவிற்கேனும் தெளிவான வரையறைகளை விளக்க தமிழியல் மெய்யியலாளர்கள் முன்வந்துள்ளார்கள். தொல்காப்பியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு என்ற எண்ணக்கரு, மெய்பாட்டியலினூடாகத் தெளிவாக விளக்கப்படுகின்றது. எட்டு வகை மெய்ப்பாடுகள் பின் முப்பத்திரண்டு மெய்ப்பாடாக விரிவடைகிறது. மெய்ப்பாடுகளுள் ஒன்றான சுவையை (Taste) மேலைத்தேய மெய்யியலில் கியூமின் சுவை பற்றிய எண்ணக்கருவுடனும் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும். இந்த சுவை, மெய்ப்பாடு போன்றவற்றின் அடிப்படையில் அழகியல் அனுபவங்கள் ஒருவருக்கொருவர் வேறுபடலாம். இதனால் கலைஞர்கள் விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும் என்பதை தமிழியல் சிந்தனையாளர்கள் சுட்டிக்காட்டியதன் மூலம் தமிழர் மெய்யியலில் மதிப்பீடுகளை மேற் கொள்ளும் தன்மை இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

தமிழர் மெய்யியலில் பகுப்பாய்வை மேற்கொள்ளும் தன்மையும் காணப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற சமகால மெய்யியலின் பிரதான பணி பகுப்பாய்வை மேற்கொள்வதாகும். மொழியின் மீது நடாத்தப்படும் பகுப்பாய்வு எண்ணக்கருக்களுக்கு இடையிலான அர்த்தத்தை இலகுவாகப் புரிந்துகொள்ள வழிசமைக்கிறது. இதனை தொல்காப்பியம், நன்னூல் முதலிய நூல்களில் தெளிவாகக் கண்டு கொள்ளலாம் (சிவானந்தமூர்த்தி, 2015 : 2).

அடுத்து நியமம் கூறும் தன்மையினையும் தமிழர் மெய்யியலின் இயல்பாகக் காட்ட முடியும். அதாவது ஒரு விடயத்தை விளக்கும் போது, சரி, பிழை, உண்மை, பொய், நன்மை, தீமை போன்றவற்றுடன் தொடர்புபடுத்தி விளக்குவதாகும். இத்தகைய பண்பினைத் திருக்குறள், நாலடியார், கீதை போன்றவற்றில் காணலாம். பௌத்தம் கூறும் நற்காட்சி, நல்வாய்மை, அட்டசீலக் கொள்கை, தசசீலக் கொள்கை போன்றவை மேலும் இதற்கு உரமூட்டி நிற்கின்றன. இதனை அடிப்படையாக வைத்துத்தான் மெய்யியலை இரண்டாம் தரவு ஆய்வு என கூறுகின்றனர்.

மெய்யியலின் இயல்பினை வரையறுப்பதில் சிக்கல் இருப்பது போன்றே அதன் பரப்பினை வரையறுப்பதிலும் சிக்கல் உள்ளது. இருந்தாலும் மெய்யியலின் பரப்பாக பிரபஞ்சம், அரசியல், சமயம், ஒழுக்கம், அழகியல், அறிவு, அளவையியல், உளவியல், பௌதீகம், இருப்பியல் வாதம், விஞ்ஞானம் என்பன பற்றிய ஆய்வுகளை நாம் அடையாளப்படுத்த முடியும் (ஜமாஹிர், 2010 : 27).

## பிரபஞ்சம் பற்றிய நோக்கு

மெய்யியல் ஆரம்பத்தில் பிரபஞ்சத் தோற்றம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டது. பிரபஞ்சத் தோற்றத்திற்கு மூலகாரணம் எது? என்ற வினாவுக்கு விடை தேட முனைந்தனர். மேலைத்தேய மெய்யியல் வரலாற்றில் ஆதி கிரேக்கத்தில் பிரபஞ்சத் தோற்றத்திற்கு மூல காரணம் எது? என்ற வினா எழுப்பப்பட்டது. இதற்கு விடையிறுப்பதற்கென நான்கு மரபுகள் தோற்றம் பெற்றன. அவை மைலீசிய மரபு, அணுவாத மரபு, எலியாட்டிக் மரபு, பைதகரஸ் மரபு என்பனவாகும். இதில் மைலீசிய மரபினரின் கருத்துக்கள் வெவ்வேறு பட்டனவையாக அமைந்தி ருந்தன. அதாவது தேலிஸின் கருத்துப்படி உலகம் நீராலானது. அதற்காக அவர் பல நியாயங்களை முன்வைத்தார். அவற்றுள் பூமி நீரில் மிதக்கிறது, பொருட்கள் யாவற்றினதும் ஆதிக் காரணம் நீரே போன்றவற்றை குறிப்பிடலாம். அதேநேரம் பிரபஞ்சம் எவ்வாறு நீரால் படைக்கப்பட்டது? நீர் பொருட்களாக மாற்றமு றும்போது அவ்வழிமுறைகளில் நிகழும் மாற்றங்கள் யாவை? போன்ற கேள்விகளு க்குத் தேலிஸ் விடை தரவில்லை. அனெக்ஸி மாந்தர் உலகத்தோற்றத்திற்கு 'அபைரோன்' எனும் பதார்த்தமே காரணம் என்றார். இது எல்லையற்றது. இந்த எல்லையற்றதுள்ளே எண்ணிறைந்த உலகங்கள் இருந்தாகக் கூறுகின்றார். அனெக்ஸிமினிஸ் உலகத் தோற்றத்திற்கு 'காற்று' காரணம் என்றார். ஹெராக்ளிட்டஸ் உலகத் தோற்றத்திற்கு 'தீயே' காரணம் என்றார் (அனஸ், 2006 : 20-29).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவாத மரபினரின் கருத்துப்படி உலகம் அணுக்களிலானது. உலகப்பொருட்கள் அனைத்தும் அணுக்களிலானது என்பதே அவர்கள் அதற்காகக் காட்டும் நியாயமாகும். எலியாட்டிக் மரபினர் ஓரளவு அறிவுடன் தொடர்புபட்ட வகையில் இருப்பு, இருப்புத் தன்மை என்ற அடிப்படையில் உலகத்தோற்றத்தை விளக்குகின்றனர். பைதகரஸ் மரபினர் உலகம் எண்களாலானது எனக்குறிப்பிடுகிறனர். உலக நடைமுறைகள் எல்லாம் எண்ணிக்கையின் அடிப்படையில் இடம்பெறுவது இதற்குக் காரணமாகும். இவ்வாறு மேலைத்தேயத்தில் குறிப்பிடப்படும் பிரபஞ்ச ஆய்வு தொடர்பான விடயங்கள் எவ்வாறு தமிழர் மெய்யியலில் நோக்கப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டியுள்ளது. உலகம் பற்றி தொல்காப்பியத்தில்,

**"நிலம் தீ நீர், வளி விசும்போடைந்தும் கலந்த மயக்கம் உலகம்"** - (தொல்.மரபியல் 635 ) என்று வரையறை செய்யப்படுகிறது. இதற்கு விளக்கவுரை காணும் இளம்பூரணார்

**"நிலம் ஏலவே நிலத்திற்கு காரணமாகிய நீரும், நீருக்கு காரணமாகிய தீயும்,**

**தீக்குக் காரணமாகிய ஆகாயமும் பெறுதும்."** (தொல். இளம்பூரணர் உரை : 4)

**"இயற்கை என்பதால் செய்து கோடல் பொறாமை அறிந்து கொள்க. நிலம் என்பதனால் பொருள் தோன்றுவதற்கு இடமாகிய ஐம்பெரும் பூதமும் கொள்க"** (தொல். இளம்பூரணர் உரை : 9) என்கிறார்.

மேற்கூறப்பட்ட சூத்திரங்களின் வாயிலாக ஒரு பொருளின் உருவாக்கத்துக்கு அடிப்படையானவை ஐம்பெரும் பூதங்கள் என்பதையும் அதனூடாக இந்த உலகமும் ஐம்பூதங்களாலானது என்ற சிறப்பு விளக்கதினைத் தருகிறார்கள். ஒட்டுமொத்தத்தில் தொல்காப்பியக் கருத்தும் இளம்பூரணாரின் விளக்கமும் உலகத் தோற்றம் பற்றிய மேலைத்தேய விளக்கத்துடன் ஒன்றுபட்டுச் செல்வதைக் காணமுடிகிறது.

மேற்சொன்ன கருத்துக்களை புறநானூறு

**"மண் டிணிந்த நிலனும்,**<br>
**நிலன் ஏந்திய விசும்பும்,**<br>
**விசும்பு தைவரு வளியும்,**

**வளித் தலைஇய தீயும்**<br>
**தீ முரணிய நீரும் என்றாங்கு**<br>
**ஐம் பெரும் பூதத்தியற்கை"**

(புறநானூறு : 2: 1-6) எனும் பாடல் ஊடாகப் புகழ்கிறது. அதாவது மண்ணாலான நிலமும் அந் நிலத்தைத் தாங்கிய ஆகாயமும் ஆகாயத்தில் நிறைந்து வியங்கும் காற்றும் காற்றினால் உண்டாகும் நெருப்பும் நெருப்புக்கு எதிர் மறைப் பண்பு கொண்ட நீரும் இந்த உலகம் தோன்று வதற்கு அடிப்படையானது என்ற புறநானூற்றுப் பாடலின் விளக்கம் தொல்காப்பியனார் கருத்தோடு ஒத்துச் செல்வதைக் காணுகின்றோம்.

**"கருவளர் வானத் திசையிற் றோன்றி இரு நிலத் தூழியும்"** (பரிபாடல் : 2) எனப் பரிபாடல் பகர்கிறது. **"நீர்நிலம் தீவளி விசும்பொடு அய்ந்தும் அளந்து கடை அறியினும் அளப்பருங் குறையை செஞ்ஞாயிற்றுச் செலவும் சென்றளந்து அறிந்தோர் போல"** (பதிற்றுப்பத்து : 30 : 1-5).

மேற்கூறப்பட்ட பாடல்கள் ஐம்பூதங்களால் உலகம் ஆனது என்பதற்கு மேலாக இரு சுடர்கள் ( சந்திரன், சூரியன்) உலக இயக்கத்துக்கு அடிப்படையானவை எனவும் குறிப்பிடுகின்றன.

மெய்யியலை உலகப்பார்வை என தற்போது அடையாளப்படுத்துகின்றனர். இத்தகைய உலகப்பார்வை பற்றிய சிந்தனைகளை சங்க கால மக்களின் நம்பிக்கைகள், உலகியல் வாழ்க்கை முறைகளின் ஊடாக நாம் காணமுடியும். அதாவது புலக்காட்சியையும் அதன் வழி உருவாக்கிக் கொண்ட கருத்துருவாகவே அவர்களது உலகப்பார்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. மேலும் சங்க கால மக்களின் உலகப்பார்வையை புரிந்து கொள்ள திணைக் கோட்பாடு உதவுகின்றது. திணைக் கோட்பாடு உலகம் பற்றிய உயிர்ப் பொருள் உலகம், சடப் பொருள் உலகம் என்ற இரண்டு முரண்பட்ட கருத்துக்களை முன்வைக்கின்றது. (கிருஷ்ணராஜா, 2007: 20-25)

உலகப்பார்வை பற்றிய சிந்தனையோட்டம் சங்க காலத்தில் காணப்பட்டதை கணியன் பூங்குன்றனாரின் பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

*யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன*
*சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்*

*இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்*
*இன்னா தென்றலும் இலமே, மின்னொடு*
*வானம் தண்துளி தலைஇ யானாது*
*கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறை வழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்*
*பெரியோரை வியத்தலும் இலமே,*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.*
*(புறம்:192)*


உலகத் தோற்றத்தை விளக்க மேலைத்தேயம் இயற்கையின் கூறுகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது. அதேபோன்று தமிழியல் சிந்தையாளர்களும் உலகத் தோற்றம் பற்றிய தங்களின் கருத்துக்களை இயற்கையின் கூறுகளை ஆதாரமாக வைத்து மிக நுணுக்கமாக விளக்கியுள்ளனர். இவர்களின் கருத்துக்களை விளங்குவதற்கு நிறைந்த இலக்கண அறிவும் சொல்வளமும் தேவைப்படுவதால் ஒருசிலரால் மட்டுமே இவர்களின் கருத்துக்களை விளங்கிக் கொள்ள முடிந்தது. இதனால் இதன் வளர்ச்சியும் முக்கியத்துவமும் மட்டுப்படுத் தப்பட்டதாக அமைந்துவிட்டது. ஆனால் மேலைத்தேய சிந்தனையாளர்கள் மிகவும் எளிமையான சொற்பிரயோகங்களைக் கையாண்டு எல்லோராலும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தங்களின் கருத்துக்களை தெளிவுபடுத்தியமையினால் இவர்களின் மெய்யியற் சிந்தனைகள் உலகளாவிய ரீதியில் எந்தவித இடையூறுகளும் இன்றி வளர்ச்சியடை ந்துள்ளன.

**விஞ்ஞானம் பற்றிய நோக்கு**

மெய்யியல் ஆய்வு விடயத்தில் விஞ்ஞானம் தொடர்பான ஆய்வுகளும் முதன்மை பெறுகின்றன. பிரயோக விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம் மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான கருத்துக்கள் தமிழர் மெய்யியலில் காணப்படுகின்றன. செயற்பாடுகள், உண்மைகள், கருதுகோள்கள் என்ற மூன்று தூண்களின் மீதும் நிற்கும் கட்டடம் தான் விஞ்ஞானம் அல்லது அறிவியலாகும். பழந்தமிழ் இலக்கியங்களின் கருதுகோள் களைக் கணிதத்திலும், கணிதச் சமன்பாடுகள் மற்றும் குறியீடுகளிலும் பொருத்திக் காட்டுவதிலிருந்து இலக்கியங்களில் உட்பொதிந்துள்ள கணிதம் பற்றிய தகவல்களை பெருமைகளை அறிந்து கொள்ள முடியும்.

**"ஓடிய நீளந்தன்னை ஓரெட்டுக் கூறாக்கி**
**கூறதில் ஒன்றைத் தள்ளி**
**குன்றத்தில் பாதி சேர்த்தால்**
**நீடிய கர்ணந்தானே"** இப்பாடலில் பொருள்படி காணம் 7/8 x நீளம் + குன்றம் / 2 = 7/8 x 4 + 3/2 = 5

பைதகரஸின் தேற்றம்




இப்பாடல் பைதகரஸிசின் மாற்றுவடிவமாக உள்ளது. "O" "1"என்பவைதான் கணினியிலும் தகவல் தொழில் நுட்பத்தினதும் அடிநாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு எண்களையும் கொண்டு வள்ளுவம் எவ்வாறு வாழ்க்கையைக் கணிக்கிறது எனப் பார்ப்போம்

**"செய்யாமல் செய்த உதவிக்கு வைய கமும் வானகமும் ஆற்றலரிது" (திருக் குறள்:101)**

"கணினிப் பொறியில் இக்கருத்தை விளக்கிவிட வள்ளுவத்தில் வழியிருக் கின்றது.
செய்யாதவர்களுக்கு செய்த உதவி : 1 என்க

(OUT PUT) (குறைந்தது அதுவே)

பிறர் செய்யாத உதவி : 0 எனக் (INPUT)

பயன்பாடு OUT PUT / INPUT = Efficiency = 1/0 = INFINITE

கணக்கில் அடங்காதது"

இதேபோன்று நியூட்டனினதும் ஐன்ஸ்டீ னினதும் கருத்துக்களின் அடிப்படை வள்ளு வத்தில் காணப்படுகின்றது. மேலும் நவீன விஞ்ஞான மருத்துவம் தொடர்பான கருத்துக்களும் தமிழர்களிடையே காணப்பட் டுள்ளன. (சானகிராமன், 2003: 76) இதற்கு திரிகடுகம், ஏலாதி போன்ற நூல்களும் தக்க சான்று. இயற்கையுடன் உறவாடி அவ்விய ற்கையின் அடிப்படையில் வாழ்ந்து அதில் நிகழ்ந்த நிகழ்வுகளை நிதானித்து இலக்கியம் செய்பவர்கள் தமிழர்கள் என்பது புலனாகிறது.

**ஒழுக்க மெய்யியல் பற்றிய நோக்கு**

மெய்யியலின் அடுத்த ஆய்வுப் பரப்பாக நாம் ஒழுக்கத்தை கூறலாம். ஐரோப்பிய ஒழுக்க வாதிகள் பேசுகின்ற ஒழுக்கக் கருத்துக்கள் தான் பொதுவாக வளர்ச்சியடைந்துள்ளன. சோக்கிரட்டிஸ், அரிஸ்டோட்டில், பிளேட்டோ, மில், பெந்தம் போன்றவர்கள் வெவ்வேறுபட்ட கருத்துக்களைக் கூறியுள்ளனர் (ஜமரிர்.பீ.எம்., 2012 : 24). அதாவது அற நடத்தையைப் பற்றி அவர்கள் கூறிய கருத்துக்களுக்கு முன்னமே திருக்குறள் முதலான நூல்களில் இவைகள் விளக்கமாக விளக்கப்பட்டுள்ளன என்பதை நாம் நுணுக்கமாக நோக்க வேண்டியுள்ளது. அதேபோன்று புறநானூறு, அகநானூறு, நாலடியார், தம்மபதம் முதலான நூல்களில் மேலைத்தேய மெய்யியலாளர்களின் ஒழுக்க வாதத்திற்கு நிகரானவைகள்தான் கூறப்ப ட்டுள்ளன என்பதை நாம் காட்ட முடியும்.

தமிழர் சிந்தனை மரபிலும் அறம் பற்றிய கருத்து முக்கியத்துவம் வாய்ந்த எண்ண க்கருவாக அடையாளப்ப டுத்தப் பட்டுள்ளது. அத்துடன் தனிமனிதனை யும் சமுதாயத் தையும் நெறிப்படுத்தும் ஒழுக்க நெறியாக அறம் விளங்குகின்றது. இவ்வுலக வாழ்வும் இவ்வுலகிற்கு அப்பாலான வாழ்வும் சிறப்ப டைவதற்கும் முன்னேற்றம் அடை வதற்கும் நல்ல மனப்பண்புகள் விருத்தியாவ தற்கும் அறம் எனும் எண்ணக்கரு முக்கியத்து வப்படுத்தப்பட்டது.

சங்கப்பாடல்களில் அறம் முதன்மைப்படு த்தப்பட்டுள்ளது. மேலும் சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற நாலடியார் முதலிய நூல்களில் "ஏற்ற கை மாற்றா மையென்னும் தாம் வரையாது ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண் கடன்" என்று கூறப்படுகிறது. இங்கு அறம் செய்தல் ஓர் அறவிதியாகவும் (Ethical Norm) அதேவேளை செய்வினை யாகவும் (Applied Ethics) மேலும் நியம விதி யாகவும் அமைவதைக் கண்டு கொள்ளலாம். (மஜீம்தார், ராய்சௌதுரி, தத்தா, 1965 : 40)

மேலும் மனித வாழ்வியலில் போற்றிப் பேணப்பட்ட அறம் அரசாட்சியிலும் முதன்மைப்படுத்தப்பட்டது. அரச நடவடிக்கை களின் அச்சாணியாக அறம் போற்றப்பட்டது. தமிழர் மரபில் பெரிதும் வழக்கிலிருந்த முது மொழியான "அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழி" என்கின்ற அடிப்படைக் கோட்பாடே வாழ்வியல் விழுமியமாகக் காணப்பட்டது. அறம் செய்யக் கடமைப்பட்டவன் மனிதன். ஏனெனில் அவனுக்கு மட்டுமே ஆறறிவு உண்டு. விலங்கினத்திற்கு அது இல்லை. எனவே மானிடப்பிறப்பே உயர் பிறப்பு அதனால் சிந்தித்து செயலாற்றும் துணிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு மட்டுமே உண்டு. சிந்தனையின் வெளிப்பா டாய் உள்ள அறம் மூலம் நல்ல செயல்களை ஆற்ற முடியும் எனத் தமிழர் சிந்தனை மரபில் கூறப்படுகிறது (சிவானந்த மூர்த்தி 2012 : 8).

**அழகியல் மெய்யியல் பற்றிய நோக்கு**

மெய்யியலில் அழகியல் தொடர்பான விடயமும் முக்கிய ஆய்வுப் பரப்பாக உள்ளது. மேற்கத்தேய மெய்யியல் மரபில் கலையின் தோற்றம் உருவாக்கம் குறித்து பல்வேறு கொள்கைகள் உருவாக்கம் பெற்றுள்ளன. அந்தவகையில் கலை கலைக்காகவே எனும் கொள்கை, கலை உணர்சியை வெளிப்படுத்து வதற்காகவே எனும் கொள்கை, கலை அறக்கருத்துக்களை வெளிப்படுத்துவத ற்காகவே எனும் கொள்கை, கலை உள்ளதை உள்ளவாறு வெளிக்கொணர்ந்து சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே எனும் கொள்கை போன்றனவற்றைக் குறிப்பிட முடியும். இவ்வனைத்துக் கொள்கைகளினூ டாகவும் கலை வளர்க்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் தமிழர் சிந்தனை மரபில் கலை இவ்வாறு வகுக்கப படாமல் மனிதனை மையப்படுத் தியவாறா கவே அமையப் பெற்றிருந்ததைக் காணலாம். மனிதனது மேன்மையை நோக்கி மனிதனை முன் நகர்த்த வேண்டும் என்பதனையே தமிழர் கலை நோக்காகக் கொண்டு காணப்பட்டது.

சங்ககாலத்தில் கலையும், கலை ஆற்றுகையும் மக்களை கவர்ந்து அவர்களது அழகியல் நுகர்ச்சிக்கு விருந்தாய் அமைந்தன. மேலும் தமிழர் சிந்தனை மரபில் பல்கலையின் தோற்றத்திற்கும் பின்னணியாக இருந்தது "இயற்கை" ஆகும். இயற்கையில் காணப்பட்ட காட்சிகளையும் ஒலி, ஒளி வகைகளையும் கருப்பொருளாக் கொண்டே கலையினை உருவாக்கினார்கள். இவ்வாறாக கலையின் தோற்றம் இடம் பெற்று அதன் இன்னோர் பரிணாம நிலையாக இரசனைக்கு வாய்ப்பாகக் கலை மொழி, கலைப்பெறுமானம் போன்ற எண்ணக் கருக்கள் குறித்த வளர்ச்சியும் தமிழர் சிந்தனை மரபில் காணப்பட்டது. (Nakamura, 1985 :24)

**அறிவாராய்ச்சியியல், உள/மெய்யியல் பற்றிய நோக்கு**

மெய்யியலில் அறிவாராய்ச்சியியல் தொடர் பான விடயமும் முக்கிய ஆய்வுப் பரப்பாக அமைந்துள்ளது. அறிவு என்றால் என்ன? அறிவின் மூலங்கள் யாவை? உண்மையான அறிவு எது? பொய்யான அறிவு எது? உண்மையான அறிவை பொய்யான அறிவிலிருந்து எவ்வாறு வேறுபடுத்தலாம் போன்ற வினாக்களுக் குரிய விடைகள் மிகவும் ஆழமாக விளக்கப்பட்டிருந்தது. தமிழியல் மெய்யியலாளர்கள் அறிவைப் பெறுவதற்கு ஒரு முறையியலை முன்வைத்திருந்தார்கள். இது வடமொழியில் "பிரமாணங்கள்" என அழைக்கப்படுகின்றது. அந்த வகையில் பத்து வகையான பிரமாணங்களை அறிவைப் பெறும் வழிகளைத் தமிழியல் சிந்தனையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

உளவியல் தொடர்பான ஆய்வுகளும் தமிழர் மெய்யியலில் இடம்பெறத் தவறவில்லை. உளவியல் என்பது மனித நடத்தையுடன் தொடர்புடையது. தமிழர் பண்பாட்டு வரலாற்றில் வாழ்வியல் இலட்சியங்களை இலக்கியங்களின் மூலமாகவும் கதாபாத்திர ங்களின் ஊடாகவும் வாழ்க்கை அனுப வங்களினூடாகவும் தமிழியல் சிந்தனை யாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். வாழ்க்கை என்பது பௌதீக இருப்பையும், பௌதீக வாழ்க்கையையும் மட்டும் சுட்டுவதில்லை. அது உள வாழ்க்கையையும் உள்ளடக்கும். பௌதீக வாழ்க்கையின் ஊடாக உள வாழ்க்கையின் சாயல்களைக் கண்டுகொள்ள முடிகிறது. உளவாழ்க்கையின் வெளிப்பா டுகளை உளவியலாளர்கள் நனவிலியின் (unconscious) வெளிப்பாடுகளைக் கண்டனர்.

சிலப்பதிகாரத்தில் வரும் பலியிடல், மறுபிறப்பு, முலைத்திருகல், மதுரை எரிப்பு முதலானவை காள்யூங்கின் கூட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனவிலியுடன் தொடர்புபடுவதைக் காணலாம். மேலும் இதில் வரும் கனவு பற்றிய பகுதி சிக்மன் பிரையிட்டின் கனவுகள் பற்றிய கொள்கையுடன் தொடர்புபடுவதைக் காணக் கூடியதாக உள்ளது (அன்டன் டயஸ், 2003 : 137).

### அரசியல் மெய்யியல் பற்றிய நோக்கு

அரசியல் மெய்யியல் பற்றிய ஆய்வும் தமிழ் மெய்யியலின் பரம்பில் இடம்பெறுகிறது. அரசியல் விஞ்ஞானமானது அரசியல் மெய்யியலிருந்து வேறுபட்டது. அரசியல் விஞ்ஞானம் என்பது ஒரு நாட்டின் அரசு பற்றியும், அவ்வரசினை நிருவகிக்கும் அரசாங்கம் பற்றியும் அந்நாட்டின் எல்லை யினுள் நிலைத்து வாழும் மக்கள் பற்றியும், இறைமை அதிகாரங்களைப் பற்றியும் விளக்கியுள்ளது. அதாவது ஒரு விடயம் எப்படி இருக்கவேண்டும் (What ought be the case) என்ற அடிப்படையில் அரசியல் ரீதியான எண்ணக்கருக்களான ஜனநாயகம், நீதி, உரிமை, கடமை, சட்டம், இறைமை போன்ற வற்றின் நடைமுறைப் போக்குகள் தர்க்க ரீதியாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இதனால் அரசியல் விஞ்ஞானம் பற்றிய இரண்டாம் தர ஆய்வை மேற்கொள்ளுவதே அரசியல் மெய்யியலாகும்.

பிளேட்டோ என்ற அரசியல் மெய்யியலாளர் தான் எழுதிய குடியரசு என்ற நூலில் அரசியல் சார்ந்த கருத்தை அறிவு, வீரம், ஒழுக்கம் எனும் மூன்று நியமங்களின் அடிப்படையில் முன்வைக்கிறார். அதாவது ஆட்சியாளன் ஒருவன் அறிவுள்ளவனாகவும் வீரமுள்ள வனாகவும், ஒழுக்கமுள்ளவனாகவும் இருக்க வேண்டும் என்கிறார். எனவே நியமம் கூறும் தன்மையின் அடிப்படையிலும் எல்லா நாட்டிற்கும் எல்லா மக்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரு இலட்சியவாதப் போக்கையும் அரசியல் மெய்யியலில் காணக்கூடிய தாகவுள்ளது. இதனை தமிழர் மெய்யியலில் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திரம் திருவள்ளுவரின் திருக்குறள் முதலானவற்றிலும் காணலாம்.

கௌடில்யர் தான் உருவாக்கும் அரசில் அரசன், அமைச்சர் நாடு, தலைநகர் அரசியல் (யாப்பு), படை, நட்பு எனும் ஏழு அம்சங்கள் இருக்க வேண்டும் எனக் கூறுகின்றார். அரசின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும் போது மீன்விதி முறைப்படி என்ற கருத்தை முன்வைக்கிறார். இது ஹொப் சினுடைய சமூக ஒப்பந்த கோட்பாட்டுடன் தொடர்புபடுகின்றது. இதுபோன்று திருக்கு றளில் பொருட்பாலினுள் எழுபது அதிகாரங் களிலும் ஆங்காங்கே அரசியல் சிந்தனைகளை திருவள்ளுவர் முன் வைக்கின்றார். இறைமாட்சி எனும் அதிகாரத்தில்

**"படை, குடி, கால் அமைச்சு மற்றும் அரசன், என்ற ஆறும் உடையான் அரச ருள் ஏறு"** (திருக்குறள் : 389) என்ற கருத்து கௌடில்யரோடும் **"தூங்காமை, கல்வி துனியுடமை இம்மூன்றும் நீங்கா நிழல் ஆழ்பவருக்கு"** (திருக்குறள் : 383) என்ற கருத்து பிளேட்டோவுடனும் தொடர்புப டுகின்றது. இதன் மூலம் அரசியல் மெய்யியல் பற்றிய சிந்தனைகள் தமிழர் மெய்யியலில் இருந்ததை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

### அளவையியல் பற்றிய நோக்கு

தமிழர் மெய்யியல் தனது ஆய்வில் அளவை யியலைக் கூட உள்ளடக்காமல் விட்டதில்லை. மேலைத்தேய அளவையியல் எப்போதும் நியமங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வாதத்தின் வாய்ப்பு வாய்ப்பின் மையை துணிந்தது. யதார்த்த த்தைக் கருத்திற்கொ ள்ளவில்லை. குறிப்பிட்ட நியமங்களை மீறுவதால் போலிகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டியது. உதாரண மாக நியாயத் தொடை விதிகளை மீறுவதால் ஏற்படும் போலிகளைக் குறிப்பிடலாம். (Raju, 1992 : 34)

இதேபோன்று ஆரம்பத்தில் பாரம்பரிய அளவையியலில் முக்கூற்றுகள் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதமே காணப்பட்டது. பின்னர் பல எடுகூற்றுக்கள் கொண்ட வாதங்கள் நவீன அளவையியலில் வந்தன. தமிழர்களது அளவையியல் சிந்தனை கூடுதலாகச் சமயத்தோடு ஒட்டியதாகக் காணப்பட்டது. அனுமானத்துடன் தொடர்புபட்ட வகையிலே அளவையியலைக் கையாண்டு உள்ளனர். ஆரம்பத்தில் முக்கூற்று வடிவம் இருந்தது. அதாவது பக்கம், ஏது, திட்டாந்தம் பின்னர் ஐந்து கூற்றுக்களை உள்ளடக்கிய வாதங்கள் வந்தன. அவை முறையே பக்கம், ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் என்பவை யாகும். இங்கு விதிகளை மீறும்போது போலி ஏற்படுமென கூறப்பட்டது. பக்க போலி, ஏதுபோலி, திட்டாந்த போலி முதலானவை இப்போலிகளுக்கு உதாரண ங்களாகும். சிவஞானசித்தியாரின் 64 தோல்லித்தானங் களைப் பற்றிக் கூறுவது மேற்சொன்ன கருத்தை மேலும் தெளிவுப டுத்துகின்றது.

தமிழர் அளவையியல் அறிவைப் பெறும் வாயில்கள் பற்றியும் கூறியுள்ளது. இதனைப் பிரமாணங்கள் என அழைக்கின்றோம். அதில் பத்து வகையான பிரமாணங்கள் கூறப்ப ட்டாலும் காட்சி, கருதல், உரையாகிய மூன்று முக்கியமானது எனவும் ஏனையவை அதனுள் உள்ளடங்கி விடும் எனவும் கூறப்படுகின்றது. இதிலிருந்து தமிழர் மெய்யியலில் அனைத் துக் கருத்துக்களும் பொதிந்துள் ளதை அவதா னிக்க முடிகின்றது.

சமயம் தொடர்பான விடயங்கள் மேலைத் தேயத்தில் ஆய்வு செய்யப்பட்டதை விட மிகவும் நுணுக்கமான முறையிலே தமிழர் மெய்யியலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இறையிருப்பை நிருபிப்பதற்கு உள் பொருளியல்வாதம், பிரபஞ்சவியல் வாதம் முதலானவை முன்வைக்கப்பட்டதைப் போன்று தமிழர்களது சிந்தனையிலும் அனல்வாதம், புனல்வாதம் போன்றவை மூலம் இறையிருப்பு நிருபிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பௌதீக அதீத எண்ணக்க ருக்களாக ஆன்ம, கன்மவினை, மறுபிறப்பு தொடர்பான விடயங்கள் தமிழர் மெய்யியலில் திருக்குறள், சங்க நூல்கள் மற்றும் மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலியவற்றில் விரவிக்கிடப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. தனிமனித இருப்பை நிரூபிக்கும் இருப்பியல்வாதம் தொடர்பான கருத்துக்களும் தமிழர் மெய்யியலில் நாலடியார் மற்றும் விவேக சிந்தாமணி முதலான நூல்களினூடாக விளக்கப்பட்டுள்ளது.

## 6.0 முடிவுரை

மொழி, கலை, மருத்துவம்(விஞ்ஞானம்), சமயம், அரசியல், அழகியல், உளவியல் குறித்ததாய் உயர் பண்பாட்டு விழுமியங் களுடன் இன்றுவரை வாழ்ந்து கொண்டி ருக்கும் தமிழர்களது மெய்யியல் சிந்தனை யின் நோக்கினை சங்ககாலம் முதல் தொடர்ந்து வந்த சமூகத்தினரின் சிந்தனைகள் வழியாகவும் அவர்கள் உருவாக்கிக் கொண்ட இலக்கியங்கள், நம்பிக்கைகள், வழிபாடுகள், சடங்குகள், கலைப்படைப்புக்கள், உலகியல் வாழ்க்கை முதலியன ஊடாகவும் கண்டு கொள்ளலாம். இதிலிருந்து தமிழர்கள் எத்தகைய உலகப்பார்வையுடன் அல்லது அணுகு முறையுடன் உலகை எதிர் நோக்கி னார்கள் என்ற நிலைப்பாடு தெளிவாவதோடு மேலைத்தேயத்தில் கூறப்படாத விடயங்க ள்கூட இங்கு நுணுக்கமாக ஆய்வுக்குட்படுத் தப்பட் டுள்ளன என்பதும் மனங்கொள்ளத் தக்கது.

## உசாத்துணை நூல்கள் (References)

### மூலநூல்கள்

திருக்குறள், (2002), (பதிப்பு) பரிமேலழகர் உரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொல்காப்பியம்,** (1943), சி. கனேசையர் உரைவிளக்கக்குறிப்பு, சுன்னாகம், திருமகள் அழுத்தகம், யாழ்ப்பாணம்.

**அகநாநூறு** (2006),(பதிப்பு) புலியூர்க் கேசிகன் உரை, பாரி நிலையம், சென்னை.

**வழிநூல்கள்**

அன்டன் டயஸ், க., (2003), "உளப்பகுப்பாய்வு நோக்கில் சிலம்பில் சில செய்திகள்" **சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்,** இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

அனஸ். எம்.எஸ்.எம், (2006), **மெய்யியல் - கிரேக்கம் முதல் தற்காலம் வரை,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கிருஷ்ணராஜா.சோ, (2007), **சங்ககாலச் சமூகமும் சமய - மெய்யியல் சிந்தனைகளும்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சானகிராமன், தொ., (2003), **அறிவியல் தமிழ் இலக்கியம்**, அறிவான் பதிப்பகம், சென்னை.

சிவானந்தமூர்த்தி .க., (2015), **சைவசித்தாந்தம் - தமிழர் மெய்யியல்**, அம்பாள் வெளியீட்டகம், புத்தூர்.

(2012), **ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும்**, லங்கா புத்தகசாலை, கொழும்பு.

மஜீம்தார், சு. ஊ., ராய்சௌதுரி, ர.ஊ., தத்தா மு., (தமிழாக்கம் தி.வே.குப்புசாமி),

(1965), **இந்தியாவின் சிறப்பு வரலாறு 1**, தமிழ் வெளியீட்டுக்கழகம் தமிழ்நாடு அரசாங்கம்.

மேர்லாண்டு, டபிள்யூ. எச்., சட்டர்ஜீ. எ.சி., (மொ.பெ: பெருமாள் முதலியார்) (1951), **இந்திய வரலாற்றுச் சுருக்கம்,** சென்னைப் பல்கலைக்கழகம்.

ஜமாஹிர்.பீ.எம், (2012), **ஒழுக்கவியல் ஓர் அறிமுகம்**, ஈஸ்வரன் புத்தகசாலை, கண்டி.

......................, (2010), **மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும்**, நதா வெளியீடு, லேடி கில் பல்கலைக்கழக விடுதி, தன்கொல்லை.

ஞானகுமாரன். நா, (2003), **மெய்யி யல்,** செல்வம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

Raju.P.T., (1992), **The Philosophical Tradition of India,** Motilal Banarsiddas Publishes ,Delhi.

Nakamura, H., (1985), **Ways of Thinkingof Eastern People, India, China, Tibet, Japan** University Hawii press, United states.

Sahakian, W.S., (1968), **Out Line – History of Philosophy** Barnes& Noble, New York.

http:/www.ta.m.wikipedia.org/wiki/தமிழர் -மெய்யியல் ,2016.04.20 ,10.00am

http:/www.muththumani.com/2013/07/article-81199.html?m=1, 2016.04.18, 11.10 am

http:/www.wikiwand.com /ta/தமிழர் மெய்யியல் , 2016.04.19, 02.00pm.

http:/www.roastedknowledg.com/2015/07/blogs-post-2.html?m=1,2016.04.20, 03.00pm



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்கில் பயன்படுத்தப்படும் குறியீடுகளும் மீள் உறுதிப்படுத்தப்படும் நம்பிக்கைகளும்

வடிவேல் இன்பமோகன்

***ஆய்வுச் சுருக்கம்***

*சடங்குகள் சமய வாழ்வில் அடிப்படையானதொரு அம்சமாக விளங்குகின்றன. நிகழ்த்துகையை அடிப்படையாகக் கொண்ட சடங்ககள் மக்களின் பக்தியுணர்வை மிகுவிப்பனவாகவும் புனித விடயங்களுடன் தொடர்புடையனவாகவும் விளங்குகின்றன. இச்சடங்குகள் பூர்வீக இனக்குழு சமூகத்தில் இன்றைய வளர்ச்சியடைந்துள்ள சமூகங்கள் வரை முக்கியமானதொரு வடிவமாக சமூகத்தில் செயற்பட்டு வருகின்றன. சடங்குகள் மக்களின் பக்தியுணர்வை மேன்படுத்துவதற்கும், மக்களை வழிப்படுத்துவதற்குமான பல அரிய விடயங்களைக் கொண்டமைந்ததொரு வடிவமாக விளங்குகின்றன. சடங்கு நிகழ்த்துகையின் மூலம் வெளிப்படுத்தப்படும் குறியீடுகள் மற்றும் நம்பிக்கைகள் என்பவை சடங்கின் மேலான மக்களின் ஆர்வத்தையும் பக்தியுணர்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் முக்கியமான அம்சங்களாகத் திகழ்கின்றன. சடங்கில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் தெளிவற்றதாக விளங்குதல், அதுபோல் நம்பிக்கைகள் உறுதியற்ற தன்மையைக் கொண்டனவாக விளங்குதல் என்பன சடங்குகளின் மீதான மக்களின் ஈடுபாட்டுக்கு எவ்விதத்தில் பங்காற்றுகின்றது என்பதை ஆய்வுக்குட்படுத்துவதை இவ்வாய்வு பிரதான நோக்காகக் கொண்டிருக்கும். இது சடங்கில் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படும் குறியீடு, நம்பிக்கை தொடர்பான கோட்பாட்டுத் தெளிவையும் அக்கோட்பாடுகளை உறுதிப்படுத்தும் ஆதாரங்களின் பிரயோகத்தையும் அடிப்படையாகக் கொண்டதொரு ஆய்வாக விளங்குகின்றது. இவ்வாய்வில் கோட்பாடு அதன் பிரயோகமான பொருத்தமான சடங்குகின் எடுத்துக்காட்டக்கள் அல்லது எடுத்துரைப்புக்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. இந்நிலையில் இவ்வாய்வில் பண்புசார் ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சடங்குகளின் தன்மையைத் தெளிவுபடுத்தல், சடங்குச் செயற்பாட்டில் குறியீடுகள், நம்பிக்கைகள் என்பன முதன்மை பெறும் விதத்தை அடையாளப்படுத்தல், சடங்கில் நிலைத்திருப்புக்கு குறியீடுகள் தெளிவற்றதாகவும் நம்பிக்கைகள் உறுதியற்றதாகவும் விளங்குதல் எந்தளவிற்குப் பங்காற்றுகின்றது என்பதும் தெளிவுபடுதப்படும். இவை இவ்வாய்வின் மூலம் பெறப்படும் முடிவுகளாக அமையும்.*

**முதன்மைச் சொற்கள்:** சடங்கு, குறியீடு, நம்பிக்கை, ஐதீகம், புனிதம்

## 1.0 அறிமுகம்

"சடங்குகள் இசை, பாடல், நடனம், உயர் தன்மையான குறியீடுகள், நம்பிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கிய சமய பண்பாடா கவும், மாற்றங்களை வெளிப்ப டுத்துவதாக வும் குறித்த காலத்தின் சமூக, பண்பாட்டு உற்பத்தி மையமாகவும் ஒவ்வொரு படைப் பாக்கச் செயற்பாட்டினதும் வடிவமாக வும் விளங்குகின்றன" (2013:53). எனக் Wroght Robin M அவர்கள் சடங்கு பற்றிக் குறிப்பிடுகின்றார். இவ்விளக்கத்தின் மூலம் சடங்குகள் ஆடல், பாடல், நடனம் என்பன வற்றின் இணைவில் நிகழ்த்தப்டு கின்றன என்றும், இச்சடங்கு நிகழ்த்துகையில் குறியீடுகள், நம்பிக்கைகள் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன என்னும், ஒரு சமூகத்தின் பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றுடன் தொடர்புடைய குறித்த சமூகத்தின் அசைவி யக்கத்தை வெளிக் காட்டும் சாதனமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுகின்றன என்றும் புரிந்து கொள்ளலாம். இதன்படி சடங்குகள் அவை பயிலப்படும் சமூகத்தின் முக்கிய மானதொரு இயங்கு சக்தியாகத் தொழிற்ப டுகின்றன என்னும் விளக்கத்தை Robin M. Wroght அவர்களின் இன்கூற்று சுட்டி நிற்கின்றது என்றே குறிப்பிடலாம்.

## 2.0 ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வு சடங்கில் பயன்படுத்தப்படும் குறியீடுகளும் சடங்கின் மூலம் தொடரப்படும் நம்பிக்கைகளும் சடங்கின் தொடர் செயற்பா ட்டிலும் சடங்கு சமூகத்தின் வாழ்வியலை சிறந்த முறையில் ஒழுங்க மைத்து வழிப்படு த்துவதிலும் எவ்வாறான பங்களிப்பை ஆற்றுகின்றன என்பதை வெளிப்படுத்துவதை நோக்காகக் கொண்டிரு க்கும். இது சடங்கில் பயன்படுத்தப்படும் குறியீடுகளினதும், நம்பிக்கைகளினதும் முக்கியத்துவத்தை எடுத்தியம்பும்.

## 3.0 சடங்கில் பயன்படுத்தப்படும் குறியீடு களும் நம்பிக்கைகளும்

சடங்கு ஒரு வழிபாட்டு முறையாகவும் மக்களின் வாழ்க்கையை வழிப்படுத்தும் ஒரு அடிப்படைக் கூறாகவும் விளங்குகின்றது. சடங்குகளை மக்கள் பல்வேறு தேவைகளின் பொருட்டு தொடர்கின்றனர். சடங்குகளின் ஊடாக சமூக ஒற்றுமை அல்லது சமூக இணக்கப்பாட்டை அடைதல் என்பது அடிப்ப டையானதொரு அம்சமாகக் காணப்ப டுகின்றது. சமூக இணக்கப்பாட்டுடன் சடங்குகள் மேற்கொள்ளப்படுவதற்கு, சடங்குடன் தொடர்புடைய நம்பிக்கைகள் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. இந்நம்பிக்கைகளே சடங்கிற்காக இணையும் சமூகத்தை வழிநடத்துவதாகவும் காணப்ப டுகின்றன. “சடங்குடன் தொடர்புடைய நம்பிக்கைகள் ஒரு அனுபவத்தை உண்டுபண் ணக்கூடியவை. ஆனால் அவை கூட சடங்கை ஒரு அனுபவமாகக்கூட வியாக்கியான ப்படுத்தும் ஆற்றலுடயன. அதேவேளை சடங்கு வழங்கும் அனுபவம் வெறுக் கத்தக்கதாகவோ துன்பத்தை ஏற்படுத் துவதாகவோ இருப்பதில்லை (Ellwood, Robert S.,1998:386) சடங்கில் தொடரப்படும் இவ்வனுபவத்தை வழங்குவதில் நம்பிக்கைக ளுக்கு முக்கிய இடமுண்டு. சடங்கில் தொடரப்படும் நம்பிக்கைகள் பல்வேறு வகைகளில் புரிந்துகொள்ளப்பட்டுகின்றன. போலித் தத்துவ விளக்கங்கள், அறிவுக்குப் பொருத்தமான செயற்பாடுகள், தனிப்பட்ட அல்லது சமூகக் கருத்தாக்கங்கள், உயர்வாக வடிவமைக்கப்பட்ட கோட்பாட்டுகள் என அவற்றை வரையறுக்கலாம் (Bell,Catherine., 1992:182).

எமில் தர்க்கைம் (Emile Durkheim) அவர்கள் சடங்கில் பேணப்படும் நம்பிக்கை தொடர்பாக குறிப்பிடும் கருத்துக்கள் இவ்வாய்வில் அடிப்படையானவை. சமய வாழ்வில் நம்பிக்கை, சடங்கு என்னும் இரண்டும் அடிப்படையானவை. நம்பிக்கை என்பது ஒரு கருத்துருவமாகவும் புனையப்பட்ட ஒரு விடயமாகவும் அமைந்த சடங்குச் செயலைக் குறிக்கின்றது. சடங்குகள் மனிதனின் ஏனைய செயற்பாடுகளில் இருந்து வேறுபட்டவை. தனித்துவமான இயல்பினைக் கொண்ட சடங்குச் செயற்பாடுகளின் மூலம் நம்பிக்கை கள் வெளிப்படுத்தப்படும் அல்லது சடங்காக நிகழ்த்திக்காட்டப்படும். வரைய றுக்கப்படாத இந்நம்பிக்கைகளை நாம் சடங்கினால் வரையறுக்கின்றோம். புனிதர், புனிதர் அல்லாதோர் என சமய பாசையில் மனிதர்களை இரு வேறுபட்ட வகையினராக பகுத்துநோக்கலாம். புனிதம் புனிதமற்றது (Sacred- Profane) என மேற்கொள்ளப்படும் இப்பகுப்பில் நம்பிக்கை பற்றிய கருத்துக்கள் புனிதம் என்னும் வகைப்பாட்டிற்குள் உள்ளட க்கப்படும். ஐதீகம், சமயக் கொள்கை, புராணக் கதைகள், கட்டுக்கதைகள் என்பவை புனித மரபை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய விடயங்களாக உள்ளடக்கப்ப டுகின்றன. இப்புனிதமான விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டதாகவும் எல்லைக்கு உட்படுத் தப்படாததாகவும் காணப்படும். புனித விடயங்கள் கடவுள், பயம் என்னும் தன்மைகளைப் பிரதிபலிப்பதுடன் கடவுள், ஆவி பற்றி சிந்திப்பதாகவும் அமையும். சடங்குகள் மனிதனை புனித விடயங்களுடன் தொடர்பு கொள்வதற்கான விதிகளாகவும், புனித விடயங்களுடன் மனிதர்கள் தாங்களாகவே எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என எல்லை வகுப்பதாக வும் காணப்படும் (1995:34-38) என எமில் தர்க்கைம் அவர்கள் சடங்கில் பயன்படுத்தும் நம்பிக்கைகள் பற்றிய தெளிவை வழங்கு கின்றார்.

சமூகங்களினால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வரும் நம்பிக்கையானது ஒரு புனித விடயமாக சடங்குகளை கொள்ளத் தூண்டுவதுடன் அவை சமூகங்களினால் தொடர்ச்சியாகப் பேணப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக வும் அமைகின்றது. புனிதச் சக்தியான இறைமையை வழிபடுவதற்கான சடங்கார்ந்த நிகழ்வுகள் மூலமே தனிமனிதர்கள் அவர்க ளின் தனிமனிதத்துவத்தைத் தாண்டி, சமூக மாக ஒன்றுபடுகின்றனர். தனிமனித த்துவம் கடந்தநிலையில் சாத்தியப்படும் கூட்டுச் சுயம் அல்லது கூட்டு ஆளுமை சடங்குகளில் கட்டமைக்கப்படுவதற்கு அதில் நிலைகொ ண்டுள்ள நம்பிக்கைகளே காரணங்களாகும்.

தனிப்பட்டவர்களின் நடத்தையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களாகவே நம்பிக்கைகள் இருக்கின்றன. இவை தனிப்பட் டவர்களின் உளரீதியான நிலைமை களுக்கு ஏற்ப வரையறுக்கப்படும் போது அது சமூகப் பகுப்பாய்வுக்கு அப்பால் ஒரு தனித்துவமான இடத்தை பெறுகின்றன. சமூகத்தில் நம்பிக்கையானது இன்றும் மறுக்கமுடியாத, சமூகத்தை வழிப்படுத்தும் ஒரு சமூக இயல்புநிலையாக புரிந்து கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு நம்பிக்கை பற்றிய சமூகத்தின் கூட்டுணர்வு அல்லது சமூக உறுப்பினர்கள் பலரும் இதனை ஏற்றுக்கொ ள்வது காரணமாகும். கூட்டாகக் காணப்படும் மனித நடத்தைகளில் காணப்படும் நம்பிக்கையானது தனிமனிதனு க்குரிய எண்ணங்கள் மற்றும் நடத்தைகளில் உள்ள நம்பிக்கைகளைவிட அதிகளவிலும் பலமான தாகவும் காணப்படுகின்றது. நம்பி க்கை முறைகள் ஒருநிலையில் பண்பாட்டு ரீதியான பார்வையின் ஒரு விடயமாகவும், சமூகங்களி னால் கட்டமைக்கப்பட்ட கருத்தியல் முறையாகவும் புரிந்துகொள்ள ப்பட்டுள்ளது. இன்னொரு நிலையில் ஒரு குறித்த நபர் உண்மையினைப் பற்றியுள்ளாரா அல்லது பின்பற்றவில்லையா என வினவுவதாக உள்ளது. சமூகச் செயற்பாடு சிறப்பாக அமைவதற்கு சட்டம், சமூகநீதி, தண்டனை என்னும் விடயங்களுக்கு அப்பால் சமூகங்க ளில் காணப்படும் நம்பிக்கைகளும் அடிப்ப டையாக அமைகின்றன. இந்நம்பிக் கைகள் சமூகங்களினால் உருவாக்கப்பட்டு ஒரு பண்பாட்டு மரபாக தொடர்ந்து பேணப்படும் நிலைக்கு வருகின்றன. இவை சடங்குடன் தொடர்புபடுவதால் அவற்றுக்கு புனிதத்துவம் அளிக்கப்படுவதுடன் அதுவே சமூகங்களைக் கட்டுப்படுத்துவதாகவும் அமைகின்றன. எடுத்துக்காட்டாக "பொய் உரைத்தால் தெய்வ தண்டனைக்கு உள்ளாகவேண்டி நேரிடும்" என்னும் நம்பிக்கை சமூகங்களினால் உருவாக்கப்பட்ட கருத்தியலாகவும் பண்பா ட்டு அம்சமாகவும் கொள்ளப்ப டுகின்றது. இந்நம்பிக்கை உறுதியற்ற தன்மையுடை யதாகக் காணப்படும்.

சடங்குகளில் நம்பிக்கைகள் பெறும் முக்கியத்துவம் போன்று குறியீடுகளின் இடமும் தனித்துவமானது. குறியீடு என்பது உருவங்கள் (Images), ஓசைகள் (Sounds), செய்கைகள் (Actions), பாவனைகள் (Gestures), பேச்சு (Utterances) போன்ற விடயங்களின் ஒரு இலகுவான கட்டுமான த்தையே குறிக்கின்றது. ஒரு குறிப்பிட்ட விடயத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகைமாதிரியாகக் குறியீடுகளைக் கொள் ளலாம். குறியீட்டுக்கும் அதன் கருத்திற்கும் இடையேயான உறவானது விருப்பம் மற்றும் இயல்பற்ற தன்மை என்பவற்றை விவாதிப் பதாக அமையும் (Eller, Jack David., 2007:55). இக்குறியீடுகள் சடங்குகளின் சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களுடனும் வியாபித்துள்ளதுடன் சமூகத்தில் காணப்படும் நம்பிக்கையைத் தொடர்வதற்கு பல வழிகளில் பங்காற்று கின்றன. சடங்கில் மக்கள் ஈடுபடுவதற்கு அதில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை அடிப்படையானது. சடங்கில் ஈடுபடும் சமூகத்தினரிடம் தாம் பங்கு கொள்ளும் சடங்குகள் பற்றிய ஒரு தெளிவற்ற நிலை எப்போதும் தொடரும். இத்தெளிவற்ற நிலையை உருவாக்குவதில் சடங்கில் பயன்படுத்தப்படும் குறியீடுகளுக்கு முக்கிய இடமுள்ளது. பலவேளைகளில் ஒரு பாரம்பரிய அமைப்பின் நம்பிக்கையும் சடங்குகளும் அச்சடங்குகளில் இடம்பெறும் குறியீட்டு ரீதியான செயற்பாடுகளால் சவால் நிறைந் தனவாக அமைந்துவிடுகின்றன. சமூக த்தினுடைய சடங்கு வாழ்வின் அடிப்படையான குறியீடுகள் சடங்கில் பங்குகொள்பவர்கள் அல்லது அவர்களால் அளிக்கப்படும் வியாக்கியானங்களினால் வெவ்வேறு வழிக ளில் தெளிவற்றதாக் கப்படலாம். எடுத்து க்காட்டாக இலங்கையில் உள்ள வேடர்களி னால் மேற்கொள்ளப்படும் குமார தெய்வச் சடங்கில் பயன்படுத்தப்படும் "கப்பல் மரம்" அச்சடங்குச் செயற்பாட்டாளர்களினால் பல்வேறு விதமாக வியாக்கியானப் படுத்தப்ப டுகின்றது. வேடர்கள் கப்பலில் வந்து இறங்கியதை குறிப்பிடுகின்றது என்றும் சொர்க்கத்திற்கு செல்வதற்கான பாதையாக உள்ளது[2] என்றும் பல வியாக்கியானங்களை அச்சடங்குச் சமூகத்தினர் அளிக்கின்றனர். இவ்வாறான வியாக்கியானங்கள் அனைத்தும் தெளிவற்றனவாகவே காணப்படுகின்றன.

இவ்வாறு சடங்கில் பயன்படுத்தப்படும் குறியீடுகளின் தெளிவின்மைக்கு சடங்குச் சமூகம் அங்கு பயன்படுத்தும் குறியீடுகளுக்கு வெவ்வேறு விதமான வியாக்கியானங்களை அளிப்பதைக் காரணமாகக் குறிப்பிடலாம். இது தொடர்பாக ஜக் டேவிட் எலர் (Jack David Eller) அவர்கள் குறிப்பிடும்போது சரியான முறையில் குறியீடுகளின் விளக்கத்தைச் சுட்டிக்காட்டுதல் என்பது ஒரு வரையறுக் கப்பட்ட பிரச்சினையாகவே காணப்படுகி ன்றது. ஏனெனில் நாம் குறியீடு பற்றி ஒரு பொதுக் கருத்தினைக் கொண்டுள்ளோ மானால் அக்குறியீடுகளைப் பயன்படுத்தும் உள்ளூர் மக்களிடம் அக்கருத்து காணப்ப டமாட்டாது. அதுபோல் குறியீட்டுக்கு வரையறுக்கப்பட்ட விளக்கத்தை நாம் அளிப்போமானால் அவர்கள் அவ்விளக்க த்தைக் கொண்டிருக்கமாட்டார்கள், ஏனெனில் குறியீடுகளின் அர்த்தம் மட்டுமே குறியீடுக ளை ஆராய்ந்து பார்ப்பதற்குரிய ஒரு திறவுகோலாகப் காணப்படுவதில்லை. குறியீடுகள் கருத்துக்கான ஒரு வாகன மாகவும் பண்பாடு பற்றிய கருத்துக்களின் களஞ்சியமாகவும் விளங்குகின்றன (2007 :62) எனக் குறிப்பிட்டார். இங்கு குறித்த சமூகச் சூழலில் சடங்குகளில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு குறியீடுகளும் சடங்குச் சமூக த்தினால் பல்வேறுவிதமான வியாக்கியான ங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றன. ஒவ் வொரு சமூகங்களினதும் பண்பாட்டுச் சூழலுடன் அக்குறியீடுகளுக்கான விளக்கம் அல்லது அர்த்தம் தொடர்புடையதாக விளங்கு கின்றது. இது அதன் தெளிவின்மை க்கு வழியேற்படுத்துகின்றது. ஜக் டேவிட் எலர் அவர்களின் கருத்துக்கு ஆதரவாக எஸ்.எப்.நடேல் அவர்கள் குறியீடு தொடர்பாக சில கருத்துக்களை முன்வைக்கின்றார். "குறியீட்டுடன் தொடர்புடைய உறுப்பினர்கள் குறியீடுகளுக்கான விளக்கத்தைச் சுட்டிக் காட்டுவது போல் எம்மால் சுட்டிக்காட்ட முடியாது. குறியீடுகளை பயன்படுத்துபவர்கள் அளிக்கும் விளக்கம் எமக்கு விளக்க மற்றதாகவும் பொருத்தமற்றதாகவும் இருக் கும். ஏனெனில் தெளிவுபடுத்தப்படாத குறியீடுகள் தெளிவுபடுத்தப்படாத விளக் கங்களை அளிக்கும்" என்றார் (Jack David Eller, 2007:62).

மேற்குறித்த அறிஞர்களின் கருத்துடன் தொடர்புடைய விதத்தில் பெர்னாண்டஸ் (Fernandez) குறிப்பிடுகையில் சடங்குககள் கொண்டுள்ள வேறுபட்ட பண்பாட்டு ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கங்களே மக்களைச் சடங்குடன் இணைக்கின்றன என்றும் இச்சடங்குகளில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் சமூக ஒற்றுமையை ஊக்குவிக்கின்றன என்றும் இக்குறியீடுகள் சில படிநிலையில் அல்லது அளவில் தகவல்கள் அல்லது நம்பிக்கை களைப் பங்கீடு செய்யும் ஒரு விடயமாகச் செயற்படுவதில்லை என்றும் இந்நிலையில் சடங்குகளை நாம் சாதார ணமாக தகவல்கள், நம்பிக்கைகளை தொடர்புபடுத்தும் ஊடக மாகப் புரிந்துகொள் ளக்கூடாது (Bell, Catherine.,1992:183) என்றும் குறிப்பிட்டார். உண்மையில் பெர்னாண்டஸ் அவர்களின் கருத்துப்படி சடங்குவடிவங்களில் காணப்படும் ஒற்றுமை யானது பயனுள்ளதொன்றாகவும் ஊக்குவிக் கப்படவேண்டிய ஒன்றாகவும் கட்டாயமாகப் பேணப்படவேண்டிய ஒன்றா கவும் உள்ளது. ஏனெனில் அவை அரிதாகவே வெளிப்படை யான விளக்கங்களை அல்லது புரிதலைக் கொண்டுள்ளன. இவை மக்களின் நம்பிக்கைக்குரிய கூற்றுக்களை மையப்படுத் தாமல் பொதுவான குறியீடுகளையே மையப்படுத்தியுள்ளன. எப்படி இருப்பினும் இந்தவேறுபாடு பண்பாடு, சமூகம் என்பனவற் றுக்கு இடையே தொடர்ந்திருக்கும் பிரச்சினை க்குரியதாகவே காணப்படுகின்றது. ஒவ்வொரு சமூகங்களினாலும் அவற்றை அடையாள ப்படுத்தும் தனித்துவமான பண்பாட்டு மரபுகள் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின் றன. சமூகங்களில் நின்று நிலவும் குறியீடு, நம்பிக்கை பற்றிய விளக்கங்கள் அச்சமூ கங்களின் பண்பாட்டு மரபுகளுடன் தொடர்பு டையனவாக விளங்குவதால் அச்சமூகங் களுக்குரிய தனித்துவமான அடையாளங்க ளாக விளங்குவதே இப்பிரச்சனையின் மையமாகும். பெர்னாண்டஸ் அவர்களின் "சடங்கானது பொதுவானதொரு புரிந்துகொள் ளலுக்கு அமைய தொடர்புப டுத்தப்பட்டு நிகழ்த்தப்படுவதில்லை. சடங்கின் மையமான குறியீடுகள் சமூக, பண்பாட்டு நிலைமைகளு க்கேற்ப உள்ளார்ந்த அர்த்தம் கொண்டனவா கவுள்ளன" (Bell, Catherine., 1992:183) என்னும் கருத்து மேற்குறித்த விடயத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

சடங்குகளின் துணையுடன் குறியீடு என்றால் என்ன என்பதை ஆராய்வதற்கு மேற்கொள் ளப்பட்ட அதிகமான முயற்சிகள் "குறியீட்டி யலின் நோக்கம் சமூக பண்பாட்டு ஒற்றுமையை இயல்பான அரசியல் மற்றும் கருத்தியல் சார்ந்த பெறுமானத்தினால் அடைவதாகும்" எனக் குறிப்பிட்டன. இந்த கோட்பாடு சார்ந்த விபரிப்பு முதலில் வகைப்படுத்தப்பட்ட அனுபவங்களை வேறுபடுத்தியது. அதன் பின்பு இந்த ஒழுங்கமைப்பில் வெவ்வேறு குறியீடுகளின் ஏற்படும் சரிவு பங்குபற்றுவதிலும் ஒருங்கிணை ப்பதிலுமான அனுபவத்தை வகைப்படுத்தி வழங்குவதில் எவ்வாறு காட்டப்படுகின்றது என்பதைச் சுட்டுகின்றது. இதற்குதாரணமாக அப்னர் கொகேன் (Abner Cohen) குறிப்பிடுகையில் குறியீடுகளில் காணப்படும் தெளிவின்மைக்கு அடிப்படைக் காரணமாக அமைவது குறியீட்டின் பல்பரிமாணமான தன்மை என்றும் அது கட்டாயமாக இரு அடிப்படையான கட்டுமானங்களைக் கொண் டிருக்கும் (Bell, Catherine.,1992: 184) என்றும் குறிப்பிட்டார். அக்கட்டு மானங்கள் இருத்தலியல் மற்றும் அரசியல் முடிவுகளாகும் என்றார். தெளிவற்ற குறியீடுகள் தொடர்பாக விக்டர் டேர்னர் (Victor Turner) குறிப்பிடு கையில் சடங்கில் குறியீடானது ஒரு சிறிய பாகமாகவே காணப்படுகின்றது என்றும் ஆனால் குறியீடுகளை ஒருங்கிணைத்தலில் மாற்றிய மைத்திலில் காணப்படும் நுட்பங்கள் சடங்குகளில் பெரியளவான பாதிப்பை ஏற்படுத்தும் (Bell, Catherine.,1992:184) என்றார். அப்னர் கொகேன் அவர்களால் கூறப்படும் குறியீடுகளில் காணப்படும் இருத்தலியல் மற்றும் அரசியல் பரிமாண வேறுபாடுகளை விக்டர்டேர்னர் உணர்ச்சி சார்ந்தது, கருத்தியல் சார்ந்தது என வேறுபடுத்தி அடையாளப்படுத்தி அறிந்திரு ந்தார். சடங்கினுடைய உருமாற்று விளைவு பற்றி இவர் கூறுகையில் உண்மையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற கருத்தியல் சார்ந்த அனுபவம் இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்படும் என்றார். இவ்வாய்வாளர்கள் சடங்கில் அடையாளங்கண்ட தெளிவற்ற குறியீட்டினை இணைக்க முயன்ற போதும் தெளிவின்மையானது சடங்கை வழி நடத்தும் ஒரு அத்தியாவசியமான விடயம் எனக் கருதுகின்றனர். தெளிவின்மை சடங்குகளில் மக்களுக்கு நம்பிக்கை, ஈடுபாடு, சமூகக் கூட்டுணர்வு என்பவற்றை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் முக்கியமானவையாக விளங்குகின்றது. சடங்குகளில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் தெளிவான வரையறுக்கப்பட்ட விளக்கத்தை அளிக்குமானால் சடங்குகளினூடாகச் சமூகத்தில் பேணப்பட்டுவரும் மேற்குறித்த விடயங்களில் பாதிப்பு ஏற்படுவதுடன் அவை சடங்கின் பயில்விலும் பலமற்ற தன்மையை ஏற்படுத்தும். இவ்வடிப்படையிலேயே இவற்றின் தெளிவின்மையிலும் உறுதியற்ற தன்மையிலும் உள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டனர்.

குறியீடுகளின் தெளிவற்ற தன்மைக்கு பெரும்பாலான மக்கள் உறுதிப்பாடற்றதும் ஒருங்கிணைக்கப்படாததுமான சமய நம்பிக்கைகளைக் கொண்டிருப்பதே காரணமாக அமைகின்றது. ஏனெனில் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட நம்பிக்கைகள் அதிகளவாக விளங்கும் சமயங்களில் கருத்துச் சார்ந்த நம்பிக்கைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. பிலிப் கொண்பர்ஸ் (Philip Converse) அவர்கள் இந்த விடயம் பற்றி விளக்கும் போது பெரியளவாக சடங்கிற்காக இணையும் மக்கள் கூட்டத்தினரிடம் காணப்படும் நம்பிக்கை முறையில் இருந்து கல்வியறிவில் மேன்பட்ட உயர்குலாத்தினரின் நம்பிக்கை முறை மாறுபட்டதாக அமையும் (Durheim, Emile., 1997:185) என்று குறிப்பிட்டார். இவரின் கருத்தின்படி சடங்கிற்காக இணையும் மக்கள் கல்வியறிவில் பெரியளவாக வளர்ச்சியடையாதவர்களாகவே விளங்குகின்றனர். அதிகளவான மக்களிடம் உலக ஞானம் மற்றும் கல்வி அறிவு இல்லாமையின் காரணத்தினால் நம்பிக்கைகள் மற்றும் கருத்துக்கள் பற்றிய தெளிவற்ற நிலைமை அதிகரித்து வருகின்றது. இதற்குக் காரணமாக ஒரு பக்கம் நம்பிக்கை மற்றும் அணுகுமுறை என்பவை தர்க்கவியல் சார்ந்து வளர்ச்சியடைந்து வருவதும், மறுபுறம் உள்ளூர் குழுக்களே சடங்குகில் அதிக கவனம் செலுத்துவதால் இவை தர்க்கவியல் சார்ந்த வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தி, தெளிவின்மையை ஏற்படுத்துகின்றன. தர்க்கரீதியான எண்ணங்களின் தொடர்பார்ந்த நிலையானது சமூகங்களில் ஒரு பரப்பெல்லையாகக் காணப்படுகின்றது. இதனால் உயர்குழாத்திடம் காணப்படுவது போல் நம்பிக்கை முறை பற்றிய தனித்துவமான சமூகப் பங்குபற்றலை சடங்கிற்காக இணையும் சமூகத்திடம் காணமுடியாதுள்ளது. சடங்குச் சமூகங்களில் ஒழுங்குபடுத்தப்படாத நம்பிக்கைகளின் தொகுதி ஒழுங்குபடுத்தப்பட்ட நம்பிக்கைகளைவிட அதிகமாகக் காணப்படுவதால் ஒரு குறுகிய காலத்தில் மிகப்பெரிய உறுதியற்ற தன்மையை அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். பிலிப் கொண்பர்ஸ் அவர்கள் இது தொடர்பாக இறுதியாகக் கூறுகையில் நம்பிக்கைகள் மீது ஒன்றன்பின் ஒன்றாக தாக்கத்தைச் செலுத்தும் காரணிகளில் பெரும்பான்மையானவை சமூகங்களினாலேயே உருவாக்கப்படுகின்றது என்றும் அத்துடன் அதில் தனிப்பட்ட ஒருவரின் உளவியல் சார்ந்த தாக்கமும் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றது என்றும் நம்பிக்கைகளில் காணப்படும் தர்க்கரீதியான இணக்கமானது ஒன்றன்பின் ஒன்றாக நம்பிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான மிகக்குறைந்தளவிலான காரணியாக அமைகின்றது என்றும் கூறினார் (Ibid:185).

எப்படி இருப்பினும் பிலிப் கொண்பர்ஸ் அவர்களின் நம்பிக்கை தொடர்பான ஆதாரங்கள் வெவ்வேறு சடங்குச் சமூகத்திற்குரிய குறைந்தளவாக கல்வியூட்டப் பட்ட மக்கள் சடங்குடன் தொடர்புடைய நம்பிக்கை முறைகளில் ஒத்திசைவாகவே காணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர் என்பதை உறுதிப்படுத் துவதாகவே அமைந்திருந்தன. இந்துமத மானது இந்துக்களுக்கு ஒரு ஒத்திசைவான நம்பிக்கை முறையாகக் கொள்ளமுடியாதது. முக்கியமாக இது பெரும்பாலும் வழிபாடுக ளின் ஒரு தொகுப்பாகக் விளங்குகின்றது. இத்தொகுப் பானது சமயச் செயற்பாடுகளின் தேவைகளின் வெளிப்பாட்டிற்கும் அப்பால் ஒரு படி மேற்செ ன்று மதச் செயற்பாடுகளின் இணைந்த உணர்வினூடாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டியது. சாதாரண நம்பிக்கை களை, குறித்த ஒரு செயற்பாட்டுடன் ஒப்பிடும் போது சீனாவில் காணப்பட்ட வெளிநாட்டு மிசனறிக ளின் எரிச்சலூட்டும் கதையை ஞாபகப் படுத்துகிறது. சீனர்கள் சிலைகளை வணங்குவ தை முட்டாள்தனமானதாக கருதினர். அவர்கள் அதனை இழிவானதொரு செயற்பாடாகவும் வெட்கத்துக்குரியதாகவும் கருதினாலும் அதனைத் தொடர்ந்து பின்பற்றுகின்றனர் (Bell, Catherine., 1992:185).

கூடி (Goody) மற்றும் வற் (Watt) ஆகியோரின் ஆய்வுகளால் பிலிப் கொண்பர்ஸ் அவர்களின் ஆய்வு தொடர்பான சில முடிவுகளை அடையக்கூடியதாக இருந்தது. கூடி மற்றும் வற் அவர்களின் நம்பிக்கை பற்றிய உருவாக்கம் சமூக இணக்கப்பாட்டுடனோ அல்லது சடங்கு வடிவங்களின் சமூகக் கட்டுப்பாட்டுடனோ தொடர்புபடவில்லை. ஆனால் சமூக அடுக்குகள் மற்றும் விருத்தியடைந்துவரும் அருபமான மக்களின் அமைப்புக்களுடன் தொடர்புடையனவாக விளங்கின. தர்க்கரீதி யானதும் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவமைப் பைக் கொண்டதுமான நம்பிக்கைகள் உலகமயமாக்கல் செயற்பாட்டுடன் தொடர்பு டையனவாகக் காணப்படுகின்றன. இதனால் நம்பிக்கை பற்றி உள்ளூர் மக்களுக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ பயனுறுதியுள்ள வகையில் விளக்கமுடியாமல் போகும் நிலையானது இல்லாது செய்யப்படும். எனவே ஒத்திசைவுப் பங்கீட்டு முறை பற்றிய நம்பிக்கை ஒரு குறித்த வகுப்பினருக்கு தேர்ச்சியை ஏற்படுத்தும். அவர்கள் குறித்த சடங்குடன் தொடர்புடைய சமூகத்தினராக கருதப்படுவர். ஆனால் சமூகத்தில் காண ப்படும் அனைவருக்கும் இதனைப் பங்கிட முடியாது.

இந்த ஆய்வின் மூலம் சடங்கில் காணப்படும் உறுதியற்ற நம்பிக்கை மற்றும் சடங்கில் பயன்படுத்தப்படும் அல்லது வெளிப்படும் குறியீடுகளில் காணப்படும் தெளிவற்ற தன்மை என்பவற்றால் சடங்குகளில் காணப்படும் இயலாமையானது, நல்லொ ழுக்கம் ஒருமித்திருத்தல் அல்லது சமூகங்க ளின் கூட்டொருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பகிர்ந்தளிக்கப்பட்ட நம்பிக்கையால் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பது தெளிவு படுத்தப்படுகின்றது. சடங்கார்வம் கொண்ட நடவடிக்கைகளானவை குறிப்பாக மேலதிக நம்பிக்கையையோ அல்லது மன உறுதிப் பாட்டையோ ஊக்குவிப்பதில்லை. சடங்கு செயற்பாடுகள் பன்முகத் தன்மை வாய்ந்த மிகப்பெரிய விளக்கங்களை அளிப்பதற்கு பதிலாக உடன்பாடான விடயங்களின் ஒப்புதலை சடங்கினூடாக மாற்றீடு செய்து வழங்குகின்றன. எமது அன்றாட நடவடிக்கை களுக்குத் தேவைப்படுகின்ற நம்பிக்கையில் அல்லது பற்றுதியில் இருந்து இந்தச் சிறிய ஒப்புதலானது வேறுபடுகின்றது. இதற்கு உதாரணமாக இயல்பான நேர்மை எமது பல்வேறு உரையாடல்களில் தன்னிச்சையாக வெளிப்படுதலைக் குறிப்பிடலாம். இதனை சடங்கினூடாக பேணப்பட்டுவரும் ஒரு ஒப்புதலாக அடையாளங்காணலாம். ரப்பர்ட் (Rappaport) அவர்கள் இந்த ஒப்புதல் நிலையை சடங்காக இல்லாமல் ஐதீகங்களாக (Myths) காட்டுகின்றார். இதேவேளை சடங்கை நிகழ்த்துபவரின் தொடர்பானது அவர்கள் எதனை நிகழ்த்துவர் என்பதுடன் தொடர்புடையது. ஒருவர் ஒரு ஐதீகத்தை அவர் நம்பாமலே கூறமுடியும். ஆனால் சடங்குகளில் ஒருவர் அதனை நம்பாமலோ உணராமலோ அதில் பங்குகொள்ள முடியாது என்பதே ரப்பபர்ட் அவர்களின் வாதமாகும் (Ibid:186).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி இருப்பினும் முன்பு நடந்த வாதங்களின் முடிவின்படி நிச்சயமாக சடங்கு வடிவமை க்கப்பட்ட ஒன்றாகும். அத்துடன் இதன் மூலம் நேரடியாக தன்னை ஈடுபடுத்தாத சடங்கார்ந்த செயற்பாடுகளும் அனுமதிக்கப் படும் எனலாம்.

## 4.0 முடிவுரை

தெளிவற்ற, உறுதியற்ற, சீரற்ற இயல்பார்ந்த நம்பிக்கை முறைகளைக் கொண்ட சடங்கானது ஒரு முழுமையான நம்பிக்கை முறையுடன் தொடர்புடைய ஒரு முக்கியமான சமூகச் செயற்பாட்டைக் கொண்டுள்ள தென்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. மீண்டும் மீண்டும் வரையறுக்கப்பட்ட சக்திவாய்ந்த குறியீடுகளின் தொகுதியை பயன்படுத்தும் போது அடிக்கடி உணர்ச்சி சார்ந்த உட்சாகத்துடன் தொடர்புபடுகின்றது எனலாம். சடங்குகளில் பங்கீடு செய்யப்படும் செய்கை கள் சடங்கின் மேல் உள்ள நம்பிக்கையை ஊக்குவிக்கின்றன. அதேவேளை ஒரு சடங்குக் குழுவில் பொதுமக்களின் அடையாளப்ப டுத்தலென்பது ஒரு குறிப்பிட்ட வலுப்படுத்த ப்பட்ட தனிநபர்களை அந்தக் குழுவில் இணைப்பதன் மூலம் உருவாக்கப்படுகின்றது. சடங்கானது சமூக ஒற்றுமையுடன் நேரடியான தொடர்பினைக் கொண்டுள்ளது என்றும் அந்த ஒற்றுமை சடங்குகளில் பங்குபற்றும் நபர்க ளுக்கிடையே காணப்படும் அவர்களின் ஒவ்வொரு சடங்கு நடவடிக்கையாலுமே உரு வாக்கப்படுகின்றது என்றும் குறிப்பிடலாம்.

### உசாத்துணைகள்


Bell, Catherine, (1992), **Ritual Theory Ritual Practice,** New York : Oxford University Press.

Durheim, Emile., (1997), **The Elementary forms of religious life**, Translated by Karen E.Fields, New York : The Free Press, A Division of Simon & Schuster Inc.

Eller, Jack David., (2007). **Introducing Anthropology of Religion Culture to the Ultimate**, New York : 270 Madison Ave, and Routledge.

Ellwood, Robert S., Alles, Gregory D., (1998), **The Encyclopedia of World Religions** (Revised Edition), New York NY : Facts On File, An imprint of Infobase Publishing Inc.

Wright,Robin.M., (2013), "Indigenous Religious Traditions of the World", **Religions of the World: A Cultural Introduction to the Making of Meaning**, Lawrence E. Sullivan, (ed), Fortress Press.


### அடிக்குறிப்புக்கள்

1. புனித விடயங்களுக்கு எதிரானவையாக புனிதமற்ற விடயங்கள் காணப்படுகின்றன. இப்புனிதமற்ற விடயங்கள் மேம்பட்ட உயர்வீறமைதி அதிகாரத்துடன் தொடர்புடை யனவாகவே காணப்படுகின்றன. நல்லொழுக் கம்மற்ற செயல்கள், அதிகாரம், வரலாறு, ஏனையவர்களுடனான உறவு நிலை என்பவை புனிதமற்ற விடயங்களுக்குள் உள்ளடக்க ப்படுகின்றன.

2. கப்பல் மரத்தில் ஏறியாடும் தெய்வாதியான கப்புகன் குறித்த உயரத்திற்கு மேல் ஏறினால் அவர் உயிர் பிரிந்து சொர்க்கத்திற்கு சென்றுவிடும் என்னும் நம்பிக்கை வேடர்களிடம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சிக் கோட்பாடும் இலங்கையில் அதன் பிரயோகமும்:

## 2015 இல் இருந்து 2018 வரை

அ. கண்ணேராஜ்

***ஆய்வுச் சுருக்கம்:***
*இலங்கையில் சமகால அரசியலில் அதிகம் உச்சரிக்கப்படுகின்ற ஒரு விடயமாக நல்லாட்சி என்னும் பதம் மாறியிருக்கின்றது. தேசிய அரசாங்கம் ஆட்சி புரிகின்ற இக்கால கட்டத்தில், நல்லாட்சி பற்றிய சிறந்த புரிதலைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். இதனடிப்படையில், நல்லாட்சி என்றால் என்ன? என்பதனைக் கோட்பாட்டு ரீதியில் விளங்கிக்கொள்வது அவசியமானதாகும். இக்கோட்பாட்டின் அடிப்படையில், நடைமுறையில் உள்ள அரசாங்கத்தினை நல்லாட்சி அரசாங்கமாக மதிப்பீடு செய்ய முடியுமா? என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வு முறையியல் அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டது. இப்பண்புசார் தகவல்கள் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன. குறித்த தரவுகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு ஆய்வின் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவானது, நடைமுறையில் உள்ள தேசிய அரசாங்கத்தினை நல்லாட்சி அரசாங்கமாகக் குறிப்பிடுவது கேள்விக்குரியதாகும் என்பதனை வலியுறுத்துகின்றன. எவ்வாறாயினும், கடந்த கால ஆட்சியுடன் ஒப்பிடும் போது நல்லாட்சிப் பண்புகள் சில நடைமுறைப்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது மறுப்பதற்கில்லை. இதனடிப்படையில் இத்தேசிய அரசாங்கத்தினை நல்லாட்சி அரசாங்கம் என்பதனைவிட நல்லாட்சி நோக்கிப் பயணிக்க எத்தனிக்கின்ற அரசாங்கமென்று கூறுவதே பொருத்தமானதாகும் என்பது இவ்வாய்வின் முடிவாகும்.*

***முதன்மைச்சொல்:*** *இலங்கை, நல்லாட்சி, தேசிய அரசாங்கம். உலகவங்கி, நல்லாட்சிப் பண்புகள்,*

### 1.0 அறிமுகம்:

இலங்கையில் சமகால அரசியலின் ஒரு தொடக்கப் புள்ளியாக நல்லாட்சி என்பது பார்க்கப்படுகின்றது. நல்லாட்சி என்பதற்குக் குறிப்பான பொருள் கோடலொன்றை வழங்குவது சிரமாமானதாக அமைந்தாலும், தற்காலத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ள ப்படுகின்ற வரைவிலக்கணம் மக்களின் நம்பிக்கை, விருப்பு, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றினைப் பெற்றுக்கொண்டு முன்னெடுக்கப்படுகின்ற ஆட்சியை நல்லாட்சி எனலாம். மேலும், தேசம் ஒன்றை முகாமை செய்யும் நோக்கில் அரசியல் அதிகாரங்கள் பங்கிடப்பட்டுப் பிரயோகிக்கப்படுவதையும் நல்லாட்சி எனக் கூறலாம். மறுபுறம், நல்லாட்சி என்ற எண்ணக்கரு தனித்து அரசுக்கு மாத்திரம் உரித்தானதன்று. மாறாக, சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் எதிர்பார்க்கப்ப டுகின்ற ஒரு விடயம் எனக் கூறமுடியும். இலங்கையில் 2015ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய அரசாங்கம் ஆட்சி புரிகின்ற கால கட்டத்தில், நல்லாட்சி பற்றிய சிறந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்வது அவசியமா னதாகும். இப்பின்னணியில், நல்லாட்சி பற்றிய கோட்பாட்டு விளக்கம் மற்றும் 2015ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் அதன் பிரயோகம் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இரண்டாம் குடியாசு யாப்பில், 19 ஆவது சீர்திருத்தத்தில் தேசிய அரசாங்கம் என்பது தொடர்பில் கூறப்பட்டுள்ளது. அதாவது, "இரண்டு பிரதான கட்சிகள் சேர்ந்து அமைக்கின்ற அரசாங்க த்தையே தேசிய அரசாங்கம் என்பது குறிக்கும்" இப்பொருள் விளக்கத்தின் அடிப்படையில், இவ்வாய்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் 2015 ஆம் ஆண்டில் அமைக் கப்பட்ட தேசிய அரசாங்கத்தினை அடிப்ப டையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ள ப்பட்டுள்ளது. ஆய்விற்குரிய காலப்பகுதி 2015 தொடக்கம் 2018 வரைக்குமான காலப்பகு தியாகும்.

### 2.0 ஆய்வுப் பிரச்சினை:

இவ்வாய்வின் பிரதான பிரச்சினை தேசிய அரசாங்கம் நல்லாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆட்சி புரிகின்றதா? என்பதைப் பகுப்பாய்வு செய்வதாகும்.

### 3.0 ஆய்வு வினாக்கள்:

இப்பிரதான ஆய்வுப் பிரச்சினையின் அடிப்படையில் பின்வரும் ஆய்வு வினாக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன: முன்னைய மஹிந்த இராஜபக்ச ஆட்சியினை குறைகூறுவதற்காக அதிகாரத்தில் உள்ள அரசியல் வாதிகளினால் நல்லாட்சி என்பது பயன்படுத்தப்படுகின்றதா?

மற்றையது, சர்வதேச ரீதியாக இலங்கை மீது சுமத்தப்படுகின்ற யுத்தக் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, தந்திரோபாய ரீதியாக நல்லாட்சி என்பது திட்டமிட்டே பயன்படுத்த ப்படுகின்றதா? என்பனவாகும்.

### 4.0 ஆய்வு முறையியல்:

மேற்குறிப்பிடப்பட்ட ஆய்வுப் பிரச்சினைக்கும், ஆய்வு வினாவிற்கும் விடைதேடும் வகையில் பண்புசார் ஆய்வு முறையியல் இவ்வா ய்விற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இப்பண் புசார் தகவல்கள் இரண்டாம்நிலைத் தரவு மூலங்களாகிய நூல்கள், ஆய்வு அறிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையத் தளங்கள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டுள்ளன.

### 5.0 நல்லாட்சிக் கோட்பாட்டு விளக்கம்:

1990 களின் ஆரம்பத்திலிருந்து நல்லாட்சி என்ற எண்ணக்கருவானது நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கும், வறுமையொழிப்புக்கும் அத்தியவசியமானது என்ற எண்ணப்பாங்கு முன்னிலைக்கு வந்ததோடு, அது மிகத் தீவிரமான வகையில் அரசுகளால் கவனத்தில் கொள்ளப்படத் தொடங்கின. பனிப்போர் காலத்தில் நன்கொடை வழங்குனர் நாடுகளுக்கும், பெறுநர் நாடுகளுக்கு மிடையில் சிறப்பான உறவுகள் காணப்படா மையினால் இத்தகையதொரு சிந்தனை வேகமாகப் பரவியது. இதனால், நல்லாட்சி என்பது சர்வதேச நிகழ்ச்சி நிரலாக இணைத்துக் கொள்ளப்பட்டதோடு அபிவிருத் திக்கான நன்கொடை வழங்கும் நிறுவனங் களின் முன்நிபந்தனையாகவும் மாறியது.

நல்லாட்சியானது வெவ்வேறுபட்ட காலப் பகுதியில் ஆனால், தொடர்ந்தும் அரசுகளின் தவிர்க்க முடியாத நோக்கங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. அரசியல் தத்துவவா திகள் பலரும் வித்தியாசமான நோக்கில் நல்லாட்சியை நோக்கியுள்ளனர். ஆனால், தற்போது இத்தோற்றப்பாடு மிகவும் கடினமான சூழ்நிலையில் தனியானதொரு விதத்தில் கையாளப்படுவதைனைக் காண லாம். இதனால் இதனை வரைவிலக்க ணப்படுத்திக் கொள்வதில் கடினமான நிலையொன்று காணப்படுகின்றது. ஆயினும், நல்லாட்சி என்ற எண்ணக்கருவானது மிகவும் பழமை வாய்ந்ததொன்றாகக் கருதப்படு கின்றது.

கௌடில்யர் நல்லாட்சி தொடர்பாக அர்த்த சாஸ்திரம் என்ற நூலில் குறிப்பிடுகையில், ஆட்சியாளன் தனது கடமைகளுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்ப்படிய வேண்டும். ஆட்சியாளன் வரம்பு களைக் கொண்டிருக்க வேண்டும்: மேலும், முறையான வழிகாட்டல் நிருவாக த்தினையும், விவசாய, போக்குவரத்து, விலங்கு வேளாண்மை போன்றவற்றின் விருத்திக்கு அரசு பொறுப்பானதாக இருத்தல் வேண்டும். பொதுச் சேவைக்கு நிலையான சம்பளம் வழங்க வேண்டும்: மேலும், சட்டத்தினையும், ஒழுங்கையும் பாதுகாத்தல் முடியின் பிரதான கடமையாகும். ஊழல் மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு எதிராக முறையான தண்டனைகளை மேற்கொள்ள வேண்டும்: இது தவிர மன்னன் மிகவும் ஒழுக்கமான வகையில் நடக்க வேண்டும். மக்களது பொருள்சார் நலன்கள் மட்டுமல்லாது ஒழுக்கம் சார் நலன்களும் கருத்தில் கொள்ள ப்பட வேண்டும் என்கிறார் (அலுத்பட்ட பெந்திகே, 2000). கௌடில்யரின் இத்தகைய சிந்தனைகள் நல்லாட்சி தொடர்பான சமகால சிந்தனைகளுக்கு வழிகாட்டுவனவாகவுள்ளன.

நல்லாட்சிக்கான அடித்தளத்தினை கிரேக்க காலத்திலும் காணலாம். குறிப்பாக, பிளட்டோ, அரிஸ்டோட்லின் கருத்துக்களில் நல்லாட் சிக்கான அடித்தளத்தினைக் காணலாம். பிளட்டோ குடியரசு என்னும் நூலில் இலட்சிய அரசில் நல்லாட்சிக்கான கருத்துக்களினைக் காணலாம். திறமையாகப் பயிற்றப்பட்ட நிருவாக, அரசியல் வர்க்கத்தினாலேயே எவ்விதமான தனிப்பட்ட நலன், நிதி இலாபங்களின்றி வினைத்திறனாகச் செயற்பட முடியும். மேலும், அரசாங்கமானது ஒழுக்கத் தின் அடிப்படையில் மக்களை வழிநடாத்துவ தற்கான உயர்ந்த ஒழுக்க ரீதியான கடமையைக் கொண்டதொரு ஸ்தாபனமாக பிளட்டோ நோக்குவதிலிருந்து நல்லாட்சிக் கான வித்துப் போடப்பட்டுள்ளது (Aliu Ylber, 2018). அரிஸ்டோட்டிலும் தனது அரசியல் என்ற நூலில் நல்லதொரு வாழ்க்கையை உருவாக்குவதற்காகவே அரசினது நோக்கம் இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார் (Dumitrescu, 2010). இவ்விரு சித்தனையா ளர்களது நோக்கம் மக்களிற்கு நல்வாழ்க்கை யினை வழங்குவதாகும்.

நல்லாட்சி என்ற பதமானது ஆங்கில மொழியில் முதல்முதலாக 1628ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டுள்ளது (Maldonado, 2010). ஜோன் லொக், ஜீன் ஜக் ரூசோ மற்றும் ஜே. எஸ். மில் போன்றவர்களது சிந்தனைகளில் நல்லாட்சிக்கான கருத்துக்கள் காணப்படு கின்றன (புஞ்சிகேவா, 2003). தற்காலத்தில் 1989 ஆம் ஆண்டு உலக வங்கி துணை சகாரா ஆபிரிக்க நாடுகளுக்காக வெளியிட்ட ஆவணமொன்றில் நல்லாட்சி தொடர்பான விடயம் குறிப்பிடப்பட்டி ருக்கின்றது. நல்லாட்சி என்ற எண்ணக்க ருவானது உறுதியானதொரு அபிவிருத்தி முகாமைத்துவமாகவே இதில் கருதப்பட்டி ருந்தது (The world Bank Group, 1999).

உலக வங்கியானது நல்லாட்சிக்கு அரசியல் நம்பகத் தன்மை, சங்கமாகக் கூடுவதற்கான உரிமை மற்றும் பங்கேற்றல், நிர்வாகத்தின் பொறுப்பேற்கும் தன்மை, உறுதியான நிருவாக முறைமை, அரசாங்கத்துக்கும் சிவில் சமூக நிறுவனங்களுக்குமிடையிலான ஒத்துழைப்பு போன்றன அத்தியவசியமானது என நம்புகின்றது (The world Bank Group, 1999). இவ்வகையில் நல்லாட்சி என்பது உண்மையில் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பங்குபற்றுதல் மற்றும் வெளிப்படையான வகையில் மக்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துகின்றதொரு நிறுவன ரீதியான ஈடுபாடு எனக் கூறலாம்.

தோமஸ் ஜி வெயிஸ் (Thomas G Weiss) நல்லாட்சி தொடர்பில் குறிப்பிடுகையில் "எதாவது ஒரு சமூகத்தில் வாழும் ஒட்டு மொத்த மக்களின் நம்பிக்கை, விருப்பு, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றை அறிந்து கொண்டு முன்னெடுக்கப்படும் ஒரு ஆட்சியாக அமையும். இவ்வாட்சி ஒரு சமூகத்தால் அல்லது நாட்டால் அல்லது நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் எனக்கூறியுள்ளார் (Weiss. G.Thomas, 2000). மேற்குறிப் பிடப்பட்ட வகையில் நல்லாட்சி தொடர்பான கோட்பாடுகள் முன்வைக்கப் பட்டிருப்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். இதன் மூலம், நல்லாட்சிதான் சிறப்பான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான நிரந்தரமான சூழலை உருவாக்கும் என உலக வங்கி கருதியதோடு, உறுதியான பொருளாதாரக் கொள்கைகளுக்கும் இது அத்தியவசியமானது என அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிடம் வலியுறுத்தத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியம் மற்றும் பல உதவி வழங்கும் நிறுவனங்கள் தமது உதவிகளை வழங்குவத ற்கு முன்நிபந்தனையாக அரசுகள் நல்லாட்சி யைக் கொண்டிருக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தத் தொடங்கின.

### 6.0 தேசிய அரசாங்கத்தில் நல்லாட்சியின் பிரயோகம்:

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நல்லாட்சியின் அடிப்படையில் அரசாங்கம் வழிநடத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது. நல்லாட்சியின் இன்றியமையாத பண்புகளாக பங்கேற்பும் இணக்கப்பாடும், நியாயத் தன்மையும் சட்டத்தின் ஆட்சியும், அனைத்து மக்களினதும் அபிலாசைகள், மனித உரிமையை உத்தரவாதப்படுத்தல், சமத்துவம், தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் அரசியல் தலையீடுகள் குறைந்த மட்டத்திலான பொதுச்சேவை, போன்ற பண்புகள் காணப்படுகின்றன (Weiss. G. Thomas, 2000). இலங்கையில் தற்போது தேசிய அரசாங்கம் ஆட்சிபுரிகின்றது. இவ்வரசாங்கத்தில் மேற்குறித்த நல்லாட்சிப் பண்புகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்பதே இங்கு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றது.

### 6.1 பங்கேற்பும் இணக்கப்பாடும்:

நடைமுறையில் உள்ள தேசிய அரசாங்கம் குடும்ப அரசியலை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக சில அரசியல் தலைவர்கள் பரப்புரை செய்கின்றனர். ஆயினும், குடும்ப உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் செல்வாக்குச் செலுத்துவதினைக் காணக்கூடியதாகவுள்ளது (Kodikara, 2009). இது அடிமட்ட மக்களின் அரசியலில் பிரவேசத்திற்குத் தடையாக உள்ளது. அத்துடன் பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கான இடம் ஒதுக்கப்படுவது தொடர்பில் சட்டமியற்றுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். அது உயர் குழாமினரையும், ஆணாதிக்க த்தையும் உடைய ஒரு நல்லாட்சி அரசாங்கம் செயற்படுவதையே அடையாளப்படுத்துகின்றது (தற்போது உள்ளூராட்சி 25வீதம் மற்றும் மாகாண சபைகள் 30 வீதம்). இது நல்லாட்சிப் பண்புகளான பங்கேற்பு மற்றும் இணக்கப்பாடு தொடர்பான நல்லாட்சிப் பண்புகளுடன் உடன்படுவதில்லை. தற்போது உள்ள பாராளுமன்றத்தில் 06 வீதம் மாத்திரம் பெண்கள் ஆகும் (Rameez. 2018)

### 6.2 நியாயத் தன்மையும் சட்டத்தின் ஆட்சியும்:

இத்தேசிய அரசாங்கத்தில் முன்னைய அரசாங்கத்தில் ஊழல் செய்தவர்கள் மற்றும் மக்களால் புறக்கணிக்கப்பட்ட வர்களும் அங்கம் விகிக்கின்றனர். தவிர, ஊழல் செய்தவர்கள் என்று விமர்சிக்கப்பட்டவர்கள் தொடர்பில் குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அது எந்தளவு தூரம் வெற்றிபெற்றுள்ளது என்பது மக்களின் எண்ணங்களில் வினாவாகியுள்ளது (Hariharan, 2016). மேற்குறித்த இரு விடயங்களும் நல்லாட்சிப் பண்புகளான நியாயத் தன்மை, சட்டத்தின் ஆட்சி ஆகிய நல்லாட்சிப் பண்புகள் முறையாக நிறைவேற்றப்படவில்லை என்பதனை அறிய முடிகின்றது.

### 6.3 அனைத்து மக்களினதும் அபிலாசைகள்:

தோமஸ் ஜி வெயிஸ் இன் கருத்துப்படி நல்லாட்சி என்பது ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களின் அபிலாசைகளையும் கருத்திற் கொண்டு அரசாங்கம் செயற்படவேண்டும் எனக் கூறியுள்ளார். இந்நிலையில் தேசிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் அனைத்து மக்களின் அபிலாசைகளையும் கருத்தில் எடுத்துச் செயற்படும் பொறிமுறையின் அடிப்படையில் செயற்படுகின்றதா? என்பது கவனத்தில் கொள்ளப்படத் தக்கதாகும். குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்விடம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினை, அரசியற் கைதிகள் பிரச்சினை, வலிந்து காணமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, மீனவர்களின் பிரச்சினை, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் வீட்டுப் பிரச்சினை என்பன தேசிய அரசாங்கத்தில் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றுவதில் தோல்வியடைந்து வருகின்றது எனக்கூறலாம்.

## 6.4 மனித உரிமையை உத்தரவாதப்படுத்தல்:

நல்லாட்சியில் மனித உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். ஆயினும், மனித உரிமை மீறல் சம்பவங்கள் தற்போதும் இடம்பெறுகின்றன. அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் பாலியல் வன்புணர்வுகள் என்பன தினமும் அதிகரித்துக் கொண்டே செல்வதனைக் காணலாம். இவற்றினைத் தடுப்பதற்கு இன்னும் இத்தேசிய அரசாங்கத்தில் இறுக்கமான சட்டங்கள் கொண்டுவரப்படவில்லை.

## 6.5 சமத்துவம்:

சமத்துவம் என்பது நல்லாட்சி அரசாங்கத்தின் மிகமுக்கிய பண்பாகும். அரசியல், பொருளாதார, சமூக விடயங்கள் அனைத் திலும் சகல இன மக்களும் சமமாக நோக்கப்படுதல் வேண்டும். இன, மத ரீதியாக எந்தவிதமான வேறுபாடுகளும் காட்டப்ப டக்கூடாது. எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் சமசந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இலங்கையில் சராசரியாக 25000 - 30000 மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஒரு பிரதேச செயலகம் ஒன்று செயற்பட வேண்டும். இருப்பினும், மலையக மக்கள் செறிவாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் 132000 பேருக்க ஒரு பிரதேச செயலகம் காணப்படுவதுடன், 2500 - 3000 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு (சாதாரணமாக 300 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு) காணப்படுவது பாராபட்சமான செயற்பாடாகும். பல்லின மக்கள் வாழும் இலங்கை போன்ற நாடுகளில் பெரும்பான்மையினோர் சிறுபான்மையினரை பலவகைகளிலும் அடக்க முற்படுவதனை அவதானிக்கலாம். எனவே, மேற்குறித்த நல்லாட்சிப் பண்புகளுடன் சிறுபான்மை யினோர் பாதுகாப்புத் தொடர்பிலும் நல்லாட்சிப் பண்புகள் விரிவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினை அவதானிக்க முடிகின்றது.

## 6.7 தேசத்தைக் கட்டியெழுப்புதல்:

தேசத்தைக் கட்டியெழுப்புவதில் இன்றும் பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இனங்களுக்கிடையே குரோத மனப்பான்மை தொடர்ந்த வண்ணமே உள்ளது. குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களிற்கு எதிராக இனக் குரோதத்தினை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் சில பெரும்பான்மை இனத்தினைச் சேர்ந்த மதம்சார் அமைப் புக்களினால் முன்னெடுக்கப்படுவத னைக் அவதானிக்கலாம்.

## 6.8 அரசியல் தலையீடுகள் குறைந்த மட்டத்தில் உள்ள பொதுச்சேவை:

அரசியல் தலையீடு அற்ற பொதுத்துறை நிர்வாகம் என்பதனை நோக்கின், அரசாங்க நிர்வாக ஒழுங்கமைப்புச் செயற்பாட்டில் இருக்க வேண்டிய நடுநிலைத் தன்மையும், தொழில்சார் தன்மையும் மறைந்து நிர்வாக அதிகாரிகள் பதவியிலுள்ள அரசியற் கட்சிகளுக்கும், அவற்றின் உறுப்பினர்களுக்கும் பக்கச் சார்பாகச் செயற்படுதலே அரசியல் தலையீடு உள்ள பொதுத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகம் என்கிறோம். அரசியல் யாப்பில் 17ம் சீர்திருத்தத்தின் மூலம் மேற்குறித்த விடயத்தினை அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சீர்திருத்தத் திற்கமைய உருவாக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையில் கூடுதலான கட்சிச் சார்பற்ற வர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழு பொதுத்துறை பணியாட்களினை நியமிப்பது தொடர்பில் கூடுதலான அதிகாரத்தினைப் பெற்றிருந்தது. ஆயினும், 19 ஆவது சீர்திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புப் பேரவை, 17 ஆவது திருத்தத்தில் இருந்ததைப் போல் அரசியல் மயமாக்கப்படாமல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், இது நிறைவேற்றப்படவில்லை. ஏனெனில், கூடுதலான அங்கத்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவே உள்ளனர். இதன்வழி அரசியல் தலையீடு குறைந்த பொதுத்துறை நிர்வாகச் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்ப டுவதில் தடைகள் தோற்றம் பெற்றன. எனவே, நல்லாட்சியிலும் அரசியல் தலையீடுகள் அற்ற பொதுத்துறைச் செயற்பாடுகள் முன்னெடுக் கப்படுகின்றன எனக் கூறமுடியாது.

## 7.0 கண்டுபிடிப்புக்களும் ஆய்வின் முடிவுகளும்:

நல்லாட்சிப் பண்புகளின் அடிப்படையில் நடைமுறையில் உள்ள தேசிய அரசாங்கத் தினை ஆய்வு செய்கின்றபோது, தேசிய அரசாங்கம் நல்லாட்சி அடிப்படையில் ஆட்சி செய்கின்றதா? என்ற ஆய்வுப் பிரச்சினைக்கு விடை கூறப்பட்டுள்ளது. கடந்தகால ஆட்சியுடன் ஒப்பிடும் போது நல்லாட்சியில் சில பண்புகள் நடைமுறைப்படுத்தப்படு வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. குறிப்பாக ஊடக சுதந்திரம், சுதந்திரமான தேர்தல், இலஞ்ச மற்றும் ஊழல் தொடர்பான விசாரணைகள் முன்னெடுப்பு, கருத்து வெளியீட்டுச் சுதந்திரம், தகவலறியும் சட்டம் நிறைவேற்றப்பட்டமை மற்றும் காணமல் போனோரைக் கண்டறிவதற்கான காரியாலயம் திறக்கப்பட்டுள்ளமை போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதன் மூலம் நல்லாட்சிக்கான அனுப வங்கள் இலங்கையில் பெறப்பட் டுள்ளன.

30 வருடங்களிற்கு மேலாக உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற ஒரு நாட்டில், இனக்குரோதங்கள், யுத்தத்தின் வெற்றி தோல்வியினால் ஏற்பட்ட வலி, வடு என்பவற்றினை உடனடியாகவே நல்லாட்சி என்கின்ற பதத்திற்கு ஊடாகச் சீர்செய்தல் என்பது இயலாத காரியம். மட்டுமன்றி யுத்தத்தின் விளைவாகத் தோன்றியுள்ள அரசியல், சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறுகிய காலத்தினுள்ளே சரிசெய்வது என்பதும், இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு நாட்டின் இயலுமைக்கு அப்பாற்பட்ட விடயம். எவ்வாறாயினும், இலங்கையில் உள்ள சகல மக்களையும் ஒன்றிணைத்து நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இத்தேசிய அரசாங் கத்திடம் அதிகமாகக் காணப்படுகி ன்றது. அதற்கு, கடந்த காலத்தில் மக்கள் அனுபவித்த அடக்குமுறையும் காரணம் எனலாம். எவ்வா றாயினும், சமகால அரசியல் தலைமைகள் நடைமுறையில் உள்ள நல்லாட்சி தொடர்பில் மிகைப்பட்ட தோற்றத்தையே காட்டுகின்றனர். அத்துடன், நடைமுறையில் கடைப்பிடிக்கப் படுகின்ற சில நல்லாட்சிப் பண்புகள்கூட சர்வதேச அழுத்தத்தின் மத்தியிலேயே நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இந்நி லைமை தேசிய அரசாங்கம் தனது நல்லாட்சி நோக்கிய பயணத்தினை முடிவுக்குக் கொண்டுவர இன்னும் அதிக காலம் பயணிக்க வேண்டியுள்ளது எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்:

Aliu Ylber, (2018), *Comparison of Plato's Political Philosophy with Aristotle's political philosophy,* Faculty of Public Administration, AAB College, Republic of Kosovo, URL Available on: https://www.researchgate.net/publication/324595936_ Comparison_of_Plato's_Political_ Philosophy_ with_Aristotle's_Political_Philosophy [Accessed 20th May 2017]

Dumitrescu, C.A. (2010), *The Concept of Good Governance in Aristotle's view,* Part II Dimitrie Cantemir Christian University, URL Available on: http://cogito.ucdc.ro/nr_3_en

Ghisad Anushree, (2016) *Sri Lanka: One year of National Unity Government An Assessment,* Research Journal of Vivekananda International Foundation, Colombo. URL Available on: http://www.vifindia.org /article/ 2016/september/02/sri-lanka-one-year-of-national-unity-government-an-assessment [Accessed 10th July 2017]

Gisselquist M. Rachel (2012), *Good Governance as a Concept, and why this policy,* United Nations University, Available from: https://www.researchgate.net/publication/ [Accessed 15th July 2017]

Hariharan, R. (2016), *Sri Lanka: Is It good bye to "Good Governance",* URL Available on: https://www.colombotelegraph.com/index.php/sri-lanka-is-it-good-bye-to-good-governance/ [Accessed 21st may 2017]

Kelegama Saman (2016), *The Sri Lankan government's honeymoon period is over.* Research Journal of East Asia Forum, URL Available on: http://www.eastasiaforum.org/ 2016/01/01/ the-sri-lankan-governments-honeymoon-period-is-over/ [Accessed 05th July 2017]

Kodikara, C. (2009), *The Struggle for Equal Political Representation for woman in Sri Lanka* Report for the Child development and Woman's Empowerment and the United Nation Development Programme, URL Available on: http://www.lk.undp.org/content/dam/srilanka/ docs/governance/ WPE%20FINAL%20PDF.pdf [Accessed 10th June 2017]

Maldonado, N. (2010) *The World Bank's evolving concept of Good Governance and its impact on Human Rights,* University of Bonn Law School, Germany, URL Available on: http://www.who.int/medicines/areas/policy/goodgovernance/WHO-GGMframework.pdf [Accessed 16th June 2017]

Nizam Ifham (2017), *Will Good Governance Deliver in 2017.* Research Article of the Sunday Leader. URL Available on: http://www.thesundayleader.lk/2017/01/01/will-good-governance-deliver-in-2017/ [Accessed 01st July 2017].

Rameez A. (2018), *Political participation of Woman in Local Governance: A Case study of selected Local Governament Bodies in East Sri Lanka,* URL Available on: https://www.researchgate.net /publication/ [Accessed 10th June 2018]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Asian Foundation (2016), *Sri Lanka Strategic Assignment 2016*,. Research Report. URL Available on: http://asiafoundation.org/wp-content/uploads/2016/05/Sri-Lanka-Strategic-Assessment-2016.pdf [Accessed 05th July 2017].

The world Bank Group (1999), *Good Governance: An Overview*, International fund for Agricultural Development, Executive Board, 67th Session, Rome, URL Available on: https://www.ipa. government.bg/sites/default/files/pregled-dobro_upravlenie.pdf [Accessed 17th July 2017]

UNDP (1997), *Governance for sustainable Human Development*, United Nation Development Programme, URL Available on:https://www.gdrc.org/u-gov/g-attributes.html [Accessed 30th July 2017]

Weiss. G. Thomas, (2000) *Governance, good governance and global governance: conceptual and actual challenges,* Third world quarterly Journal, URL Available on: https://www.tandfonline .com/doi/abs/ 10.1080/713701075 [Accessed 20th July 2017]

அலுத்பட்டபெந்திகே, து. (2000), *நல்லாட்சி*, பெப்ரல் அமைப்பு, கொழும்பு.

புஞ்சிவோ, எஸ். ஜீ. (2003), *நல்லாட்சி - கட்டுரைத் தொகுப்பு*, பெப்ரல் அமைப்பு, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரப் போட்டிக்கான வரையறைகளும் ஒழுங்குகளும் - ஓர் இஸ்லாமியப் பார்வை

முஜாஹிட் ஏ.எல்.எம், குஷாம் எம்.எஸ்.எம்

*ஆய்வுச் சுருக்கம்*

*இவ்வாய்வானது வியாபாரப் போட்டிக்கான இஸ்லாத்தின் வரையறைகளையும் ஒழுங்குகளையும் தெளிவுபடுத்துவதை இலக்காக கொண்டுள்ளது. இஸ்லாம் வியாபாரத்தில் விசேட கவனம் செலுத்துவதோடு மகிழ்ச்சியை ஈட்டித்தரும் வகையில் நல்ல பல திட்டங்களையும் வகுத்துத் தந்துள்ளது. மோசடி, ஏமாற்று, கள்ளத்தனமான போட்டி, பதுக்கல், வியாபாரப் பொருட்களை சந்தைக்கு கொண்டுவராது நெருக்கடியை ஏற்படுத்தல் போன்ற கேள்வியை அதிகரிக்கச் செய்யும் வியாபாரப்போட்டி முறைகளில் இருந்து விடுபட்டு சீரான அடித்தளத்தில் அமைந்த சந்தைகளையே இஸ்லாம் வரவேற்பதோடு அதற்குரிய வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளது. இதன்படி இம்மார்க்கத்தின் இலக்கானது பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளால் மாற்றமுறும் வியாபாரப்போட்டி நிலைமைகளுக்கேற்றவாறு கேள்விக்கும் கையிருப்புக்கும் ஏற்ப நீதமான விலையை நிர்ணயம் செய்தலாகும். இதற்காக இவ்வாய்வு பின்வரும் அம்சங்களை பரிந்துரை செய்கின்றது. எமது அன்றாட கொடுக்கல் வாங்கல் அனைத்திலும் இஸ்லாத்தின் வரையறைகள், விதிகளைப் பேணல், கண்காணிக்கும் பணியில் இருப்பவர்களிடம் விசேட சிறப்பம்சங்களும் நிபந்தனைகளும் நிறையப்பெற்றிருத்தலின் அவசியத்தை உணர்த்துதல், பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையைத் தீர்மானித்தல். வியாபார நடவடிக்கைகளில் மக்களுக்கு அநியாயம் செய்து சதி, மோசடியில் ஈடுபடுபவர்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தல், பொருளாதார நடவடிக்கைகள் அனைத்திலுமே இஸ்லாமிய சரீஆ சட்டத்தை நடைமுறைப்படுத்தி கண்காணித்தல். இவ்வாய்வு வியாபாரப் போட்டிக்கான வரையறைகள் என்ன?, இஸ்லாம் அதற்கு வகுத்துள்ள ஒழுங்குகள் யாவை? என்ற இரண்டு பிரதான வினாக்களுக்கு விடையளிக்க முனைகிறது.*

***முதன்மைச் சொற்கள்:*** *வியாபாரப்போட்டி, போட்டிக்கான வரையறைகள், இஸ்லாத்தில் வியாபாரம்*

## 1.0 அறிமுகம்

வியாபாரமானது பொருளாதார வாழ்வு முறையில் அடிப்படை அம்சமாகக் கருதப்பட்டு வருகிறது. இவ்வியாபாரத்தின் முக்கியத்துவம், அந்தஸ்து வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்பட ஏதுவாக அமைந்திருப்பதுடன் அதன் வகிபாகம் கொண்டிருக்கின்ற அபரிமிதமான மறுமலர் ச்சிப் பாங்கு சமூகத்திற்கு மத்தியில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான முனைப்பை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இதனால் போட்டித்தன்மை வலுப்பெற்று வியாபாரத்தில் பின்பற்றப்படும் போட்டி முறைகளில் பல மாற்றங்களும் பரிமானங்களும் உருப்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. வியாபாரப்போட்டி தொடர்பான அம்சங்களில் மக்களுக்கு இருக்கும் ஆர்வம் காரணமாக சிலபோது வியாபாரிகள் மார்க்க வரையறையில் பூரண அறிவின்மையால் அது மக்கள் மத்தியில் அதிகளவு செல்வாக்குப் பெற்றிருப்பதைக்கண்டு அவை மார்க்க அங்கீகாரம் பெற்றவை என எண்ணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போட்டித்தன்மையை மேலும் பலப்படுத்தி உறுதிப்படுத்தி வருகின்றனர். இஸ்லாம் வியாபாரத்தில் கவனம் செலுத்தி பாதுகாப்பான எல்லைகளையும் மகிழ்ச்சிமிக்க வியாபார முன்னெடுப்புக்கு துணைசெய்யும் வரையறைகளையும் வகுத்து அழகும், எளிமையும், நடைமுறைச்சாத்தியமும் மக்களுக்கு சந்தேகமாக அமைந்த மற்றும் புதிதாக தோற்றம்பெறும் பிரச்சனைகளையும் புரிந்து தீர்வு வழங்குவதற்குமான சக்தியையும் கொண்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் சந்தைக்குச் சென்று வியாபார நடவடிக்கைகளைக் கண்காணித்து வியாபாரிகள் கடைப்பிடிக்க வேண்டிய, தவிர்க்கவேண்டிய விடயங்களையும் விளக்கி நெறிப்படுத்தி வழிகாட்டுபவர்களாக இருந்தார்கள். ஒரு முறை நபியவர்கள் ஒரு உணவுக்குவியலுக்கு அருகில் செல்லும் போது அக்குவியலுக்குள் தனது கரத்தை விட்டார்கள். அவரது கைகளில் ஈரம் படவே அந்த வியாபாரியிடம் இது என்ன? என்று வினவ அதற்கவர் மழையில் நனைந்து விட்டது என்றார். அப்பகுதியை மக்கள் பார்க்கும் படி வெளியில் வைத்திருக்கலாமே என்று சொன்ன நபியவர்கள் "மோசடி செய்பவர்கள் எம்மைச் சார்ந்தவர்கள் அல்ல" என்ற வழிகாட்டலை அவருக்கு வழங்கினார்கள். இதனால்தான் சந்தைகள் நபியவர்கள் காலத்தில் அவர்களின் கண்காணிப்பில் இருந்து வந்தன. நபிகளார் சந்தைக்கான வரையறைகளையும் ஒழுங்குக ளையும் அமைத்ததோடு மோசமான முறைமைகளை விட்டும் சந்தைகளைப் பாதுகாத்தார்கள். தடுக்கப்பட்டவைகளைத் தடைசெய்து அனைவரும் சமமாக கொடுக்கல் வாங்களில் ஈடுபடும் சுதந்திரத்தை வழங்கி னார்கள். உமர் (றழி) அவர்கள் அளவை நிறுவை தொடர்பில் தேர்ச்சி பெற்ற பரிசோதகர்களை இப்பணிக்காக நியமித்தா ர்கள். இப்பரிசோதகர்கள் பதுக்கல், மோசடி, சதிகளை எதிர்த்ததுடன் நன்மையானவற்றை ஏவி மோசடிகளை விலக்கினார்கள். மக்களுக்கு மோசடி செய்பவர்களையும் ஏமாற்றுபவர்களையும் கண்டித்தார்கள்.

## 2.0 வியாபாரம், வியாபாரப் போட்டி தொடர்பில் இஸ்லாத்தின் நிலைப்பாடு

இஸ்லாம் அறிமுகமான போது பொருளா தாரச் செயற்பாடுகளில் இஸ்லாம் பல வடிவங்களைக் கண்ணுற்றது. இந்த வகையில் ஏனைய சமுதாயங்களைப் போல சமய, சமூக, நகர, பொருளாதார வாழ்க்கை முறையும் வியாபார உடன்படிக்கைகளும் வியாபார செயற்பாடுகளும் அரேபிய சமுதாயத்திற்கும் இருந்தது. அவர்கள் நேச நாட்டு ஒப்பந்தம், விற்றல் வாங்கலில் ஈடுபடல், கடனுக்கு கொடுத்தல், அடகு வைத்தல், வணிகம் செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களாக இருந்ததுடன் தமது அனைத்து வியாபார நடவடிக்கைகள், உடன்படிக்கைகள், ஒப்பந்தங்களிலும் தமக்கு மத்தியில் நிலவிய வழக்குகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும் கட்டுப்பட்டு தமது விருப்பப்படியே கருத்துக்களை தெரிவிப்பவர்க ளாகவும் இருந்தனர்.

அரேபியர்களிடம் குறிப்பாக குறைசியர்களிடம் தனி அந்தஸ்தும் முக்கியத்துவமும் இருந்ததன் காரணமாக தமது பொருட்களை காட்சிப்படுத் துவதற்காக ஒன்று சேரும் வகையில் உக்காழ், தில் மஜாஸ் போன்ற சந்தைகளை ஏற்படுத்தினார்கள். எனினும் இங்கு நடை பெற்ற வியாபாரச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. இங்கு வியாபாரிகள் பொய்ச்சத்தியம், அளவை நிறுவையில் மோசடி, வட்டி மற்றும் மக்களுக்கு தீங்குகளை ஏற்படுத்தும் பல வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். வறியவர்களும் வியாபாரம் தெரியாதவர்களுமே முழுமையாகப் பாதிக்கப் பட்டதுடன் பெரும் வியாபாரிகள் அதிக நன்மைகளை அடைந்தனர்.

இதனால்தான் நபியவர்களின் காலத்தில் சந்தை அவர்களின் கண்காணிப்பின் கீழ் இருந்தது. நபிகளார் சந்தைக்கான வறையரை களையும் ஒழுங்குகளையும் அமைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசடி நிறைந்த வியாபார முறைகளை விட்டும் சந்தைகளைத் தூய்மைப்படுத்தினார்கள். தடுக்கப்பட்டவை களைத் தடை செய்து அனைவரும் வியாபாரத்தில் ஈடுபடும் சுதந்திரத்தை வழங்கினார்கள். உமர் (றழி) அவர்கள் பரிசோதனையில் நிபுணத்துவம் பெற்றவர் களை அளவை நிறுவையைக் கண்காணிக்கும் புனித பணிக்காக நியமித்தார்கள். இப்பரிசோதகர்கள் பதுக்கல், மோசடி, சதிகளை எதிர்த்ததுடன் மக்களுக்கு மோசடி செய்பவர்களையும் பதுக்குபவர்களையும் ஏமாற்றுபவர்களையும் கண்டித்து நெறிப்படுத்தினார்கள்.

### 3.0 இஸ்லாத்தில் வியாபார போட்டிக்கான சட்டங்கள்

இஸ்லாம் வியாபாரத்தை அனுமதித்து ஊக்குவிப்பு வழங்கிய அதேவேளை மார்க்கம் அனுமதித்த வியாபாரப் போட்டியை ஆகுமாக்கியுள்ளது. மார்க்க அடிப்படையில் பொருள் மற்றும் பணக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் நபர்களுக்கு இடையில் வியாபாரப் போட்டியானது ஆகுமானதாகும். ஏனெனில் சந்தைக்கு விடப்படும் ஒரு பொருளுக்கு குறித்த விலையை நிர்ணயிக்க முற்பட முடியாது என்பதுதான் இஸ்லாத்தின் அடிப்படையாகும். காரணம் இஸ்லாத்தில் கொடுக்கல் வாங்கல் என்பது சுதந்திரமானதாகவும் வியாபார உடன்படிக்கை செய்துகொள்ளும் இருவரும் பொருந்திக் கொள்ளும் வகையிலும் அமைய வேண்டும். இப்போட்டியால் சந்தையில் வியாபாரப் போட்டி ஏற்படுவதுடன் உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் நன்மை பெறுகின்றனர்.

இஸ்லாம் எதிர்பார்க்கும் போட்டி தனித்தன்மை கொண்டதாகும். இப்போட்டி வேலையின் தரத்தையும் உற்பத்தியின் அழகையும் அடிப்படையாகக் கொண்டு முந்தும் தன்மை கொண்டதாகும். இப்போட்டி நன்மையாக இருக்கும் அதேவேளை பிறரை வதைப்பதாக அமைந்துவிடக்கூடாது. மேலும் இப்போட்டியானது சுவர்க்கம் நுழைதலை அடிப்படையாகக் கொண்டு ஈமானிய முறையில் அமைந்திருந்தால் மாத்திரமே இஸ்லாமிய அங்கீகாரம் பெற்றதாகக் கணிக்கப்படும்.

வியாபாரமும் வியாபார சட்டங்களும் மார்க்கத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது என்பதற்கு அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் பல ஆதாரங்களை காணலாம். வெள்ளிக்கிழமை தினத்தில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால் வியாபாரத்தை விட்டு விட்டு விரைந்து வாருங்கள். தொழுகை முடிந்து விட்டால் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளை தேடுங்கள். (ஜுமு ஆ: 09) என்ற வசனம் வியாபாரச் சட்டம் பற்றிப் பேசுகிறது.

இரண்டு வியாபாரிகள் தாம் வியாபாரம் செய்யும் இடத்தில் வியாபாரப் பொருட்களைத் தெரிவு செய்வதில் சுதந்திரம் பெற்றுள்ளனர். அவ்விருவரும் தமது வியாபாரப் பொருட்களின் தன்மைகளைத் தெளிவுபடுத்தி உண்மையாக நடந்தால் அவ்விருவரின் வியாபாரத்திலும் அருள் செய்யப்படும். அவ்விருவரும் உண்மையை மறைத்து பொய்யாக நடந்து கொண்டால் அவ்விருவரின் வியாபாரத்தின் அருளும் போக்கப்பட்டுவிடும் என நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு முறை நபிகளாரிடம் எந்தச் சம்பாத்தியம் மனதுக்கு இதமானது என வினவப்பட்டது? அதற்கு நபிகளார் ஒரு மனிதர் தனது கரத்தால் செய்யும் சம்பாத்தியமே சிறந்ததாகும். மேலும் ஒவ்வொரு வியாபாரமும் நன்மையான அம்சமாகும் என்றார்கள்.

முஸ்லீம்கள் வியாபாரம் ஆகுமான விடயம் என்பதில் ஏகோபித்த கருத்தினைக் கொண்டுள்ளதோடு அது உலகமும் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். ஏனெனில் மனிதர்கள் சிலர் சிலருடன் தேவையுடையவர்களாகவே இருக்கின்றனர். வியாபாரத்தை அறிமுகம் செய்து அதனை நடைமுறைப்படுத்துவதானது ஒவ்வொரு மனிதனும் தனது தேவையை நிறைவு செய்வதற்கும் நோக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து கொள்வதற்குமான ஒரு வழி முறையாகும்.

இறுதியாக இஸ்லாம் சந்தையையும் சந்தையில் நடைபெறும் வியாபார நடவடிக்கைகளிலும் கூடுதல் கவனம் செலுத்தியிருப்பதுடன் பல ஒழுங்குகளையும் விதிமுறைகளையும் வகுத் துள்ளது. ஹலாலை தெளிவுபடுத்தி அதனை நடைமுறைப்படுத்துமாறும், ஹராமானவற்றை தெளிவுபடுத்தி அதை விட்டொழிக்குமாறும் ஏவியிருக்கிறது.

## 4.0 இஸ்லாம் அனுமதித்த போட்டியும் தடுத்த போட்டியும்

மார்க்கம் தடுத்த போட்டியானது வியாபாரப் போட்டியில் ஈடுபடும் ஏதோ ஒரு தரப்பினர் வியாபாரிகளின் வழக்காறுகள், சம்பிரதா யங்கள், விழுமியங்கள், பண்பாடுகள் அனைத்தையும் புறம் தள்ளிவிட்டு, வியாபார த்தில் அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் வழிமுறைகளை மீறிச்செயற்படு வதாகும். இது முழுக்க பிறருக்கு எதிர் மறையான விளைவுகளை ஏற்படுத்தும் செயன்முறையாகும். இது கண்ணியத்திற்கும் வழமைக்கும் உயர் நடைமுறைகளுக்கும் சட்டத்திற்கும் எதிரான ஊடகங்களை ஒரு மனிதர் பயன்படுத்தும் வழிமுறையாகவும் கருதப்படுகின்றது.

வியாபாரப் போட்டியானது இஸ்லாமிய சட்ட வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்கும் போது அது உயிரோட்டமுள்ள, வினைத்திறன் மிக்க வியாபார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு முக்கிய அம்சமாகக் கொள்ளப்படும். இவைகளைத் தாண்டி வியாபாரிகளுக்கிடையில் சண்டை யையும் பிரிவையும் உண்டாக்குமானால் அனைவரும் பிறரின் வாடிக்கையாளர் களையும் பணங்களையும் தாமும் சம்பாதிக்க முயல்வதுடன் ஆபத்தையும் ஏற்படுத்த விளைவார்கள். இங்கு போட்டியின் நன்மைகளை விட ஆபத்தே அதிகமாகக் காணப்படும்.

இஸ்லாம் எப்போதும் பிறருக்கு துன்பம் விளைவிப்பதை எந்தத்துறையிலும் அனுமதிக் கவில்லை. இது குறித்து நபிகளார் சங்கடம் கொடுக்கவும் வேண்டாம், சங்கடம் பெறவும் வேண்டாம் எனக் கூறினார்கள். இக்கூற் றுத்தான் இன்று அனைத்து இஸ்லாமிய சட்டங்களிலும் பேணப்படுகின்ற ஒன்றாக அமைந்துள்ளது.

ஒரு சமுதாயம் தனது இருப்புக்கும் எதிர்காலத்திற்கும் வரையறை செய்கின்ற இலக்குகளும் சமுதாயத்தின் அனைத்து தரப்பினருக்கு மத்தியிலும் உண்மையான சகோதரத்துவத்தின் அடிப்படையில் அமைந்த பொதுவான இஸ்லாமியக் கட்டமைப்புக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். உண்மையான சகோதரத்துவம் என்பது வியாபாரச் செயற்பாடுகள் சமுதாய அங்கத்தவர்களுக்கு என தனித்துவமான சரியான ஒத்துழைப்புடைய ஒரு வடிவத்தை உருவாக்கும் வகையில் அமையப் பெற்றிருத் தல் வேண்டும். சிறந்த உற்பத்தியையும் சமுதாய நலனையும் இலக்காகக் கொண்ட இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த வியாபாரப் போட்டியை நடைமுறைப்படுத்தி உற்பத்தியாளருக்கும் வாடிக்கையாளருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய போட்டி முறை என்றும் தவிர்க்கப்படவேண்டியதாகும்.

## 5.0 இஸ்லாமியப் போட்டியின் வரையறைகள்

வியாபாரம் என்பது சம்பாத்தியத்திற்கான சிறந்த கௌரவமான வழிமுறையாகவும் பல அடிப்படைகளையும் சட்டங்களையும் கொண்ட மைந்ததாகவும் கொள்ளப்படு கின்றது. இதனால்தான் இஸ்லாமும் சந்தைக்கென்று பல ஒழுங்குகளை வகுத்து வியாபாரிகள் மீது பல பொறுப்புக்களையும் கடமைகளையும் சுமத்தியுள்ளது. இதனை மனிதனுக்கு இலகுபடுத்தும் வகையில் திட்டங்களையும் வழிவகைகளையும் ஏற்ப டுத்தி நல்லுபதே சங்களை வழங்கி இஸ்லாமிய வழிகாட்டலின் பின்னணியில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வழிகாட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரக் கொடுக்கல் வாங்களில் ஈடுபடுகின்ற முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் அதன் சட்டங்களையும் வியாபார ஒழுங்குகளையும் அனுமதிக்கப்பட்ட, தடுக்கப்பட்ட விடயங்களையும் அறிந்திருக்க வேண்டும். இவ்வம்சங்களை அறிந்திருப்பது பொதுமக்களின் மீது பர்ளு கிபாயாவாக இருக்கின்ற அதே வேளை வியாபரிகள் மீது இது பர்ளு ஐனாக ஆக்கப்பட்டுள்ளது. எனவே சந்தைச் செயற்பாடு சிறப்பாக அமையும் பொருட்டு அல்லாஹ்வின் பொருத்தத்திற்குமாக ஏவல், விலக்கல், ஆசையூட்டல் போன்ற அம்சங்களை இஸ்லாம் முழுமையாக வழங்கியுள்ளது.

## 6.0 இஸ்லாம் விதந்துரைக்கும் பண்பாடுகளும் ஒழுக்கங்களும்

### 6.1 - மோசடியைத் தடுத்தல்

வியாபாரப்போட்டி நேர்த்தியான அடிப்படையில் அமைய வேண்டும் என இஸ்லாம் போதிக்கின்றது. சமகாலத்தில் காட்சிப்படுத்தப்பட்ட மற்றும் பொதி செய்யப்பட்ட பொருட்களின் தன்மை வழமையான வாடிக்கையாளர்களுக்கு பரீட்சயமான அல்லது விளம்பரம் செய்யப்பட்ட தன்மையில் இருந்து விலகி ஏமாற்று விளம்பரம், ஏமாற்று சந்தைப்படுத்தலாகக் காணப்படுமானால் அது அங்கீகரிக்கப்படமாட்டாது. இவ்விடயத்தை விஞ்ஞானக் கண்ணோட்டத்திலும் சமகாலக் கண்ணோட்டத்திலும் ஆய்வு செய்வதனூடாக இம்முறையற்ற போட்டியை இல்லாதொழிக்கலாம்.

மோசடிகளைத் தடை செய்யுமாறு நபிகளாரின் வழிகாட்டுதல்கள் ஏராளம் உள்ளன. ஒரு முறை நபியவர்கள் ஒரு உணவுக்குவியலுக்கு அருகில் செல்லும் போது அக்குவியலுக்குள் தனது கரத்தை விட்டார்கள். அவரது கைகளில் ஈரம் படவே அந்த வியாபாரியிடம் இது என்ன? என்று வினவ அதற்கவர் மழையில் நனைந்து விட்டது என்றார். அப்பகுதியை மக்கள் பார்க்கும் படி வெளியில் வைத்திருக்கலாமே என்று சொன்ன நபியவர்கள் “மோசடி செய்பவர்கள் எம்மைச் சேர்ந்தவர்கள் அல்ல” என்றும் கூறினார்கள்.

எனவே மோசடி என்பது பிறருக்குச் செய்யும் அநியாயமும், அவர்களது உரிமைகளை சாப்பிடுவதுமாகும். மோசடியாளன் தனக்குரியவற்றிற்கு மேலதிகமாக வேறு வழியில் நுகர்வோரிடமிருந்து எடுத்துக் கொள்கிறான். எனவே இஸ்லாமிய மயப்படுத்தப்பட்ட வியாபாரச்செயற்பாடானது வியாபாரப் பொருட்களின் நல்ல அம்சங்களை வெளியில் காட்டி குறைகளை மறைப்பதாக ஒரு போதும் அமையாது. இந்நடைமுறை செயற்படுத்தப்படுமானால் வியாபாரக் கொடுக்கல் வாங்கலின் நிலையான தன்மைக்கும் மக்களின் திருப்திகரமான வாழ்க்கைக்கும் வழி பிறப்பதுடன் வாங்குபவர் தான் கொடுக்கின்ற பெறுமதிக்கு நிகராக மோசடியற்ற நல்ல பொருட்களை பெற்றுக் கொண்ட திருப்தியுடன் தொடர்ந்தும் தேவையான பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

### 6.2அனுமதிக்கப்பட்டதைக் கடைப்பிடித்தல்

ஒரு வியாபாரி எப்போதும் தனது சம்பாத்தியத்திலும் கொடுக்கல் வாங்கலிலும் அனுமதிக்கப்பட்டவைகளை மாத்திரம் கடைப்பிடிப்பதோடு விலக்கப்பட்டதைத் தவிர்ந்து கொள்ளவும் வேண்டும். இப்பண்புகள் புறந்தள்ளப்படும் போது நற்செயல்கள் ஒப்புக் கொள்ளப்படாமை, பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படாமை போன்ற பல பாதக விளைவுகள் ஏற்படு கின்றன. எனவே ஒரு வியாபாரியிடம் ஹலாலான சம்பாத்தியமும் அதற்கான தூய வளப் பயன்பாடும் எதிர்பார்க்கப்படுவதுடன் வியாபாரத்தில் நுட்பங்களையும் சிறந்த தரத்தைப் பேணுவதும் வரவேற்கப்படுகிறது.

ஒரு உண்மையான வியாபாரி தனது நடவடிக்கையின் போது நம்பிக்கையுடனும் உண்மையுடனும் நடந்து கொள்வான். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய சமுதாயத்தில் இக்கருப்பொருள் பின்பற்றப்படுமானால் ஒரு முஸ்லிம் தனது உரிமைகளுக்கான உத்தரவாதத்தைப் பெறுவான். இதனால் ஹலாலான உழைப் புக்காகவும் அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தி அவனது வேதனையையும் தண்டனையையும் பயந்து நடப்பான். இதற்காகத்தான் இஸ்லாம் அங்கீகாரம் உள்ள சம்பாத்தியத்திற்கான வழி வகைகளை ஏற்படுத்தியுள்ளதுடன் அதனை நடைமுறைப்படுத்தவும் தூண்டியுள்ளது.

### 6.3 - அளவை நிறுவையில் மோசடி செய்வதைத் தடை செய்தல்

அளவை நிறுவை விடயத்தில் இஸ்லாம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. அளவை நிறுவை போன்ற அம்சங்களுக்கு கொடுக்கல் வாங்கல் விடயத்தில் இஸ்லாமிய சட்டங்களுடன் உறுதியான தொடர்பு காணப்படுகின்றது. இதனூடாக அல்லாஹ்வின் கடமைகள், அடியார்கள் கடமைகள் நிறைவு செய்யப்ப டுகிறன. எடுத்துக்காட்டாக ஸகாத், ஸதகா, வரி, குற்றப்பரிகாரம், நேர்ச்சை, அன்பளிப்பு மேலும் நாளாந்த கொடுக்கல் வாங்கல்களைக் குறிப்பிடலாம்.

இது குறித்து அர்குர்ஆன் "அளவை நிறுவையில் குறைத்துவிடும் நபர்களுக்கு கேடுதான்" (அல்குர்ஆன் 83:1)என்று குறிப்பிடுகின்றது. இங்கு அல்குர்ஆன் அளவை நிறுவையில் குறைப்புச் செய்கின்ற கெட்டவர்களுக்கான தண்டனையையும் அழிவையம் பற்றி பேசுகின்றது. எனவே அளவை நிறுவையில் மோசடி செய்வது சமுதாயத்தில் வாடிக்கையாளரில் எதிர்மறை யான விளைவுகளைத் தோற்றுவிப்பதுடன் இக்குறைப்பாளர் சதி மற்றும் களவில் ஈடுபடுவது மக்கள் கஞ்சத்தனம் செய்வதற்கும் தமது பொருளாதாரங்களை அநியாயமாகச் சாப்பிடுவதற்கும் வழிவகுக்கிறது. வியாபார நடவடிக்கைகளில் பொதுவான நடத்தை மாற்றம் ஏற்பட வழிவகுப்பதுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவோருக்கிடையில் நம்பிக் கை இன்மையையும் நிலையற்ற தன்மையை யும் ஏற்படுத்தி விடும். எனவே இது தொடர்பில் பொறுப்புவாய்ந்தவர்கள் கண்காணிப்பு செய்வது அவசியமாகும்.

### 6.4 - உண்மை

இஸ்லாம் வாழ்க்கையில் அனைத்து அம்சங்களிலும் உண்மையைக் கடைப்பிடிக க்குமாறு ஏவுகின்றது. றிபாஉபின் றாபி∴ஆ (ரழி) அவர்கள் அறிவிக்கின்ற ஒரு செய்தி, நான் நபிகளாருடன் தொழுமிடத்திற்கு சென்று கொண்டிருந்தேன். நபிகளார் மக்கள் வியாபாரம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு வியாபாரிகளே என்றழைத்தார்கள். அனைவ ரும் அவரது அழைப்புக்கு விடை கொடுத்து தமது கழுத்துக்களையும் தமது பார்வைக ளையும் உயர்த்த நபிகளார் "நிச்சயமாக வியாபாரிகள் மறுமையில் கெட்டவர்களாக எழுப்பப்படுவார்கள். இறைவனை அஞ்சி நன்மை செய்து உண்மையாக நடந்தவனைத் தவிர" என்றார்கள்.

எனவே இஸ்லாம் மார்க்கம் சந்தையில் கொடுக்கல் வாங்களில் ஈடுபடுபவர்கள் தமது கொடுக்கல் வாங்களில் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு வியாபாரி தனது வியாபாரப்பொருளில் குறை இருந்தால் அதனைத் தெளிவுபடுத்த வேண்டும். குறித்த குறை இஸ்லாத்தின் பார்வையில் தண்டனைக் குரிய சதியாக் காணப்பட்டால் அப்பொருளை மீளக் கையளிப்பதிலும் சிலபோது வியாபரத்தை இரத்துச் செய்வதிலும் வாங்கியோனுக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

### 6.5 - ஏமாற்றுத் தன்மையைத் தடை செய்தல்

ஏமாற்று என்பது வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் இருவரில் ஒருவர் உடன்படிக்கை செய்யும் இடத்தில் தனக்குத் தெரிந்த மறைவான ஒரு குறையினை மற்றத் தரப்பினருக்குத் தெரியாமல் மறைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதாகும். எனினும் இஸ்லாமிய வியாபரக் கொடுக்கல் வாங்கலில் தெளிவும் உண்மையும் இருப்பதுடன் ஏமாற்று மோசடி போன்றவைகளை விட்டும் தூய்மையாக இருப்பதும் அவசியமாகும். இதன் போது கொடுக்கல் வாங்கலில் இரு உடன்படிக் கையாளர்களும் தெளிவைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். இது குறித்து நபிகளார் உண்மை வியாபாரத்தின் வெற்றியையும் பொய்யுரைக்கும் வியாபாரத்தின் தோல்வியையும் மிகத் தெளிவாகப் பேசியுள்ளார்கள்.

## 6.6 - மனம் பொருந்திய அடிப்படையில் வியாபாரத்தை முன்னெடுத்தல்

கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவோர் திருப்தி கொள்ளும்படியாக வியாபாரம் அமைய வேண்டும். "ஈமான் கொண்டவர்களே உங்களுக்கு மத்தியில் உங்களது பொருளாதாரத்தை அநியாயமாக சாப்பிட வேண்டாம். அவ்வியாபாரம் உங்களுக்கு மத்தியில் முழு மனத்திருப்தியுடன் அமைந்தாலே தவிர" (நிஸா -29) இது குறித்து நபிகளார் "வியாபாரம் என்பது முழு மன சம்மதத்தின் அடிப்படையில் அமைந்ததாகும்" என்றார்கள்.

## 6.7 - இறையச்சத்தைக் கடைப்பிடித்தல்

நற்செயல்கள் என்பது அல்லாஹ்வின் ஏவல்களுக்கு வழிப்பட்டு விலக்கல்களைத் தவிர்த்து நடப்பதன் மூலம் ஏற்படுகின்ற இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்கிறது. இதுதான் மனித நடத்தைக்கான வரையறைகள் அத்தனைக்குமான அடிப்படையான அம்சமாகும். இதனால் ஓர் இறையச்சமுள்ள முஸ்லிம் நேரான நடத்தையில் ஆர்வமுள்ளவனாகவும் பாவங் கள் மற்றும் விரும்பத்தகாதவைகளை விட்டுத் தூரமானவனாகவும் வாழ்வான். இப்பண்பு சந்தையில் நடக்கின்ற வியாபார நடவடிக்கைகளான சந்தைக்குச் செல்லுதல், திரும்பி வருதல், வியாபாரத்திற்காக அங்கு அமர்தல், பிறருக்கு கரத்தினால் அடித்து, நாவினால் ஏசி, கோள், புறம் சொல்லி, பொய்யுரைத்து, தவறான சத்தியம் செய்தல் போன்றவற்றை விட்டும் விடுபட்டிருத்தல் என்ற தன்மையை ஒரு வியாபாரியிடம் வளர்க்கும்.

## 6.8 - உடன்படிக்கைகளை நிறைவேற்றுதல்

உடன்படிக்கைகள்தான் கொடுக்கல் வாங்கலின் பிரதான இயக்கக் கருவிகளாகும். கொடுக்கல் வாங்கலின் நிபந்தனைகளையும் பொறிமுறைகளையும் கொண்டு அமையப் பெற்ற சீரான உடன்படிக்கைகளை முஸ்லிம்கள் நிறைவேற்ற வேண்டும் என அல்லாஹ் அவசியப்படுத்தியுள்ளான். "ஈமான் கொண்டவர்களே உடன்படிக்கைகளை நிறைவேற்றுங்கள்" (அல்-மாயிதா:01) இங்கு உடன்படிக்கை என்பது பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வியாபாரம், இரவல் வழங்கல், ஸகாத், தானம் தொடர்பான பல வகையான உடன்படிக்கைக ளைக் குறிக்கும்.

நிபந்தனைகள் அமையப் பெற்று மார்க்க அங்கீகாரம் பெற்ற உடன்படிக்கையானது அவசியம் நிறைவேற்றப்பட வேண்டியதாகும். உடன்படிக்கையை நிறைவேற்றுவது நம்பிக்கைக்கு அடிப்படையானதும் உண்மை யின் அடிநாதமுமாகும். அதே நேரம் சதியும் மோசடியும் நம்பகத்தன்மையை இல்லாதொழித்து மனித உள்ளங்களில் இருந்து அமானிதத்தை வேரோடு பிடுங்கி வியாபாரத்தையும் வியாபார ஒழுங்கையும் சீர்குலைத்து வீழ்ச்சியடையச் செய்து விடுகிறது.

## 6.9 - அல்லாஹ் கண்காணிக்கறான் என்ற மனநிலை

வியாபாரத்தின் வரையறைகளான உண்மை, நம்பிக்கை, மோசடி செய்யாமை போன்றவைகளை அடைந்து கொள்ளவேண்டுமானால் அதற்கு அல்லாஹ் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வுதான் மிகவும் முக்கியமானதாகும். ஒரு வியாபாரி வியாபாரம் செய்யும் போது அல்லாஹ் தன்னை அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் இருக்கவேண்டும். இதனால் இறைய ச்சம் அதிகரிப்பதோடு பொருளா தாரமும் வளம் பெறும்.

அல்லாஹ் கண்காணிக்கிறான் என்ற மனநிலை மனிதனை நீதி, உபகாரம் போன்ற நல்ல விடயங்களை மாத்திரம் செய்வதற்குத் தூண்டுகின்றது. நீதி என்பதன் அர்த்தம் ஒரு வியாபாரி சத்தியத்தை எடுத்து சத்தியத்தை கொடுப்பதாகும். உபகாரம் என்பதன் அர்த்தம் சிறப்பும் மன்னிப்புமாகும். இப்பண்பு களைக் கொண்டுள்ள வியாபாரி வசதி இல்லாதவர்களுக்கு சிறிது கால தாமதம் கொடுப்பார். தரவேண்டிய பணத்தை வற்புறு த்திக் கேட்கவோ, மாற்றம் செய்யக்கோரி வருகின்ற வாடிக்கையாள ர்களை அதட்டி மறுத்து விடவோ மாட்டார்.

### 6.10 - வேலைகளைச் சீராகச் செய்தல்

நிச்சயமாக வேலை என்பது ஒரு அமானிதமும் பொறுப்புமாகும். இது குறித்து அல்லாஹ் "அல்லாஹ் நாடியிருந்தால் உங்களை ஒரே சமுதாயமாக ஆக்கி இருப்பான் எனினும் அவன் தான் விரும்புகின்றவர்களை வழி தவறச்செய்வான் தான் விரும்புகின்றவர்களை நேர்வழிப்படுத்துகிறான். நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி நீங்கள் வினவப்படு வீர்கள். (அந்நஹ்ல் : 93)

நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களில் ஒருவர் ஒரு செயலைச் செய்தால் அதனைத் திறன்படச் செய்யவே அல்லாஹ் விரும்புகின்றான். இதனால் ஒரு முஸ்லிம் தான் முன்னெடுக்கும் எந்த விடயமாக இருந்தாலும் அதில் நவீன கண்டுபிடி ப்புக்களை கையால்வது விரும்பத்தக்கதாகும். இதனால் வியாபாரப் பொருட்களை திறன்பட உட்பத்தி செய்யவும் செம்மைப்படுத்தவும் வழி பிறக்கலாம். ஒரு செயலை சீராகவும் முறையாகவும் செய்வது கடமை என ஆகிவிடும் போது அதற்கான ஊடகங்களும் கடமையாகும். எனவே நல்ல பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதனை இஸ்லாமிய ஷரீஆ, அல்லாஹ்வின் நெருக்க த்தைப் பெற்றுத்தரும் வணக்கமாக மாற்றி யுள்ளது.

இஸ்லாத்தின் பார்வையில் திறன்படச் செய்வதென்பது ஒரு நடத்தை மாற்றத்தோடு தொடர்பு பட்ட இலக்கு அல்ல மாறாக அது வாழ்வு செழிப்புற்று அகிலம் வளம் பெற்று கலாசாரங்கள் தலைத்தோங்குகின்ற மனித சமுதாயத்தின் உயர்வுக்கு வழி செய்யும் ஒரு கலாசார வெளிப்பாடாகும். மேலும் அல்லாஹ் வின் பொருத்தத்தையும் உளத்தூய்மையை யும் இலக்காகக் கொண்டதுமாகும்.

### 7.0 இவ்வொழுங்கு முறைகளையும் வரைய றைகளையும் கடைப்பிடிப்பதால் ஏற்படும் விளைவுகள்

1-உற்பத்தியிலும் வியாபாரத்திலும்உயரந்த தரம் பேணப்படும்

2- சந்தையில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவோரின் தகுதிக்கும் பாதுகாப்புக் கும் உத்தரவாதம் ஏற்படும்.

3- கொடுக்கல் வாங்கலில் ஈடுபவோரின் திருப்தி பெறப்படும்

4- வியாபார இலக்குகளை முழுமையாக அடைவதற்கு வழி ஏற்படும்

5- கொடுக்கல் வாங்கலில் உண்மை, நேர்மை பின்பற்றப்படும்

### பிரதான கண்டறிதல்

1- இஸ்லாம் அனுமதித்த வியாபாரப்போட்டி பயன்மிக்கதும் நல்ல பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது மாகும்.

2- இஸ்லாம் வியாபாரப் போட்டியை அனுமதித்துள்ளதோடு அதற்கான பல ஆதாரங்கள் அல்குர்ஆன் சுன்னா மற்றும் இஜ்மாவினூடாகக் கிடைக்கப் பெற்றும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3- மார்க்கம் சதி, அளவை நிறுவையில் மோசடி போன்ற பல வரையறைகளை வியாபாரப் போட்டியில் வரையறுத் துள்ளது.

4- அதிகாரிகள் அளவை நிறுவைகளைக் கண்காணிப்பதன் மூலமாக வாடிக்கை யாளர் மனங்களில் நம்பிக்கையை விதைத்து மக்களின் பொருளாதாரத் தினைப் பாதுகாக்கலாம்.

5- இஸ்லாம் அனுமதிக்காத வியாபாரப் போட்டி முறைகளினால் நம்பிக்கை மற்றும் மரியாதைக்கு பங்கமும் பிறருக்கு தீங்கும் ஏற்படுகின்றது.

6- இஸ்லாம் தடைசெய்த வியாபாரப் போட்டியானது வியாபார மோசடி, வட்டி, ஏமாற்று போன்ற வழிகளுடாக மேற்கொ ள்ளப்படுகிறது.

7- ஒரு வியாபாரியின் பெயரைக் கெடுத்தல், வியாபார நிலையத்தின் உட்கட்டமைப் பினை சீர்குழைக்கின்ற செயற்பாடுகளை முன்னெடுத்தல் போன்றன இஸ்லாம் அனுமதிக்காத வியாபாரப் போட்டி முறைகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

8- சந்தைச் செயற்பாட்டை சிறப்பாக முன்னெடுக்க கண்காணிப்பு முறையை இஸ்லாம் அவசியப்படுத்தியுள்ளது.

9- விலை நிர்ணயம் தொடர்பில் ஒரு அரசாங்கம் கவனம் எடுப்பதுடன் மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தல்.

## 8.0 பரிந்துரைகள்

1- பல்கலைக்கழக மாணவர்கள் பொரு ளாதாரம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக் கட்டங்கள் தொடர்பில் ஆய்வில் ஈடுபடுவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

2- பொருளாதாரக் கண்காணிப்பில் நல்ல பண்புகளையும் நிபந்தனைகளையும் இடுவது அவசியம் என்பதுடன் பொருத் தமான நபரை பொருத்தமான இடத்தில் இப்பணிக்காக அமர்த்துதுல்.

3- விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் அரசுக்கு மட்டுமே இருக்க வேண்டும். குறிப்பாக இன்றைய சமூகம் கண்டு கொண்டிரு க்கின்ற அரசியல் பொருளாதார நெரு க்கடி நிலமைகளில் இவ்விலை நிர்ணயம் என்பது மிகவும் முக்கியமானதாகும்.

4- வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் சட்டத்தை மீறி பதுக்கல், மக்களுக்கு அநியாயம் செய்தல் மற்றும் முறையற்ற வியாபாரப் போட்டியில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான தண்டனைகளை ஏற்படுத்தல்.

5- அனைத்துப் பொருளாதார நடவடிக்கை களிலும் இஸ்லாமியப் பொருளாதார முறைகளைக் கடைப்பிடிப்பதுடன் பிற மத சகோதரர்களுக்கிடையில் இஸ்லாமிய பொருளாதாரத்தின் பயன்பாட்டினை சினேகபூர்வ கலந்துரையாடல்களுடாக அறிமுகம் செய்தல்.

## 9.0 முடிவுரை

மேற்கண்ட அம்சங்களினூடாக இஸ்லாமிய சட்டம் என்பது பொருளாதாரச் சமநிலையை முகாமை செய்வதில் முன்னோடியாகவும் மனிதனின் கௌரவத்தையும் சுதந்திரத்தையும் பேணும் வகையில் சமூக பொருளாதார வாழ்வினை வளப்படுத்துவதில் வெற்றி கண்டதாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். இஸ்லாம் பொருளாதாரத்தின் வகிபாகத் தையும் முக்கியத்துவத்தையும் தெளிவு படுத்தியது போன்று அதனை தவறான வழியில் பயன்படுத்துவதன் விபரீதத்தையும் கோடிட்டுக் காட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசடி வழிமுறைகளை விட்டும் தூரமாகி பதுக்கல் சந்தையிலிருந்து பொருட்களின் விநியோகத்தைத் தடை செய்கின்ற அம்சங்கள் போன்ற நியாயமற்ற போட்டி முறைகளை விட்டும் தூரமாகிய கலப்பற்ற சந்தைகளை இஸ்லாம் உருவாக்க விளைகிறது. இச்சந்தைகளின் இலக்கு நீதியான முறையில் அமைந்த கேள்வி, நிரம்பல் போன்றவற்றின் அடிப்படையில் விலையினை நிர்ணயம் செய்வதாகும். இங்கு சமூக, பொருளாதார நிலைமைகள் பெரிதும் கருத்தில் கொள்ளப்படும்.

**உசாத்துணைகள்**


Afzal – Ur – Rahman. (1985). "**Economic Doctrines of Islam**". Islamic Publication Ltd., Lahore.

Ahmad, K. [ed.] (1981). "**Studies in Islamic Economics**". The Islamic Foundation, eicester, UK.

Ahmad, A. and Awan, K. R. [eds.] (1992). "**Lectures on Islamic Economics**".IRTI, Islamic Development Bank, Jeddah, Saudi Arabia.

Jalaludin A.K.M. (1991). "**The role of Government in an Islamic Economy**". A.S. Morteen, Malaysia.

Mannan M.A. (1972). **Economic Security in Islam**". Islamic Book Service, New Delhi.

Mylehuddin M. (1992). "**Banking and Islamic Law**". International Islamic Publishers, Delhi.

அபூ ஹாமித், றிழா சாஹிப். (2006). **அல் ஹுதூதுல் குப்ரா பில் இக்திசாத் அல் இஸ்லாமி.** தாரு மஜ்தலாவி, ஜோர்தான். (அறபு)

அபுல் அலி முஹம்மத் அஹ்மத். (2008). **அத்திஜாரா அல் இலக்துரானியா பில் பிக்ஹில் இஸ்லாமி.** தாருன்னிகாஸ், ஜோர்தான். (அறபு)

இப்னு உமர், யஹ்யா அல் அந்துலூசி அல் மாலிகி. (1975). **அஹ்காமுல் பிகஹ் அல் இஸ்லாமி.** தாருல் பிக்ர், பேருத். (அறபு)

அல் மனாவி, அப்துர் ரஊப். (1359ஹி). **பய்லுல் கதீர் பிசரஹி ஜாமியுஸ் ஸஈர்.** அல் மக்தபா எகிப்து. (அறபு) லங்கை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களிடையே ஜமாஅதே இஸ்லாமி ஆற்றி வரும் சமய, சமூக சீர்திருத்தப் பணிகள் - ஒரு நோக்கு

ஏ. ஜ∴பர் ஹுஸைன்


***ஆய்வுச் சுருக்கம்***

*இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் என பல சமூகத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். மொத்த சனத் தொகையில் ஏறத்தாழ 9 சத வீதமாக வாழும் இந்நாட்டு முஸ்லிம்களுக்கு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு உண்டு. இலங்கைக்கு முஸ்லிம்கள் வருகை தந்த காலம் முதல் அரசியல், பொருளாதாரம், கல்வி எனும் துறைகளுட்பட சமய, கலாசாரத் துறைகளிலும் சிறப்புற்றோங்கியிருந்தாலும், ஐரோப்பியர் வருகை முதல் படிப்படியாக இத்துறைகளில் வீழ்ச்சியடைந்தார்கள். இந்நாட்டு பௌத்த, இந்து குடிமக்களைப் போன்று முஸ்லிம்களும் அந்நியர் ஆட்சியில் துன்பமடைந்த போதும் முஸ்லிம்களில் மதமாற்றம் இடம்பெறவில்லை. இருந்தபோதிலும், ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்ததால் கல்வி வளர்ச்சியிலும் புதிய பொருளாதார அமைப்பிலும் பங்கு கொள்ள முடியவில்லை. அதனால், அவர்களின் அரசியல், பொருளாதார, கல்வி முன்னேற்றம் பாதிப்படைந்தது. ஐரோப்பியர் வருகை முதல் அரேபியருடன் இருந்த நெருக்கமான தொடர்பு வெகுவாகக் குறைந்ததாலும் இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலையங்கள் போர்த்துக்கல், ஒல்லாந்த ஆட்சியாளர்களின் கொடுமைகளால் பாதிக்கப்பட்டதாலும் சமய, காலசார முன்னேற்றம் தடைப்பட்டு முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சி குன்றியது.*

*பௌத்த, இந்து சமூகங்களிடையே ஏற்பட்ட இத்தாக்கங்களிலிருந்து மீட்சிபெற அநகாரிக தர்மபால, ஆறுமுக நாவலர் முதலானோர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முயற்சி செய்தனர். அவர்களின் வழிநின்று மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் 'சீர்திருத்த முயற்சிகள்' என அழைக்கப்படுகின்றன. இலங்கைவாழ் முஸ்லிம்களிடையேயும் எம்.சீ. சித்திலெப்பையின் தலைமையில் சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சமூகத்தைப் புனர் நிர்மாணம் செய்யும் இத்தகைய சீர்திருத்த முயற்சிகள் பல இலங்கை முஸ்லிம்களிடையே இடம்பெற்றுள்ளன. அவை முஸ்லிம்களின் வறுமைப்பட்டிருந்த ஆன்மீக உணர்வுகளை உயிர்ப்பித்து மேலோங்கச் செய்வனவாகவும் அவர்களின் பின்னடைந்திருந்த அறிவியல் நிலையை உயர்வடையச் செய்வனவாகவும் அவர்களின் சமய, கலாசார மேம்பாட்டுக்கும் தனித்துவப் பாதுகாப்புக்கும் வழியமைப்பனவாகவும் அமைந்திருந்தன.*

*இலங்கை முஸ்லிம்களிடையே இலங்கை ஜமாஅதே இஸ்லாமி, தௌஹீத் ஜமாஅத், ஜமாஅதுத் தப்லீக் போன்ற த∴வா அமைப்புகள் சமய, சமூக சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றுள் இலங்கை ஜமாஅதே இஸ்லாமி ஆற்றி வரும் சமய, சமூக சீர்திருத்தப் பணிகள் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படும்.*

*இலங்கை முஸ்லிம்களிடையே பல்வேறு த∴வா அமைப்புகள் சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்ற இக்காலப் பகுதியில் இலங்கை ஜமாஅதே இஸ்லாமியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகள் குறித்தும் அதனால் ஏற்பட்டு வருகின்ற சாதக மாற்றங்கள் குறித்தும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இவ்வாய்வு ஒரு பண்புசார் ஆய்வாகும். இவ்வாய்வின் முதன் நிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்காக அவதானம், நேர்காணல், வினாக் கொத்து முறை ஆகியன கையாளப்படும். இரண்டாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக ஜமாஅதே இஸ்லாமி குறித்து இலங்கையோடு தொடர்புபடுத்தி எழுதப்பட்டுள்ள நூல்கள், சஞ்சிகைகள் என்பன பயன்படுத்தப்படும்.*

*முதன்மைச் சொற்கள் : த.:.வா, சீர்திருத்தப் பணிகள், இலங்கை, ஜமாஅதே இஸ்லாமி*

## 1.0 அறிமுகம்

மௌலானா அபுல் அ.:.லா மௌதூதி (ரஹ்) அவர்களால் கி.பி. 1941 ஆகஸ்ட் 26 (ஹிஜ்ரி 1360 ஷ.:.பான் 02)இல் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய இயக்கமே ஜமாஅதே இஸ்லாமியாகும். மார்க்க அறிஞர்களும், அறிவு ஜீவிகளுமான 75 பேர் சேர்ந்து இந்தியாவின் பஞ்சாபிலுள்ள 'பதான் கோர்ட்' எனுமிடத்தில் இந்த இயக்கத்தை வடிவமை த்தனர்.

இளம் வயதிலேயே எழுத்துத் துறையில் பிரவேசித்த மௌலானா மௌதூதி (ரஹ்), அவரது தர்ஜுமானுல் குர்ஆன் சஞ்சிகையின் மூலம் ஜமாஅத் எனும் கூட்டமைப்பின் அவசியம் பற்றி வலியுறுத்திய தோடு, தூய இஸ்லாத்துக்காக உழைக்கக் கூடிய தியாகப் பரம்பரையொன்றை உருவாக்க வருமாறு அழைப்பும் விடுத்தார். அந்த அழைப்பின் எதிரொலியாகவே ஜமாஅதே இஸ்லாமி தோற்றம் பெற்றது.

மௌலானா மௌதூதி (ரஹ்) வெறும் போதகராக மட்டும் இருக்காமல் எந்த போதனைகளை மக்கள் முன் சமர்ப்பித்தாரோ, அப்போதனைகளுக்கு ஏற்ப ஒரு முழுமையான இஸ்லாமிய சமூக அமைப்பை உருவாக்கவும் பாடுபட்டார். அந்த சமூக அமைப்புக்கு முன்னோடியாக அமைந்த இயக்கமே ஜமாஅதே இஸ்லாமியாகும். அது முதலில் முஸ்லிம்களுக்கும் பிறகு முஸ்லிம் அல்லாதாருக்கும் இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுக்கும் ஓர் அமைப்பாகும்.

'இஸ்லாம் வாழ்வின் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கிய விரிவானதொரு வாழ்க்கைத் திட்டம் என்ற உறுதியான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதே ஜமாஅதே இஸ்லாமியாகும். அதன் இலட்சியம் தனிப்பட்ட வாழ்வு முதல் கூட்டு வாழ்வு வரை மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இஸ்லாத்தைப் பூரணமாகச் செயற்படுத்துவதேயாகும். ஜமாஅதே இஸ்லாமி இன்று இஸ்லாத்தை மீண்டும் நிலைநாட்டப் பாடுபடுவதன் நோக்கம், நவீன மனிதன் இழந்து விட்ட அமைதியையும் சாந்தியையும் மீண்டும் அவனுக்குத் தேடிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் உலக வாழ்வில் மோதல் இல்லாத ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காகவுமேயாகும்.

அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலைநாட்டுவதே (இகாமதுத் தீன்) இதன் குறிக்கோளாகும். இக்குறிக்கோளே "உங்களுடைய உண்மையான குறிக்கோள்" என்று முஸ்லிம்களுக்கு ஜமாஅதே இஸ்லாமி வலியுறுத்துகிறது.

ஜமாஅதே இஸ்லாமி நாட்டுக்கு நாடு வெவ்வேறு நிர்வாக அமைப்பைக் கொண்டிருந்த போதும் அது தனது குறிக்கோளை அடைவதற்குக் கைக்கொள்ளும் பொதுவான முறைமையில் வித்தியாசம் இருப்பதில்லை. அந்த முறைமை மூன்று அடிப்படை அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. அல்குர்ஆனும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளும் ஜமாஅத்தின் அடிப்படைகளாகும். மற்றவைகளெல்லாம் இந்த இரண்டு மூலங்களுக்கு அடுத்த தரத்தில் வைத்துக் கணிக்கப்படும். அவை எந்தளவிற்கு இவற்றோடு முரண்பாடில்லாது இருக்கின்றனவோ அந்தளவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இஸ்லாமிய த.்.வாவில்) பயன்படுத்தப்படும்.

2. ஜமாஅத்தின் செயல்கள் அனைத்தும் ஒழுக்க வரம்புகளுக்குட்பட்டவையாக இருக்கும். உண்மைக்கும் நேர்மைக்கும் எதிரான அல்லது வகுப்புவாத வர்க்கப் போராட்டம், உலகில் குழப்பம் விளைவித்தல் ஆகிய வழிமுறைகளை அது ஒருபோதும் கையாளாது.

3. ஜமாஅத் தனது குறிக்கோளை அடைவதற்கு அமைதியான வழிமுறை களையே மேற்கொள்ளும். அதாவது, இஸ்லாமிய பிரசாரம், விளக்கம், கருத்துப் பரிமாற்றம் என்பன மூலமாக மக்களின் மனோபாவம், பண்பு, நடத்தை ஆகியவற்றை சீர்திருத்தம் செய்ய முற்படும். இவ்வாறு சீர்திருந்தும் மக்களைக் கொண்டே ஒரு முன் மாதிரியான சமூக அமைப்பை உருவாக்குவதன் மூலம் ஒழுக்க மேம்பாடுடைய மனித சமுதாயம் தோன்றுவதற்கு அயராது பாடுபடும்.

ஜமாஅதே இஸ்லாமியின் குறிக்கோள்கள், அமைப்பு, செயல்முறை பற்றி மௌலானா மௌதூதி (ரஹ்) பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்.

“எங்கள் அழைப்பு, மதக் கோட்பாடு, குறிக்கோள், ஜமாஅத்தின் அமைப்பு, செயல் முறை ஆகியன யாவும் முழுக்க முழுக்க இஸ்லாத்தையே தழுவியது ஆகும் என்றும் குர்ஆன், ஹதீஸின்படி எது முஸ்லிம் சமுதாயத்தின் அடிப்படைக் கடமையாக இருக்கிறதோ அதை நிறைவேற்றவே நாம் முன்வந்துள்ளோம் என்றும் உங்கள் மனச் சாட்சி சான்று பகன்றால் எங்களுடன் சேர்ந்து கொள்ளுங்கள்”

சமூக வாழ்வில் புரையோடிப் போயுள்ள தீமைகளைக் களைந்து அவற்றுக்குப் பகரமாக சாந்தியும் சமாதனமும் நிறைந்த இறைநெறியான இஸ்லாத்தை நிலைநாட்டவே ஜமாஅத் பாடுபட்டு வருகின்றது. ஜமாஅத்தின் செயல்கள் அனைத்தும் சகிப்புத் தன்மை, பொறுமை, நல்லிணக்கம், மக்கள் நலன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழியையும் முன்மாதிரியையும் பின்பற்றி கால, தேச, சூழல்களுக்கு ஏற்ப முற்போக்கான திட்டங்களை வகுத்து அது செயலாற்றி வருகின்றது.

## 2.0 இலங்கையில் ஜமாஅதே இஸ்லாமி

இலங்கையில் ஜமாஅதே இஸ்லாமி 1947ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட போதிலும், 1954ஆம் ஆண்டில்தான் இவ்வமைப்பு உத்தியோகபூர்வமாக செயற்பட ஆரம்பித்தது. காயல்பட்டணத்தைச் சேர்ந்தவரும் மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருந்தவருமான M.A.C. ஜெய்லானி ஸாஹிப் என்பவரே இலங்கையில் ஜமாஅதே இஸ்லாமியை அறிமுகம் செய்து வைத்தவராவார். அவரது வெளியீடான ‘அருள் ஜோதி’யும் 1950இல் கொழும்பில் அவரால் தொடக்கி வைக்கப்பட்ட அல்குர்ஆன் விளக்க வகுப்புகளும் இலங்கை முஸ்லிம்களிடையே ஜமாஅதே இஸ்லாமி சிந்தனைப் போக்கையும், அதன் இலட்சியங்களையும் அறிமுகப்படுத்துவதில் பெரும் பங்காற்றியுள்ளன. அவரே இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் முதலாவது அமீராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

## 3.0 இலக்குகளும் பணியும் (Vision & Mission)

“உலகத்தில் சுபீட்சத்தை ஏற்படுத்துதல், மறுமையில் அல்லாஹ்வின் திருப்தியையும் சுவனத்தையும் பெற்றுக் கொள்ளல்” ஆகிய இலக்குகளை (vision) அடைவதைத் தனது தூர நோக்காகக் கொண்டு செயற்படும் இலங்கை ஜமாஅதே இஸ்லாமியானது தனது பணியைப் (mission) பின்வருமாறு வரையறை செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஸ்லாம் வாழ்வதற்காக வாழும் தனி மனிதர்கள், இஸ்லாமிய சந்ததிகளை உருவாக்கும் குடும்பங்கள், மனித, சமூக நலனுக்காக உழைக்கும் நிறுவனங்கள், இஸ்லாமிய வாழ்க்கை நெறிமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கிராமங்கள், வாழ்வின் சகல துறைகளிலும் சன்மார்க்க விழுமியங்களின் அடிப்படையில் ஒருங்கிணைந்து வழிநடத்தும் தலைமைத்துவம் என்பவற்றோடு, இஸ்லாமிய கோட்பாடுகள், வாழ்க்கை முறை, பண்பாடு, நாகரிகம் என்பவற்றின்பால் மனித சமூகத்தை வழிநடத்தக்கூடிய ஒரு முன்மாதிரிமிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புதல்".

மேற்குறிப்பிட்ட பணியை நிறைவேற்றும் பொருட்டு இலங்கை ஜமாஅதே இஸ்லாமி பின்வரும் பதினான்கு இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது.

1. குறிப்பாக இயக்கத்தினதும் பொதுவாக சமூகத்தினதும் சகல நடவடிக்கைகளிலும் இஸ்லாமிய கோட்பாடுகள் பேணப்படுதல்.

2. இஸ்லாத்தின் தூதை இலங்கை வாழ் மக்களுக்கு எத்திவைத்தல்.

3. Missionஐ சமூகமயப்படுத்துதல், போதிய தகுதி வாய்ந்த தனிமனிதர்களை உள்வாங்குதல், அடிமட்ட (குடும்பம், நிறுவனம், கிராமம் அலகுகளை உருவாக்கி, மேம்படுத்துதல்.

4. குர்ஆன், ஸுன்னாவின் போதனைகளை நோக்கி சமூகத்தை நகர்த்துதல்.

5. பணியை சிறப்பாக முன்னெடுக்கக் கூடிய வகையில் அனைத்துத் துறைகளிலுமுள்ள மனித வளத்தை (அறிவு, ஆன்மீகம், திறன்) பயிற்றுவித்து மேம்படுத்தல்.

6. நாட்டினதும் சமூகத்தினதும் விவகாரங்களில் தாக்கம் செலுத்துகின்ற தனிமனிதர்களுடனும் அமைப்புகளுடனும் நல்லுறவைப் பேணுவதோடு பரஸ்பர புரிந்துணர்வுடன் கட்டுக்கோப்பான ஒரு சமுதாய கட்டமைப்பை உருவாக்குதல்.

7. இஸ்லாமிய அடிப்படையிலான ஓர் அரசியல் சக்தியை உருவாக்குதல்.

8. சமூகத்தினதும் நாட்டினதும் போக்கில் கருத்தாதிக்கம் செலுத்தும் அளவுக்கு ஊடகத் துறையைப் பயன்படுத்தலும் அதில் பலம் பெறுதலும்.

9. மனித சமூகத்தின் நலனுக்கும் சமூக அபிவிருத்திக்கும் அவசியமான (கல்வி, கலாசாரம், பொருளாதாரம், சுகாதாரம் போன்ற) துறைகளை மேம்படுத்தலும் அத்துறைகளில் நிறுவனங்களை உருவாக்குதலும்.

10. வினைத்திறன் மிக்க நிர்வாக அமைப்பை ஜமாஅத்தின் சகல மட்டங்களிலும் ஏற்படுத்துதல்.

11. ஆய்வு செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஜமாஅத்தின் சகல பணிகளையும் திட்டமிட்டு மேற்பார்வை செய்தல்.

12. பணிகளைச் சிறப்பாகத் தொடரும் வகையில் நிதி வளத்தைத் திட்டமிடுதல், திரட்டுதல், அபிவிருத்தி செய்தல், நிர்வகித்தல்.

13. மனித சமூகத்துக்குரிய கொள்கையாகவும் அதன் சுபீட்சத்துக்குரிய நடைமுறைகளாகவும் சமகாலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளாகவும் ஆய்வுகளின் அடிப்படையில் இஸ்லாத்தை முன்வைத்தல்.

14. பொதுவாக சர்வதேச சமூகத்துடனும் குறிப்பாக முஸ்லிம் உம்மத்துடனும் உறவுகளைப் பேணி அதனை நாட்டினதும் சமூகத்தினதும் இஸ்லாமியப் பணியினதும் நலன்களுக்குப் பயன்படுத்துதல்.

இவ்வமைப்பின் தலைமையகம் கொழும்பு. 09, தெமட கொட வீதி, இலக்கம் 77 இல் அமைந்துள்ள கட்டடத்தில் 'தாருல் ஈமான்' என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றது.

இவ்வமைப்பின் அமீர்களாக இதுவரை பின்வருவோர் செயற்பட்டுள்ளனர்.

1. M.A.C. ஜெய்லானி ஸாஹிப் (1954 - 1957)

2. அஹ்மத் லெப்பை (1957) -03 மாதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மௌலவி U.L. தாஸீன் நத்வி (1957-1958)

4. M.U. ஸெய்யித் முஹம்மத் (1958 - 1959)

5. அல்ஹாஜ் P.M.M. யூசுப் (1959 - 1980 இக்காலப் பகுதியில் 1976 தொடக்கம் 1977 வரை மௌலவி A.L.M. இப்றாஹீம் இடைக்கால அமீராக இருந்துள்ளார்)

6. M.K. M. மஹ்சூம் (1981 - 1982)

7. மௌலவி A.L.M. இப்றாஹீம் (1982-1994)

8. R. ஹஜ்ஜுல் அக்பர் (1994 - 2018)

9. எம்.எச்.எம். உஸைர் (2018 செப்டெம்பர் முதல்

ஓர் அமைப்பின் வளர்ச்சியில் பெரும் பகுதி அதன் தலைமைத்துவத்தின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது. அல்ஹாஜ் P.M.M. யூசுப் அவர்களின் பின்னர் நீண்ட காலத்துக்கு இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் அமீராக இருந்தவர்கள் மௌலவி A.L.M. இப்றாஹீம் அவர்களும் உஸ்தாத் R.ஹஜ்ஜுல் அக்பர் அவர்களுமாவர். ஈரானியப் புரட்சியின் போது முஸ்லிம்கள் மத்தியில் ஈரானுக்கு ஆதரவு கொடுப்பதா இல்லையா என்ற சர்ச்சை ஏற்பட்ட போது அது இலங்கை ஜமாஅதே இஸ்லாமியையும் பாதித்தது. அதனால் சீர்குலைந்திருந்த ஜமாஅத்தை மீண்டும் ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டு வந்த பெருமை மௌலவி இப்றாஹீம் அவர்களையே சாரும்.

முன்னாள் அமீராகிய உஸ்தாத் R. ஹஜ்ஜுல் அக்பர் அவர்களும் தலைமைத்துவப் பண்புகள் நிறைந்தவராகவும் சிறந்ததொரு இளம் தாஈயாகவும் விளங்கினார். இவருடைய பேச்சுத் திறனும் நவீன சிந்தனைகளும் இன்றைய இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்தது. இதன் காரணமாக அன்னாரின் தலைமைத்துவத்துக்கு இயக்க உறுப்பினர்கள் கட்டுப்பட்டு இயங்கியதையும் அவதானிக்க முடிந்தது. இவர் தன்னை ஜமாஅத்தின் முழுநேர ஊழியனாக அர்ப்பணித்து நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் சென்று சொற்பொழிவுகள், குத்பாப் பேருரைகள் நடாத்தியதுடன் முடியுமானளவு தனிப்பட்டவர் களையும் சந்தித்து பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பணிகள்**

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி அதன் அங்கங்களான ஜம்இய்யதுத் தலபதில் இஸ்லாமிய்யா (இஸ்லாமிய மாணவர் அமைப்பு), ஜம்இய்யதுத் தாலிபாத் (மாணவியர் அமைப்பு) ஜமாஅதே இஸ்லாமி பெண்கள் பிரிவு, சஞ்சிகைகள், நூல்கள் வெளியீடு மற்றும் அதன் கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்கள் முதலானவை மூலம் தனது சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி மார்க்கப் பிரசார நடவடிக்கைகளில் மட்டுமன்றி, சமூக, கலாசார செயற்பாடுகளிலும் ஈடுபாடு காட்டி வருகின்றது. அண்மைக்காலங்களில் இலங்கையிலுள்ள மிகப் பெரும் சமூக சேவை நிறுவனங்களில் ஒன்றாக இவ்வமைப்பு மாறி வருகின்றது. சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இவ்வமைப்பினர், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரண, புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கென பல பில்லியன் ரூபாய்களைச் செலவிட்டு பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

இவ்மைப்பின் கீழ் இயங்கும் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான செரன்திப் நிறுவனமானது (SIRD – Serendib Institute of Research and Development) இலங்கையில் பல்வேறு ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. உதாரணமாக முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து 2004 மார்ச் 12, 13, 14 ஆகிய திகதிகளில் 'பல்லின சமூகத்தின் மத்தியில் சிறுபான்மை முஸ்லிம்கள்' எனும் தலைப்பில் கட்டுநாயக்காவில் நடாத்தப்பட்ட மகாநாடு மற்றும் 2004 ஏப்ரல் 24, 25, 26 ஆகிய திகதிகளில் 'ஸகாத் எனும் நிறுவனம் மூலம் சமூகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயவலுவூட்டல்' எனும் தலைப்பில் மஹரகமை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடாத்தப்பட்ட மகாநாடு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் மற்றுமொரு நிறுவனமான நிவாரணம் மற்றும் அபிவிருத்திக்கான செரன்திப் ஸ்தாபனமானது (SFRD – Serndib Foundation for Relief and Development) பின்வரும் பணிகளை ஆற்றி வருகின்றது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பாலர் பாடசாலைகளையும், குர்ஆன் மத்ரஸாக்களையும் நடத்தி வருவதுடன் கிண்ணியாவில் தொழில் நுட்பக் கல்லூரியொன்றையும் நடத்தி வருகின்றது.

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப் பட்ட பிரதேசங்களில் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதுடன் அவ்வாறான பகுதிகளைச் சுத்தப்படுத்தும் பணிகளையும் செய்து வருகின்றது. அதுமட்டுமன்றி, தேவையான இடங்களில் பள்ளிவாயல் கள், கிணறுகள் அமைத்தல், உழ்ஹிய்யா இறைச்சி விநியோகம் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருவதோடு, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்து வருகின்து.

குவைத் அரசாங்கத்தின் அனுசரணையுடன் புத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள Kuwait Hospital மூலம் இலவச மருத்துவ சிகிச்சைகளை வழங்கி வருவதுடன் நாடளாவிய ரீதியில் பல்வேறு இலவச வைத்திய முகாம்களையும் நடத்தி வருகின்றனர். உதாரணமாக நாடளாவிய ரீதியிலுள்ள கண்ணில் வெள்ளைப் படலம் (Catract) உள்ள நோயாளர்கள் இனம் காணப்பட்டு, அவர்கள் புத்தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களுக்கு இலவசமாக அறுவைச் சிகிச்சை வழங்கப் பட்டதைக் குறிப்பிடலாம். இலங்கையிலுள்ள வைத்தியர்கள் மட்டுமன்றி, பாகிஸ்தானிலி ருந்தும் விஷேட வைத்தியர் குழுவொன்று இதற்கென விஷேடமாகத் தருவிக்கப்படுகி ன்றமையும் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி, முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இவ் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படு கின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் நிறுவனங்களுள் ஒன்றான "ஹிரா தகவல் நிலையம்" (Hira Information Centre) எனும் அமைப்பு, முஸ்லிம் அல்லாதவர்களை இலக்காகக் கொண்டு பின்வரும் பணிகளை ஆற்றி வருகின்றது.

இஸ்லாத்தின் தூதை எத்தி வைத்தல். இதற்கென இவர்கள் நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் என்பவற்றை வெளியிட்டு, இலவசமாக விநியோகம் செய்து வருகின்றனர்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வோருக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதுடன் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான உதவிகளையும் செய்து கொடுத்தல்.

முஸ்லிம் அல்லாதவர்களிடையே இஸ்லாம் பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்துதல். இதற்கென இவர்கள் இயற்கை அனர்த்தங்களின்போது குறிப்பாக முஸ்லிம் அல்லாதவர்களைக் கவனத்திற் கொண்டு சமூக நலப் பணிகளில் ஈடுபடுவர்.

இலங்கை முழுவதிலும் கல்வி கற்றவர்களையும், இளைஞர்களையும் இவ்வமைப்பு வெகுவாகக் கவர்ந்துள்ளது. இவ்வமைப்பானது நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் அமைப்பாக விளங்குவதுடன் தனது பிரசாரப் பணிகளின் ஓர் அங்கமாக சில வெளியீடுகளையும் செய்து வருகின்றது. இதுவரை மொழி பெயர்ப்பு உட்பட சுமாராக எண்பத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது. இவற்றுள் சுமார் முப்பது நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களின் பெருமளவு நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்துள்ள இவ்வமைப்பு அன்னாரின் தப்ஸீரான தப்ஹீமுல் குர்ஆனை சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளமை வரவேற்கத்தக்க ஓர் அம்சமாகும். இந்நாட்டில் சிங்கள மொழி மூலம் த∴வாவை முன்னெடுக்க வேண்டிய பாரிய தேவை ஏற்பட்டுள்ள நிலையில் மௌலவி A.L.M. இப்றாஹீம் அவர்களின் தலைமையிலான ஒரு குழுவினர் தம்மை முழுமையாக இப்பணியில ஈடுபடுத்தி சிங்கள மொழி மூலம் இத்தப்ஸீரை வெளியிட்டமை யானது ஓர் ஆரோக்கியமான த∴வா வழிமுறை என்றே குறிப்பிட வேண்டும்.

மாதத்துக்கு ஒருமுறை 'அல்ஹஸனாத்' என்ற சஞ்சிகையையும் இருமுறை 'எங்கள் தேசம்' என்ற பத்திரிகையையும் வெளியிட்டு வருகின்றது. 1970 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படும் அல்ஹஸனாத், சுமார் ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது. சமகால முஸ்லிம் உலகு, அல்குர்ஆன், ஹதீஸ் விளக்கங்கள், இஸ்லாமிய வரலாறு, மகளிர் பகுதி, மாணவர் பகுதி போன்ற பல்வேறு அம்சங்களைத் தழுவியதாக இச்சஞ்சிகை வெளிவருகின்றது. அத்துடன், 1985 முதல் 'பிரபோதய' என்ற பத்திரிகையையும் சிங்கள மொழி மூலம் அது வெளியிட்டு வருகின்றது. ஆரம்பத்தில் மூன்று மாதங்களுக்கொரு முறை வெளி வந்த இப்பத்திரிகை 1989 முதல் மாதாந்தப் பத்திரிகையாக வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி தனது அழைப்புப் பணிகளுக்கென அழைப்பாளர்களை உருவாக்கும் நோக்குடன் பத்துக்கும் மேற்பட்ட அறபுக் கல்லூரிகளை நடத்தி வருகின்றது. அவற்றுள் மாதம்பை இஸ்லாஹிய்யா அறபுக் கல்லூரி, புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அறபுக் கல்லூரி, கிண்ணியா அந்நஹ்ஜல் கவீம் அறபுக் கல்லூரி, ஓட்டமாவடி பாதிமதுஸ் ஸஹ்ரா பெண்கள் அறபுக் கல்லூரி, நிக்கவரட்டிய அமீனிய்யா அறபுக் கல்லூரி ஆகிய ஐந்து அறபுக் கல்லூரிகளும் ஜமாஅதே இஸ்லாமியின் நேரடி வழிகாட்டலின் கீழ் இயங்கி வருகின்றன.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி, மக்களைப் பிளவுபடுத்துகின்ற செயற்பாடுகளை ஒரு போதும் மேற்கொள்ளாதிருப்பதுடன் இலங்கையிலுள்ள ஏனைய த∴வா அமைப்புகளுடன் புரிந்துணர்வுடனும் நடந்து கொள்கின்றது. தனது அமைப்பிலுள்ள உறுப்பினர்களை எவ்வாறு சகோதரர்களாக நோக்குகிறதோ, அவ்வாறே ஏனைய த∴வா அமைப்புகளிலுள்ள உறுப்பினர்களையும் சகோதரத்துவ வாஞ்சையுடன் அது நோக்குகின்றது. எந்தவொரு த∴வா அமைப்பையும் தனது எதிரியாக நோக்காத இவ்வமைப்பு 'எல்லா அமைப்புகளும் உள்ளிட்ட ஒரு தலைமைத்துவம் முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட வேண்டும்' என்ற குறுகிய கால எதிர்பார்ப்பையும், 'முஸ்லிம் சமூகம் வேறுபாடுகளற்ற ஒரே சமூகமாக மாற வேண்டும்' என்ற நீண்ட கால எதிர்பார்ப்பையும் கொண்டு செயற்படுகின்றது.

இவ்வமைப்பு இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஷ் போன்ற ஏனைய நாடுகளிலுள்ள ஜமாஅதே இஸ்லாமிகளுடன் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளல், ஆலோசனைகளைப் பெறல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட போதிலும், அவற்றுடன் உத்தியோக பூர்வமான உறவுகள், கட்டுப்பாடு கள் எதனையும் கொண்டிருப்பதில்லை. கோட்பாட்டு ரீதியில் எல்லா ஜமாஅதே இஸ்லாமியும் ஒரே சிந்தனையைக் கொண்டிருந் தாலும் சூழ்நிலை, பிரச்சினைகள், தேவைகள் நாட்டுக்கு நாடு வித்தியாசப்படுவதால் மேற்குறித்த நாடுகளிலுள்ள ஜமாஅதே இஸ்லாமிகளும் இதே நடைமுறையைத்தான் வலியுறுத்துகின்றன.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி தனது த∴வா பணியின் ஓர் அங்கமாக புத்தக நிலையம் ஒன்றையும் நடத்தி வருகின்றது. இவ்வமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பின் தலைமைச் செயலகக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இஸ்லாமிக் புக் ஹவுஸ் (Islamic Book House) என்ற பெயரில் இப்புத்தக விற்பனை நிலையம் இயங்கி வருகின்றது. சமூக ஐக்கியத்துக்கான ஒரு நிறுவனமாக இவ்வமைப்பு புத்தக இல்லத்தைக் கருதுவத னால் பிற அமைப்புக்கள் சார்ந்த நூல்களை யும் இங்கு விற்பனை செய்கின்றது. இயக்க ரீதியாக முஸ்லிம் சமூகம் பிளவுபடாமல் இருப்பதற்கான ஒரு முன்மாதிரி நிறுவனமாக Islamic Book House விளங்குவதனால்தான் பல்வேறு அமைப்புகள் சார்ந்த எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், சிந்தனையாளர்கள், ஆசிரிய ர்கள், மாணவர் கள் போன்றோர் இங்கு வருகை தருகிறார்கள் என்று இவர்கள் கருதுகின்றனர்.

இவர்கள் அரசியலில் நேரடியான ஈடுபாடு எதனையும் காட்டுவதில்லை. மாறாக, இலங்கையின் நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு, இலங்கையின் சூழலுக்குப் பொருத்தமான விதத்தில் தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வகையில் இவ்வமைப்பில் உள்ள Social Political Forum எனும் சமூக அரசியல் பிரிவானது தேர்தல் காலங்களில் அரசியல் பிரச்சினைகள் வரும்போது முஸ்லிம் சமூகத்துக்குள் நடுநிலையானதும் சுமுகமானதுமான சிந்த னையைத் தீர்வுக்காக முன்வைத்தல், முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துதல், இஸ்லாமிய அரசியல் கோட்பாடு தொடர்பாக அறிவூட்டி, எதிர் காலத்தில் இஸ்லாமிய அரசியல்வாதியாக வருவதற்கான வழிகாட்டல்களை வழங்கல் போன்ற பணிகளை ஆற்றி வருகின்றது.

இலங்கையில் இவ்வமைப்பின் அறிமுகம் இஸ்லாம் பற்றிய தப்பெண்ணங்கள் களையப்படக் காரணமாயமைந்துள்ளது. இஸ்லாம் என்பது தொழுகை, நோன்பு முதலான சில வணக்க வழிபாடுகளுடனும், குறிப்பிட்ட சில சமய மரபுகள், சடங்குக ளுடனும் மட்டுப்பட்டது என்ற கருத்தை மாற்றி இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்குமான வழிகாட்டல்களை உள்ளடக்கியுள்ளது என்ற கருத்தை ஜமாஅதே இஸ்லாமியே முன்வைத்தது. அத்துடன், இபாதத் எனும் வணக்க வழிபாடு பரந்த நோக்கில் அமைவதையும் எடுத்துக் காட்டியது. மேலும், 'குர்ஆனை ஓதுவோம்; அதனை விளங்குவோம்; அதன்பால் அழைப்போம்' எனக் குரலெழுப்பி முஸ்லிம்களுக்கும் குர்ஆனுக்குமிடையிலான தொடர்பைப் பலப்படுத்தியது. இலங்கையில் 'குர்ஆன் வகுப்பு' (Quran Class) என்ற பிரயோகம் ஜமாஅதே இஸ்லாமியின் தோற்றத்தின் பின்னரே புழக்கத்திற்கு வரத் தொடங்கியது. நாடளாவிய ரீதியில் பல்வேறு பாடநெறிகள், பயிற்சிப் பட்டறைகள், தர்பியா நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவற்றைத் தொடர் நிகழ்ச்சிகளாகச் செய்து வருகின்றது. இவை தவிர, இஸ்லாமிய சிந்தனைகள், பிரசாரங்கள் என்பன இலகுவான முறையில் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற் காக இறுவெட்டுக்கள் (CD), இணைய தளங்கள் மூலமாகவும் தமது பணிகளைச் சளைக்காத வண்ணம் செய்து வருகின்றனர். இந்த வகையில் இஸ்லாத் தையும் அதன் தாத்பரியங்களையும் மிகத் தெளிவாக முன்வைக்கும் பணியொன்றை ஜமாஅதே இஸ்லாமி மேற்கொண்டு வருகி ன்றது எனலாம்.

நாட்டினதும், சமூகத்தினதும் நிலைமைகளை அவதானித்து, அதற்குப் பொருத்தமான ஒரு கருப்பொருளைத் தெரிவு செய்து அதன்மூலம் இஸ்லாமிய சிந்தனைகளை சமூக மயப்படு த்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் பல்வேறு ஒன்று கூடல்களை நடாத்தி வருகின்றது. இவ்வொன்று கூடல்களுக்கு மக்களைத் திரட்டும் பொருட்டு சமூக ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், வானொலி முஸ்லிம் சேவை, துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்பவற்றை உச்சகட்ட அளவில் பயன்படுத்தி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது பல முஸ்லிம் மாணவர்கள் சிங்கள மொழி மூலம் கற்று வருகின்ற காரணத்தினால் தமிழ் மொழியை அறியாதுள்ளனர். அவர்க ளிற் சிலர் தமது வீடுகளிலும் சிங்களம் பேசுகின்ற காரணத்தினால் தமிழில் பேசுவ தையோ, எழுதுவதையோ புரிந்து கொள்ள முடியாத நிலையிலுள்ளனர். எனவே, சிங்கள மொழி மட்டுமே தெரிந்த சமதாயமொ ன்று இந்நாட்டில் உருவாகி வருகிறது. இவர்களு க்கு சிங்கள மொழி மூலம் இஸ்லாத்தை எடுத்துக் கூறுவதற்கும் பெரும்பான்மை மக்களுக்கு இஸ்லாத்தின் தூதை மிகச் சரியான முறையில் எத்திவைத்து, இஸ்லாத் தையும் முஸ்லிம்களையும் பற்றி அவர்கள் கொண்டுள்ள தவறான எண்ணங் களை இல்லாமற் செய்வதற்கும் அறபு மத்ரஸாக்கள் இப்பொழுதிருந்தே தமது மாணவர்களைத் தயார் செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு செய்வதன் மூலம் இன்றைய அவசரத் தேவையாக உள்ள சிங்கள மொழி மூல அழைப்புப் பணியாளர்களை உருவாக்க முடியும். இத்தேவையைக் கவனத்திற் கொண்டு இலங்கை ஜமாஅதே இஸ்லாமி, திஹாரியில் 'தன்வீர் அகடமி' என்ற பெயரில் கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து மிகச் சிறப்பான முறையில் முன்னெடுத்து வருவது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

### 4.0 பரிந்துரைகளும் ஆலோசனைகளும்

இலங்கையில் செயற்படும் ஒவ்வொரு த..வா அமைப்பும் வெவ்வேறு துறைகளில் சிறப்புத் தேர்ச்சியின் அடிப்படையில் செயற்படுகின்றன. சில அமைப்புக்கள் பாமர மக்களிடையே தமது த..வா பணியை மேற்கொள்ள, சில அமைப்புக்கள் படித்த உயர் வகுப்பினருக்கு ஏற்ற வகையில் த..வாவை மேற்கொள்கின்றன. ஒரே நாட்டில் த..வாவுக்கென பல இயக்கங்கள் இருப்பதில் தவறில்லை. சகலரையும் ஒரே இயக்கத்தில் ஒன்று சேர்ப்பதும் சாத்திய மில்லை. ஒவ்வோர் இயக்கமும் வாழ்வின் ஒவ்வொரு துறையில் ஈடுபாடு காட்டலாம். ஆனால், பரஸ்பரம் மோதிக் கொள்வதற்கும், பிரிவினையை வளர்த்துக் கொள்வதற்கும் அவை காரணமாக அமைந்து விடக் கூடாது. ஒவ்வோர் இயக்கத்தினதும் போக்குகள், செயற்றிட்டங்கள் வித்தியாசப்பட்ட போதிலும், அவை அனைத்தும் உலகில் 'இ..லாஉ கலிமதில்லாஹ்' (அல்லாஹ்வின் கலிமாவை மேலோங்கச் செய்தல்) என்ற உயர் நோக்க த்தின் அடிப்படையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனினும், அவற்றுக்கி டையில் கூட்டுறவும், பரஸ்பர ஒத்துழைப்பும் நிலவ வேண்டியது அவசிய மாகும்.

இலங்கையில் செயற்படும் த..வா அமைப்பு க்களுக்கிடையில் மற்ற அமைப்பைவிட தாமே சிறந்தவர்கள்; இந்நாட்டில் தம்முடைய த..வா அமைப்பு மாத்திரமே த..வாவை மேற்கொள்ள வேண்டும் என்ற பிழையான எண்ணம் இருப்பதாகத் தோன்றுகிறது. புரிந்துணர்வின மையால் தப்பபிப்பிராயங்களும், பகைமையும், வெறுப்பும் வளர்ந்து அதுவே பூதாகரமான ஒரு பிரச்சினையாகவும் மாறி வருகின்றது. இதனால், ஒன்றுபட்டு செயற்பட வேண்டியவ ர்களின் சக்தி சிதறடிக்கப்படு கின்றது. எனவே, ஒவ்வோர் அமைப்பும் நாம் அனைவரும் இஸ்லாத்தைத்தான் வளர்க்கின்றோம்; இஸ்லாமியக் கடமையொன்றையே நிறைவேற் றுகின்றோம் என்ற புரிந்துணர்வோடு செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படு வதன் மூலம் கருத்து வேற்றுமைகளையும், பகைமையையும் இல்லாமற் செய்வதற்கெனச் செலவிடும் காலத்தை மீதப்படுத்தி, அதனை த..வாவில் செலவிட முடியும்.

இஸ்லாமிய அழைப்பாளர்கள், இயக்கங்கள் அனைத்தும் இஸ்லாத்தின் பக்கமே மக்களை அழைக்க வேண்டும். இயக்கத்திற்கான அழைப்பு இரண்டாந்தரமாகவே கருதப்பட வேண்டும். ஏனெனில், இயக்கங்களை விட இஸ்லாம் மிகப் பரந்ததாகவே இருக்கிறது. இயக்கம் இஸ்லாத்துக்குட்பட்டதாக இருக்க முடியுமே தவிர, இஸ்லாம் இயக்கத்து க்குட்பட்டதாக ஒரு போதும் இருக்க முடியாது. இஸ்லாத்திற்கான அழைப்பைவிட இயக்கத்திற் கான அழைப்பு முந்திவிடும் போது எல்லோ ரும் அதை ஜீரணிப்பவர்களாக இருந்துவிட மாட்டார்கள்.

முஸ்லிம்களின் சமூக, அரசியல், பொருளா தார, கல்வி அபிவிருத்தி விடயங்களில் இஸ்லாமிய இயக்கங்கள், நிறுவனங்கள் என்பன தனித்து செயற்படாமல், ஒன்றுபட்டு இயங்குமாயின் இயக்கங்களுக் கிடையிலான கருத்து வேறுபாடுகள், மனக் கசப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவதோடு, கூட்டுப் பலமும் அதிகரிக்கும். அத்துடன், முஸ்லிம்களின் சமூகப் பிளவுக்கு இயக்கங்கள்தான் காரணம் என்ற விமர்சனத்தையும் குறைக்க முடியும்.

### 5.0 முடிவுரை

இலங்கை முஸ்லிம்களிடையே ஜமாஅதே இஸ்லாமி, தப்லீக் ஜமாஅத், தௌஹீத் ஜமாஅத் போன்ற அமைப்புக்கள் உத்தியோக பூர்வமாக அழைப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் முஸ்லிம் அல்லாதவர்களையே இஸ்லாத்தில் இணையுமாறு அழைத்தனர். சிலை வணக்கத்தை விட்டு விட்டு, ஏகனான அல்லாஹ்வை ஈமான் கொள்ளுமாறு வேண்டினர். எனினும், இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் அல்லாதவர்களை இஸ்லாத்துக்கு அழைக்கும் முன்னர், அதனைத் தவறாகப் புரிந்தவர்களுக்கு விளக்குவது அவசியமானதாகும்.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியானது படித்த வர்க்கத்தினரை மாத்திரம் கவனத்திற் கொண்டு தனது பிரசாரப் பணிகளை முன்னெடுக்கிறது என்பதும் பாமர மக்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் தங்களது நிகழ்ச்சி நிரலை அவர்கள் அமைத்துக் கொள்வதில்லை என்பதும் பரவலாக அவர்கள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களாகும். அத்துடன் இளைஞர்களையும் மத்திய தர வகுக்கத்தினரையும் கவர்ந்தது போன்று சமூகத்திலுள்ள ஏனைய அங்கத்தவர்களைக் கவரத் தவறியமையும் ஒரு குறைபாடாகவே சுட்டிக் காட்டப்படுகிறது. முழு மனித சமூகத்துக்கும் இஸ்லாத்தின் சரியான தூது போய்ச் சேர வேண்டும் என்பதே இஸ்லாமிய அழைப்புப் பணியின் முழுமையான இலக்காகும். இதில் முஸ்லிம் சமூகம் முதன்மை பெறுகிறது. இதனாலேயே இவ்வாய்வுக்குட்பட்ட இலங்கை ஜமாஅதே இஸ்லாமி உட்பட ஏனைய த∴வா அமைப்புக்களும் இலங்கையில் முஸ்லிம்களிடம் சமய, சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்தும் பணிக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுகின்றன எனலாம்.

### உசாத்துணை நூல்கள்


1. சுஹைப், ஏ.எல்.எம்., மன்சூர், எஸ்.எம்., (1976), ஜமாஅதே இஸ்லாமி . ஓர் அறிமுகம். கொழும்பு: இலங்கை ஜமாஅதே இஸ்லாமி.

2. மன்சூர், எஸ்.எம்., (1988), இஸ்லாத்தின் பார்வையில் யார் குழப்பவாதி?. (மூன்றாம் பதிப்பு), மாத்தளை: அல்ஹிக்மா பப்ளிஷர்ஸ்.

3. மூஸா, எஸ்.எம்., (2000), இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்கள் -ஒரு வெட்டுமுகம். மருதமுனை: அல் மனார் வெளியீட்டுப் பணியகம்.

4. மௌதூதி (ரஹ்), மௌலானா, (1996), முஸ்லிமின் அடிப்படைக் கடமை. தமிழ் நாடு: ஜமாஅதே இஸ்லாமி.

5. றஹீம், ஜீ.அப்துல், (2007), (மொ.பெ), ஜமாஅதே இஸ்லாமி ஹிந்த். சென்னை: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.

6.ஷிஹாப் (பதிப்பாசிரியர்), (1987), ஜமாஅதே இஸ்லாமி அறிமுகம், குற்றச்சாட்டுக்கள், பதில்கள். சென்னை: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.

7. ஹுஸைன், ஏ.ஜ∴பர், (2010), இலங்கை முஸ்லிம்களிடையேயான சமய, சமூக சீர்திருத்தப் பணிகள் : சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலம் பற்றிய விசேட ஆய்வு. பதிப்பிக்கப்படாத முதுதத்துவமாணி ஆய்வேடு, பேராதனைப் பல்கலைக்கழகம்.

8. Nuhman, M.A., (2007), Sri Lankan Muslims- Ethnic Identity within Cultural Diversity. Colombo: International Centre for Ethnic Studies.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்டத்தில் விருத்தியடைந்து வரும் சுற்றுலாக் கைத்தொழில் : பாசிக்குடா சுற்றுலா மையம் ஒரு சிறப்பு நோக்கு

ம.வர்ணகுலசிங்கம்

***கட்டுரைச் சுருக்கம்***

*உலகில் காணப்படும் மிக முக்கிய சுற்றுலாமையங்களில் இலங்கையும் ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலா மையமாக விளங்கிவருகின்றது. 1983 இல் இலங்கையில் உருவாகிய இனக்கலவரத்தினைத் தொடர்ந்து உருவாகிய தொடற்சியான இன மோதல்கள் போன்ற காரணிகளால் இலங்கையின் சுற்றுலாத்துறை கணிசமானளவு வீழ்ச்சி கண்டது. குறிப்பாக கிழக்கு மற்றும் வட பிராந்தியங்களில் ஏற்பட்ட பாதுகாப்பு நிலைமை காரணமாக பல உல்லாசப் பயண நிறுவனங்கள் மூடப்பட்டு சுற்றுலாத்துறையினால் கிடைத்த பெருமளவிலான அன்னியச் செலாவணி வீழ்ச்சி அடைந்ததுடன் தொழிலை இழக்கும் நிலைக்கும் பலர் தள்ளப்பட்டனர். வீழ்ச்சியடைந்த இலங்கையின் சுற்றுலாத்துறையினை விரைவாக விருத்தி செய்யும் நோக்கில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 2011ல் தேசிய சுற்றுலா உபாயமொன்றினை மேற்கொண்டு 2016 வரை சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான அனைத்து அம்சங்களையும் தெளிவாக விளக்கி ஒருங்கிணைந்த முயற்சிகளையும் மேற்கொண்டு இலங்கையை மிகச் சிறந்த சுற்றுலா நாடுகளில் ஒன்றாக உருவாக்குவதற்கு புறம்பாக ஆண்டிற்கு 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை கவர்தல், 2016ல் US$ 2.75 பில்லியன் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை உழைத்தல் மற்றும் நேரடி மறைமுக வேலை வாய்ப்புக்களை 500,000 ற்கு உயர்த்தல் என்பவற்றை நோக்கமாக கொண்டு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாசிக்குடா சுற்றுலாமையமும் சுற்றுலாப்பயணிகளைக் கவரத்தக்க அனைத்து அம்சங்களையும் கொண்டுகாணப்படுவதனால் இம் மையமும் வேகமாக விருத்தியடைந்து வருகின்றது. ஆயினும் கல்குடா பாசிக்குடாவில் காலாகாலமாக மீன்பிடித்தொழில் மூலமாக தமது வாழ்வாதாரத்தினை தக்கவைத்து வந்த மக்களது எதிர்பார்ப்பினையும் நம்பிக்கையையும் விருத்தியடைந்து வரும் பாசிக்குடா சுற்றுலாமையத்தினை பூர்த்தி செய்ய முடிந்துள்ளதா? பாசிக்குடாவிற்கு வரும் உல்லாசப்பயணிகளது எதிர்பார்ப்பும் தேவைகளும் முறையே பூர்த்தி செய்யப்படுகின்றதா? போன்ற ஆய்வு வினாக்களுடன் பாசிக்குடாவில் காணப்படும் உல்லாசப்பயணிகள் விடுதிகள், உல்லாசப் பயணிகள், வாழைச்சேனை பிரதேச சபை, உல்லாச பயணச் சபை என்பவற்றில் இருந்து பெறப்பட்ட தகவல்களையும் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட கள விஜயத்தின் போது பெறப்பட்ட அவதானிக்கப்பட்ட விடயங்களையும் துணையாகக் கொண்டு பெறப்பட்ட முடிவுகளையும் பரிந்துரைகளையும் இவ் ஆய்வுக்கட்டுரை விளக்க முனைகின்றது.*

***முதன்மைச் சொற்பதங்கள்** : உல்லாசப் பயணம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல், கடற்கரை*

## 1.0 அறிமுகம்

கவர்ச்சிகரமான ஒரு சுற்றுலாமையமாக இலங்கை விளங்குகின்றது. மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வந்த இலங்கையின் தொழில்துறையில் சுற்றுலாத்துறை மிக முக்கியமானது. 1983 இனக்கலவரம், மத்திய வங்கி குண்டு வெடிப்பு (1996) தொடற்சியான இன மோதல்கள் போன்ற காரணிகளால் இலங்கையின் சுற்றுலாத்துறை கணிசமானளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ச்சி கண்டது. இலங்கையின் சேவைகள் துறையின் வருமானத்தில் சுற்றுலாத்துறை 1980 களில் 36 சதவீதமாக இருந்தது. இது 1960 களில் 3 சதவீதமாகவே இருந்தது. அவ்வாறே இலங்கை முழுவதும் காணப்பட்ட சுற்றுலாப் பயண நிறுவனங்களின் எண்ணிக்கை 1983களில் 143 ஆக இருந்தது. கிழக்கு மற்றும் வட பிராந்தியங்களில் ஏற்பட்ட பாதுகாப்பு நிலைமை காரணமாக பல உல்லாசப் பயண நிறுவனங்கள் மூடப்பட்ட தால் இந்த எண்ணிக்கை 118 ஆக வீழ்ச்சி அடைந்தது. இதனால் சுற்றுலாத்துறையினால் கிடைத்த பெருமளவிலான அன்னியச் செலாவணி வீழ்ச்சி அடைந்ததுடன் தொழிலை இழக்கும் நிலைக்கும் பலர் தள்ளப்பட்டனர். (இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2012)

இலங்கையை பொறுத்தவரை சுற்றுலாத்துறை யானது அண்மைக்காலங்களில் வேகமாக வளர்ந்து வரும் ஒரு துறையாக உள்ளது. இதற்கமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 2011ல் தேசிய சுற்றுலா உபாயமொ ன்றினை மேற்கொண்டு 2016 வரை சுற்றுலா த்துறை அபிவிருத்தி தொடர்பான அனைத்து அம்சங்களையும் தெளிவாக விளக்கியுள்ளது. அரசாங்கமானது சுற்றுலாக் கைத்தொழிலின் மீள் எழுச்சியையும் செழிப்பையும் வலுப்ப டுத்தும் நோக்கில் ஒருங்கிணைந்த முயற்சி களை மேற்கொண்டுள்ளது. சுற்றுலா த்துறையின் குறிக்கோளானது இலங்கையை மிகச் சிறந்த சுற்றுலா நாடுகளில் ஒன்றாக உருவாக்குவதற்கு புறம்பாக ஆண்டிற்கு 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை கவர்தல், 2016ல் US$ 2.75 பில்லியன் கொண்ட வெளி நாட்டுச் செலாவணி வருவாய்களை உழைத் தல் மற்றும் நேரடி மறைமுக வேலை வாய்ப்புக்களை 500,000 ற்கு உயர்த்தல் என்பவற்றை கொண்டுள்ளது. குறிப்பாக யுத்த சூழல் முடிவடைந்ததைத் தொடர்ந்து நாட்டி னை அபிவிருத்தி பாதைக்கு கொண்டு செல்வ தற்கும் நாட்டை கட்டியெழுப்புவதற்கும் தேவையான அதிகளவான அந்நிய செலாவ ணியை ஈட்டித் தரும் பிரதான உபாயமாக இன்று சுற்றுலாத்துறை அரசினால் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாசிக்குடா சுற்றுலாமையமும் வேகமாக விருத்தியடைந்து வருகின்றது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் கரையோரப்பிரதேசம் 24 சதவீதத்தைக் கொண்டுள்ளது. மொத்த சனத்தொகையிலும் சுமார் 34 சதவீதமானோர் கரையோரப் பிரதேசங்களில் வாழ்கின்றனர். (இலங்கை குடித்தொகை புள்ளிவிபரக் கையேடு - 2010) இலங்கையின் கடற்கரையோ ரங்களில் காணப்படும் இலங்கையின் கலாசாரத் தன்மைகள், சூரிய வெப்பம், சுவாத்தியமான மணற்பரப்பு, இயற்கைத் தாவரம், வனவிலங்குகள் என்பன உல்லாசப் பயணிகளை மிகவும் கவரும் அம்சங்களாகக் காணப்படுகின்றன.

இந்த ஆய்வுக்கட்டுரையானது சர்வதேச ரீதியக பிரபலயம் அடைந்துள்ள பாசிக்குடா சுற்றுலாமைத்தின் வரலாற்று பின்னணியினை வெளிக்கொணர்வதுடன் இம் மையம் யுத்தகாலத்திற்கு முன்னர், யுத்தகாலம், யுத்தத்திற்கு பின்னரான காலங்களில் எவ்வாறான தாக்கங்களையும் சவால்களையும் எதிர்கொண்டுள்ளது என்பதனையும் சுட்டிக் காட்டுவதாய் அமைகின்றது. கல்குடாக் கிராமத்தில் அமைந்துள்ள பாசிக்குடா கடற்கரைப்பகுதி சுற்றுலா ரீதியாக விருத்தியடையத் தொடங்கியதும் இப்பிரதே சத்தில் பாரம்பரியமாக மீன்பிடியில் ஈடுபட்டு வந்த மீனவக்குடும்பங்கள் பொருளாதார ரீதியாக எதிர்கொண்ட சவால்கள் தொடர் பாகவும் இவ் ஆய்வு கவனம் செலுத்துகின்றது. இந்த வகையில் 1. பாசிக்குடா சுற்றுலாமை யத்தின் விருத்தியி னால் கல்குடா கிராமத்தி னையும் அதனை அண்டியும் வாழும் மக்கள் அடைந்துள்ள பலாபலன்கள் என்ன? 2. எவ்வாறான காரணிகள் பாசிக்குடா சுற்றுலா மையத்திற்கு வருகைதரும் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வளங்குவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கு தடையாக செயற்படுகின்றன? 3. சுற்றுலாப்பயணிகளின் அதிகரித்த வருகையினால் சுற்றுச் சூழலுக்கு எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன? போன்றவை இவ் ஆய்வின் முக்கிய வினாக்களாக காணப்படுகின்றது. இவ் வினாக்களுக்கு விடைகாண்பதாகவே இவ் ஆய்வின் நோக்கங்களும் அமைந்து காணப்படுகின்றன.

## 2.0 பாசிக்குடா சுற்றுலா மையம்

மட்டக்களப்பு மாவட்டமானது கரையோர மாவட்டமாகக் காணப்படுவதனால் நீண்ட கடற்கரையுடன் கூடிய இயற்கைச் சூழலைக் கொண்டு காணப்படுகின்றது. இம் மாவட்டத்தின் கரையோரப்பிரதேசங்களிலும் உள்நாட்டு ஏரிப்பிரதேசங்களிலும் யுத்தத்தினை அடுத்த காலப்பகுதியில் இருந்து சுற்றுலாக் கைத்தொழில்கள் மிக வேகமாக வளற்சியடைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் பல மையங்களில் பற்பல உல்லாச பயணிகளுக்கான கவர்ச்சிகரமான விடுதிகளும் ஏனைய வசதி வாய்ப்புக்களும் உருவாக்கப் பட்டும் உள்ளன. ஆயினும் உலக உல்லாசப்பயணிகளாலும், உள்நாட்டு மக்களாலும் கவரப்பட்ட இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பாசிக்குடா சுற்றுலா மையம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது.. பாசிக்குடா எனும் சொல் சர்வதேச ரீதியாக பிரபல்யம் வாய்ந்ததாக காணப்படுவதற்கு இப்பகுதியில் காணப்படும் மிகவும் வாய்ப்பான கடல் சார்ந்த பௌதிகச் சூழல்களே காரணமாய் அமைந்தது. மட்டக்களப்பு நகரில் இருந்து வடக்காக சுமார் 32 கிலோ மீற்றர் தூரத்தில் அல்லது வாழைச்சேனையில் இருந்து கிழக்காக 4.5 கிலோ மீற்றர் தூரத்தில் கடற்கரையை அண்டியதாய் மகிழ்ச்சியளிக்கக் கூடிய இயற்கைச் சூழலுடன் கூடிய ஒரு கிராமமே பாசிக்குடா. பாசிக்குடா பகுதியில் அமைந்துள்ள கடல், நிலம் நோக்கி உள்வாங்கி ஒரு ஒதுக்குப் புறமான குடாவாகக் காணப்படுவதால் இப்பகுதி கடலின் வளமையான அலைத்தாக்க த்திற்குட்படாமலும், அதிக ஆழம் அற்றதாகவும் ஆபத்தற்றதாகவும் காணப்படு கின்றமையாலும் உல்லாசப் பயணிகளுக்கு குறிப்பாக சிறு குழந்தைகள் கூட அச்சமின்றி கடலில் நீராடுவதற்கும் ஏனைய பொழுது போக்கு நடவடிக்கைகளுக்கும் ஏற்ற ஒரு இடமாகக் பாசிக்குடா கடற்கரைப் பகுதி காணப்படுகின்றது.

1960க்கு முன் உள்நாட்டு மக்களால் ஒரு உல்லாச இடமாகக் கருதப்பட்டு வந்த பாசிக்குடாப் பகுதி இலங்கையின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி காரணமாக வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்த்தது. மன, உடல் சுவாத்தியங்களை ஆவலோடு எதிர்பார்த்து வந்த உள்நாட்டு, வெளிநாட்டு மக்களை பாசிக்குடாவின் இயற்கையான பௌதிகச் சூழலும், இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் அன்பான வரவேற்பும் அவர்களின் பண்பாடும் மிகவும் ஈர்த்ததன் விளைவாக காலக்கிரமத்தில் உலகப்படத்தில் இலங்கை யை அடையாளம் காட்டும் அம்சங்களில் ஒன்றாக பாசிக்குடா திகழ்ந்தது. உள்ளூர் மக்களால் அவர்களுக்கான தங்குமிட வசதிகள் மற்றும் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் அதிகரித்த உல்லாசப் பயணிகளின் வருகையால் பாசிக்குடாவில் அதிக செலவில் உல்லாசப்பயணிகளுக்கான விடுதிகளைக் கட்டுவதற்கு உள்நாட்டு முதலீட்டார்கள் முன் வந்ததன் காரணமாக இம்பீரியல் ஓசானிக், சன் அன் பன், போன்ற 5 நட்சத்திர விடுதிகள் பாசிக்குடாவில் 1976, 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்டன. அதனைத் தொடர்ந்து சன்ரன் போன்ற சிறிய அளவிலான பல உல்லாசப் பயணிகள் விடுதிகள் பாசிக்குடாவின் கடற்கரைப் பகுதியில் ஆங்காங்கே அமைக்கப்பட்டு காலக்கிரமத்தில் கடற்கரையில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரம் வரையிலான உள்ளூரிலும் தங்குமிடவசதிகள் உள்ளூர் மக்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறப்பட்ட இரு ஐந்து நட்சத்திர உல்லாச விடுதிகளும் மட்டக்களப்பு மாவட்டம் சாராத பிறமாவட்ட முதலீட்டாளர்களாலேயே கட்டப்பட்டன. இவ் இரு விடுதிகளிலும் 150 (80 + 70) ஆடம்பர அறைகள் காணப்பட்டன. சுமார் 360 பேருக்கு நேரடியான தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டது. இவற்றைத் தவிர நடுத்தர அளவிலான உல்லாச விடுதிகள் பல இயங்கின. இவற்றின் மூலமாக 300ற்கு மேற்பட்ட இப்பிரதேச மக்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்புக் கிடைத்தது. இவற்றிற்கு மேலதிகமாக சுற்றுலாத் துறையோடு இணைந்த ஏனைய வர்த்தக நடவடிக்கைகள் மூலம் மறைமுகமாக சுமார் 1600 பேருக்கு மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிருந்தனர். (கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல் - 2005)

தனியே மீன்பிடியில் மட்டும் தங்கியிருந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தில் சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பு காரணமாக வருமான ரீதியாக வியக்கத்தக்க அளவில் மாற்றங்கள் ஏற்பட்டது. இறால், நண்டு, சங்கு, சிப்பி, முருகைக்கற்கள் போன்ற கடல் வாழ் உயிரினங்களுக்கு என்றும் இல்லாதளவிற்கு மதிப்பு உண்டாகியது. உள்ளூர் மக்கள் தங்கள் குடியிருப்பு இடங்களில் தங்குமிட வசதிகளை அளித்தும், பப்பாளி, வாழை, மா அன்னாசி போன்ற பழவகைகளை உற்பத்தி செய்தும் அதன் மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. தாய் மொழி மட்டும் தெரிந்திருந்த பாமர மக்கள் கூட சுற்றுலாப் பயணிகளுடன் பழகியதால் சிங்களம், ஆங்கிலம், பிராஞ்சு, ஜேர்மன் மொழிகளை சரளமாகப் பேசக்கூடிய ஆற்றலைப் பெற்றுக் கொண்டனர். மொத்தத்தில் தேசிய பொருளாதார விருத்திக்கு உல்லாசப் பயணத்துறை வளங்கிய சிறப்பான பங்களிப்புக்கு எந்த விதத்திலும் குறையாத அளவில் கல்குடா, பாசிக்குடா வாழ் மக்களும் தங்களது வாழ்க்கைத்தரத்தை ஒரளவுக்கு சுற்றுலாக் கைத்தொழில் மூலம் வளர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. ஆயினும் 1983இல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் இலங்கையின் சுற்றுலாத்துறையைப் பாதித்த முதல் காரணியாக அமைந்தது. இனக்கலவரம் முடிவடைந்து வெளிநாட்டுப் பயணிகளின் வருகை சற்று அதிகரிக்கத் தொடங்கிய தாயினும், தமிழ்ப் பகுதியான பாசிக்குடாவிற்கு வருவதற்கு உள்நாட்டு பெரும்பான்மையின மக்கள் அதிகம் அக்கறை காட்டவில்லை. பாதுகாப்புக் காரணங்கள் சர்வதேச பயணிகளினதும் வருகையை கட்டுப்படுத் தியது. கலவரம் காரணமாக பெரும்பான்மை இன மக்கள் பாசிக்குடாவில் அமைந்திருந்த விடுதிகளில் தொடர்ந்து சேவை செய்வதிலோ, புதிய முதலீடுகளை மேற்கொள்வதிலோ அக்கறை காட்டவில்லை.

இதனைத் தொடர்ந்து 1987 களில் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலை காரணமாக பாசிக்குடாவில் அமைக்கப்பட்டிருந்த சகல பெரும்பான்மை இனத்தவருக்குச் சொந்த மான ஐந்து நட்சத்திர உல்லாசவிடுதிகளும் ஏனைய விடுதிகளும் சேதமாக்கப்பட்டன. இந்த நடவடிக்கை மட்டுமன்றி பாதுகாப்பற்ற பிரதேசமாக வடக்கு கிழக்குப் பகுதிகள் பிரகடனப்படுத்தப்பட்டதால் வெளிநாட்டு உள்நாட்டு உல்லாசப் பிரயாணகளின் வருகை முற்றாக தடைப்பட்டது. இதனால் பாசிக்குடாவில் இத் தொழில்துறையை நம்பியிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் பெரும் பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்நோக்கினர். இதனால் ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் ஏனைய விடுதிகளிலும் தொழிற்பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கானவர்கள், இடம்பெயர்ந்து, புலம் பெயர்ந்து தொழில் தேடிச் செல்ல வேண்டி ஏற்பட்டது. பாசிக்குடாப் பிரதேசத்தில் இருந்த பலருக்கு தகைமைகளுக்கேற்ப உல்லாச விடுதிகளில் தொழில் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டன. இவ்வாறானதொரு சந்தர்ப்பம் இப்பகுதி மக்களுக்கு கிடைத்தமையினால் பல இளைஞர் யுவதிகள் உல்லாச பயணத்துறை தொடர்பில் மெச்சத்தகு அனுபவங்களையும் பயிற்சிகளை யும் பெறமுடிந்தது. உல்லாச பயண ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திர விடுதிகளில் Cheief Chef போன்ற அதிக வேதனங்களைப் பெறக்கூடின யதான முக்கிய தொழைல்க ளையும் கல்குடாப் பிரதேச இளைஞர்கள் பெற்றிருந் தனர். துரதிஸ்ட வசமாக ஏற்பட்ட சமூக முரண்பாடுகள், யுத்தம் போன்றவை காரணமாக உல்லாச பயணத்துறை பாதிப்படைந்ததுடன் இதனை நம்பியிருந்த மக்களும் பாதிக்கப்பட்டனர்.

கடந்த 26.12.2004இல் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் பாசிக்குடா கிராமம் முற்றாக அழிக்கப்பட்டது. கல்குடாவில் கடற்கரையை அண்டிய கிராமங்களான பாசிக்குடா, கல்குடா, பட்டியடிச்சேனை ஆகிய கிராமங்களில் மட்டும் சுமார் 304 பேர் உயிரிழந்தனர். ஒட்டு மொத்த கிராம மக்களுமே தமது வாழ்வாதார சொத்துக் களை இழந்தனர். உயிரிழந்தவர்களில் ஒரே பாடசாலையில் (கல்குடா நாமகள் வித்தியாலயம்) கற்கும் 65 மாணவச் சிறுவர்களும் அடங்குவர். யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் பாசிக்குடா சுற்றுலாமைய த்தினை விருத்தி செய்வதில் அரசு முன்னுரிமை அடிப்படையில் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. இதன் காரணமாக தற்போது பாசிக்குடா சுற்றுலாமையம் விரைவான விருத்தி கண்டு வருகின்றது. ஆயினும் விருத்தியடைந்து வரும் இச் சுற்றுலாக் கைத்தொழில் மூலமாக உல்லாசப் பயணிகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பான பாதிப்புக்கள் தொடர்பிலேயே இந்த ஆய்வு கவனம் செலுத்தப்படுகின்றது.

### 3.0 யுத்தத்தின் பின்னரான உல்லாச பயண விருத்தி

யுத்தத்தின் பின்னர் பாசிக்குடாப் பிரதேசத்தில் பல உல்லாசப்பயண விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பாரிய அளவிலானதும் அதிக முதலீட்டுடன் கூடியதுமான விடுதிகள் அனைத்தும் பெரும்பான்மையின் முதலீட் டாளர்களினாலேயே மேற்கொள்ளப் பட்டு ள்ளன. இவற்றில் ஒரு ஐந்து நட்சத்திர விடுதியும் 5 நான்கு நட்சத்திர விடுதியும் 3 மூன்று நட்சத்திர விடுதியும் மேலும் 4 பாரிய விடுதிகளும் காணப்படுகின்றன. உள்ளூர் மக்களாலும் 32 சிறிய அளவிலான விடுதிகள் நடாத்தப் படுகின்றன. கல்குடாவில் பல தசாப்தங்களாக இயங்கி வந்த கல்குடா அரச வாடிவீடு (Kalkudah Rest House) யுத்தகா லத்தில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்க ப்பட்டு இராணுவ முகாமாக்கப்பட்டது. சுனாமியின் போது இவ்விடுதி முற்றாக அழிக்கப்பட்டது. வாழைச்சேனை பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்டதான இவ் விடுதியினை யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் இராணுவத்தினர் கைப்பற்றி தனியானதொரு உல்லாசப்பயண விடுதியி னை நடாத்தி வருகின்றனர்.

### 4.0 தொழில் வாய்ப்புக்கள்

பாசிக்குடா சுற்றலா மையம் விருத்தி பெறுவதற்கு முன்னர் கல்குடா மற்றும் பாசிக்குடா மக்களின் ஜிவனோபாயத் தொழிலாக மீன்பிடித்தொழிலே காணப் பட்டது. பொதுவாக கரையோர மீன்பிடி சிறப்புப் பெற்றிருந்தது. ஆழமற்ற கரையோரங்களில் கம்புகளைப்பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மீன்படி முறை இங்கு சிறப்புப் பெற்றிருந்தது. குறைவான முதலீட்டுடன் போதியளவு வருமானத்தினையும் பெறக்கூடியதான தொழிலாக இது காணப்பட்டது. 1800 களில் கல்குடாவில் ஒரு துறைமுகம் (ஜெற்றி) காணப்பட்டதாகவும் அத்துறைமுகத்தினூடாக இந்தியாவிற்கு கொப்பறா ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் வரலாற்றின் மூலமாக உறுதிப்படுத்த முடிகின்றது. (தகவல்: பாசிக்குடா சிறு உல்லாச பயணிகள் உரிமையாளர் சங்கம், கல்குடா, 2017) அத் துறைமுகம் அமையப்பெ ற்றிருந்ததற்கான ஆதாரங்களாக பாரியதொரு களஞ்சிய அறை உள்ளிட்ட கப்பல்கள் வந்து தரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதற்கேதுவாக கடலினுள் அமைக்கப்பட் டிருந்த தூண்கள் 1980 கள் வரைக்கும் இருந்தன. யுத்தகாலத்தில் இவை அழிந்து விட்டன.

**கல்குடாவில் காணப்பட்ட ஜெற்றி -1901**



யுத்தத்தின் பின்னர் சுற்றுலாத் தொழில் விருத்தி அடையத் தொடங்கியதும் பாசிக்குடா மற்றும் கல்குடா பிரதேச கரையோர நிலங்கள் உல்லாச பயண நோக்கங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டு விடுதிகள் உருவாகத் தொடங்கியதும் முதலில் பாதிக்கப்பட்டவர்கள் இம் மீனவர்கள்தான். மீன்பிடிப்பதற்கு மாத்திரமல்ல கரையோரங்களில் நடமாடுவதற்கும் தடைகள் விதிக்கப்பட்டன. இதனால் இம் மீவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியதுடன் இம் மக்களில் பலர் வேறு கூலித் தொழில்களை நாடிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது. 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சி அடைந்துள்ள போதிலும் தொழில் வாய்ப்பு விடயத்தில் இப்பிரதேச மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு நன்மை கிடைக்கவில்லை. பாரிய விடுதிகளாக கருதப்படும் விடுதிகளில் 5 சத வீதத்திற்கும் குறைந்த அளவிலேயே உள்ளூர் மக்களுக்கு குறைந்த தர வேலைவாய்ப்பு வளங்கப்பட்டுள்ளது. பாசிக்குடா உல்லாச பயண மையம் விருத்தி பெற்றால் தமது வாழ்விலும் பொருளாதார ரீதியான மாற்றங்கள் வரும் என நம்பியிருந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்துள்ளது. பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் தமது தேவைகளுக்கேற்ப கிடைக்காமையினாலேயே வெளியிடங்களில் இருந்து தொழிலாளர்களை வரவழைக்க வேண்டியுள்ளது என்ற விடுதி உரிமையாளர்களின் கருத்தினையும் புறக்கணிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. ஆயினும் சிறிய அளவில் உள்ளூர் மக்களால் நடாத்தப்படும் விடுதிகளில் சுமார் 120 பேர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். சுற்றுலாவிடுதிகளுக்கு தேவையான உணவுப் பொருட்கள், பழவகைகள், வாகன வசதிகளை கூட பாரிய விடுதிகள் கொழும்பில் இருந்தே பெற்றுக்கொள்வதனால் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் உள்ளூர்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகவும் பொதுநல வசதிகளை மேற்கொள்வதற்காகவும் இடத்தினை குத்தகைக்கு எடுக்கப்பட்டவரால் 12 உள்ளூர்வாசிகள் தொழிலுக்காக அமர்த்தப்பட்டுள்ளனர். வியாபார நடவடிக் கைகளுக்காக சுமார் 12 வர்த்தக நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரம் சுற்றுலாச்சபையினால் வளங்கப்பட்டிருக்கின்றது. WUSC எனப்படும் ஒரு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் உல்லாச பயணம் தொடர்பிலான பயிற்சிகளை வளங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதுவரை 80 மாணவர்கள் இதில் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளதாகவும் தெரியவருகின்றது. (தகவல்: பாசிக்குடா சிறு உல்லாச பயணிகள் உரிமையாளர் சங்கம், கல்குடா, 2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய சுற்றுலா விடுதிகள் - 2018

| இல | விடுதியின் பெயர் | அறைகள் | தரம் |
|---|---|---|---|
| 01 | Anandaya Resort | 55 | 5* |
| 02 | Maalu Maalu | 40 | 4* |
| 03 | Amaya Beach | 125 | 4* |
| 04 | SunAqua passikudah | 34 | 4* |
| 05 | Anilana Passikudah | 45 | 4* |
| 06 | Ugabay | 38 | 4* |
| 07 | The Calm Resort | 70 | 3* |
| 08 | Sunrise Bay Jetwing | 58 | 3* |
| 09 | Amethyst Resort (Pvt Ltd) | 38 | 3* |
| 10 | Marina | 25 | - |
| 11 | Passivillaglas | 36 | - |
| 12 | Hotel passibay | 30 | - |
| 13 | Minn Gee | 36 | - |

### சிறிய சுற்றுலா விடுதிகளின் விபரம் - 2018

| | |
|---|---|
| 01 | C.Beach In |
| 02 | Jesy Restaurant |
| 03 | Abi Restaurant |
| 04 | New Restaurant |
| 05 | Nanthavanam Restaurant |
| 06 | Sun Resort Restaur ant |
| 07 | New Land |
| 08 | Abithanash Restaurant |
| 09 | Holiday Beach Restaurant |
| 10 | Sun Restaurant |
| 11 | Tharjeeyash |
| 12 | The Gobi Pasikudah |
| 13 | Vasuki Hotel |
| 14 | Shimla In |
| 15 | Marlinn Hotel |
| 16 | Nirmah Sasoow In |
| 17 | In on The Way |
| 18 | Kalkudah Hotel |
| 19 | Gnanam Hotel |
| 20 | K.J.B. Restaurant |
| 21 | Victoriya Restaurant |
| 22 | Elephent Red In |
| 23 | Kashino |
| 24 | Co-op In |
| 25 | Moni |
| 26 | Rooi In Restaurant |
| 27 | Show Exotie Restaurant |
| 28 | N.Sivaji |
| 29 | V.Sachchithananthan |
| 30 | Nanthakumar Hotel |
| 31 | Acuba Marina Beach |
| 32 | Sun In Resort |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 சுற்றுலாப் பயணிகளுக்கான பொது வசதிகள்

சுற்றுலாப் பயணிகளுக்கான பொது வசதிகளை கவனிக்கும் பொறுப்பு வாழைச் சேனை பிரதேச சபைக்குரியதாக இருக் கின்றது. பிரதேச சபை வருடாந்த மனுக்கோரல் மூலம் பாசிக்குடாக் கடற்கரைப் பகுதியினை சுத்தமாகவும் உல்லாச பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை கவனிப்பதற்காகவும் ஏலத்தின் மூலம் தெரிவு செய்யப்படுப வர்களிடம் அதற்கான பொறுப்பினை விடுகின்றது. 2017ம் வருடத்திற்கான ஏலத்தின் பெறுமதி 26 லட்சமாக காணப்பட்டுள்ளது. பிரயாணிக ளுக்கான குடி நீர் வினியோகம், மலசல கூடவசதி, கடலில் நீராடிய பின் நன்நீரில் குளிக்கும் வசதி, உடை மாற்றுவதற்கான வசதி, பிரயாணிகள் இளைப்பாறும் வசதி, வாகன தரிப்பிட வசதி, சுற்றுச்சூழலை சுத்தமாக பேணும் கடமை போன்றவை இதில் உள்ளடக்கப்படுகின்றன. இது தவிர ஒவ்வொரு பாரிய சுற்றுலாவிடுதிகளிலிருந்தும் சுற்றாடலை சுத்தமாக பேணுவதற்காக தலா 25000 ரூபா அறவிடப்படுகின்றது. பாசிக்குடா விற்கு சாதாரண நாட்களில் நாளொ ன்றுக்கு 1000 தொடக்கம் 5000 பேர் வரையில் வருகை தருகின்றனர். இவர்களில் வெளிநாட்டவர்கள் 2 சத வீதத்திற்கும் குறைவாகவே காணப்படு கின்றனர். வருடத்தின் சிறப்பான நாட்களில் இந்த எண்ணிக்கை நாளொன்றுக்கு 80,000 வரைக்கும் அதிகரிப்பதாகவும் அறிய முடிந்தது. இவ்வாறு பெருந்திரளான பிரயாணிகள் வரும் போது அவர்களுக்கான பொது வசதிகள் உரிய முறையில் மேற்கொள் ளப்படுவதில்லை என்பதனை ஆய்வின் போது நேரடியாக அவதானிக்க முடிந்தது. பாசிக்குடா விற்கு வருகை தரும் பிரயாணிகளிடம் இருந்து பல்வேறு கட்டணங்களும் அறவிடப்படுகின்றன.

**பிரயாணிகளிடமிருந்து பின்வரும் கட்டனங்கள் அறவிடப்படுகின்றன**

| | கட்டன விரம் | தொகை ரூபா |
|---|---|---|
| 01 | பேருந்து தரிப்பிட வசதி | 150 |
| 02 | வேன் தரிப்பிட வசதி | 100 |
| 03 | கார் தரிப்பிட வசதி | 50 |
| 04 | முச்சக்கர வண்டி வரிப்பிட வசதி | 40 |
| 05 | முலசலகூட பாவனை (நபருக்கு) | 20 |
| 06 | உடை மற்றுவதற்கு (நபருக்கு) | 20 |
| 07 | நன்நீர்க் குளியல் (நபருக்கு) | 30 |

வாகன தரிப்பிட பற்றுச் சீட்டு





மேற் குறிப்பிட்ட அளவுகளில் கட்டணங்கள் அறவிடப்படுகின்ற போதிலும் பொது மக்களுக்கான சேவைகள் மிகக் குறைந்த அளிவிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. பொது மக்கள் பல அசௌகரியங்களை பாசிக்குடாக் கடற்கரையில் எதிர் நோக்குவதனை அவதானிக்க முடிந்தது. மலசலகூட வசதிகளைப் பொறுத்த வரையில் கடற்கரையை அண்மித்தும் வாகன தரிப்பிடத்திலுமாக இரு இடங்களில் காணப்பட்டாலும் வாகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிப்பிடத்தில் உள்ள பெண்களுக்கான மலசல கூடம் நிரம்பிய நிலையில் கழிவுகள் அகற்றப்படாமல் பூட்டிய நிலையில் உள்ளது.

**பூட்டப்பட்ட நிலையில் உள்ள பெண்களுகான கழிவறை**



இந்த நிலையால் பெண்கள் பல்வேறு அஸௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அதே சமயம் கடற்கரை சார்ந்து காணப்படும் குளியலறை மற்றும் கழிவறைகள் அனைத்தும் கதவுகள் அற்ற பாதுகாப்பற்ற நிலையில் காணப்ப டுகின்றன.

**கதவுகள் அற்ற பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் குளியலறை மற்றும் கழிவ றைகள்**







குளிப்பதற்கான நீர்வினியோகமும் சீராக இடம்பெறுவதில்லையெனவும் அறிய முடிந் தது. நீர்வினியோகம் உல்லாச பயண சபையினால் மேற்கொள்ளப்பட்டாலும் போதிய அளவில் வினியோகிக்கப்படுவ தில்லையெனவும் கூறப்பட்டது. நீர்த்தேவை யினை பூர்த்தி செய்வதற்காக தனிநபரினால் ஒரு குழாய்கிணறும் அமைக்கப்பட்டுள்ளது.

## 6.0 கடற்கரை சார்ந்த பாதுகாப்பற்ற சுற்றுச்சூழல் நிலைமை

**சேறு நிறைந்ததாகவும் குப்பைகள் நிறைந் ததாகவும் காணப்படும் பாசிகுடா சுற்றுச்சூழல்**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர்கள் விளையாடும் கடற்கரையோரம் குப்பைகள் நிறைந்ததாக காணப்படு கின்றன. வாகன தரிப்பிடங்களும் மக்கள் நடமாடும் பகுதிகளும் சேறு நிறைந்ததாகவும் குப்பைகள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

**பாசிக்குடாக் கடலில் சிறு குழந்தைகள் விளையாடும் காட்சி**



மக்கள் இளைப்பாறுவதற்காக அல்லது கடற்கரையை இரசிப்பதற்காக கட்டப்பட்ட கொட்டகையில் உள்ள இருக்கைகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. மழை நேரங்களில் இக் கொட்டகைக்குள் இருப்பதும் சிரமமானதாகவே காணப்படும் இந்த கொட்டகைக்கு செல்லும் சிறய நீரோடையை பாதுகாப்பற்ற மரத்தின் மீது சென்று கடக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்த நீரோடையில் முதலைகள் காணப்படு வதாக விளம்பரம் செய்யப்பட்டு ள்ள நிலையில் ஆபத்தான ஒரு கடவை வசதியே செய்து கொடுக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் விளையா டுவதற்கான வசதி செய்து கொடுக்கப்பட் டுள்ளதாயினும் அதனை பாதுகாப்பான தாகவும் சுத்தமாகவும் பராமரிப்பதில் அதிக கவம் எடுக்கப்பட வில்லை. சிறுவர் பூங்காவினுள் புற்கள் அதிகளவில் வளர்ந்து மாடுகள் மேற்கின்ற காட்சியையும் ஆங்கா கங்கே கட்டாக்காலி நாய்கள் திரிவதனையும் அவதானிக்க முடிகின்றது. இதனால் சிறுவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் காணப்ப டுகின்றது.

**சுற்றுலாப்பயணிகளின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட பாதுகாப்பு நிலையமும் சிறுவர் பூங்காவும்.**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் நீராடுபவர்களுக்கு ஏற்படும் ஆபத்துக்களை தவிர்ப்பதற்கான வசதிகள் காணப்படுகின்றன. அதற்காக ஒரு புதிய உயரமான கட்டிடம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் குற்றச்செயல்களைக் குறைப்பதற்கும் பாதுகாப்பிற்குமாக பொலிஸ் காவலரண் ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது. உல்லாச பயணிகள் தமக்கு வேண்டிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக உல்லாச பயண சபை கடைகளை அமைப்பதற்கு அனுமதி அளித்து ள்ளது. சுமார் 12 நிரந்தர வியாபார நிலையங்கள் காணப்படுகின்றன. இந்த நிலையங்கள் அனைத்துமே நிலத்திற்கு சீமெந்து தரையிடப்பட்டதாகவோ சுத்தம் பேணப்பட்டதாகவோ காணப்படவில்லை. உல்லாசப்பயணிகளின் நலன் கருதி கிழக்கு மாகாண சபையின் 03.11.2016 திகதிய கடிதத்தின் பிரகாரம் வாழைச்சேனை பிரதேச சபையினால் சில உட்கட்டமைப்பு வசதிகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது இலங்கை உல்லாச பயணச் சபை தனது 17.11.2016ம் திகதிய கடிதத்தின் மூலம் அவ் வேலைகளை தொடர முடியாமல் தடை செய்ததுடன் சபையே அவ் வசதிகளை செய்யவுள்ளதாக எழுத்துமூலம் பிரதேச சபைக்கு அறிவித்திருந்ததனால் பிரதேச சபை அவ்வேலைகளை தொடர்வதனை நிறுத்திக் கொண்டது. இன்று ஒரு வருடம் பூர்த்தியாகிய நிலையிலும் இலங்கை உல்லாச பயணச் சபை தான் நிறுத்திய கட்டுமான வேலைகள் தொடர்பில் அக்கறையற்று இருப்பதனையும் அவதானிக்க முடிந்தது.

## 7.0 விடுதி வசதிகள்

பாசிக்குடாவில் விடுதிவசதிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆயினும் இவ்விடு திகளில் தங்கியிருந்து செல்வதற்கான பயணிகளின் அளவு மிக்க குறைவாகவே உள்ளதாக அறிய முடிந்தது. குறிப்பாக வெளிநாட்டு உல்லாசப்பயணிகளின் வரவு குறைவாகவே காணப்படுகின்றது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் கூட சில ஐரோப்பிய நாடுகள் எமது அரசு தொடர்பில் கொண் டுள்ள அதிருப்த்தி காரணமாக தங்கள் பிரஜைகள் இலங்கைக்கு செல்வ தனை கட்டுப்படுத்துவதாகவே காணப்படு கின்றன. பாரிய விடுதிகளில் சகல வசதிக ளுடனும் கூடிய அறைகள் காணப்படுகின்ற போதிலும் வெளிநாட்டு பயணிகளின் வரவு குறைவாக காணப்படுவ தனால் சகல விடுதிகளிலும் சராசரியாக 20 சத வீதத்திற்கும் குறைவான அளவிலேயே விடுதியில் பயணிகள் தங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் பாரிய விடுதிகளில் அறைகளுக் காக அறவிடப்படும் கட்டன அளவும் இவ்வாறான விடுதிகளில் பயணிகள் குறைவாக தங்குவதற்கு அல்லது தெரிவை நிராகரிப்பதற்கு காரணமாக அமைகின்றன. ஒரு நாள் விடுதியில் தங்குவதற்கான கட்டனமாக சாதாரண நாட்களில் 25000 ரூபா முதல் 35000 ரூபா வரையில் அறவிடப்படு கின்றது. இந்த அளவு விசேட நாட்களில் 65000 ரூபா வரைக்கும் அதிகரிக்கப்படுவதாகவும் அறிய முடிந்தது. அதே சமயம் உள்ளூர் மக்களால் நடாத்தப்படும் சிறிய விடுதிகளில் நாளொன்றுக்கு தங்கியிருப்பதற்கு 2000 தொடக்கம் 3500 ரூபா வரையிலான கட்டணமே அறவிடப்படுகின்றன. இதனால் இவ் விடுதிகளில் சராசரியாக 40 சத விகிதம் அறைகள் பயன்படுத்தப்படுவதாகவும் விசேட நாட்களில் இந்த அளவு 60 சத விகிதம் வரை அதிகரிப்பதாகவும் அறிய முடிந்தது. ( தகவல்: பாசிக்குடா சிறு உல்லாச பயணிகள் உரிமையாளர் சங்கம், கல்குடா, 2017). விடுதிகள் முழுமையாக பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளன. ஆகவே பாசிக்குடா தொடர்பில் சகல தரப்பினரும் அக்கறையுடன் கவனம் செலுத்துவதன் மூலமே இம் மையத்தினை திறம்பட இயங்கச் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.0 பரிந்துரைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் நீண்ட கடற்கரையோரப்பிரதேசங்களில் பல இடங்கள் சுற்றுலா கைத்தொழிலை மேற்கொள்ளத்தக்க வாய்ப்புக்களைக் கொண்டதாக காணப்படுகின்றதாயினும் பாசிக்குடாப் பிரதேசம் மட்டுமே இதுவரை காலமும் கவனத்தில் கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் இருந்து விடுபட்டு ஏனைய வாய்ப்பான இடங்களான வாகரை, சல்லித்தீவு, புன்னைக்குடா, நாவலடி, காத்தான்குடி போன்ற கடற்கரைப்பிரதேசங்களையும் கவனத்தில் கொண்டு சூழல்சார் சுற்றுலாவினை விருத்தி செய்யக்கூடிய ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையினை வினைத்திறன் உள்ள துறையாக மாற்றி பொருளாதார ரீதியாக பல நன்மைகளை எட்ட முடியும். அத்துடன் பாசிக்குடா சுற்றுலா மையத்தினை யுத்தத்திற்கு முன்னர் இருந்த நிலைக்கு செயற்பட நடவடிக்கை எடுப்பதன் மூலமே இச் சுற்றுலா மையத்தினால் அரசும் நாடும் மக்களும் எதிர்பார்த்த நன்மையினை அடையக்கூடியதாகவிருக்கும். அதற்கு இலங்கையின் குறிப்பாக நாட்டின் வடகிழக்கு பிரதேசங்கள் எந்த ஒரு நாட்டவரும் அச்சமின்றி பயணங்களை மேற்கொள்ள க்கூடிய அரசியல் சூழ்நிலையினைக் கொண்டிருக்கின்றது என்பதனை உறுதிசெய் யக்கூடிய நடவடிக்கைகளை அரசு தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக பயங்கரவாதம் நாட்டில் எப்பகுதியிலும் இல்லை என்பதனை உறுதி செய்ய பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்கி உலக நாடுகளின் நம்பிக்கையைப் பெறவேண்டும். அத்துடன் வடகிழக்கிற்கு வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் செல்வதனை ஊக்குவிக்கத்தக்க நடவடிக்கைகளை உல்லாச பயணச்சபை மேற்கொள்ள வேண்டும். வருகை தரும் பயணிகளை பொருளாதார ரீதியாகக் கவரக்கூடிய வகையில் பாரிய விடுதிகளில் அறவிடப்படும் கட்டணத்தினை மறு பரிசீலனை செய்து குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாசிக்குடாவிற்கு வருகைதரும் பயணிகளுக்கு திருப்த்திகரமான முறையில் வசதிகளை வழங்கக் கூடிய வகையில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். குறிப்பாக மலசலகூட வசதிகள் குளியலறை வசதிகள் ஓய்வறைகள் பயணிகள் சுற்றாடலை இருந்து ரசிப்பதற்கான இடவசதிகள் சூரியக் குளியலை விரும்பும் உல்லாசப் பயணிகள் பொதுமக்களால் இடையூறின்றி அனுபவிப்பத ற்கான வசதிகள் சுகாதாரத்தினை உறுதிசெய்யத்தக்க வகையில் உணவுப்பண்ட ங்களை கொள்வனவு செய்யக்கூடிய வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறுவர் பூங்காவினை சிறுவர்கள் அச்சமின்றி பயன்படுத்தத்தக்கவகையில் பராமரிக்கப்படல் வேண்டும். அத்துடன் தொழில் வாய்ப்புக்கள் வழங்கும் சந்தர்ப்பங்களில் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டடும். குறிப்பாக WUSC நிறுவனத்தினால் நடாத்தப்படும் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வெளியேறும் நபர்களுக்கு தொழில் வாய்ப்பின் போது முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும். அத்துடன் உல்லாச பயணக் கைத்தொழிலினால் மீன்பிடித்தொழில் பாதிப்படைந்த குடும்பங்களுக்கும் அவர்களின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப மாற்று தொழில் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். சுற்றுலாவிடுதிக ளுக்கு தேவையான உணவுப் பொருட்கள், பழவகைகள், வாகன வசதிகளை உள்ளூர் மக்களிடம் இருந்து கொள்வனவு செய்வத ற்கான வாய்ப்புக்களை வழங்கவேண்டும். இதன் மூலம் பலருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள கல்குடா வாடிவீடு வாழைச்சேனை பிரதேச சபையினால் பொறுப்பேற்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு விடப்படவேண்டும். இதன் மூலம் உள்ளூர் மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுடன் பிரதேச சபைக்கும் கணிசமான அளவு வருவாயைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ளலாம். பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு இலங்கை சுற்றுலாச் சபை பிரதேச சபைக்கு அறிவித்ததற்கமைவாக உடனடி கவனம் செலுத்தி கட்டுமாண ப்பணிக ளை ஆரம்பிப்பதுடன் பாசிக்குடாக் கடற்கரை யை அழகுபடுத்தும் நடவடிக்கை யினையும் மேற்கொள்ள வேண்டும். அல்லது பிரதேச சபையிடம் அப் பொறுப்பினை மீழவும் ஒப்படைத்து பாசிக்குடா சுற்றுலா மையத்தி த்னை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலா மையமாக தொடர்ந்தும் இயங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா னால் கல்குடா வாழ் மக்களும் நாடும் பாரிய பொருளாதார ரீதியான நன்மைகளைப் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணை நூல்கள்**


Central Bank of Sri Lanka (1994) *Review of the Economy.* Department of Economic an Research, Central Bank of Sri Lanka, Colombo.

Central Bank of Sri Lanka (1998) *Economic Progress of Independent Sri Lanka.* Central Bank of Sri Lanka, Colombo.

Central Bank of Sri Lanka (2000) *Review of the Economy.* Department of Economic and Research, Central Bank of Sri Lanka, Colombo.

De Silva, D.M.P (1978) Investment in Tourist Industry in Sri Lanka. In National Science Council of Sri Lanka (ed.) *The Role of Tourism in Social and economic development in Sri Lanka.* National Science Council of Sri Lanka, Colombo, pp 31-37.

Deheragoda, C.K.M and Tantrigama, G (1997) Tourism. Somaseharam, T., Perera, M.P., De Silva, M.B.G and Godallawatta, H (ed.) *Arjuna Atlas of Sri lanka.* Arjuna Consulting Co Ltd, Dehiwela, pp 137-144.

Karunathilaka, H.N.S (1987) *The Economy of Sri Lanka.* Center for Demographic and Socio-Economic Studies, Colombo.

Lea, J (1988) *Tourism and Development in the Third World.* Routledge, London.

Sri Lanka Tourism Board (2003) *Ecotourism Development Strategy of Sri Lanka.* Sri Lanka Tourism Board, Ministry of Tourism, Colombo, Sri Lanka.

Sri Lanka Tourism Development Authority (1995) *Annual Statistical Report of Sri Lanka Tourism 2007.* Research and International affairs Decision, Sri Lanka Tourism Development Authority, Colombo, Sri Lanka.

Sri Lanka Tourism Development Authority (2012) 2012 Annual Statistical Report, Sri Lanka Tourism Development Authority, Colombo

வர்ணகுலசிங்கம்,ம. பத்மானந்தகுமார், வை.(2015) *சூழல்சார் சுற்றுலா*, கிழக்குப் பல்கலைக்கழகம், செங்கலடி

(பிரதேச சபை அறிக்கைகள் ,2018, பிரதேச சபை, வாழைச்சேனை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் சூழல்சார் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்கள்

**தவப்பிரபா சச்சிதானந்தம்**

***ஆய்வுச் சுருக்கம்***

*இலங்கைக்கு அதிகளவு அந்நியச் செலவாணியைப் பெற்றுத்தரும் சுற்றுலாத்துறை, 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த காலப்பகுதியை அடுத்து நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் பாரியளவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்திலும் சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி குறிப்பிடத்தக்களவில் இடம்பெற்று வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இயற்கை, கலை, கலாசாரம், வரலாறு, பாரம்பரியம் என்பன சுற்றுலாவினை விருத்தி செய்வதற்கான அடிப்படைகளாகவுள்ளன. அந்த அடிப்படையில் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் அழகிய நீண்ட மணல் கடற்கரைகள், குளங்கள், சிறு பற்றைக் காட்டுப்பகுதிகள், மலை, வெந்நீரூற்று பகுதிகள் என்பவை சூழல்சார் சுற்றுலாத்துறையினை விருத்தி செய்வதற்கு அதிக வாய்ப்புக்களைக் கொண்டுள்ளன.*

*இயற்கை வளங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதுகாத்தலினூடாக நிலைத்து நிற்கக்கூடிய வள முகாமைத்துவத்துக்கு பங்களிக்கும் சூழல்சார் சுற்றுலாவானது, இன்று சுற்றுலாத்துறையின் நவீன பிரிவாக விருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இவ்வகையில் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில் சூழல்சார் சுற்றுலாவினை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படும் பகுதிகளை அடையாளம் காணல் என்பதை ஆய்வின் முக்கியமானதோர் நோக்கமாகக் கொண்டு பொருத்தமான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.*

*இவ் ஆய்விற்காக நேரடி அவதானிப்பு, நேர்காணல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டு பண்புசார் அணுகுமுறையூடாக விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவில் களுவன்கேணி, தளவாய், சவுக்கடி புன்னைக்குடா கடற்கரைப்பகுதிகள், றூகம் குளம், குசலனார் மலை, கொஸ்கொல்லை வெந்நீரூற்று ஆகிய பகுதிகளும் கோப்பாவெளி, இரலைக்குளம், புல்லுமலை ஆகிய ஜீப்வண்டிச் சவாரிகளுக்கான பகுதிகளும் சூழல்சார் சுற்றுலாவுக்கு வாய்ப்புக்களைக் கொண்டுள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்ட பகுதிகள் Arc GIS 10.2, Google earth ஆகிய மென்பொருட்களின் துணையுடன் படமாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட பகுதிகளை சூழல்சார் சுற்றுலா மையங்களாக மாற்றுவதற்கு எவ்வாறான அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும் என்பது பற்றியும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.*

*முதன்மைச் சொற்கள் : சுற்றுலாத்துறை, சூழல்சார் சுற்றுலா, அபிவிருத்தி*

## 1.0 அறிமுகம்

நாட்டின் பொருளாதார விருத்திக்கு பங்கினைச் செலுத்தும் சுற்றுலாத்துறை, உலகில் காணப்படும் முக்கிய வர்த்தகத் துறைகளில் ஒன்றாகவும், ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாததாகவும், சர்வதேச ரீதியாக வளரும் கைத்தொழில் துறையில் முக்கியம் பெறும் துறையாகவும் விளங்குகின்றது. சுற்றுலா என்பது மக்கள் தமது சாதாரண வேலையிடங்களில் இருந்தும், இருப்பிடங்களில் இருந்தும் வேறு இடங்களு க்குத் தற்காலிகமாக நகர்ந்து செல்வதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Mathieson and Wall, 1982). சாதாரண அல்லது பாரிய சுற்றுலா என்பது சூழல்பாதுகாப்பு, சமூக, கலாசார பாதுகாப்பு என்பவை பற்றி பெரிதும் அக்கறை கொள்ளாமல் வெறுமனே பொழுதுபோக்கு என்பதை முக்கியமாக கொண்ட பாரியளவு முதலீட்டுடன் கூடியதாகும். இப்பாரிய சுற்றுலாத்துறை (Mass Tourism) என்பத னால் சூழலுக்கும் சமூகத்திற்கும் ஏற்பட்ட பிரதிகூலங்களைக் களைவதற்காக மாற்று முறையான சுற்றுலாத் துறை (Alternative tourism) அறிமுகப் படுத்தப்ப ட்டுள்ளது. இது வரலாற்றுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் சூழலைப் பாதுகாக்கும் நோக்கிலும் உருவாக்கப்பட்டதாகும். இத்தகைய மாற்று முறை சுற்றுலாவானது, பசுமை சுற்றுலா (Green tourism), இயற்கை சுற்றுலா (Nature tourism), சூழல்சார் சுற்றுலா (Eco-tourism), கிராமியச் சுற்றுலா (Rural tourism), புவிச்சுற்றுலா (Geo tourism), சமுதாயஞ்சார் சுற்றுலா (Community based tourism), விவசாய சுற்றுலா (Agro tourism) எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது (Mowforth, 1998).

சூழல்சார் சுற்றுலா என்பது, சூழலுக்கு கேடு விளைவிக்காத சூழலுக்கு அழிவு ஏற்படுத்தாத சுற்றுலாவாகும். "இயற்கைப் பகுதிகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத வகையிலான இயற்கையுடன் கரிசனை கொண்ட பயணமானது மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கும், மெச்சுவதற்கும், அதனை கற்பதற்குமாக இருப்பதுடன், கடந்தகால நிகழ்கால கலாசார அம்சங்களை கண்டறிந்து அதற்கூடாக சூழல் மற்றும் கலாசாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்தாது பாதுகாப்பதுடன் உள்ளூர் சமூகங்களுக்கு சமூக, பொருளாதார ரீதியான நன்மையை ஏற்படுத்தும் பயணமே சூழல்சார் சுற்றுலாவாகும்" (Ceballos - Lascurain, 1987).

சர்வதேச சூழல்சார் சுற்றுலா அமையம் (The International Ecotourism Society – TIES, 1991) "இயற்கைப் பிரதேசங்களுக்கு கரிசனையுடன் மேற்கொள்ளும் பயணமானது சூழலை பாதுகாப்பதுடன் உள்ளூர் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடியதாக இருக்க வேண்டும்" என சூழல்சார்சுற்றுலா என்பதனை வரைவிலக்கணப்ப டுத்தியுள்ளது. ("Responsible travel to natural areas that conserves the environment and sustains the well-being of the local people"). சூழல்சார் சுற்றுலா என்பதனை 1996 இல் IUCN பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. "பிரயாணம் செய்யும் இயற்கைப் பிரதேசங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில், அதன்மீது மதிப்புடனும் மகிழ்வுடனும் மேற்கொள்ளும் சூழலுடன் அக்கறை கொண்ட பிரயாணமாகும். அப்பிரயாணம் மூலம் சூழல் பாதுகாப்பு பேணப்படுவதுடன், உள்ளூர் மக்கள் சமூக, பொருளாதார ரீதியாக நன்மைகளை பெற்றுக்கொள்ளல் என்பது இன்றியமையாததாகும்".

சூழல்சார் சுற்றுலா மூலம் இயற்கைப் பாதுகாப்பிற்குத் தேவையான நிதியினை இயற்கைக்கு பாதகம் ஏற்படாத வகையில் ஈட்டிக் கொள்வதாக அமைவதுடன், பெறப்படும் வருமானம் மீண்டும் அப்பகுதியிலேயே சூழல் பாதுகாப்பிற்கு முதலீடு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும் (Subbiah & Kannan, 2012). 1970 களின் பிற்பகுதியிலிருந்து "சூழல்சார் சுற்றுலாத் துறை" என்ற பதம் அறிமுகமாக் கப்பட்டது. 1970 களின் முன்னர் சுற்றுலாக்கள் இடம் பெற்ற போதிலும் சூழல்சார் சுற்றுலா என்ற பதம் பாவிக்கப்படாமலே இடம்பெற் றுள்ளது (Nelson, 1994). 1980 களில் பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தங்களது பாரம்பரிய கைத்தொழில்கள், விவசாயம், பெருந்தோட்டத்துறை மற்றும் பாரிய சுற்றுலாத்துறை போன்றவற்றிற்குப் பதிலாக சூழல்சார் சுற்றுலாத் துறையைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். 1980 களில் சர்வதேச ரீதியில் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட வியாபாரமானது வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெற ஆரம்பித்தது. 1990 களில் பெரும்பாலான கைத்தொழில்மயமாகிய நாடுகளில் அபிவிருத்தி உபாயத்தின் முக்கிய பகுதியாக சூழல்சார் சுற்றுலாத் துறை பயன்படுத்தப் பட்டுள்ளது (Megan Elper wood, 2002).

சுற்றுலாக் கைத்தொழில் இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியமானதாகவும், விரைவாகவும் வளர்ச்சி பெற்று வருவதுடன், இலங்கையிலும் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமடைந்து வருகின்ற துறையாகவுமு ள்ளது. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் பங்களிக்கும் துறைகளில் சுற்றுலாத்துறையானது 3வது இடத்தினை வகிப்பதுடன் 14.8 சதவீதமான பங்களிப்பினைச் செலுத்துகின்றது (இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிக்கை, 2017). இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து சுற்றுலாத்துறை பாரியளவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன், அதிகளவான சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்கேற்ற வகையில் சூழல்சார் சுற்றுலா மையங்களாக மாற்றப்பட்டும் வருகின்றது. இதற்காக கரையோர மாவட்டங்களில் பல்வேறுபட்ட அபிவிருத்திகள் முன்னெடுக்க ப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் சுற்றுலாத்துறை அபிவிருத்திகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை இயற்கையோடிணைந்த, வரலாற்று, தொல்பொருள் சிறப்புமிக்க, கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் சுற்றுலாவினை ஊக்குவிப்பதற்கான அடிப்படைகளா கவுள்ளன. இம்மாவட்டத்தில் பல இடங்கள் சுற்றுலாவுக்குப் பொருத்தமானதாக காணப்ப டுகின்ற பொழுதிலும் பாசிக்குடா, கற்குடா, கல்லடி, நாவலடி கடற்கரைகள், பாலமீன்மடு வெளிச்ச வீட்டுப்பகுதி, மட்டக்களப்பு நகரம் ஆகிய பகுதிகள் மாத்திரம் ஓரளவுக்கு விருத்தி செய்யப்பட்டுள்ளன. ஏனைய இடங்கள் அபிவிருத்தி செய்யப்படாமலும், அடையாளப்படுத்தப்படாமலும் உள்ளன. அவ்வகையில் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில் சூழல்சார் சுற்றுலாத் துறைக்கான வாய்ப்புக்கள் உள்ள இடங்களை அடையாளப்படுத்தி, அங்கு எவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள் வதனூடாக விருத்தி செய்யலாம் என்பது தொடர்பாக ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

### 2.0 ஆய்வுப் பிரதேசம்:

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவானது மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்குப் பக்கமாக சுமார் 18Km தூரத்தில் அமைந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அதிகளவான நிலப்பரப்பினைக் (634.16 சதுர கிலோமீற்றர்) கொண்டதாக விளங்கும் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவானது, வடக்கில் கோரளைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவினையும், கிழக்கில் வங்காள விரிகுடாவினையும், தெற்கில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவினையும், மேற்கில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவினையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. 39 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டு விளங்கும் அப்பிரதேச செயலகப் பிரிவானது 75,027 சனத்தொகையினையும் உள்ளடக்கியுள்ளது.



மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.0 ஆய்வின் நோக்கங்கள்

1. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் சூழல்சார் சுற்றுலாவுக்கு வாய்ப்புக் கள் உள்ள இடங்களை அடையாளம் காணல்.

2. ஏறாவூர் பற்றில் சூழல்சார் சுற்றுலா வை விருத்தி செய்வதிலுள்ள சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் சார் சவால்களை அறிதல்.

3. அவற்றினை தீர்ப்பதற்கான உத்திக ளை பரிந்துரை செய்தல்.

### 4.0 தரவும் ஆய்வு முறையியலும்

முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ள ப்படுகின்றது. நேரடி அவதானிப்பு, கலந்துரை யாடல் என்பவற்றின் ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. நேரடி அவதானிப்பா னது ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவுக்கு சென்று அவதானித்ததன் மூலம் வாய்ப்புக்கள் உள்ள இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச மக்கள் போன்றவர்க ளுடன் கலந்துரையாடியதன் மூலம் வாய்ப்புக்கள் காணப்படும் இடங்கள் பற்றி அறிய முடிந்தது. இரண்டாம் நிலைத்தரவுகள் சூழல்சார் சுற்றுலாவுடன் தொடர்புடைய புத்தகங்கள், பத்திரிகைகள் போன்றவற்றிலி ருந்து பெறப்பட்டன.

பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களைக் கொண்டு பண்புசார் ரீதியில் விபரண அடிப்படையில் இவ் ஆய்வு மேற்கொள்ள ப்படுவதுடன், ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட சூழல்சார் சுற்றுலாவுக்கு வாய்ப்புக்களைக் கொண்டுள்ள பகுதிகள் Arc View GIS 10.2 மென்பொ ருளின் மூலம் படமாக்கப்ப ட்டுமுள்ளது. ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் சூழல்சார் சுற்றுலாவினை முன்னெடு ப்பதற்கு அப்பிரதேச செயலகப்பிரிவு கொண்டிருக்கும் பலம் (Strength), பலவீனம் (Weekness), வாய்ப்புக்கள் (Oppournity), தடைகள் (Thearets) தொடர்பாக SWOT பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாவுக்கு வாய்ப்புக்கள் காணப்படும் இடங்களை அறிந்து கொள்ளும் வகையில் tourism customization செய்யப்பட் டுள்ளது. இதனை எதிர்காலத்தில் இணையத்தளத்தினூடாக பதிவேற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் பயணிகள் இடங்கள் தொடர்பாக இலகுவாக அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

**5.0 ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் சூழல்சார் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்கள்** ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவானது கூடுதலான நிலப்பரப்பினையும், நீர்ப்பரப்பி னையும், இயற்கைப் பிரதேசங்களையும் கொண்டிருத்தல், விவசாய நிலப்பரப்புக்கள், கண்டல் தாவரப்பகுதிகள், புல்நிலப் பகுதிகளை அதிகமாகக் கொண்டிருத்தல், பிரதேசத்திற்கே உரித்தான கலைகள் (நாட்டுக்கூத்து, கும்மி, கரகாட்டம்) மற்றும் கிராமியப்பண்புகளை கொண்டிருத்தல் போன்ற பலங்களையும், வளமான மண், சிறப்பான காலநிலை, அமைதியான சூழல், உள்ளூர் விவசாயம், மீன்பிடி ஆகிய பொருளாதார நடவடிக்கைகள், நீர் விளையாட்டுக்களை மேற்கொள்ளக்கூடிய குளங்கள், வாவிகள், ஜீப்வண்டிச் சவாரிகளை மேற்கொள்ளக்கூடிய பகுதிகள் போன்றவா றான வாய்ப்புக்களையும் கொண்டிரு க்கின்றன. எனினும் சில பலவீனங்களும், தடைகளும் காணப்படு கின்றன. அதாவது சூழல்சார் சுற்றுலா தொடர்பான விளக்கம் பிரதேச மக்களிடையே காணப்படாமை, சூழல்சார் சுற்றுலாப் பகுதிகள் அடையாளப்ப டுத்தப்படாமை, மொழி தொடர்பான பிரச்சினை, சுற்றுலா பற்றிய கற்கைநெறிகள் காணப்படாமை போன்ற பலவீனங்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகள் தொடர்பான பிரச்சினை (யானை), போக்குவரத்து பாதைகள் சீரின்மை, போக்குவரத்து வாகனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படல், உட்கட்டமைப்பு வசதிகள் பற்றாக்குறை, சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்படல் போன்ற தடைகளையும் கொண்டுள்ளன. இவ்வாறான தடைகள் காணப்படுகின்ற போதிலும் இப்பகுதியில் காணப்படுகின்ற வாய்ப்புக்களையும், பலங்களையும் கொண்டு அவற்றினைக் களைந்து சுற்றுலாவினை முன்னெடுத்து பிரதேச அபிவிருத்தியினை மேற்கொள்ள முடியும்.

விவசாயம் மற்றும் மீன்பிடி தொழிலுக்கு பிரபல்யம் பெற்ற இடமாக விளங்கும் இப் பிரதேச செயலாளர் பிரிவில் முழு நிலப்பகுதியும் சமதரையாகக் காணப்படுவதுடன் மேற்குப் பகுதியில் சிறிய உயர்வான மலைப் பகுதிகளும் காணப்படுகின்றன. ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவில் கடற்கரைப்பகுதிகள், சந்தணமடு ஆறு, உறுகாமம் குளம், குசலனார் மலை, கொஸ்கொல்லை வெந்நீரூற்று ஆகிய இயற்கையோடிணைந்த பகுதிகள் காணப்படுகின்றன. இவை சூழல்சார் சுற்றுலாவினை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ள பகுதிகளாக விளங்குகின்றன.

**ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் சூழல்சார் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களுள்ள பகுதிகள்**



மூலம்: ஆய்விற்காக தயாரிக்கப்பட்டது, 2016

### 5.1 ஏறாவூர் பற்று பிரதேச கடற்கரை

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள தளவாய், சவுக்கடி, களுவன்கேணி, புன்னைக்குடா என்பன மணற்கடற்கரையாகக் காணப்படுகின்றன. புன்னைக்குடா கடற்கரை குடாக்கடலாகக் காணப்படுவதுடன் மணல்மேடு கொண்ட கடற்கரையாகவும் விளங்குகின்றது. இங்கு காணப்படும் கடற்கரையோரங்களை அண்டி மூன்று தோணாக்களும் காணப்படுகின்றன. களுவன்கேணி கடற்கரையை அண்டி $2\frac{1}{2}$ Km நீளமுடைய நடுவாடித்தோணாவும், $1\frac{1}{2}$ Km நீளமுடைய சுருக்குக் கேணித் தோணாவும் காணப்படுவதுடன் புன்னைக் குடா கடற்கரையை அண்டி 2Km நீளமுடைய சல்லித்துண்டு தோணாவும் காணப்படுகின்றன. இத்தோணாக்களின் இருமருங்கிலும் வெள்ளரசு, கீரிக்கண்ணா, கிண்ணை, புங்கை, தாளை, நொச்சி, பிரம்பு போன்ற தாவரங்கள் காணப்படுகின்றன.

புன்னைக்குடா கடற்கரை குடாக்கடலாக இருப்பதனால் இங்கு அலைகள் குறைவாகவுள்ளது. இதனால் இக்கடற்பகுதி கடல் விளையாட்டுக்களை மேற்கொள்வதற்கு ஏற்ற இடமாகவுள்ளது. அதேபோல களுவன்கேணி கடற்கரை பகுதியும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளால் நாடப்படும் இடமாக காணப்படுகின்றது. விடுமுறை நாட்கள், பண்டிகை நாட்களில் மக்கள் இக்கடற் பகுதிகளுக்கு சென்று தங்களது மாலைப் பொழுதினைக் கழிப்பதனை அவதானிக்கலாம்.

### 5.2 றூகம் குளம் (உறுகாமம்)

முந்தனை ஆற்றில் இருந்து நீரைப்பெற்றுக்கொள்ளும் றூகம் குளமானது 3440 ஹெக்ரெயர் பரப்பளவுடையதாகும். 1892ஆம் ஆண்டு Pioneer என்ற பிரித்தானியரால் றூகம் குளத்தினுடைய வேலைப்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Google


றூகம் குள அடித்தளமும் அணைக்கட்டும்



மூலம்: பிரதேச செயலகம், ஏறாவூர்பற்று

பற்றைக் காடுகளால் சூழப்பட்ட இக் குளத்தில் இடையிடையே பாறைக்குன்றுகள் காணப்ப டுவது மேலும் அழகினைச் சேர்ப்பதாகவி ருக்கின்றது. இக்குளம் இயற்கையால் மட்டு மன்றி வரலாற்று ரீதியாகவும் மட்டக்கள ப்பிற்கு பெருமை சேர்ப்பதாக வுள்ளது. பாறைகளுடனும் பற்றைக் காடுகளுடனும் காட்சியளிக்கும் றூகம் குளத்தினை பின்வரும் ஒளிப்ப டங்கள் காட்டுகின்றன.

றூகம் குளம்



மூலம்: வெளிக்கள ஆய்வு, 2016

இக்குளப் பகுதியில் சூழல்சார் சுற்றுலாவினை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதனூடாக அபிவிருத்திகளை செய்யமுடியும் என்ற நோக்கத்தினடிப்படையில் இக்குளப்பகு தியும் அடையாளப்படுத்தப்படு கின்றது.

**5.3 குசலனார் மலை (குசாண மலை)**

செங்கலடியிலிருந்து தெற்கே 10Km தொலைவில் பதுளை வீதிக்கு மேற்காக கரடியனாறு பகுதியில் காணப்படும் குசலனார் மலையானது இயற்கையாகவே மெருகூட்டு கின்ற மலையாக இருப்பதுடன் தொல்தொ ருள், வரலாற்று ரீதியாகவும் முக்கியம் பெற்றதாக விளங்குகின்றது. இம்மலை சுமார் 250 அடி உயரமான தட்டையான அமைப்பு டைய மலைக் குன்றாகும். சுமார் 200 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட இம்மலையில் 10 இற்கும் மேற்பட்ட குகைகள் காணப்படுகின்றன. குசலனார் மலைக்கும் அதன் தென்மேற்கில் அமைந்துள்ள 07 சிறிய மலைக் குன்றுகளுக்கும் இடையிலுள்ள பள்ளமான பகுதியில் கரடியனாறு குளம் இயற்கையாக அமைந்துள்ளது.


கிழக்கு பகுதியிலுள்ள மலைக்குன்றுகளில் வேடர்கள் வாழ்ந்து வந்தமைக்கான சான்றுகள் உள்ளன என்றும் குசலான் எனும் வேடர் தலைவன் இம் மலைக்குன்றுகளில் வசித்து வந்ததாகவும் இதன்காரணமாக குசலனார் மலை என பெயர் பெற்றதாகவும் அறியப்ப டுகின்றது (திருச்செல்வம். 2012). காடுகளாலும் சிறு பற்றைகளாலும் சூழ்ந்த இக்குசலனார் மலைப்பகுதியில் தற்போது குடியிருப்புக்கள் காணப்படாவிட்டாலும் முன்பொரு காலத்தில் செறிவான குடியிருப்புக்களும், மக்கள் நடமாட்டமும் இருந்ததற்கான ஆதாரங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. இங்கு பரவலாகக் காணப்படுகின்ற கருங்கல் தூண்களும், செங்கட்டியால் அமைக்கப்பட்ட இருப்பிடங்க ளின் அழிபாடுகளும், பரவலாகக் காணப்படும் மட்பாண்டங்களும் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களும் இங்கு புராதன குடியிருப்புக்களுடன் சமயம் சார்ந்த கட்டடங்களும் இருந்துள்ளன என்ப தை உறுதிசெய்கின்றன. மட்டக்களப்பு மக்களிடையே குசலனார் மலையின் உச்சியில் பண்டுதொட்டு முருகன் ஆலயம் இருந்த தென்ற ஆழமான வரலாற்று நம்பிக்கை காணப்படுகின்றது. இம்முருகனின் அற்பு தங்கள் தொடர்பான ஐதீகக் கதைகள் மக்களிடையே காணப்படுவதுடன் மலை உச்சியில் காணப்படும் கட்டட எச்சங்களையும் புராதன முருகன் ஆலயத்திற்குரியதாகவே கருதுகின்றனர். இவற்றைக் கருத்திற்கொண்டு தற்போது மட்டக்களப்பு முருக பக்தர்களால் மலையின் உச்சியில் முருகன் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 1970 களில் இருந்து இவ்விடத்தின் முக்கியத்துவம் ஆராயப்பட்டது. கி.முற்பட்ட காலம் முதலாக தென்னாசிய துணைக்கண்டத்தில் எழுதுவதற்குப் பயன்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத்தப்பட்ட பிராமி (Brahmi) எனும் வரிவடிவத்தில் எழுதப்பட்ட ஏறத்தாழ பத்து கல்வெ ட்டுக்கள் இங்கு காணப்படுவதாக பேராசிரியர் செனரத் பரணவிதான "Inscription of Ceylon" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**குசலனார் மலை**



மூலம்: வெளிக்கள ஆய்வு, 2016

இம்மலையின் பாறைகளில் செப்பமாக படிகள் வெட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. குசலனார் மலைத்தொடரில் 4 மலைத் தொடர்கள் காணப்படுகின்றன. முதலாவது குன்றிலே முருகன் கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. முருகன் ஆலயத்திற்கு முன்பக்கம் ஓர் அழகிய நீர்ச்சுனை காணப்ப டுகின்றது. அதில் எக்காலத்திலும் நீர் வற்றிப் போவதில்லை என்று பிரதேச மக்கள் குறிப்பிட்டார்கள். முருகன் ஆலயம் அமைந்துள்ள குன்றின் பின்பக்கமுள்ள மிக உயரமான குன்றின் அடிவாரத்தில் பெரிய கற்குகை ஒன்றும் காணப்படுகின்றது. இக்குகையில் 10அடி உயரமான நாகபுற்றும் அமைந்துள்ளது. இவற்றைவிட பாறையிலே ஒரு வட்டமான குழியும் காணப்படுகின்றது. இவ்விடம் தொடர்பான ஆய்வுகள் பெரிதாக இடம்பெறாமையினால் அறியப்படாத ஓர் இடமாகவே காணப்படுகின்றது. அம்மலைப் பகுதியில் படிகள் காணப்படுவதால் இலகுவாக ஏறக்கூடியதாகவுள்ளது. சுற்றுலா வுக்குரிய இடமாக இம்மலைப்பகுதியை விருத்தி செய்வதனூடாக பிரதேச அபிவிருத் தியை மேற்கொள்ள வாய்ப்புக்களும் நிறையவே காணப்படுகின்றது.

**5.4 கொஸ்கொல்லை வெந்நீரூற்று**

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் பெரிய புல்லுமலை கிராமசேவகர் பிரிவில் கொஸ்கொல்லை என்ற இடத்தில் வெந்நீரூற்று பகுதி ஒன்று இருப்பதாக அடையாளப் படுத்தியுள்ளதாக கிழக்கு மாகாண சுற்றுலா சபை அதிகாரி மூலம் அறிய முடிந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட வெந்நீரூற்று என்பதால் இப்பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டு திட்டமிட்டு அபிவிருத்தி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. இதனால் அப்பகுதியும் சூழல்சார் சுற்றுலாவுக்கு வாய்ப்புக்கள் உள்ள பகுதி என்பதனுள் அடையாளப் படுத்தப்படுகின்றது.

இவற்றை விட இரலக்குளம், புல்லுமலை, கோப்பாவெளி ஆகிய இடங்கள் பற்றைக் காடுகளை கொண்டுள்ள பகுதிகளாகக் காணப்படுகின்றன. இப்பகுதிகள் ஜீப்வண்டி சவாரிகளில் ஈடுபடுவதற்கு பொருத்தமான இடங்களாகவுள்ளன. இதில் பெரிய புல்லுமலை என்ற இடத்தில் இன்று தனியாரினால் Yuhibuhi Forest Resort என்ற பெயரில் இயற்கையோடிணைந்த வகையி லான உல்லாச விடுதி அமைக்கப்ப ட்டுள்ளது. இங்கு சூழல்சார் சுற்றுலா மையமானது எவ்வாறான பண்புகளோடு அமைய வேண்டுமோ அவ்வாறான பண்புகளோடு அமையப் பெற்றுள்ளது. இதேபோன்ற விடுதிகள் அமைப்பதற்கு வாய்ப்புக்களுள்ள பகுதிகள் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் கூடுதலாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் சூழல்சார் சுற்றுலாவினை விருத்தி செய்யும் போது அப்பகுதி விருத்தி செய்யப்படுவதுடன் வேலைவாய்ப்புக்க ளையும் ஏற்படுத்தி சமுதாய அபிவிருத்திகளையும் மேற்கொள்ள முடியும். எனினும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் வேலைவாய்ப்புக்களும் அப்பிரதேச மக்களை மையமாகக் கொண்டதாக அமைய வேண்டும். அத்துடன் அச் சூழலுக்கும், அச்சூழலிலுள்ள உயிரினங்களுக்கும் பாதிப்புக்கள் இல்லாத வகையில் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

### 6.0 சூழல்சார் சுற்றுலாவினை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ளக்கூடிய உபா யங்கள்

ஏறாவூர்பற்று பிரதேச செயலக பிரிவானது மட்டக்களப்பு மாவட்டத்தில் சூழல்சார் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்ற பிரிவாக திகழ்கின்றமையினால் அனைத்தை யும் ஒன்றுசேர்த்து அபிவிருத்தி செய்வதனூ டாக வேலைவாய்ப்புக்கள், பொருளாதார அபிவிருத்தி, சமுதாய அபிவிருத்தி போன்ற வற்றை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பாக அமையும்.

சவுக்கடி, தளவாய் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் சவுக்கு மரங்கள் அப்பகுதிக ளுக்கு அழகினைச் சேர்ப்பவையாகவுள்ளன. இம்மரங்களை அடிப்படையாக வைத்து விடுதிகளை அமைத்துக்கொள்வதற்கும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அதாவது மரங்களை வெட்டாமல் அவற்றை இணைத்து கொண்டு நிலமட்டத்திலிருந்து 5 அடிக்கு உயரத்திலிருந்து விடுதிகளை வடிவமைத்துக் கொள்ளலாம். இவ்வாறு அமைத்துக கொள்ளும் போது வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்ற தாக்கங்களில் இருந்து வரும் பாதிப்புக்களை ஓரளவுக்கு குறைத்துக் கொள்ள முடியும்.



கடற்கரை ஓரங்களில் குதிரை அல்லது குதிரை வண்டி மற்றும் மாட்டுவண்டி என்பவற்றைக் கொண்டு சவாரிகளை ஏற்படுத்தி சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க முடியும். களுவன் கேணி, சவுக்கடி ஆகிய கடற்கரைப்ப குதிகளில் இவ்வாறான சவாரிகளை மேற்கொள்வ தற்கு வாய்ப்புக்களுள்ளன. அதேபோல புன்னைக்குடா கடற்கரைப் பகுதியில் அலைகள் குறைவாகக் காணப்படு வதனால் அக்கடலின் கரையை சார்ந்து நீர் விளையாட்டுக்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் போது சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து கொள்ள வாய்ப் புக்கள் ஏற்படுத்தப்படும்.

இவற்றினைவிட, கடற்கரைப் பகுதிகளில் ஆமை வளர்ப்புத்திட்டங்கள் மற்றும் வர்ண மீன்களை வளர்க்கும் திட்டங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களுள்ளன. புன்னைக்குடா, சவுக்கடி கடற்கரைகளை அண்டி அருகி வரும் ஆமை இனங்களை வளர்ப்பதன் மூலம் அவை பாதுகாக்கப்ப டுவதுடன், சுற்றுலாப் பயணிகளை கவர்வ தற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தும். இவற்றினூடாக உள்ளூர் மக்கள் பொருளா தார ரீதியாக நன்மைகளைப் பெற்றுக்கொ ள்வதுடன் உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பும் ஏற்படுத்தப்படும். கடற்கரைப் பகுதிகளில் பட்டங்களை செய்து விற்றல், நீர் விளையாட்டுக்கான உபகரணங்களை வாடகைக்கு விடல், உள்ளூர் உணவுகளை குறிப்பாக கடலுணவுகளை விற்பனை செய்தல், மட்டக்களப்பு மாவட்டத்தில் முக்கியம் பெற்ற இடங்களின் ஒளிப்படங்களை விற்றல், மட்டக்களப்பில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளை விற்றல் (கைத்தறி நெசவு உற்பத்திகள், மட்பாண்ட உற்பத்திகள்), உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உணவுகளை விற்றல், வாகனத்தரிப்பிடங்கள், ஆடைமாற்றும் அறைகள், மலசலகூடவசதிகள் என்பவற்றை அமைத்து அதனூடாக சிறுதொகைப்பணத்தை அறவிடல், வாகன வசதி சேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குதல் (Taxi services) போன்ற தொழில்களை முன்னெடுத்துக் கொள்ளவும் அதனூடாக வருமானத்தை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

றூகம் குளம் மற்றும் வாவிப்பகுதியில் பல்வகையான படகுச்சவாரிகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் வீட்டுப்படகு (House boat) சேவைக ளையும் ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க முடியும். இச்சவாரிகள் மூலம் குளத்தினைச் சூழ்ந்து காணப்படும் காடுகளில் தங்கிக் காணப்படும் பறவைகள், மயில்கள் தோகைவிரித்தாடும் காட்சிகள், மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடும் காட்சிகள் ஆகியவற்றைக் கண்டு மகிழ முடியும். அவ்வேளையில் உள்ளூர் மீனவர்களுடன் இணைந்து எவ்வாறு மீன்களைப் பிடித்துக்கொள்கின்றனர் என்பது பற்றி அறிந்து கொள்வதுடன் பிடிக்கப்படும் உடன்மீன்களை சமைத்து ருசியான உணவினையும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்க முடியும். இங்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளை படகுச்சவாரியில் ஈடுபடுத்துவதற்குரிய படகுச் சேவை வசதிகள், பயணிகளுக்காக உள்ளூர் உணவினை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை பிரதேச மக்கள் மேற்கொள்ள முடியும். இவற்றினூடாக அவர்களது பொருளாதார விருத்தியை ஏற்படுத்திக் கொள்ளவும் வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம்.

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் கொஸ்கொல்லை என்ற இடத்தில் வெந்நீரூற்று பகுதி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒரேயொரு வெந்நீரூற்றுப் பகுதியாக இது கொள்ளப்படுவதால், அவ்விடத்தில் மகாஓயாவில் அல்லது கன்னியாவில் அமைக்கப்பட்டுள்ள வெந்நீரூற்று கிணறுகளைப் போல இங்கும் கிணறுகளை அமைத்துக் கொள்ள முடியும். அத்துடன் இப்பிரதேச செயலகப்பிரிவில் காணப்படும் புல்லுமலை, கோப்பாவெளி பகுதிகளில் ஜீப்சவாரிகளில் ஈடுபடல் என்பவற்றை இணைத்து சூழல்சார் சுற்றுலா வலயமாக்க முடியும். இவ்வாறான அபிவிருத்திகளைச் செய்யும் போது சுற்றுலாப் பயணிகளை வரவழைத்துக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படலாம்

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் கால்நடைகளின் உற்பத்தி அதிகளவில் இடம்பெறுகின்றது. இங்கு 35300 மாடுகளும், 18900 எருமைகளும் காணப்படுகின்றன (Department of Animal production and Health, Batticaloa). அவற்றின் மூலமாகப் பெறப்படும் பாலினை அடிப்படையாகக் கொண்டு பால் உற்பத்திப் பொருட்களை (Dairy based production) மேற்கொள்வதற்காக கரடியனாறு பகுதியில் ஆலைகளை (factory) அமைத்து யோகட், பனீர், வெண்ணெய் (cheese), பால்மா, பால்பக்கற் போன்ற உற்பத்திகளை மேற்கொள்ள முடியும். இதனூடாக 300 இற்கும் மேற்பட்ட உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதுடன் உள்ளூர் உற்பத்திகளும் ஊக்குவிக்கப்படலாம்.

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவில் காணப்படும் குசலனார் மலையானது தொல்பொருள் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாகக் காணப்படுவதால் இம்மலைப் பகுதியினை சூழல்சார் சுற்றுலா மையமாக மாற்றிக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களுள்ளன. இங்கு படிகள் வெட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்ற போதிலும் பாதுகாப்பாக ஏறுவதற்குரிய வகையிலான கைபிடிகள் இல்லாமையினால் அவற்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு முருகன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதால் இங்கு ஆண்டுக்கு ஒரு முறை திருவிழாக்களை சிறப்பாக நடாத்தும் போது பக்தர்களை வரவழைத்துக் கொள்ள முடியும். இவ்வாறான நிகழ்வுகளின் ஊடாக இம்மலைப்பகுதியினை மக்கள் அறிந்து கொள்ளச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தலாம். மேலும் இங்கு காணப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பிராமிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுக்களை பாதுகாக்க வேண்டிய தேவையும் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் என்றதுமே விவசாயம், மீன்பிடி என்பன பிரபல்யமானதாகும். இம் மாவட்டத்தில் பாரம்பரிய, நவீன முறையிலான விவசாய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. நவீன முறையிலான விவசாய நடவடிக்கைகள் பல இடங்களில் இடம் பெற்றாலும் ஏறாவூர்பற்று பகுதியில் இன்றுவரை எருமைகள், எருதுமாடுகள் என்பவற்றைப் பயன்படுத்தி உழுதல், சூடடித்தல், கையினால் அறுவடை செய்தல் போன்ற செயற்பாடுகள் பாரம்பரியமாகவே இடம்பெறுகின்றன. இதனை அடிப்படையாக வைத்து அப்பகுதி மக்கள் நன்மையடையக்கூடிய வகையில் வழிகாட்டும் சுற்றுலாவினை கரடியனாறு, றூகம், வேப்பவெட்டுவான் ஆகிய பகுதிகளில் விவசாயம் சார் கிராமிய சுற்றுலாவினை விருத்தி செய்துகொள்ளலாம். அதாவது சுற்றுலாப் பயணிகளை விவசாய நடவடிக்கைகளில் பங்குபெறச்செய்யும் பண்ணை நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். சுற்றுலாப் பயணிகளை வயல்வெளிகளில் உழுதல், விதைத்தல். களைபிடுங்குதல், அறுவடைசெய்தல் போன்ற விவசாய நடவடிக்கைகளில் பங்குபெறச்செய்யும் வழிகாட்டல் சுற்றுலாவினை மேம்படுத்த முடியும். அதேபோல மீன்பிடி நடவடிக்கைகள் பற்றிய அனுபவத்தி னையும் சுற்றுலாப்பயணிக ளுக்கு வழங்கமுடியும். அதாவது உள்ளூர் மீனவர்களுடன் இணைந்து மீன்பிடியில் ஈடுபடச்செய்யலாம் (Fishing with local fisherman). தூண்டில்களை பாவித்து மீன்பிடித்தல், எறிவலை முறைமூலம் மீன்பிடித்தல் போன்ற நுட்பங்கள் ஊடாக மீன்பிடிப்பதில் பங்குகொள்ளச் செய்தல் மூலம் அவை தொடர்பான அனுபவங்களையும் அவர்களுக்கு வழங்க முடியும். மேலும் மாடு, ஆடு ஆகிய கால்நடைகளில் பால்கறக்கும் முறைகளையும் அவர்களுக்கு பகிர்ந்து கொள்ளலாம். இவற்றின் மூலம் கிராமிய மக்களுடன் சுற்றுலாப் பயணிகள் இடைத் தொடர்பினைப் பேண வாய்ப்புக்கள் உருவாகும்.

கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா அபிவிருத்தியை முன்னெடுக்கும் போது கிடைக்கக்கூடிய வளங்களில் தங்கியிருந்து கிராம மக்களே தங்கள் வீட்டில் தங்குமிடவசதி (Home stay), உணவு வசதி என்பவற்றை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கி அதனூடாக வருமானத்தினையும் வேலைவாய்ப்புக்களையும் உள்ளூர் குடும்பங்களுக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தும். இதன்மூலம் சுற்றுலாப் பயணிகள் பசுமையான வயல்களையும், கிராமிய வாழ்க்கை முறைகளையும், கலாசாரங்களையும் அனுபவிக்க முடியும். இவை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரதான ஈர்ப்புக்களாகும். அத்துடன் ஆக்கபூர்வமான சமூக ஈடுபாடுடைய ஒரு சமுதாயம் தனது வாழ்க்கைத்தரத்தினை உயர்வடையச் செய்யும் சந்தர்ப்பத்தினையும் ஏற்படுத்தலாம்.

உள்ளூர் மற்றும் பழங்குடி மருத்துவ சிகிச்சைகள் (விஷ வைத்தியம், முறிவு வைத்தியம்), ஆயுள்வேத சிகிச்சைகள் போன்ற பாரம்பரிய மருத்துவ முறைகளை சுற்றுலாப் பயணிகளுக்கு அறிமுகப்படுத்த முடியும். கிராமிய விளையாட்டுக்கள் மற்றும் மருவிவரும் விளையாட்டுக்களை நிகழ்த்திக் காட்டுவதன் மூலம் சுற்றுலாப் பயணிகளையும் பங்குபற்றச் செய்து மகிழ்விக்க முடியும். சுற்றுலாப் பயணிகளுக்கு உள்ளூர் உணவுகளைச் சமைத்துக்காட்டல், பாரம்பரிய நுட்பங்களைப் பயன்படுத்தி செய்யும் வேலைகளை (தேங்காய் உரித்தல், கிணறுகளில் துலா மூலம் நீர் எடுத்தல்) செய்து காட்டல் போன்றவற்றை நேரடியாகப் பார்ப்பதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி அவர்களை அவற்றில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் அவை பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வீட்டை அடிப்படையாகக் கொண்டு பண்ணை மற்றும் விவசாய அருங்காட்சிகங்க ளை உருவாக்க முடியும். அத்துடன் சுற்றுலாப் பயணிகளுக்கு தயிர், பால், தேன், ஊறுகாய், சோளன், இலைக் கஞ்சிகள் போன்ற உள்ளூர் உணவுகளை சுவைப்பதற்கும் அனுபவிப் பதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும். அத்துடன் உள்ளூர் விவசாய குடும்பங்களுடன் இணைந்து கிராமிய உணவுண்ணல் செயற்பாடுகளையும் மேற்கொள்ளலாம் (Village lunch with local famer family). இவ்வாறாக கிராமிய விவசாய சுற்றுலா அபிவிருத்தியை முன்னெடுத்து சூழல்சார் சுற்றுலாவின் விருத்தியினை ஏற்படுத்திக் கொள்ள முடியும். மேலும் இங்கு பாரம்பரிய கலைகள் (நாட்டுக்கூத்து, கரகாட்டம்) இன்று வரை இப்பிரதேசத்தில் அழியாத்தன்மை கொண்டு காணப்படுவதனால் அவற்றினையும் சுற்றுலாப் பயணிகளுக்காக நிகழ்த்திக் காட்டலாம். இப்பிரதேச செயலகப்பிரிவில் சுற்றுலாப்பயணிகளை கவரக்கூடிய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி சுற்றுலாப் பயணப்பொதி (tour package) ஒன்றினை வடிவமைத்துக்கொள்ளலாம்.

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவில் சூழல்சார் சுற்றுலாவினை விருத்தி செய்வத னூடாக உள்ளூர் மக்களுக்கு பல்வேறு துறைகளில் தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம். தங்குமிடங்களை வழங்குத லுடன் தொடர்பான தொழில்கள், உணவு வழங்கலுடன் தொடர்பான தொழில்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான சேவைகளை வழங்குதலுடன் தொடர்பான தொழில்கள், சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய தொழில்கள் என பல்வேறுபட்ட துறைகளிலும் தொழில்வாய்ப்புக்களை வழங்க முடியும். சூழல்சார் சுற்றுலாவினூடாக படித்தவர்க ளுக்கு மட்டுமன்றி பாமர மக்களுக்கும் தொழில் வாய்ப்புக்களை வழங்கக்கூடியதாக இருப்பது சிறப்பான ஒருவிடயமாகும்.

## 7.0 முடிவுரை

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவில் களுவன்கேணி, தளவாய், சவுக்கடி புன்னைக்குடா கடற்கரைப்பகுதிகள், றூகம் குளம், குசலனார் மலை, கொஸ்கொல்லை வெந்நீரூற்று ஆகிய பகுதிகளும் கோப்பா வெளி, இரலைக்குளம், புல்லுமலை ஆகிய ஜீப்வண்டிச் சவாரிகளுக்கான பகுதிகளும் சூழல்சார் சுற்றுலாவுக்கு வாய்ப்புக்களைக் கொண்டுள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்விடங்க ளை நீண்ட மற்றும் குறுகிய கால அடிப்படையில் சரியான திட்டமிடலுடனும், குறைந்த நிதியீட்டுடனும் அபிவிருத்தி செய்யும் போது எதிர்காலத்தில் சுற்றுலாத்துறை அடிப்படையில் சிறந்த பிரதேச செயலகப் பிரிவாக மிளிர்வதுடன், உள்ளூர் மக்கள் வேலைவாய்ப்புக்களைப் பெற்று பொருளாதார ரீதியாகவும் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தலாம்.

## உசாத்துணை நூல்கள்


Annual Report, 2017, Sri Lanka Pourism Development Authority

Ceballos Lascurain,H. (1987). *The Future of Ecotourism*, Mexico Journa

Mathieson.A & Wall.G. (1982). Tourism: Economic, Physical and Social Impacts, New York: Longman House.

Megan Elper Wood. (2002). *Ecotourism Principles, Practices & Policies for Sustainability*, UNEP, Division of Technology, Industry and Economics, Paris, France.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mowforth., (1998). *Tourism and Sustainability: New tourism in the third world, London,* Routledge.

Nelson,J.G. (1994) *The spread of ecotourism: some planning implications*. Environment conservation. p. 248 – 256.

Palacio, V & McCool, S.F. (1997). *Identifying Eco tourists in Belize through benefit segmentation: a preliminary analysis*, Journal of Sustainable Tourism, 5(3): p 234-243.

Paranavidane, S. (1970). Inscription of Ceylon, Vol 1, Colombo

Sharpley,R. (1996). *Tourism and leisure in the countryside*, (2nd ed.), Huntington, ELM Publications

Subbiah, K.& Kannan, S. (2012) *The management strategies of ecotourism development in Papua New Guinea.* International Journal of Economics Business and Management Studies. 1(3). p. 114-120.

அஸ்லாம், எம்.எஸ்.எம்., (2011). *நீடித்திருக்கத்தக்க கிராமிய அபிவிருத்தி யில் மாற்றுச் சுற்றுலாத்துறையின் வகிபாகம்,* பொருளியல் நோக்கு, மாசி பங்குனி 2011, மக்கள் வங்கி வெளியீடு.

திருச்செல்வம், எஸ். (2012). *குசலனார் மலை நாக, முருகன் கோயில்*", தினக்குரல், 13.05.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு நிகழ்த்துகைப் பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள் - 1980களின் பின்னர் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவை மையமாகக் கொண்ட ஆய்வு

கு.ரவிச்சந்திரன்

## *1.0 ஆய்வு அறிமுகம் (Introduction )*

*மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அவைகள் இரண்டு வகையான நிகழ்த்துகைக்குள் அடங்குகின்றன. ஒன்று பாரம்பரிய நிகழ்த்துகைகள், மற்றையது நவீன நாடக நிகழ்த்துகைகள். இதில் பாரம்பரிய நிகழ்த்துகைகள் என்கின்ற பொழுது மட்டக்களப்பின் தனித்துவத்தோடு நிகழ்த்தப்படும் கரணநிகழ்த்துகை, வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள், வசந்தன் கூத்துக்கள், புலிக் கூத்துக்கள், மகிடிக் கூத்துக்கள். பறைமேளக் கூத்துக்கள், விசாலமெட்டுக் கூத்துக்கள், நொண்டிக் கூத்துக்கள் போன்றவற்றையும் "பா" வடிவில் இடம்பெறும் நிகழ்த்துகைகளான கரகம், காவடி, கோலாட்டம், கும்மி, ஊஞ்சல் ஏற்றல், எண்ணெய்ச் சிந்து, கவிபாடல், காவியம் ஏற்றல் என பல நிகழ்த்துகைகள் இடம்பெறுவதைக் குறிப்பிடலாம்.*

*நவீன நாடக நிகழ்த்துகை என்கின்ற பொழுது பாரம்பரிய நிகழ்த்துகைகளில் இருந்து வேறுபட்டு மேடையினை மையமாக வைத்து நிகழ்த்தப்படும் நாடகங்களையே குறிப்பிடலாம். இதில் வரலாற்று நாடகம், புராண இதிகாச நாடகம், சமய உள்ளடக்கம் கொண்ட நாடகம், யதாஉத்த மோடியில் அமைந்த சமூக நாடகம், ஹாஸ்சிய நாடகம், சமூக சீர்திருத்த நாடகம் போன்றவைகளையும். தற்காலத்தில் எழுந்த மோடிமை நாடகம், குறியீட்டு, காவிய பாணியிலான யதாஉத்த எதிஉ நாடக முறைமைகளையும் இங்கு நவீன நாடக நிகழ்த்துகைகளாக இனங்காணலாம்.*

*இத்தகைகய நிகழ்த்துகைகள் மட்டக்களப்பில் கலைக்கழகங்கள், மன்றங்கள் ஊடாகவும், தனிப்பட்ட நிகழ்த்துகையாளர்கள், நிறுவனரீதியான அமைப்புகள் ஊடாகவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவைகளில் பெண் நிகழ்த்துகையாளர்களின் பணி தொடர்பாகவும் இப்பெண் நிகழ்த்துகையாளர் எத்தகைய நிகழ்த்துகைகளில் பாண்டித்தியம் உடையவர்களாக இருந்தனர். அவர்களது நிகழ்த்துகை அமைப்பு எத்தகையது, அது வெளிப்படுத்தும் முறைமையும் கருப்பொருள்களும் என்ன? இத்தகைய பெண் நிகழ்த்துகையாளர்கள் தங்களது சமூகக் கட்டமைப்பில் எத்தகைய தாக்கங்களையும், கருத்தியல்களையும் நிகழ்த்துகை ஊடாகச் செய்தார்கள் என்பதை அறிவதும்.*

*பெண் நிகழ்த்துகையாளர்களின் நிகழ்த்துகைகளின் தரம் அதன் அழகியல், அரங்கியல் அடிப்படைகளின் தன்மைகள் எத்தகையது, இது மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கங்களைச் செலுத்தியது, அவர்களின் நிகழ்த்துகைகள் பெற்றிருந்த மதிப்புகள், செல்வாக்குகள் என்ன அது மதிப்பையும் செல்வாக்கைப் பெறவில்லையாயின் அதன் பலவீனங்கள் என்ன என்பதை அறிந்து கொள்வதே இவ்வாய்வில் இடம்பெறும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.0 ஆய்வுப் பிரதேசம்:

இவ்வாய்வின் எல்லைப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலாளர் பிரிவு அமைகின்றது.

## 3.0 ஆய்வு வரையறைகள்:

இவ் ஆய்வு மட்டக்களப்பு நாடக வரலாற்றில் உணரப்படும் பாரம்பரிய நவீன நாடக நிகழ்த்துகைகளையும், பயில்நிலைப் போக்கில் இரு நிலைப்பட்ட வளர்ச்சியில் நோக்குவது அதிக பயன்தரும் என எண்ணுகிறேன். அவைகள்:

1. பாரம்பரியக் கூத்துக்கள்.

2. நவீன நாடகங்கள்.

இவ்வரையறைக்குள் இசை, நடனம், ஓவியம், சிற்பம், எழுத்துத்துறை போன்ற பிற கலைப்பயில்வுகள் ஆய்வுக்கு உட்படுத்தப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 4.0 ஆய்வின் நோக்கம்:

நிகழ்த்துகை வரலாறு என்றதுமே ஆண்களை முன்னிலைப்படுத்துவது உண்டு. ஆனால் இத்துறையில் பங்குகொண்டு பல அரங்கேற்ற ங்களையும், அளிக்கை களையும், பங்குபற்று தல்களையும் கண்ட பெண்கள் பலர் இலை மறை காய்களாக வாழ்ந்து வருவதனால் அவர்களது பங்களிப்பினை பதிவுசெய்து கொள்வதாக இவ் ஆய்வு அமைகிறது.

இந்த ஆய்வின் மூலமாக பெண் நிகழ்த்துகை கலைஞஉகளது வரலாறும், அவர்களது நிகழ்த்துகையின் அரங்கவியல் பரிமாணங்க ளும் தெளிவாக எடுத்துக் காட்டப்படும். அத்துடன் நிகழ்த்துகையில் பங்குகொண்ட பெண்களது தகவல்கள் திரட்டப்பட்டு அவர்களைப் பற்றிய கருத்தியல் ரீதியான விளக்கங்களும், அவர்களது திறமைகளும் வெளிக்கொணரப்படும். பெண்கள் எதிர் கொண்ட சமூக மாற்றம், உள்நாட்டு யுத்தம், இடம்ப் பெயர்வுகள், இயற்கை அனர்த்தம், அகதி வாழ்க்கை இதனால் ஏற்பட்டுள்ள உள நெருக்கடிகளின் மத்தியிலும் பெண்களின் நிகழ்த்துகைப் பங்களிப்பு எத்தகையது என உணர்த்தப்படும்.

ஈழத்து தமிழ் அரங்கப் பின்னணியில் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பில் பெண் நிகழ்த்துகைக் கலைஞர்களின் பணிகள் எத்தகையது. அவர்களது நிகழ்த்துகை முறைமை எவ்வாறு இருந்தது, அது எவ்வாறு வளர்ந்தது என்பதை அறிவதுடன், அதன் தாக்கங்களையும், அதன் ஆழ, அகலமான அம்சங்களை அறிவதும், அதன் பலம், பலவீனங்களை ஆராய்வதும், ஈழத்து மட்டக்களப்பின் பெண் நிகழ்த்துகை அரங்கினையும் அதன் அரங்கியலாளர் களையும் இனங்கண்டு கொள்வதும் இத்த கைய ஆய்வினூடாக பெறப்படும் விளை வுகளாகும்.

இத்தகைய பெண் நிகழ்த்துகையாளர்களின் நிகழ்த்துகைகளை வெறும் வரலாற்றுத் தகவல்களாக மட்டும் நோக்காமல் நிகழ் த்துகை ரீதியாக நோக்குவதும், நிகழ்த்து கையில் அவர்களின் தகுதிப்பாட்டை மதிப்பிடுவதும், இவர்களது நிகழ்த்துகை அமைப்பை இனங்காண்பதும், அவற்றைப் பதிவுசெய்து கொள்வதும், இத்தகையோரது நிகழ்த்துகை வடிவங்களை உலகறியச் செய்வதும் என்கின்ற பலநோக்கு நிலையில் இவர்களது பணியினை ஆராய்வது.

மட்டக்களப்புப் பண்பாட்டில் நிலவும் நிகழ்த்துகை அமைப்பிலே பெண்கள் பலர் பங்குபற்றுவதால் பெண்கள் அவைக்காற்று கைக் கலைக்காற்றிய பங்களிப்பினை அரங்கில் முதல் தோன்றிய பெண் கலைஞர்கள் பற்றிய தவறுதலான வரலாற்றுப் பதிவினையும் மீள்வாசிப்புச் செய்து கொள்வதும் இவ் ஆய்வின் நோக்காகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.0 ஆய்வுப் பிரச்சினை:

மட்டக்களப்பு நிகழ்த்துகைப் பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள் என்னும் பொருளை ஆய்வுக்குட்படுத்துகின்ற பொழுது பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. பெண்கள் "அச்சமும் நாணும் கடனும் முந்து உறுத்த நிச்சமும் பெண்பாற் உரிய என்பர்" என்ற தொல்காப்பியம் தரும் களவியல் சூத்திரத்தில் குறிப்பிட்டது போல் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நால்வகைக் குணங்களு டையவளாக பெண்களைப் பார்த்து அவர்கள் கலைத்துறையில் ஈடுபடுவது என்பது சமூக மட்டத்தில் மனிதர் தளர்நிலைக்குட்பட்ட நிலையில் துணிந்து அரங்கில் தோன்றிய பல பெண்கள் பட்ட துயரங்களை வெளிக்கொணர வேண்டிய தேவை உள்ளது.

இத்தகைய சமூகப் பண்பாட்டு அடுக்குமு றைக்குள்ளும் பல பெண்கள் நிகழ்த்து கைளில் பங்கேற்றிருப்பது மட்டக்களப்பில் இனங்காணப்படுகிறது. இவர்கள் நிகழ்த்துகை யின் போது

### 6.0 ஆய்வு முறையியல்:

#### தரவுகள்:

இவ் ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டு முதனிலைத் தரவுகளாக ஆய்வாளரால் இனங்காணப்பட்ட பெண் நிகழ்த்துகையா ளர்களின் நிகழ்த்துகைகளும், அதன் அளிக்கை முறைகளும், ஆய்வாளரால் நேரடியாக பார்க்க முடியாத நிகழ்த்துகை களின் ஒலி ஒளி பதிவுகளும், நிகழ்த்துகை யாளர்களின் கதைகள், எடுத்துரைப்புகள், நிகழ்த்துகைப் பிரதிகள்.

இதில் பெண் நிகழ்த்துகையாளர்கள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், சஞ்சிகை கள், கட்டுரைகள், மதிப்புரைகள், நிகழ்த்துகை விமர்சனங்கள் ஆகியன. இவ் ஆய்வு விபரண முறையியலை

அடிப்படையாகக் கொண்டது. குறிப்பாக கள ஆய்வு முறையை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இதில் பேட்டிகா ணல், ஏடுகளின் ஆய்வு, தனியாள் விபரண போன்ற உத்திகள் பிரயோகிக்கப்பட்டன.

பாகமாடுதல் என்பது சமூக அந்தஸ்த்திற்கு அப்பால் கலைகளின்பால் ஈர்க்கப்பட்டு அதன் விளைவாக சமூக அந்தஸ்த்தை மறுத்து கலைகளில் நாட்டம் கொண்டவர்களாக இருந்தமை இங்கு கவனிக்கத்தக்கது அத்தகைய நாட்டங்களின் விளைவாக இன்று படைப்பாளிகளாக உருவகித்து இருப்பதும் அவர்களது படைப்புக்கள் ஜனரஞ்சக அந்தஸ்த்துடையது என்ற கருப்பொருளும் ஆய்வுப் பிரச்சினையாக மேற்கிளம்புகின்றன.

ஆரம்பகாலத்தில் இருந்து மட்டக்களப்பு நிகழ்த்துகைப் பாரம்பரியத்தில் ஆண்களே பெண்வேடம் போடும் வழக்கம் இருந்து வந்துள்ளது. இருப்பினும் 1953களில் இருந்து இன்றுவரை சில பெண்கள் இத்தகைய நிகழ்த்துகைளில் ஈடுபடுபவர்களாகவும் நிகழ்த்துகைகளை தயாரித்து அரங்கேற்றம் செய்பவர்களாகவும் இருந்து வருகின்றனர். இவர்களது படைப்புக்கள் பல திறமான நிலையில் இருக்கின்ற பொழுதும் அவை தொடர்பான கருத்தியல்களும் அவர்களுக் கான கௌரவமும் கிடைப்பதில்லை. இத்தகைய கௌரவம் அவர்களுக்கு கிடை க்கும் பொழுது இன்னும் பல பெண்க ளை கலைகளில் நாட்டம் கொண்ட வர்களாக மாற்ற முடியும். இத்தகைய பிரச்சினைகளை முன்வைத்தே இந்த ஆய்வு மேற்கொள்ள ப்படும்.

### 7.0 தற்கிழம்பும் ஆய்வுப் பெறுபேறு

#### 7.1 பண்பாட்டுத் தளத்தில் பெண் கலைஞர்கள்:

மட்டக்களப்பு நிகழ்த்துகை அரங்கில் பெண் பிரசன்னம் என்பதற்கு முதலில் பண்பாட்டுத் தளத்தினைப் புரிந்து கொள்ளுதல் அவசியமா னது. "பண்பாடு என்பது பரந்துபட்ட பொருள் சார்ந்த ஒன்று" "அது மனித இனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் முறை" ஆகும். இதற்குள் மதம், உணவு, சூழல், மனித உறவுமுறைகள், கலைகள், போக்குவரத்து, பணம் போன்ற இன்னோரன்ன பிற விடயங்களைக் கொண்டதாக அமைந்திரு க்கின்றது.

இவ்விடயம் உயிரியல், சூழல், வரலாற்று அம்சங்கள் வழியாக அறியப்படுவதும், உணரப்படுவதும் ஆகும். மனிதன் தனது ஆன்மாவை ஒழுங்குபடுத்தி ஆளுமையை வெளிக்கொணர்வதற்கு வாழ்க்கையில் தனக்குள்ள பணியின் மூலம் ஆற்ற வேண்டிய கடமைகள், உரிமைகள் என்பனவற்றை புரிந்து கொள்ளுதல் பண்பாடு என கூறுவர்.

உலக அறிஞர்கள் பண்பாட்டிற்கு பல வரையறைகளைச் செய்துள்ளனர். இவ் வரையறையானது பால் அடிப்படையிலானதன்று. உலகப் பொதுவானது. ஆகவே பண்பாடு சமூகத்தின் அனைத்து மட்டங்களுக்கும் பொதுவானது. ஒரேமாதிரியானது. இந்நிலையில் பண்பாடு என்பதில் பெண் பற்றிய கருத்தியல் அகப்புற அழுத்தங்களுக்குள்ளாகி அதிலிருந்து விடுபடும் நிலையறியாதவளாக குடும்பப் பாரம் சுமக்கும் பொறுப்புடையவளாக சித்தரித்து வருவது கண்கூடு.

பெண்கள் தொடர்பாக மட்டக்களப்பு பண்பாட்டு நடைமுறைகள் பிரதானமாக கோயில் மற்றும் சமூகக் கட்டுப்பாட்டுகளின் அடிப்படையில் மிகவும் இறுக்கமான ஒன்றாக விளங்குவதும் கலை முயற்சிகளில் ஈடுபடுபவர்களை இழிவான கண்ணோட்டத்தில் பார்க்கின்ற பதிவுகள் இங்கு முக்கியமாகின்றன. பல்வேறு கலைகளிலும் எழுந்த இலக்கியங்கள் பெண்கள் தொடர்பான பல செய்திகளைச் சொல்கின்றன. சங்ககாலத்தில் வரும் "விறலி" "பாடினி" என்கின்ற இரு பெண் கலைஞர்களும் ஆடல், பாடல் அறிந்தவர்களாகவும் பாடல் வல்லமை உள்ளவர்களாகவும் வெளிப்படுத்தி உள்ளன.

பெண்கள் ஆடுகளத்துடன் தொடர்புபட்டிருந்தவர்கள் என்பதனை உருத்திரக் கணிகையரின் "நாடக மகளீர் ஆடுகளத்தெடுத்த விசி வீங்க இன்னியம் கடுப்ப" என்ற பாடல் மூலம் புரிந்துகொள்ள முடிகின்றது. இதன்வழிப்பேறாக மட்டக்களப்பு நிகழ்த்துகைப் பாரம்பரியத்தில் பெண் ஆற்றுகையாளர்கள் பிரசன்னம் தொடர்பாக சிந்திப்பது மிக முக்கியமான பணியாகும்.

அந்தவகையில் 1980களின் பின்னர் கிழக்கிலங்கை மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் நிகழ்த்துகையாளர்களாக பின்வரும் நிகழ்த்துகைகளில் பங்கேற்ற (கூத்துக்கள், கரகம், காவடி, கும்மி, தாளலயம், நவீன நாடகம்) என்பனவற்றில் ஈடுபட்டு வருகின்ற பெண் கலைஞர்களின் அவைக்காற்றுக்கான பங்களிப்பினை கிடைக்கப் பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அட்டவணைப்படுத்துவதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

### 7.2 மட்டக்களப்புப் பாரம்பரியக் கூத்துக் களில் பெண் கலைஞர்கள்:

மட்டக்களப்புப் பாரம்பரியக் கூத்துக்கலை வரலாற்றில் இனங்காணப்பட்ட பல கூத்து வகைகளில் வடமோடி, தென்மோடி, வசந்தன் கூத்துக்களிலே இப்பெண் கலைஞர்கள் பணி செய்துள்ளனர்.

இத்தகைய கூத்துக்கள் புராண, இதிகாசக் கதைகளையும் கற்பனையாகப் புனையப்பட்ட கதைகளையும் அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றன. இத்தகைய கதைகளில் பெண் பாத்திரங்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாத ஒன்று. இத்தகைய பெண் பாத்திரங்களை ஆண்களே ஆடினர். இன்றும் ஆடி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இலக்கம் | பெயர் | பிறந்த ஆண்டு | முகவரி | துறை | அண்ணாவியார நெறியாளரா | நிகழ்த்துகைகள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ஞானதேவி பொன்னுத்துரை | 1937 | தன்னாமுனை | இசை நாடகம் கரகம் | நெறியாளா(1982) | மாரியம்மன் கரகம் சிலம்புச் செல்வி கரகம் |
| 02 | கிருபைலெட்சுமி கணபதி | 1954 | முறக்கொட்டான்சேனை சித்தாண்டி | கரகம் கும்மி நாடகம் | நெறியாளா(1985) | கதிரமலை முருகன் மாரியம்மன் கும்மி சமூக நாடகங்கள், சமூகசீர்திருத்த நாடகங்கள் |
| 03 | தங்கன் பொன்னான் | 1960 | பலாச்சோலை | கூத்து<br><br>கும்மி, வசந்தன், நவீன நாடகத்தில் வீதி நாடகம் | நெறியாளா(1988) (பழக்குதல்) | பவளக்கொடி நாடகம், 1983 ஆரவல்லி சூரவல்லி, 1992 குருசேத்திர போர், 1994<br><br>சாராயம் எமக்கு மாராயம் கடன்காரன் வருகிறான். சுத்தமான |
| 04 | அன்னலெட்சுமி சேதுராமன் | 1964 | பலாச்சோலை | கூத்து | நெறியாளா(1989) மத்தள அண்ணாவியார் டோல்கி வாத்தியக் கலைஞர் | பவளக்கொடி நாடகம் அல்லி நாடகம் |
| 05 | லோகநாயகி | 1964 | பலாச்சோலை | கரகம் | நெறியாளா(2003) | தாந்தாமலை முருகன் பற்று கோறாவெளி கண்ணகை கரகம் |
| 06 | லீலாவதி | 1968 | பலாச்சோலை | நாடகம் | நெறியாளா(2004) | வீதி நாடகங்கள் |
| 07 | பேரின்பம் சைலஜா | 1973 | மரப்பாலம் சின்னப்புல்லுமலை | நாடகம் | நெறியாளா(2002) | மாவீரா உயிர்க்கிறார் தியாக தீபம் அணையா விளக்கு |
| 08 | சுதாகரி மணிவண்ணன் | 1974 | செங்கலடி | நாடகம் | நெறியாளா(2001) | ஒற்றுமையே பலம் யுத்தம் உதிர்க்கும் சருகுகளாய் பலம் சூழலைப் பாதுகாப்போம் சரிநிகராய் விழுதுகள் |
| 09 | பரமேஸ்வரி சந்குணம் | 1975 | கரடியனாறு | தாளலயம் | நெறியாளா(2010) | பல தாளலயங்கள் |
| 10 | தருமின்குணம் | 1988 | கித்துள்வெவ கித்துள் | கரகம் | நெறியாளா(2011) | பல கரக அரங்கேற் றங்கள் |
| 11 | தேவரஞ்சன் கஸ்மியா | 1989 | செங்கலடி | கூத்து நாடகம் | நிகழ்த்துனா (2012) | சகுந்தலை வடமோடிக் கூத்து தெருவெளி நாடகம் (டெங்கு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலங்களில் குறிப்பாக 1901ஆம் நூற்றாண்டு காலத்தில் இருந்து பயில்முறையில் இக்கூத்துக்கள் உணரப்படுகின்றபொழுதும் அக்காலத்தில் பெண் பாத்திரங்களை ஆண்களே ஏற்று நடித்துள்ளனர். காலம் செல்லச் செல்ல பண்பாட்டு மாற்றம் காரணமாக பெண்களும் கூத்துக்களில் நடித்த வரலாறு மட்டக்களப்பு வரலாற்றில் உணரப்படுகின்றது. கூத்துக்களில் பெண்களின் இடம் என்பது ஆரம்பகாலப் பாரம்பரியக் கூத்துக்களில் தவிர்க்க முடியாத ஒன்று. தனது கணவர் கூத்தர் என்றால் அவருக்குரிய பணிவிடைகளைச் செய்வதும் அவரின் அரங்கேற்றத்தில் பக்க துணையாக இருப்பதும் மனைவியரின் பணியாக இருந்தது. இதுவும் ஒரு ஆணாதிக்க நோக்கு நிலையாகத்தான் பார்க்கப்பட வேண்டியது.

இத்தகைய நிலைகள் கால ஓட்டத்தில் மாற்றத்திற்குள்ளாகி கூத்தில் நடிகர்களாக பெண் கூத்தர்கள் இடம்பெறுவது 1953ஆம் ஆண்டில் இருந்து உணரப்படுகின்றது. இதில் முக்கியமாக முதல்ப்பெண் நிகழ்த்துனராக பூமாது, பாக்கியம் என்கின்ற இரு பெண்கள் கூத்தின் ஆரம்ப காலத்தில் நடித்தவர்களாக களஆய்வுத் தகவல்கள் கூறுகின்றது. இதில் பூமாது கட்டியக்காரன் வேடத்தில் தோன்றியதாக குறிப்புக்கள் காணப்படுகின்றது. **(தகவல்: வெல்லவூர்க் கோபால், மட்டக்களப்பு)**

இவர்கள் வெல்லாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். தங்களது ஆர்வத்தாலும் பல ஆண்களின் எதிர்ப்புக் குரலுக்கு மத்தியிலும் அண்ணாவியார் சின்னத்துரையின் உதவியோடு மேடையேறி நடித்தவர்களாக விளங்குகின்றனர். அதில் பாக்கியம் அல்லி நாடகத்தில் அல்லியாகவும், சாம்பேந்திரன் நாடகத்தில் சொர்ணகாந்தியாகவும் நடித்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதைப் போலவே கூத்து நடைபெறும் பின்னணியில் மறைந்திருந்து பல பெண்கள் பல பணிகளைச் செய்துள்ளனர். இவர்களும் கலைகளோடு உள்ள நாட்டம் காரணமாகவே இதில் ஈடுபட்டனர். கன்னங்குடாவைச் சேர்ந்த சின்னமணி, வயது 68 இன்றும் கூத்தில் முன்னீடு காரராக தொழிற்பட்டு வரும் பெண்ணாவார். இவர் கூத்தை நடத்துவது கூத்தில் நடிக்கின்ற இளம் நடிகர்களுக்கு ஆடல், பாடல்களைப் பழக்குவது, கூத்தில் வரும் புனைப்பொருட்களை தயாரிப்பது, உடுப்புக் கட்டுவது போன்ற பல பணிகளைச் செய்துவரும் ஒருவராகவும் கன்னங்குடாவில் கூத்தாடும் கலைஞர்களிடம் சின்னமணி அக்கா பிழை பிடித்து விடுவா அதனால் சரியாகப் பாடி ஆடனும் என்ற கூத்துக்கலைஞர்களின் கூற்று சின்னமணியின் கூத்தாளுமையை வெளிப்படுத்துகின்றது.

கூத்தில் பெண்வேடம் ஏற்பவரான சிவசம்பு (செம்பன்) இவர் கருத்துத் தெரிவிக்கையில் "சின்னமணி அக்காவுக்கு எல்லாக் கூத்திலும் வரும் பாடலும் ஆடலும் அத்துப்படி. நான் சில பாடல்கள் விளங்காவிட்டால் அவரிடம் தான் சென்று கேட்டுப் பழகிக் கொள்வேன்". மேற்படி கூற்று ஒரு ஆண் நடிகரின் பெண் பயிற்றுவிப்பாளரின் தகுதிப்பாட்டை காட்டுகின்றது.

கூத்துப் பழக்கும் போது பார்த்துக் கொண்டிருக்கும் சின்னமணி அக்கா பிழை என்றால் "நித்தாட்டுங்கோ தம்பி" என்று சொல்லிவிட்டு உடனே எழும்பி "என்ன சாங்கமா ஆடுறிங்க" இப்படி ஆடுங்கோ என்று சொல்லிக் கொடுத்ததை நாடக ஆய்வின் போது கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

இத்தகைய பின்னணியை வைத்து பார்க்கின்ற பொழுது கூத்தில் பெண் கலைஞர்களின் இடம் மிக முக்கியமானது.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களது கூத்து நவீனமயப்படுத்தல் என்னும் முயற்சியில் பாரம்பரிய கலை வடிவங்கள் பல்கலைக்கழகம் மற்றும் மத்தியதர வர்க்கத்தினுள் உள்வாங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயற்பாடுகளால் கூத்து நவீனமயப் படுத்தப் பட்டது எனக் குறிப்பிடப்படுகின்றது. இச்செயற்பாடுகளில் முக்கியமாக பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதாக அறிய முடிகின்றது. குறிப்பாக பெண் பாத்தி ரங்களுக்கு பெண்களை நடிக்க வைத்தமை, பெண் பாடகர்களைப் பாட வைத்தமை என்பன குறிப்பிடத்தக்கது. இச்செயற்பாடுகள் 1960களின் பின்னர் ஏற்படுத்தப்பட்டதாக பதிவுகள் கூறுகின்றன.

அதேவேளை மட்டக்களப்பில் தம்பிலுவில், திருக்கோயில் பகுதிகளிலும் (ஆரம்பகா லத்தில் மட்டக்களப்பு மாவட்டமாகத் தான் இருந்தது) மட்டக்களப்புப் பட்டிப்பளைப் பிரதேசம், வெல்லாவெளி, வவுணதீவு, வாகரைப் பிரதேசங்களில் 1960களுக்கு முன்னர் அல்லது அதே காலப்பகுதிகளில் அமரர் அருளாத்தி ஞானக்கண்ணாத்தை (தம்பிலுவில்) அமரர் மார்க்கண்டு கனகாம்பிகை (திருக்கோயில்) அமரர் அளகக்கோன் பாக்கியம்மா (அக்கரைப்பற்று) அமரர் சின்ன வேலாத்தை (பட்டிப்பளை) அமரர் சேதுராமபிள்ளை சிவக்கொழுந்து (மகிழடித்தீவு) கண்ணகைப்பிள்ளை (வெல்லாவெளி) பூமாது (வெல்லாவெளி) மனோமணி (கோயில் போரதீவு) நாகமணி ராஜகாளிஸ்வரி (வவுணதீவு) சிதப்பரப்பிள்ளை நேசம்மா (கன்னங்குடா) போன்றோர் கூத்து அரங்கில் துணைநின்று செயற்பட்டவர்கள் என்பது 1960ஆம் ஆண்டிற்கு முன்னரும் பின்னரும் வரும் தகவல்களாகும்.

இன்னும் வரலாற்றை ஆழமாக ஆராய்கின்ற பொழுது மட்டக்களப்பில் இன்னும் பல பெண்கள் கூத்தின் வளர்ச்சிக்கு பங்களிப பினை நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்தவஉகளாக இனங்காணப்படலாம்.

இவ் ஆய்வு ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவு என்பதால் அதில் இனங்காணத்தக்க கூத்தில் செயற்பட்ட பெண்களைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

இதில் பலாச்சோலையைச் சேஉந்த தங்கன் பொன்னான் என்பவர் 1960ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் தனது 18ஆவது வயதிலே கூத்தில் ஈடுபாடு கொண்டவர். பலாச்சோ லையைச் சேர்ந்த அண்ணாவியார் அமரர் முத்துக்குட்டி ஜெயராமன் அவர்களிடம் கூத்துப் பழகி தனது அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவர். பின்னர் களுவன்கேணியைச் சேர்ந்த கந்தையா மயில்வாகனம் அவஉகளது உதவியோடு பல கூத்துக்களை நடித்தும் கூத்துக்களை இளைய சமூகத்திற்கு பழக்கியும் உள்ளார். இவர் பவளக்கொடி நாடகம் (1983) ஆரவல்லி சூரவல்லி நாடகம் (1992) குருசேத்திரப் போர் (1994) போன்ற கூத்துக்களில் சிறிய பெண்வேடத்திலும் பின்னர் கொப்பி வாசிக்கின்ற கொப்பியா சிரியராகவும் பணியாற்றியுள்ளார். கூத்து உடுப்புக் கட்டுதல், களறி அமைத்தல், கூத்துக்களுக்குத் தேவையான ஏனைய உதவிகளைச் செய்து வருபவராகவும் திகழ்கிறார்

அண்மைக்காலமாக கும்மி, வசந்தன், கூத்து போன்ற நிகழ்த்துகைகளை தனது ஊரில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் பழக்கி வருகின்றார். அண்மைக்காலமாக சுவாட் நிறுவனம், தேடஸ்கோம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கூடாக பல தெருவெளி நாடகங்களைச் செய்து வருகின்றார். சாராயம் எமக்கு மாராயம், கடன்காரன் வருகிறான், சுத்தமான வாழ்க்கை போன்ற தெருவெளி நாடகங்களை (வீதிநாடகங்கள்) பழக்கி பல இடங்களிலும் மேடையிட்டு வருகிறார்

கலைகளில் பன்முக ஆளுமை கொண்ட இவஉ நாட்டுக்கூத்தில் இருந்து தான் ஏனைய கலைகளுக்கான உத்வேகத்தைப் பெற்றார் என்பது அவரது பேட்டியின் போது கூறியதாகும்.

இவரது நிகழ்த்துகை அமைப்பையும் அரங்கியல் அனுபவங்களையும் பார்க்கின்ற பொழுது இவர் சிறுவயதில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்களையும், கரகம், வசந்தன் போன்ற நிகழ்த்துகைகளையும் பார்த்து வந்து அதனைப் பழகவேண்டும் என்ற நோக்கோடு மேற்படி அண்ணாவிமாரை அணுகி கூத்துக்களைப் பார்த்து பார்த்ததையும், கேட்டதையும் தனக்குள் மீள் அளிக்கை செய்து அதன்வழியான சுயதேடல் (கேள்வி ஞானத்தின்) வாயிலாகவும் தான் இத்தகைய கலைகளை கற்றுக் கொண்டுள்ளார். இவர் இக்கலைகளை பிறருக்குப் பயிற்றுவிக்கும் முறையும் வித்தியாசமாக இருந்தது. இவரது நிகழ்த்துகைகளில் பங்குபற்றி அளிக்கை செய்யவரும் ஏனைய கலைஞர்களுக்கு இவர் பழக்கும் விதம் இலகுவானது. பயிலுனர்களுக்கு இலகுவில் இது புரியவைக்கும் ஒரு பாணியை தனது பாணியாக ஒழுங்குபடுத்தி வைத்துள்ளார். கல்வியறிவுப்புலமற்ற இவர் ஒரு பன்முக ஆளுமையாளர் என்றால் மிகையாகாது.

இதேபோல அன்னலெட்சுமி சேதுராமன் 1964ஆம் ஆண்டு பலாச்சோலை என்னும் இடத்தில் பிறந்து அங்கு வாழ்பவர். கூத்தில் மத்தளம் வாசித்தல், பிற கலைகளுக்கு டோல்கி வாசித்தல் போன்றவற்றில் ஆர்வம் காட்டி வருபவர். தனது சுயதேடல் மூலம் அவற்றைப் பழகிக்கொண்டு இன்றுவரை இத்தகைய வாத்தியங்களை வாசிப்பவராக திகழ்கிறார்.

அது மட்டுமல்லாது கூத்துக்களிலும் பல வேடங்களை ஏற்று நடித்தவராகவும் திகழ்கின்றார். திறமையான கூத்தாட்டக் கலைஞரான இவர் இன்றுவரை கூத்துப் பழக்குதல், மத்தளம் வாசித்தல், கரகம், கும்மி போன்றவற்றிற்கு டோல்கி வாசிக்கும் கலைஞராகத் தொழிற்பட்டு வருகின்றார். “நான் யாரிடமும் பழகவில்லை. சுயமாக தகரடப்பாவில் தட்டித் தட்டித்தான் மத்தளத்தையும் டோல்கியையும் வாசிக்கக் கற்றுக் கொண்டடேன். வாசிப்பது தொடர்பாக எனக்கு இன்னும் பயிற்சி கிடைக்கும் பட்சத்தில் இன்னும் திறமையாக வாசிப்பேன்” என்ற மேற்படி கூற்று அன்னலெட்சுமியினது.

எனவே அன்னலெட்சுமிக்கு இந்த வாத்தியங்களைப் பிரயோகிப்பதற்காக வரன்முறையான பயிற்சி வழங்கப்பட்டால் மட்டக்களப்பில் பெண் வாத்தியக் கலைஞருள் தனித்துவம் மிக்கவராக மிளிருவார் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மட்/செங்கலடி மத்திய கல்லூரி கூத்தில் அதிகமான பெண்களை ஈடுபடுத்திய ஒரு பாடசாலையாகும் இக் கல்லூரி 1985-2015 வரையான காலப்பகுதியில் தமிழ்மொழி தினப்போட்டிக்காக கூத்துக்களைப் பழக்குவதில் ஆர்வம் காட்டிவரும் ஒரு பாடசாலையாகும். இப்பாடசாலை ஊடாக ஈஸ்வரன் ஆசிரியர் அவர்களும் அண்ணாவியார் கமலநாதன் அவர்களும் இணைந்து பல கூத்துக்களைப் பழக்கி மாணவிகளுக்குக் கற்றுக் கொடுத்து வந்துள்ளனர்

இப் பிரதேசத்தில் பல பெண் கூத்துக் கலைஞர்கள் வெளிவர இப் பாடசாலையும் காரணமாக இருந்துள்ளது. இந்த இனங்காணப்பட்ட கலைஞர்களாக தேவரஞ்சன் கக்ஷமியா, நடரசபதி பிரியறக்ஷனி, பொன்னுத்துரை சசிகலா, போன்றோர் இன்றுவரை கூத்தில் செயற்படுபவராக வெளிப்படுகின்றார்கள்.

மேற்குறிப்பிட்ட பெண் கூத்துக் கலைஞர்கள் அனைவரும் ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டு வாழ்கின்ற கூத்துக் கலைஞர்களாகவும் பெண் நிகழ்த்துகையாளர்களாகவும் இனங் காணப்படுகின்றனர்.

### 7.3 நாடகங்களில் நவீன பெண் நிகழ்த்துகையாளர்கள்:

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் பெண்கள் சிலர் நவீன நாடக படைப்பாக்க முயற்சிகளில் தங்களது பங்களிப்பினை வழங்கியுள்ளமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்க ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனடிப்படையில் பலாச்சோலையைச் சேர்ந்த லீலாவதி என்னும் பெண் நவீன நாடக வடிவங்களில் ஒன்றான வீதி நாடக வடிவத்தை நிகழ்த்தி வருகிறார். இவரின் பாசையில் கூறுவதாயின் "இது தெரு நாடகம், இது மக்களிடம் மக்கள் வாழும் இடத்திற்குச் சென்று அவர்களது கதைகளைச் சொல்லும்" மேற்படி நிகழ்த்துகையாளர்களின் கதையில் இருந்து தெரு நாடகம் என்று அவர் குறிப்பிடுவது வீதி நாடகத்தினைத்தான். வீதி நாடகத்தின் வலிமையை இவரின் அனுபவத்தி ற்கூடாக கூற முனைகிறார்.

இவர் தனக்கென ஒரு குழுவை உருவாக்கி மக்களின் பிரச்சினைகளான மது ஒழிப்பு, பெண்கள் துன்பப்படுத்தப்படுதல், (சுத்தமாக வாழ்தல்) போன்ற பல கதைகளை கதைக்களமாக்கி தெரு நாடகமாக நடித்து வெளிப்படுத்தி இருக்கின்றார். இவருக்கு இத்தகைய நிகழ்த்துகைகளுக்காக வேள்ட்வி கூஷன், தேடஸ்கோம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வழங்கியிருக்கின்றன. சிறந்த வீதிநாடக வெளிப்படுத்துநராக இவர் தன்னை உருவகித்திருப்பினும் இவரது நாடகப் படைப்பாக்கங்களில் பல குறைகள் காணப்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்து அப்பெண் நிகழ்த்துகையாளருக்கு திறமை யான பயிற்சி வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒரு திறமையான நிகழ்த்துகையாளராக இவரை மாற்ற முடியும்.

இந்த நவீன நாடகத்துறையில் தலைசிறந்த ஒரு விற்பன்னராகத் திகழ்ந்தவர் சுதாகரி மணிவண்ணன் ஆவார். செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆசிரியராகப் பணியாற்றி வருபவர். இவர் தனது ஊரில் சாரணிக் கலைக்குழு என்ற ஒரு நாடகக்குழு வை உருவாக்கி அதற்கூடாக பல பெண்க ளையும் ஆண்களையும் இணைத்துக்கொண்டு நாடகங்களைச் செய்துவரும் ஒரு திறமையான நெறியாளராவார்.

கூடுதலாக சமூக நாடகங்களில் நாட்டம் கொண்ட இவர் யதார்த்தச் சாயலில் கதைகளை எழுதி யதார்த்த மோடியை அடிப்படை இலக்கணமாகக் கொண்டு நாடகங்களைப் படைத்துள்ளார் 1994 முதல் தனது பணியை முன்னெடுத்து வருபவராக இவர் இனங்கா ணப்படுகிறார்.

அரங்கைக் கல்வியாக பயிலாத ஒரு முதுகலைமாணிப் பட்டதாரியான இவர் கல்வியற் துறையில் படித்தாலும் சமூகத்திற்கு எளிதாக ஒரு செய்தியைக் கூற சிறந்த ஊடகமாக நாடகமே உள்ளது என்ற எண்ணம் கொண்டவர். இத்தகைய எண்ணத்தின் விளைவாக தான் கூறவரும் செய்தியை நாடக எழுத்துருவாக எழுதி அதனை நடிகர்களைக் கொண்டு நெறிப்படுத்தி திறமையான அரங்க உத்திகளைப் பிரயோகித்து மேடையில் அளிக்கை செய்பவராக விளங்குகிறார்.

தனது நாடகக் கதைக்கருச் சூழலை யதார்த்த நிலையில் படைக்கும் இவர் நாடக தயாரிப்பு மோடியாகவும் யதார்த்த மோடியையே பின்பற்றுகிறார். சரியான அரங்கவியற் கூறுகளை இணைத்துக் கொண்டு மேடையில் அந்த நாடகத்தை உயிரோட்டமுள்ள அளிக்கையாக செய்கின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இவரின் படைப்புக்களாக "ஒற்றுமையே பலம்", "யுத்தமுதிர்க்கும் சருகுகளாய்" "பலம்", "சூழலைப் பாதுகாப் போம்", "சரிநிகராய்", "விழுதுகள்" போன்றன இகங்காணப்படுகின்றன.

இவரது நாடகங்களில் பேசும் பொருளாக சமகாலப் பிரச்சினைகள் அமைகின்றன. இவர் தனியே நாடகங்களைப் படைக்காமல் நாடகப் படைப்பாக்கங்களுக்கு ஊடாக தன்னிடம் நடிகராக வருவோருக்கு திறன் வளர்த்தலிலும் அறிவை விருத்தி செய்வதிலும் மிகக் கவனமாக ஈடுபடுகிறார். யுத்த எதிர்ப்பு, இன ஒற்றுமை, பெண் உரிமை, சிறுவர் துகூஷ்பிர யோகம், சூழல் பாதுகாப்பு என்ற இன்றைய பிரச்சினைகளை இலகுவாக மாணவர்களுக் கும், நடிகர்களுக்கும் நாடக மொழியூடாக விளக்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்துறை சார்ந்த நுட்பங்களையும், நாடக உளவியல்களையும், நாடக நடைமுறை அறிவுரைகளையும் சுதாகரி மேலும் கற்பதன் மூலம் தனது நாடக ஆளுமையை மேலும் வளர்த்துக் கொள்ளலாம்.

மரப்பாலம் சின்ன புல்லுமலையைச் சேர்ந்த பேரின்பம் சைலஜா ஒரு நவீன நாடகக்கார ராக இனங்காணப்படுபவர். இவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து இன்று அரசாங்கத்தால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டவர். தற்போது தனது ஊரில் கலைப்பணி செய்து வருகிறார். இவர் நவீன நாடக உத்திமுறையாக மோடிமை நாடக முறைமையைக் கையாள்கின்றார். பல நாடகங்களை தமிழீழ போராட்ட காலங்களில் படைத்தவர். இவரின் தலைசிறந்த நாடகங் களாக "மாவீரன் உயிர்க்கிறான்", "தியாக தீபம்", "அணையா விளக்கு" போன்றவைக ளையும் அண்மைக்காலத்து அறுவடையாக முதியோர் சொற்கேட்போம் என்கின்ற சமூக நாடகத்தையும் குறிப்பிடலாம். இத்தகைய நாடகங்களை திறமையான படைப்பாக்க அனுகுமுறைகளுக்கூடாக படைத்து அளிக்கை செய்துள்ளார்.

இவரது நாடக உத்திமுறைகளை நோக்கு கின்ற பொழுது எல்லோரையும் ஓரிடத்தில் குழுவாக்கி அவர்களுக்கு வேண்டிய நாடகப் பயிற்சிகளை வழங்கி அதன்பின்னர் தான் பிரதியை வாசித்து அந்தப் பயிற்சிக்கூடாக வரும் திறமையானவர்களுக்கு பாத்திரங்களை வழங்கி மேடை உத்திகள், இசை, நடனம் என்பனவற்றையும் இணைத்து திறமையான நடிப்பு உத்திகளைக் கையாண்டு நாடகங்க ளை நெறிப்படுத்துகின்ற ஒரு ஆளுமையா ளராக திகழ்கிறார். இவரது நாடகங்கள் அன்று தொடக்கம் இன்றுவரை பிரபல்யமானவை.

## 8.0 ஆய்வின் முடிவுகளும் பரிந்துரைப்பும்

ஈழத்தில் தமிழ் நிகழ்த்துகைப் பாரம்பரிய த்திற்கு பங்களிப்பு நல்கிய பெண் கலைஞ ர்களும் அவர்களது செயற்பாடு களையும் ஆராய்ந்து கண்டுகொண்டதன் அடிப்படையில் தாம் பின்வரும் முடிவுகளை எடுக்கக் கூடியதாக உள்ளது.

கிழக்கிலங்கை மட்டக்களப்பில் 1940ஆம், 1950ஆம் ஆண்டுகளில் அரங்கில் தோன்றிய பெண் கதாபாத்திரங்கள் ஆண்களினால் உருமேற்கொள்ளப்பட்டதன் விளைவாக தோற்றம் பெற்றவைகளாக இருக்க குறிப்பிட்ட ஒரு சில பெண்கள் ஸ்திரிப்பாட்டாக நடித்துள்ளனர். ஆனால் 1960களில் இருந்து அரங்கில் தோன்றி ஆற்றுகைக்கு வளம் சேர்த்த பெண் நடிகர்கள் இருந்ததோடு அப்பணிகளிலும் அவர்கள் செயலாற்றி இருந்தமையைக் காண முடிகின்றது.

இத்தகைய ஒரு பின்னணியில் பெண் பாத்திரங்களை ஏற்று நடித்த பெண்கள் தமது குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்து வதற்காகவோ அல்லது குடும்பத்திற்கு புகழை ஈட்டிக் கொடுப்பதற்காகவோ அன்றி அவைக்காற்றுகைக் கலைகள் மீதிருந்த பற்றுக் காரணமாகவே மிகுந்த துணிவுடனும், உற்சாகத்துடனும் கூத்துக்களில் நடிகர்களாக பிற்பாட்டுக்காரர்களாக முன்னீடுகாரர் களாக பங்கும் பணியும் ஆற்றி ஈழத்துத் தமிழ் அரங்க வரலாற்றிற்கு வளம் சேர்த்ததைக் காண் கிறோம்.

மிகப் புராதனகால அரங்க வரலாற்றைப் புரட்டிப் பார்க்கின்ற பொழுது சமஸ்கிருத நாடக வரலாற்றில் பெண்கள் அரங்கில் நடித்துள்ளனர். சூத்திரதாரியின் மனைவியை நடீ என்றும், கதாநாயகிகளை ஸ்வகியா, பரகீயா, சாமான்யா என மூவகைப்படுத்தியும் பெண்களுக்கென தனிப்பட்ட ஸ்திரி பிரோயு எனப்பட்ட அரங்கினை அமைத்து அரங்க நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளமையும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

இத்தகைய சமூக மாற்றச் சூழலில் பெண் கலைஞர்களின் வகிபாகம் மிக முக்கியமாக இருந்ததோடு ஆண்களின் நிகழ்த்துகைத் தரத்திற்கு இணைய பெண்களின் நிகழ்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளும் வெளிப்பட்டு நிற்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இது ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேசத்தில் கல்விப் புலத்தில் அதிகம் கற்காத பெண்கள் நிகழ்த்துனர்களாக இருந்து காத்திரமான படைப்புக்களை வழங்கி இருப்பதும், இப்பிரதேசக் கலை வளர்ச்சியில் அவர்களது பங்களிப்பு இன்றியமையாததாக இருந்ததையும் குறிப்பிடலாம்.

இப்பிரதேச பெண் நிகழ்த்துகையாளர்கள் தங்களது சுயதேடலின் விளைவாக கலைகளில் பல படைப்புக்களைச் செய்துள்ளமையும் இவஉகளது தகுதிப்பாட்டிற்கு ஏற்றவிதத்தில் கலைகளில் தங்களது தனித்துவமான வடிவ நிலைகளைக் கண்டு அதனை நிகழ்த்துகைகளாக வடிவமைத்தும் அறுவடை செய்தும் இருப்பது இப்பிரதேச பெண் நிகழ்த்துகையாளர்களது நிகழ்த்துகைப் பணியும், நிகழ்த்துகை முறையும் சிறந்த நிகழ்த்துகைத் தரத்தினை பெறத்தக்கது என்கின்ற முடிவைத் தருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிகழ்த்துகைக் கலை வரலாற்றில் இதுவரையும் பதியப்படாத ஒரு நிகழ்த்துகை முயற்சி இவ்வாய்வின் மூலம் பதிவைப் பெறுகின்றது. மேலும் பெண் நிகழ்த்துகைக் கலைஞர்களின் பணிகள் வகைப்படுத்தப்பட்டு அவைகள் நாடகவாக்க அடிப்படைகளுடன் ஆராயப்பட்டு நாடகக் கற்கையாளர்களுக்கு அனுபவத்தினையும் அறிவையும் ஏற்படுத்த வாய்ப்பினை இது ஏற்படுத்தி இருக்கின்றது.

பெண் நிகழ்த்துகையாளர்களின் நிகழ்த்துகை முறையினை இவ் ஆய்வினூடாக தெளிவாக்கி இருப்பதும். ஆத்தகைய நிகழ்த்துகைகளின் பலம், பலவீனங்கள் நோக்கப்பட்டு நிகழ்த்துகையாளர்களை ஊக்கப்படுத்தத்தக்க கருத்தியல்களை முன்வைத்திருப்பதும் இவ் ஆய்வினூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய விளக்கங்கள் இத்துறையில் அவஉகள் மேலும் அறிவை வளர்த்துக் கொள்ள அவர்களுக்கு ஊக்கத்தை வளங்கும்.

உயர்கல்விப் பின்புலத்தில் பணியாற்றியோர் செய்த ஆய்வுகளில் சற்று மயக்கமான கருதுகோள்களை முன்வைத்து சென்றிருந்தமையும் காண்கிறோம். அதாவது அவைக்காற்று அரங்குகளில் வரும் **"பெண் பாத்திரங்களுக்கு உண்மையான பெண்களை நடிக்க வைக்கும் செயற்பாடு பல்கலைக்கழக அவைக்காற்று அரங்குகளினூடாகத்தான் உருவாக் கப்பட்டது"** என முன்வைக்கப்பட்ட முடிவுகள் இவ் ஆய்விற்கு பின் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்கிறது.

1960களுக்கு முன்னரே மட்டக்களப்பில் வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, வாகரை, ஏறாவூர், தம்பிலுவில், திருக்கோவில், அக்கரைப்பற்று (தற்பொழுது அம்பாறை மாவட்டம்) பிரதேசங்களிலும் பெண்களே நிகழ்த்துகைப்பின்னணியில் நின்று பங்களித்திருந்தமையைக் காண்கிறோம். அந்த நிலையானது 1960களுக்கு முன்னரும் அதற்கு பின்னரும் இடம் பெற்றுள்ளது.

நாட்டின் பல்கலைக்கழகங்களில் தமிழர் கூத்தில் மீள்கண்டுபிடிப்பும், புத்தாக்கமும் நிகழ்ந்த சமயத்தில் பெண்கள் தமிழ்க்கூத்து மரபில் மேற்குறிப்பிட்ட கிராமங்களில் மக்கள் முன் தோன்றி நடித்து தத்தமது பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருந்தார்கள் என்பது இங்கு நிருபனமாகின்து.

ஆய்வினை மட்டக்களப்பின் ஒவ்வொரு பிரதேசங்களாக மேற்கொள்கின்ற பொழுது கிழக்கிலங்கையின் மட்டக்களப்பின் நிகழ்த்துகைப் பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள் என்கின்ற பெரும் ஆய்வுக்க அது வழிவகுக்கும்.

மட்டக்களப்பில் உள்ள 13 பிரதேச செயலாளர் பிரிவிலும் பெண் நிகழ்த்துகையாளர்களை ஆராய்ந்தால்தான் இன்னும் பல தகவல்களைப் பெற முடியும். அத்தோடு மட்டக்களப்புப் பெண் நிகழ்த்துகையாளர் மரபொன்று வெளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொணரப்படுவதோடு அவர்கள் தொடர்பான தகவல்களும் ஆவணப்படுத் தலாக இருக்கும்.

எனவே இவ் ஆய்வானது இத்துடன் நின்றுவிடாது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. பெண்நிலைவாதம் என்ற புதிய கற்கைநெறி இன்று பல்கலைக் கழகங்களில் பாடவிதானங்களில் முன்னிலைப் படுத்தப்படுகின்ற ஒரு கால கட்டத்தில் நாம் அரங்கில் தோன்றி நடித்த அப்பெண் கலைஞரது அவைக்காற்றுக் கலைப் பங்களிப்பினை நடுநிலையாக நின்று சிந்திப்பதற்கு இதுவே தருணம். அதனால் தொடர்ந்து இந்த ஆய்வினை முன்னெடுத்துச் சென்று இப்பெண் கலைஞர்களது சமூகப் பொருளாதார வாழ்வியல், அதில் அவர்கள் எதிர்நோக்கியிருந்த நன்மையானதும் தீமையானதுமான விளைவுகளை ஆராய வேண்டிய ஒரு கடப்பாடு எம் அனைவருக்கும் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

**உசாத்துணை நூல்கள்:**


01. சுந்தரம்பிள்ளை.செ (1994) “ஈழத்து இசை நாடக வரலாறு”, யாழ் இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.

02. ஜெயரஞ்சனி.இ (2003) “ஈழத்துத் தமிழ் அரங்கில் பெண்” , குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை.

03. சொர்ணலிங்கம்.க. (1968) “ஈழத்தில் நாடகமும் நானும”, இலங்கை சாகித்திய மண்டல வெளியீடு.

04. சிவத்தம்பி.கா சி,மௌனகுரு. க,திலகநாதன (1999) “அரங்கு ஓர் அறிமுகம”, பற்குணம் நினைவு மலர்

05. சிவகாமி.வி (1989) “சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள”, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

06. மங்கை.ஆ”பெண் (2001) - அரங்கம், தமிழ்ச்சூழல” “நேகா இராஜபேட்டை, சென்னை.

07. குருசாமி.எஸ் (2000) “நாடகமும் நாடகக் கம்பனி அனுபவங்களும” உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

08. பத்மா.சோ (2003) “ ஈழத்து மான்புறும் மகளிர்” குமரன் புத்தக இல்லம், கொழும்பு,

**சிறுசஞ்சிகை:**

நானிலம் - சிறப்பு மலர் வெளியீடு 2012 (கலைஞர் விவரத்திரட்டு, கலாச்சாரப் பேரவை, பிரதேச செயலகம், ஏறாவூர்ப்பற்று, செங்கலடி.

**நேர்காணல்:**

1. கோபாலசிங்கம்.கா, (கவிக்கோ வெல்லவூர்க் கோபால்) எல்லை வீதி, மட்டக்களப்பு.

2. தங்கேஸ்வரி.க, (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) கன்னங்குடா, மட்டக்களப்பு.

3. செல்வநாயகம்.த, (தாளை) பேத்தாளை, வாழைச்சேனை.

4. அரியரெத்தினம்.மு (வாகரைவாணன்) ஆரணியகம், கல்லடி, மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தவராஜா.மு வாகரை, மட்டக்களப்பு.

6. நவநாயகமூர்த்தி.நா, சின்னப்பனங்காடு, திருக்கோவில், அம்பாறை.

7. விவேகானந்தன்.க (ஓய்வுபெற்ற அதிபர்) வெல்லாவெளி, மட்டக்களப்பு.

8. கரிகாலன்.ம (அதிபர்) கரடியனாறு, மட்டக்களப்பு.

9. பம்மக்குட்டி.பீ (வட்டவிதானை) வந்தாறுமூலை, மட்டக்களப்பு.

10. நவரெட்ணம்.சோ, சேனைக்குடியிருப்பு, செங்கலடி.

11. கனகசபை.சி, காளிகோயில் வீதி, மாவடிவேம்பு.

12. தெய்வநாயகம்.சீ, கனகாலயம், 5ம் குறிச்சி, ஏறாவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NAME OF REVIEWERS

Prof. Antony Nobert,
Department of Geography,
University of Colombo,
Colombo.

Dr. M.Z.N. Nafeel,
Department of Arabic & Islamic Civilization,
Faculty of Arts,
University of Peradeniya,
Peradeniya,

K.Sivananthamoorthy
(Retired Professor),
Department of Philosophy,
University of Jaffna,
Jaffna.

Dr. K.T. Kaneshalingam,
Department of Political Science,
University of Jaffna,
Jaffna

Prof. N. Shanmugalingan,
Department of Sociology,
University of Jaffna,
Jaffna

Prof. P. Balasundarampillai
Emeritus Professor of Geography,
Department of Geography,
University of Jaffna,
Jaffna.

Dr. N.Baskaran,
Department of Political Science,
University of Peradeniya,
Peradeniya.

Prof. A.S. Soosai,
Department of Geography,
University of Jaffna,
Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr. S.Mugunthan,
Department of Hindu Civilization,
University of Jaffna,
Jaffna.

Dr. S.Ganesarajah,
Department of Philosophy,
South Eastern University,
Oluvil, Addalachenai.

Dr.S.Mounaguru,
(Retired Professor),
Department of Fine Arts & DT,
Eastern University, Vantharumoolai.
Chenkalady

Dr.T.Krishnamohan,
Department of Social sciences,
Eastern University, Vantharumoolai.
Chenkalady.

Mr. A.L.M.Mujahid
Department of Islamic Studies,
Eastern University, Vantharumoolai.
Chenkalady.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org